கடவுள் துணை.

---

# சைவமகத்துவதிமிரபாநு

வும்

# விவிலியவிரோததிக்கார

மும்.

இவை

பலபெரியமனிதரது வேண்டுகோளின்படி

தஞ்சைமாநகரம் பண்டிதர்

முத்துசாமிமுதலியார் குமாரர்

பரசமய குஞ்சர பஞ்சானன சோடசாவதான

## அருளப்பமுதலியார்

அவர்களாலிற்றப்பட்டுச்

சென்னபட்டணம்

அர்ச். சூசையப்பர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

---

௧௮௯௨௵.

*Reserved Copy-Right.*

## அங்கீகாரபத்திரம்.

ROYAPURAM, 18*th March* 1892.

YOUR GRACE,

After reading carefully the accompanying Tamil book, we come to the conclusion that your Grace can safely grant the approbation required.

Your Grace's dutifully

T. A. DOREYSAMY.
P. RUTHNANADER.

Publication of work alluded to approved.

✠ J. COLGAN,
*C. Cathedral Madras.*
18*th March* 1892.

# விளம்பரம்.

---

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் முத்தியாலுப்பேட்டை நயனியப்பன் வீதியில் ௫௧-ம் இலக்கவீட்டிலுள்ள வித்வான் த. அருளப்பமுதலியாரவர்களிடத்தில் பிரதி ௧-இ ரூ-௨ வீதம் வாங்கலாம். வெளிநாட்டிலிருப்போர் மேற்பட ௨-அணாத் தபாற் கூலியும் அனுப்பல்வேண்டும். சைவமகத்துவமும் விவிலியவிரோதமும் இயற்றிய பண்டிதர் முதலிய சிலருக்குத் தலைக்கொருபிரதி இலவசமாக அனுப்பப்படும்.

---

இனி உபசைவமகத்துவதிமிரபாநு, குற்சிததிக்காரம், விவிலிய நூற்பூர்வாபரவிரோததிக்கார முதலியபுஸ்தகங்களும் அச்சுப்பதிப்பிக்கப்படும்.

# சைவமகத்துவ திமிரபாநுவின் பொருளட்டவணை.


பாயிரம். முதற்பக்கத்திற்காண்க.
சைவம் அரசருயர்த்தஉயர்வதுந் தாழ்த்தத்தாழ்வதுமாம். பக்கம் ௨.
சைவம் சிறுத்துஅழிந்து போதற் குரியது. ௩.
வலியத்தேடிப்போய் உணர்த்தற்கு முரியதேமெய்வேதம். ௪.
சிவன்வாக்காகிய சித்தாந்தசாஸ்திரசங்கிரகம். ௫.
சிவன்வாக்காகிய வேதாந்தசாஸ்திரசங்கிரகம். ௬.
சிவன்வாக்காகிய வேதாந்தசித்தாந்தசாஸ்திரங்கள் தமக்குள்விரோதமாயிருத்தல். ௫, ௬.
ஆன்மாவும் ஆணவமலமும் அநாதியிலில்லை. ௭.
ஆன்மாக்கள்அநாதியஅல்ல. ௭, ௮.
ஆணவமலம் அநாதியதன்று. ௭,௭௬,௭௭
மும்மலங்களும் அநாதியவல்ல. ௭, ௮, ௯,௬௭.
ஆன்மாவும்மும்மலங்களும் அநாதியவல்ல. ௮.
சிவனுக்குநீதி, ஞானம், வல்லமையில்லை. ௧௦.
சிவனுக்குச்சர்வசக்தியில்லை.௧௦,௨௫, ௩௫, ௩௬.
ஈசுவரலக்ஷணத்திற்சில பிறபொருளுக்கிரா. ௧௨.
கடவுளுடைய நீதிக்கும்நித்தியத்திற்குஞ் சம்பந்தமுண்டு. ௧௩.
சர்வஞானியென்றால் நிர்விகாரியென்றுந்தானேஏற்படும். ௧௩.
கிறிஸ்துவேதம் ஆன்மாதிகட்குக்கடவுளிலக்ஷணமொன்றேனும் பொருத்தவில்லை. ௧௪.
அநந்தநித்தியத்தினின்று ஆதிநித்தியத்துக்குள்ளவிசேஷம். ௧௫.
சருவேசுவரன்விகாரியல்லர். ௧௮.
கடவுள்விஷயத்தில் நிர்விகாரலக்ஷணமும் விகாரலக்ஷணமும். ௧௯.
சிவனே, சைவர்சொல்லுகிறபடியேயும் விகாரலக்ஷணமுடையவர். ௧௯.
பஞ்சகிருத்தியமும் அநாதியவல்ல. ௨௦,
சிவன் அநாதியிலும்பஞ்சகிருத்தியஞ்செய்திருந்தனனென்பதுதவறு. ௧௬,௧௭, ௧௮, ௧௯, ௨௦.
சிவனுடையவயசறியப்படுகிறது. ௨௦.
முதற்காரணமில்லாமல் உலகத்தைப்படைக்கக் கடவுளுக்குமாகாதென்றதவறு. ௨௧.
கடவுள்தம்மியற்கைக்கு விரோதஞ்செய்யார். ௨௨.
கடவுளியற்கைக்கு விரோதமாவதிது. ௨௨.
கடவுள் முதற்காரணமின்றியுலகத்தைப் படைத்தானென்பது இயற்கைவிரோதமன்று. ௨௩.
பண்டிதர்சொல்லுகிறபடி சிவனே இயற்கைவிரோதஞ் செய்தவராகிறார். ௨௩.
விநாயகர்சுப்பிரமணியர் வீரபத்திரர் முதலியவர் விசேஷபுண்ணியான்மாக்களேயன்றிப் பதியல்லவென்றுபண்டிதர்கூறியது. ௨௪.
விநாயகசுப்பிரமணிய வீரபத்திரர்பிறந்தவிதம். ௨௫.
சுப்பிரமணியர்பிறப்புச் சாத்திரவிரோதம். ௨௫.
சிவன்மற்றவரில் அதிட்டித்ததின் இழிவு. ௨௫.
சிவன்காமசேட்டையுடையவர். ௨௫, ௨௭.
சிவன்பிரமாவில்அதிட்டித் திருக்கவில்லை. ௨௬, ௮௧.
அரிகரபுத்திரன்பிறந்தவிதம். ௨௭.
பிரமாதியர் சித்தாந்தசாத்திரப்படி ஆன்மாக்களல்லர். ௨௮.
சைவசமயம்பலபதிகளையுடையது. ௨௮
புராணகதை யுண்மையல்லவென்று பண்டிதர்சொல்லல். ௨௯.
புராணம்வேதோபாங்கம். ௩௦.
புராணகதைவர்ணனையல்ல. ௩௧.
சிவன்சிவனோடுயுத்தம்பண்ணினார். ௩௨
விஷ்ணு விஷ்ணுவோடு யுத்தம்பண்ணினார். ௩௨.
எந்தத்தெய்வங்கொண்டாலும்அதுவாக

ஞ் சிவனேவருவார் என்பதின் தவறு. ௩௩.
சிவனுக்கு வல்லமை யில்லை. ௧௦, ௨௫, ௩௫, ௩௬, ௩௭, ௪௨.
சிவன் தம்ஆணையால்பெருமையுடைய வரல்லர். ௩௫, ௩௬, ௩௭.
சிவனுக்குச் சர்வஞானமில்லை. ௧௦, ௩௬, ௩௭.
சிவனுக்குஇரக்கமில்லை. ௩௬, ௩௭.
சிவனுக்குநீதியில்லை. ௧௦, ௩௭, ௮௨, ௧௦௫.
கடவுள்மனிதனைப்படைத்ததற்குவிசேஷகாரணம். ௩௧. ௬௮.
எல்லாஆன்மாக்களுமுத்தியடையக்கூடுமென்று பண்டிதர்சொன்னநியாயம் ௪௦.
ஆன்மாக்கள் அனந்தமல்ல. ௪௧.
எல்லாஆன்மாக்களையும்முத்தியடைவிக்கச்சிவனுக்கியலாது. ௪௨, ௪௩, ௪௪, ௪௫.
மறுபிறப்பு. ௪௬, முதல் ௬௫-வரையும்.
மிருகங்களும்மனிதர்க்காகவேபடைக்கப்பட்டன. ௪௬, ௪௭.
டங்கனிசாசிரியர்தவறு. ௪௭.
டங்கனிசாசிரியர்கருத்துச் சைவருக்கே விரோதம். ௪௭.
மூவிதசேட்டையுயிர். ௪௯.
மூவகைச்சாதி. ௫௦.
அஃறிணையுயி ரழியும். ௪௯.
மிருகாதிகளுக்கு ஆன்மா இல்லை. ௪௯ முதல் ௬௦-வரையும்.
மிருகாதிகளுக்கு மனோலக்ஷணமில்லை. ௫௦.
ஒருசாதியில்வித்தியாசகுணத்திற்குக்காரணம். ௫௧.
மிருகாதிகளுக்கு மனிதரிலும்மிக்கஅறிவில்லையென்பது. ௫௨.
சைவர்உயிர்க்கொலையை மறுக்கவில்லை. ௫௩, ௫௪.
சைவர்கள்பெரியபாவிகள். ௫௪.
சைவர்மாமிசம்புஜித்தல். ௫௫.
சருவேசுரன் மனிதரது தூர்மார்க்கங்கருதியல்ல மாம்ஸம் புசிக்கக்கொடுத்தது ௫௬.
முதற்சம்மதியாதசெயலுக்குப் பிறகுசம்மதித்தவர் சிவன்தான். ௫௭.
கூன்குருடுமுதலியவற்றிற்குக் காரணம் முற்பிறப்பின்கருமமல்ல. ௫௮, ௬௦.
செல்வர்வறிஞராதற்குமுற்பிறப்புக் கருமங் காரணமல்ல. ௫௯, ௬௦.
கனவிலறிதலை நனவில்மறத்தல்முற்பிறப்புக்குக்காரணம்அல்ல. ௬௧, ௬௨.
முற்பிறப்பு இருக்கலாகாது. ௬௨.
முன்தண்டனையை அறிவியாதது அநீதம். ௬௩, ௬௪.
மறுபிறப்பில்லை யென்று சிவவாக்கியர் சொன்னதுக்கு நியாயஞ்சொல்லல். ௬௫.
மறுபிறப்பில்லையென்பதற்கு ஞானவெட்டியான், எழுவகைத்தோற்றநூல் சாட்சி. ௬௫.
கடவுள் பாவகாரணமலத்தைச்சிருட்டித்ததில்லை. ௬௭.
ஆன்மா அநாதிமுதல்மலசம்பந்தமுடையதன்று. ௬௯.
ஆன்மாபாவத்தோடேனும் புண்ணியத்தோடேனும் படைக்கப்பட வில்லை. ௭௧.
சுத்தத்தில்நின்று அசுத்தமும்தோன்றும். ௭௨.
சரீரசம்பந்தமானபாவத்திற்கு ஆன்மசம்பந்தமானபாவமேகாரணம். ௭௩.
பொய் புண்ணியமுமாம். ௭௪.
கற்பனைமீறலேபாவம். ௭௪.
ஜன்மபாவவிவரம். ௭௫.
ஒருவனதுபாவபுண்ணியபலன் அவனது சந்ததிக்கும் சுற்றத்திற்குங்கூட உண்டு. ௭௫.
மலப்புணர்வுஅகன்றுவிடுமாம். ௭௬.
அஞ்ஞானம்மலப்புணர்வன்று. ௭௬.
பாசத்தைக்குறித்துமாறுகொளக்கூறியது. ௭௬.
அநாதியாயுள்ளதழியாது. ௭௭.
மோட்சத்திற்பாவமுண்டாகாது. ௭௯.
பஞ்சகிருத்தியமும் சிவன்செய்யவில்லை. ௨௬, ௮௧.
கடவுள்ஒன்றற்கொன்று விரோதமான இரண்டுகுணங்களைக்கூட உடையவர். ௮௨.
பாவம்பரிகரிக்கப்பட்டாலன்றிப் பொறுக்கப்படலாகாது. ௮௨, ௯௦.
ஜன்மபாவம்சேசுநாதருக்கும்அவர்தாய்க்குமில்லை. ௮௩.
தேவன் வாதையனுபவித்தா ரென்பது பொருந்தும். ௮௫.
தேவமனுஷஐக்கியம். ௮௬.
பயனில்செய்கைஇதுவன்று. ௮௭.
பயனில்சொல்இதுவன்று. ௮௮.

பயனில்செய்கையுஞ்சொல்லும் சிவனுடையவர். ௮௯.
சருவேசுரன் நீதியைத் தயையாற்குறைக்கவில்லை. ௯௦.
பழிவாங்கலென்றசொற்பொருள்முதலியவை. ௯௦.
சிவன்கையிட்டதொழிலை அவர்முடிக்காமைக்குச்சொல்லுந் தப்புமுகாந்தரத்தைமறுத்தல். ௯௧.
தேகமில்லாமலும்ஆன்மாக்கள்சுகதுக்கங்களையநுபவிக்குமென்பது. ௯௨.
மோட்சத்தில் ஐம்புல நுகர்ச்சியுண்டு. ௯௪.
தேகம் மோக்ஷாநந்தத்தைக் கெடுப்பதன்று. ௯௪.
தேகிக்குத் தூரக்காட்சியுமுண்டு. ௯௪.
பூததேகமும்உயரஎழும்பும். ௯௪.
மோட்சத்திலும்தேகம்தகுதியும்அவசியமுமாம். ௯௬.
மோட்சத்தில்அங்கவீனரில்லை. ௯௬.
உயிர்த்தெழுந் தேகத்தன்மை முதலியவை. ௯௮.
ஒருவர்தேகத்திற்கலந்த பிறர்தேகத்தைப்பிரித்துமுன்தேகமாக்கக் கடவுளாற்கூடும். ௧௦௦.
சிவன்ஆன்மாபாவஞ்செய்யவேஅவைகளுக்குச்சரீரந்தந்ததுமுதலியவை தவறுனவழியென்பது. ௧௦௨.
சைவர்மோட்சமென்பது ஆன்மாகுணியமாதல். ௧௦௪.
சிவன் அநியாயமுதலியவைகளையுடையவர். ௧௦௫.
சிவன் பாவிகளைத் தண்டித்தல் அநீதக்கொடுமை. ௧௦௬.
நரகம்நித்தியமாயிருத்தற்குநியாயம். ௧௦௭
கடவுள்விஷயத்திற்செய்யும்பாவம் கடவுளுக்குவிரோதமானதுங்கொடியதுமாம். ௧௦௮.
பண்டிதர் முற்பிறப்பிற்செய்ததீவினைக்குத்தண்டனைநரகமேயன்றியிவ்வுலகில்வேறில்லையென்கிறபொய். ௧௦௯.
முற்பிறப்பிற்செய்ததீவினைக்குஇப்பிறப்பில்தண்டனைஉண்டென்று சைவர்நூலேசொல்லுகிறதென்றுகாட்டல். ௧௦௯.
மறுபிறப்பில்லையெனல். ௧௦௯.
மெய்வேதசமயம்ஒன்றே. ௧௧௦.
மெய்வேதசமயாசாரத்துக்குமாத்திரமேபலனுண்டு. ௧௧௦.
மெய்வேதசமயாசாரத்துக்குவிரோதமானது தேவபத்தியாகாது. ௧௧௦.
அபிரகாம்தம்புத்திரனைப்பலியிடஇயைந்ததுதேவபத்தியும், தாய்மார்பிள்ளைகளைக்கங்கையிலமிழ்த்தல்கொலைப்பாவத்துக்குரியமூடபத்தியுமாம். ௧௧௧.
பொய்யைவிசுவசித்தலின்பலன்நரகம். ௧௧௨.
பொய்க்கடவுளை விசுவசித்தலுக்குப்பலன் நரகடைதல். ௧௧௪.
பொய்ம்மதத்திலிருந்துசெய்யும்புண்ணியத்தில் மறுமைப்பலனில்லை. ௧௧௫.
பொய்ம்மதத்தை நம்புவோர் பலாபலம். ௧௧௬.

சைவமகத்துவ திமிரபாநுவின் பொருளட்டவணை முற்றிற்று.

# விவிலியவிரோத் திக்காரத்தின் பொருளட்டவணை.


திர்க்க தரிசனபுஸ்தகங்கள் கடவுளாற் செய்யப்பட்டநூலல்லவென்றதைமறுத்தல். ௩, ௪.

திர்க்கதரிசனங்கள் எடுத்தபாட்டுக்கெல்லாம் பயன்கொள்ளக்கூடியவையென்றதைமறுத்தல். ௬.

திர்க்கதரிசனம் சூதுமொழியென்றதை மறுத்தல். ௭.

திர்க்கதரிசனமுதலியபுத்தகத்துள்ளசில வாக்கியத்துக்குப்பண்டிதர்சொன்ன தப்புப்பொருளைமறுத்தல். ௯, ௧௦, ௧௧, ௧௨.

உலகசிருட்டியைக்குறித்துப் பண்டிதர் வருஷக்கணக்கிஞற்சொல்லிய வீணகுற்றத்தைமறுத்தல். ௧௪—௨௧.

சலப்பிரளயம் உண்டாயிருந்ததென்பதைப் பொய்யென்றதை மறுத்தல். ௨௩, ௨௪.

நாலாநாளி னட்சத்திரச் சிருட்டிப்புப் பொய்யென்றதைமறுத்தல். ௨௫.

நாலாநாளிற்சந்திரசூரியன்களின்சிருட்டிப்புப் பொய்யென்றதை மறுத்தல். ௨௭.

பூமி நாலைந்துதினத்துட் கடுந்தரைகாட்டிப்பயிர்களைவாட்டியது பேரதிசயமென்றதைமறுத்தல். ௨௯.

வேதத்தில் நாள்என்றதின்மேற்பண்டிதர்சொல்லும்ஆக்ஷேபனையை மறுத்தல். ௩௧.

யாக்கோபு குடும்பத்தோடேஎசித்துக்குப்போனவிஷயத்திற் பண்டிதர்சொன்ன வீணன குற்றத்தை மறுத்தல் ௩௩—௩௮.

இஷ்மவேல்சந்ததியின் பெருக்கவிஷயத்திற் பண்டிதர்க்குண்டான பிரமையைநீக்கல். ௪௦.

வேதம் இஸ்ருவேலர்எசித்தில்௪௩௦௵ இருந்தார்கள் என்றதிலும், அவர்கள் ஆறுலக்ஷம்போர்வீரரோடும்அந்நாட்டைவிட்டுப்புறப்பட்டார்களென்றதிலும்பண்டிதர்சொன்னதைத் தவறென்றுகாட்டல். ௪௨—௪௬.

இஸ்ரவேல்ஜனமாகிய ௨௫ லக்ஷம்பெயரும் காதாரக்கேட்கும்படி மோசேயும் யோசுவாவும்பேசினார்களென்று வேதத்திருக்கிறதென்ற பொய்யைமறுத்தல். ௪௮, ௪௯.

பண்டிதர்ஆரோனும்அவர்குமாரனும்அந்தச்சனங்களினிடத்துள்ள அசுத்தத்தைநீக்கவேண்டுமென்று வேதத்துண்டென்றுபுளுகுதலைமறுத்தல். ௫௧.

மிருகங்களுக்குத்தப்பும்படிகடவுள்சொன்னவசனத்தின்மேற் பண்டிதர்சொல்லிய வீணகுற்றத்தை மறுத்தல். ௫௩.

இத்தனைஜனத்துக்குக் கர்த்தருடையகூடாரவாயில்போதாதாதலால் வேதஞ்சொன்னது பொய்யென்றதைமறுத்தநியாயம். ௫௫.

பண்டிதர் ஓய்வுநாள் விஷயத்திற் கிறிஸ்துவர்கள்வேதப்புரட்டரொன்றதை மறுத்தல். ௫௭.

யெகோவாவின் கற்பனை யாவர்க்குமொத்திருக்கவில்லையென்றதை மறுத்தல். ௫௯—௬௩.

அர்ச். சூசையப்பர் சந்தேகநீங்கியதின்மேற் பண்டிதர்சொல்லியவீண்பழிமறுப்பு. ௬௫—௭௦.

சாஸ்திரிகளுக்கு ஒருநக்ஷத்திரம்வழிகாட்டினதில்லையென்றதை மறுத்தல். ௭௨, ௭௩.

ஊரிலுள்ளபிள்ளைகளையெல்லாங் கொல்லுதல் கடவுளுக்குச்சந்தோஷமா? என்றதைமறுத்தல். ௭௪.

பலமேலான அஞ்ஞானசாஸ்திரிகள்கிறிஸ்துவர்களானது. ௭௪.

எரோதன்சிறுபிள்ளைகளைக் கொலைசெய்தானென்று மெய்ப்பித்தல். ௭௬.

நீங்க ளிப்பொழுதுங்களூர்க்குப்போங்களென்று எசித்துத்தேசத்தில் அர்ச். சூசையப்பருக்கறிவித்தகடவுள் பின்னர் அதற்குவிரோதமாக ஒன்றுமறிவித்ததில்லை யென்பது. ௭௮.

நசரேயனென் றழைக்கப்படுவானென்றதின்பொருள். ௮௦.

திருக்குடும்பம்எசித்துக்குப் போனபோ

துஅவர்வழிச்செலவுக்கானபொருள். அஉ.

பொய்க்கிறிஸ்து மெய்க்கிறிஸ்துவும், பொய்யற்புத மெய்யற்புதங்களும். அச, அரு.

சேசுநாதர் தேவகற்பனையைமீறினதில்லை. அஎ.

அர்ச். மரியாயும், அர்ச். சூசையப்பரும் சேசுநாதரிடத்திற் கவலையீனராயிருந்ததில்லை. அஅ.

பண்டிதர்களுக்குமுன் சேசுநாதர்உட்கார்ந்திருந்ததும் பேசினதும் யூதாசாரத்துக்குவிரோதமல்ல. அகூ.

சேசுநாதர் தன்தாயைக் கண்டித்துமறுமொழிசொன்னதில்லை. கூக.

சேசுநாதர் தம்பிதாவுக் குரியவைகளில் வேலையாயிருந்ததும், அவருடைய கடைசிக்கிருத்தியமும். கூஉ.

சேசுநாதர்சொன்ன வாக்கியத்தைக்குறித்துத் தேவமாதாநினைந்தது. கூரூ.

சேசுநாதர் ஸ்திரீயே யென்றசொல்லின் பொருள். கூரு.

தேவமாதாபுதுமைசெய்வித்ததில் தோன்றும்மேன்மை. கூசா.

மதுபானம்எப்போதும் விலக்கப்படத்தக்கதன்று. கூஎ.

பைலோசாஸ்திரியின்நூல்கள். கூகூ.

சேசுநாதர் உண்மையாக அக்காலத்திலிருந்தனரென்பதற்குயோசெபாசென்னும் யூதசாஸ்திரியின்சாட்சி. க00, க0க.

ஷெ க்குத்தசிதாசென்னும்சாஸ்திரியின் சாட்சி. க0க.

ஷெ க்கு இளையபிளீனிசாட்சி. க0உ.

ஷெ க்குஎரோகிலெஸ், செல்சே, போர்பிரோஎன்னும் அஞ்ஞான சாஸ்திரிகளின்சாட்சிகள். க0ரூ.

ஷெ க்குத் தெர்துலியனூஸ்என்னும் சாஸ்திரியின்சாட்சி. க0ச.

ஷெ க்கு லம்பிரிதியுஸ்என்னும்அஞ்ஞானசாஸ்திரியின்சாட்சி. க0ச.

ஷெ க்கு பிளேகோஎன்னும் அஞ்ஞான சாஸ்திரியின்சாட்சி. க0ரு.

ஷெ க்குத் தாலுஸ்என்கிற கிரேக்குச்சாஸ்திரியின்சாட்சி. க0சா.

ஷெ க்கு நூதனகிரகணசாட்சி. க0சா.

ஷெ க்குத் தால்முத், தோல்தொத்ஜேசுவின்சாட்சி. க0எ.

பண்டிதர்சேசுநாதரைக் கற்பனூமூர்த்தியென்றது. கக0

கிறிஸ்துவின் ஜனனகாலம் சரித்திரத்திற்குஒத்தேயிருக்கிறது. ககக.

ஏசுகற்பனூமூர்த்தி யென்ற தறியாமை. கககூ.

சேசுநாதர்உயிர்த்தெழுந்ததற்குச்சாட்சி கக௩—ககசா.

சேசுநாதர்உயிர்த்தபின் தமதுபகைவர்க்குங்காணப்பட்டார். ககஎ.

சேசுநாதர்உயிர்த்தவிஷயத்தில் ஆக்ஷேபநிவாரணம். கககூ—க உரூ.

சிவனுக்கும்நக்கீருக்கும்உண்டான வாக்குவாதம். கஉஉ.

சேசுநாதருக்கு அவர்காலத்திலேதானே சீஷர்கள் உண்டு. கஉரூ.

அர்ச். ஸ்நாபகஅருளப்பர் சேசுநாதரைக் குறித்துச்சொன்ன சாட்சியத்துக்கு அவரேஅந்தத்தேவனிடத்தில் தம்முடையசிஷரையனுப்பியது விரோதமன்றென்றுகாட்டும்நியாயம். கஉச—கரூ0.

பிசாசு சேசுநாதரைச்சோதித்தவிஷயத்தில் பண்டிதர்சொல்லும் விபரீதங்களைமறுத்தல். கரூக—கரூஎ.

சேசுநாதர் இராயப்பரைநோக்கி, என்னைப்பின்சென்றவர்களாகிய நீங்களும் பன்னிரண்டு சிங்காசனங்களில் வீற்றிருப்பீர்களென்று சொன்னதைக்குறித்துப் பண்டிதர்சொல்லும் விபரீதங்களை மறுத்தல். கரூஅ—கசக.

அர்ச். மத்தேயுசுவிசேஷத்து உஎ-ம் அதிகாரத்தின் ரு-ம்-சா-ம்-எ-ம்வசனங்களுக்கும் அப்போஸ்தலர்நடபடிகள் முதல் அதிகாரத்தின் கஅ-ம்வசனத்துக்கும்விஷயபேதமில்லை என்று காட்டல். கசஉ—கசச.


விவிலியவிரோத திக்காரத்தின் பொருளட்டவணை முற்றிற்று.

——»(*)«——

# வேததர்க்க புஸ்தகங்கள் அச்சிடப்படுதற் குதவிசெய்தவர்கள் பெயர்முதலியவைகள்.

| ஊர் | பெயர். | | உத்தியோக்முதலியவை. | நன்கொடை ரூ. | வாரகுறிப்புக்கு கைச்சந்தாக்கள் | அச்சுக்காகக் கொடுத்த ரூ. | ஆக ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| தூத்துக்குடி | ம-ள-ள-ஸ்ரீ | பிரான்சிஸ்பிரேர | பரதவருள்ஒருபிரபு | ௱00 | | | ௱00 |
| டிை | டிை | எட்வார்ட்வாஸ் | அசிஸ்டன்ட்இன்ஸ்பெக்டர் S. I. R. | ௫0 | ௧ | ௨ | ௫௨ |
| டிை | டிை | J. M. B. ரோச்செ விக்டோரியா | வியாபாரம் | ௨0 | ௧ | ௨ | ௨௨ |
| மதுரை | டிை | K. ஞானம்மசெட்டியார் | வர்த்தகம் | | ௧ | ௨ | ௨ |
| டிை | டிை | பு. ர. யாகப்பமூப்பனர் | கண்டிராக்டர் | ௫ | ௧ | ௨ | ௭ |
| டிை | டிை | P Y. சவெரிமுத்துமூப்பனர் | கண்டிராக்டர் | ௫ | ௧ | ௨ | ௭ |
| டிை | டிை | P. Y. மிக்கேல்மூப்பனர் | கண்டிராக்டர் | ௭ | ௧ | ௨ | ௰ |
| டிை | டிை | P. Y. அந்தோனிமுத்தமூப்பனர் | சவளிவர்த்தகம் | ௨ | ௧ | ௨ | ௫ |
| டிை | டிை | C. ஞானப்பிரகாசம்பிள்ளை | லோக்கல்பண்டுஓவர்சியர் | ௫ | ௧ | ௨ | ௭ |
| டிை | டிை | விசுவாசம்பிள்ளை | வர்த்தகம் | | ௧ | ௨ | ௨ |
| டிை | டிை | சவெரியார்அடிமைமூப்பர் | வர்த்தகம் | | ௧ | ௨ | ௨ |
| உசிலம்பட்டி | டிை | சாமிநாதநாயகர் | மானேஜர் | | ௧ | ௨ | ௨ |
| திரிச்சினப்பள்ளி | டிை | திரு. சு. சாமிப்பிள்ளை | முனிசிபல்கமிஷனர் | ௨௫ | ௧ | ௨ | ௨௭ |
| டிை | டிை | A. ராஜேந்திரம்பிள்ளை | பிளீடர் டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட் | ௫ | ௧ | ௨ | ௭ |
| டிை | டிை | S. சஞ்சீவிஆசாரியார் | ஸ்டோர்கீப்பெர், சீப் இஞ்சினீர் ஆபீஸ்S I.R.திரிச்சினப்பள்ளி | ௫ | ௧ | ௨ | ௭ |
| டிை | டிை | இன்னசிமுத்துபிள்ளை | பழசரகு | ௫ | | | ௫ |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஷை | ஷை | T. R. அப்பாவுமுதலியார் | விபசாயம் | கசு | க | உ | கஅ |
| ஷை | ஷை | P சவராயபிள்ளை | ஹெட்கிளெர்க், டிஸ்டிரிக்ட் மகார்ட் | ரு | க | உ | எ |
| தஞ்சாவூர் | ஷை | A. ராஜரத்தினம்பிள்ளை | சப்மாஜிஸ்டிரேட் | ரு | க | உ | எ |
| ஷை | ஷை | அருள்நாதபிள்ளை | இங்கிலிஷ் ஹெட் அக்கவுண்டெண்ட் டஞ்சூர்கலெக்டரேட் | ரு | க | உ | எ |
| கும்பகோணம் | ஷை | T. சாமிநாதமுதலியார் | மிராசுதார் | கo | க | உ | கஉ |
| ஷை | ஷை | P. தம்பிசாமிமுதலியார் | மிராசுதார் | கo | க | உ | கஉ |
| ஷை | ஷை | D ஆதியப்பமுதலியார் (சன்னபுரம்) | மிராசுதார் | ரு | க | உ | எ |
| ஷை | ஷை | D. சாமிநாதமுதலியார் | | ரு | க | உ | எ |
| ஷை | ஷை | D. ஜகநாதமுதலியார் | | ரு | க | உ | எ |
| ஷை | ஷை | D. திவ்வியநாதமுதலியார் | | ரு | க | உ | எ |
| கொறநாடு | ஷை | சவெரிமுத்துநாடார் | கண்டிராக்டர் | ருo | ச | அ | ருஅ |
| ஷை | ஷை | பொன்னுசாமிநாடார் | கண்டிராக்டர் | கரு | க | உ | கஎ |
| நாகபட்டணம் | ஷை | ச. அந்தோணிசாமிசெட்டியார் | கண்டிராக்டு, தரகுவியாபாரம் | ரு | | | ரு |
| ஷை | ஷை | கிறிஸதுவர்கள் P. P. & P. G. &c. | | கo | | | கo |
| காரைக்கால் | ஷை | அவொக்கா ஞானப்பிரகாசம்பிள்ளை முதலியபெரியமனிதர் | | எ0 | | | எ0 |
| கூடலூர் | ஷை | M. B. குசைப்பிள்ளை M. A. | ஹெட்மாஸ்டெர் செயின்ட்ஜோசெப்ஸ்காலிஜ் கூடலூர் N.T. | ரு | க | உ | எ |
| ஷை | ஷை | வெ. ச. ஜெகநாதபிள்ளை | ஸ்கூல் உபாத்தியாயர் | | க | உ | உ |
| ஷை | ஷை | A. அந்தோணிமுத்துக்குட்டிமுதலியார் | நாசர், டிஸ்டிரிக்ட்கோர்ட் சவுத்ஆர்காட் | | க | உ | உ |
| புதுச்சேரி | ஷை | அன்புபொன்னுசாமிபிள்ளை | பிரோபியெர் மலபார் | கo | க | உ | கஉ |
| ஷை | ஷை | பிள்ளைஅப்பாவுமுதலியார் | வர்த்தகம் | கo | க | உ | கஉ |
| ஷை | ஷை | P. நல்லதம்பிமுதலியார் | வர்த்தகம் | கo | க | உ | கஉ |
| ஷை | ஷை | A. பரியகுசைப்பிள்ளை | ரிச்வெர் | கo | | | கo |
| ஷை | ஷை | பொன்னுசிந்தாத்திரிபிள்ளை | சாயெர்தார் | ரு | க | உ | எ |

| ஊர். | | பெயர். | உத்தியோகமுதலியவை. | நன்கொடை ரூ. | வாங்கும்புத்தகத்துக்கான தொகை | அனுப்பக்கொடுக்க ரூ. | ஆக ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| ஷை | ஷை | A. உபகாரம்பிள்ளை | ஹெட்கோசியான் | ௫ | ௧ | ௨ | ௭ |
| ஷை | ஷை | சாந்துகுழந்தைஉடையார் | அழான் கொம்த்தாபிள்செலொப்பித்தால்கொலோனியால் | ௫ | ௧ | ௨ | ௭ |
| ஷை | ஷை | ஐயாவுஆரோக்கியசாமிமுதலியார் | கொம்மி ஹெட்கோசியான் | ௫ | ௧ | ௨ | ௭ |
| ஷை | ஷை | ஞா. சாமிகண்ணுஉடையார் | ஹெட்கோசியான் | ௫ | ௧ | ௨ | ௭ |
| ஷை | ஷை | P. மரிதாஸ் துரைசாமிபிள்ளை | ஹெட்கோசியான் | ௧௦ | ௧ | ௨ | ௧௨ |
| ஷை | ஷை | லூயிஸ் சின்னையாமுதலியார் | ஹெட்கோசியான் | ௫ | ௧ | ௨ | ௭ |
| ஷை | ஷை | அப்பாவு பெலவேந்திரசாமிமுதலியார் | மிராஸ்தார் | ௫ | ௧ | ௨ | ௭ |
| ஷை | ஷை | அன்பு அப்பாசாமிபிள்ளை | லூப்பிசியெதெசாந்தே | ௨ | | | ௨ |
| ஷை | ஷை | பியெர் முத்துசாமிபிள்ளை | வர்த்தகம் | | ௧ | ௨ | ௨ |
| ஷை | ஷை | பஷ்பநாதபிள்ளை | கொமெர்சான் | ௪ | | | ௪ |
| ஷை | ஷை | P, M. ஜகநாதபிள்ளை | கோந்தாபில் | ௧ | ௧ | ௨ | ௩ |
| ஷை | ஷை | ராஜப்பஐயர் | தாசில்தார், வில்வநல்லூர் | ௫ | ௧ | ௨ | ௭ |
| ஷை | ஷை | A. ஆரோக்கியசாமிபிள்ளை | கொமமிசெர்தெபொல்ஸ் வில்வநல்லூர் | ௫ | ௧ | ௨ | ௭ |
| விழுப்புரம் | ஷை. | P. A. S. ஆரோக்கியசாமிபிள்ளை | ஹெட்கிளார்க், டிஸ்டிரிக்ட் முன்சிப்கோர்ட், விழுப்புரம் | ௫ | ௧ | ௨ | ௭ |
| ஷை | ஷை | கண்ணுசாமிபிள்ளை | வக்கீல், டிஸ்டிரிக்ட்கோர்ட் | ௨ | | | ௨ |
| செங்கல்பட்டு | ஷை | ஆரோக்கியசாமிபிள்ளை | சுபெர்வைசர் L. F. W. | ௧௦ | ௧ | ௨ | ௧௨ |
| அரக்கோணம் | ஷை | ஞானசாமிமுதலியார் | டெபியுடி தாசில்தார் | ௫ | ௧ | ௨ | ௭ |
| பெங்களூர் | ஷை | அப்பாசாமிபிள்ளை | பக்ஷி | ௩௫௦ | ௫ | ௧௦ | ௩௬௦ |
| சென்னபட்டணம் | ஷை | T. R. தம்புசெட்டியார் | சிப்ஜட்ஜ், பெங்களூர் | ௨௫ | ௩ | ௮ | ௩௬ |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஷை | ஷை | ஆவேமரியா சின்னசாமிமுதலியார் M.A | கவர்ன்மெண்ட் ஆபீஸ், சீப்செக்ரேடேரியட் அசிஸ்டாண்ட் | ௪0 | க | உ | கஉ |
| ஷை | ஷை | S. C. அடைக்கலநாதஉடையார் | ஹவுஸ் துவிபாஷி | ரு | க | உ | எ |
| ஷை | ஷை | P. S. ரத்நசாமிசெட்டியார் | செராப்பு | | க | உ | உ |
| ஷை | ஷை | A. தைரியநாதபிள்ளை | ஹெட்கிளெர்க், சால்ட்டிபார்ட்மெண்ட், மட்ராஸ் | ரு | உ | ச | கூ |
| ஷை | ஷை | ரா. கண்ணுசாமிஉடையார் | வர்த்தகம் | ௪0 | க | உ | ௪உ |
| ஷை | ஷை | P. திவான துரைசாமிமுதலியார் | ஏஜெண்ட் அண்ட் மானேஜர், பார் பியுயெல் கண்டிராக்டர் A. சாம்பியென்என்குவைர் | கரு | க | உ | கஎ |
| ஷை | ஷை | T. R. துரைசாமிபிள்ளை | கிளெர்க், போஸ்ட்மாஸ்டெர் ஜெனரல்ஸ்ஆபீஸ் | ரு | க | உ | எ |
| ஷை | ஷை | அநந்தையர் | வர்த்தகம் | க | க | உ | ௬ |
| ஷை | ஷை | ச. மலைக்கொழுந்துபத்தர் | டைப் பவுண்டெர் | ௪0 | க | உ | கஉ |
| இராயபுரம் | ஷை | R. N. பிரகாசமுதலியார் | அப்சாரிசுப்பரின்டென்டண்ட் | ௬ரு | உ | ச | ௬கூ |
| ஷை | ஷை | ப. ரத்நசாமிமுதலியார் | சுபெர்வைசர் D. P. W. | ௪0 | க | உ | கஉ |
| ஷை | ஷை | C. துரைசாமிபத்தர் | கடிகையாரஷாப்பு | ரு | | | ரு |
| ஷை | ஷை | த. சி. சொர்ணம்பிள்ளை | ரெயில்வே ஆபீசுஉத்தியோகம் | ரு | க | உ | எ |
| ஷை | ஷை | S. வெலவேந்திரசாமிமுதலியார் | கிளெர்க் ஏஜெண்ட்ஸ் ஆபீஸ் M. R. Co. | க | க | உ | ௬ |
| ஷை | சங். | ரத்நநாதசுவாமியார் | அர்ச். இராயப்பர்கோயில் விசாரணைக்குரு | | உ | ச | ச |
| ஷை | சங். | T. B. D. குவாட்ராஸ் சுவாமியார் | அர்ச். அந்தோணியார் கோயில் விசாரணைக்குரு | | க | உ | உ |
| மயிலாப்பூர் | சங். | A. S. நூனெஸ் சுவாமியார் | மாதரசுமாதாகோயில் விசாரணைக்குரு | | க | உ | உ |
| இராயப்பேட்டை | ம-ா-ா-ஸ்ரீ ம. வெலவேந்திரசாமிபிள்ளை | | முனிசிபல்ஓவெர்சியர் | ரு | க | உ | எ |

| ஊர். | | பெயர். | உத்தியோகமுதலியவை. | நன்கொடை ரூ. | வாங்கும்புத்தகத்திற்கு ரூ. | அச்சுக்காகக் கொடுத்த ரூ. | ஆக ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| புதப்பேட்டை | ஷை | அ. ராசுபத்தர் | நடைப்பவுண்டர் | உரு | | | உரு |
| நாகர்கோயில் | | C. G. Gresseux Esquire | Zilla Judge | | க | உ | உ |
| தக்கலை | Mr. | மரியந்திரவைத்தியநாதநாடார் | கண்டிராக்டர் | எ | க | உ | ௰ |
| காரங்காடு | ஷை | சவரிமுத்துவைத்தியநாதநாடார் | கண்டிராக்டர் | கஉ | க | உ | கச |
| திருவநந்தபுரம் | ஷை | T. L. Gomez | Merchant | ரு | க | உ | எ |
| ஷை | ஷை | P. A. Moreyra | Merchant | ரு | | | ரு |
| ஷை | ஷை | H. Moreyra | Canacapillay, General Hospital | ரு | க | உ | எ |
| ஷை | ஷை | W. R. Purificacid | Contractor | உ | க | உ | ச |
| ஷை | ஷை | M. Curvatho | Superintendant of Doctors | | க | உ | உ |
| ஷை | ஷை | வி. டிக்குரூஸ் | பிறின்ட்டெர் | உ | க | உ | ச |
| ஷை | ஷை | கிரியான் டிக்குரூஸ் | ஓவர்சியர் | | க | உ | உ |
| ஷை | ஷை | Zachuriah | | உ | க | உ | ச |
| ஷை | ஷை | G. M. Sesudian | Hd. Constable | | க | உ | உ |
| ஷை | ஷை | J. Michael | Asst. Master St. Joseph's School | | க | உ | உ |
| ஷை | ஷை | M. Marianthren | Teacher, Convent of the Holy Angels | க | க | உ | ச |
| ஷை | ஷை | F. Xavier | Head Clerk D. P. W, | உ | | | உ |
| முருக்கம்புழை | ஷை | வெஞ்சஸ்லாஸ்பேரேரா | வர்த்தகம் | உரு | க | உ | உஎ |
| இரோட் M.R.Co. | ம-ா-ா-ஸ்ரீ | A. பாவுல்கிருஸ்நாயுகொறு | | | க | உ | உ |
| திருச்சினப்பள்ளி | ஷை | செ. பெரியநாயகம்பிள்ளை | அரிசிமண்டி | | க | உ | உ |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | ஷை | A. பரஞ்சோதிராஜு | மேஸ்திரி D. P. W. | | க | உ | உ |

கடவுள்துணை.

# சைவமகத்துவதிமிரபாநு.

## தற்சிறப்புப்பாயிரம்.

### ஆசிரியவிருத்தம்.

மெய்விளக்குந்திருமறையினுண்மையெவர்களுமறிந்து விழுப்பமோங்கச்
சைவமகத்துவதிமிரபாநுசொலவாக்கருளத் தனையினுற்ற
பொய்விலக்க வடியாருள் ளெழுந்துசிர மேலெரிநாப் போலத்தோன்று
தெய்வமெனுமிஸ்பிரித்துசாந்துமலர்கிகர்திருத்தாள்சிரமேற்கொள்வாம்.

### நூல்வரலாறு.

சத்தியவேதசூரியன் இத்தேசத்தும்விளங்கி, யஞ்ஞான விருளை யோட்டாகின்ற இக்காலத்தில்அச்சிடப்பட்ட "சைவமகத்துவம்" என்னும்ஒருசிறுபுத்தகம் எமக்குக் கிடைத்தது. அதின் ௨-ம் பக்கத்தில் "பாதிரிமாரான சுதேசிகளுக்கும் ஐரோப்பைய அமரிக்க பாதிரிமாரிற் றமிழ் நன்குணர்ந்தவர்களுக்குந் தலைக்கொருபிரதி இலவசமாக அனுப்பப்படும். இவ்வாறனுப்பும்பிரதி ஏறக்குறைய ௨௫௦" எனவும், ௭-ம் பக்கத்தில் "ஈண்டுக் கிறிஸ்தசமயமென்றது ரோமானிய கிரேக்க லுத்தேரிய ஸ்நானிய புரோத்தெஸ்தாணாதி யெவ்வகைவிரிவையு மொருங்கு தொகுத்துச்சுட்டிய தென்க" எனவுங் கூறப்பட்டிருக்கின்றன. இவ்விடங்களிற் கூறப்பட்டிருப்பவைகளை நம்பிச் சில ரோமான்கத்தோலிக்குச் சுதேசகுருக்களிடத்திலும் ஐரோப்பைய குருக்களிடத்திலும் யாம் விசாரித்தபோது அவர்கள் இப்புத்தகந் தமக்கு அனுப்பப்படவில்லையென்று சொல்லிவிட்டார்கள். இப்படிப்பட்ட குதர்க்கநூல்களுக்கெல்லாம் கருதினரும் லண்டன் அதிமேற்றிராணியாருமாகிய நீக்கலாஸ்உவைஸ்மென்முநிவர்முதலானவர்கள் உத்தரவெழுதிக் கண்டித்திருத்தலாற், பெரும்பாலும் அந்தக்குதர்க்கநூல்களின் கருத்தேயாகிய இந்தச் சைவமகத்துவத்திற்கு யாம் உத்தரவெழுதிக்கண்டிக்க அவசரமில்லாதிருந்தாலும், இந்தச் சைவமகத்துவத்தின் ௧௦-ம் பக்கத்தில் சைவசமயத்தைவிட்டுக் கிறிஸ்துவேதத்தைக் கைக்கொள்வோரைச் "சாறுமிழ்ந்துகோதுண்ணும்விலங்கொப்"பவரென்றும் ௧௩௩-ம் பக்கத்

தில் " இப்பொழுதுங் கிறிஸ்தசமயகுரவர்களில் யாராவது இவைகட்குச் சமாதானஞ் சொல்லுவாராயின் அதனை அறியவும் அதனை யானெவ்வா றங்கீகரித்தனனென உலகத்திற்குத்தெரிவிக்கவும் காத்திருக்கின்றனன்" என்றுஞ் சொல்லப்பட்டிருத்தலால், அந்தச் சைவமகத்துவ ஆசிரியருடைய அறியாமைக்கிரங்கி அவர் விலங்கொப்பவரெவரென்று அறிந்துகொள்ளவும், தம்வாக்குப்படி தாமறிந்தவாறு தம்மையொத்தவர்க்குத் தெரிவிக்கவும், பொய் மதத்தைக் கைவிட்டுச் சத்தியவேதத்தைக் கைக்கொண்டு நடப்பவரை விலங்கொத்தவரென்று சொல்லித் தூஷிக்கும் இவரும் இவரையொத்தவர்களும் இனி வீணு யிவ்வகைப் பெரும்பாவச்சகதியில்விழுந் துழலாமல் தெளிந்து கரையேறி யுய்யவும் அவர்க்குக் கிறிஸ்துவேதத்தின் பரிசுத்தத்தையும் சைவத்தின் அசுத்தத்தையும் செவ்விதிற்காட்டவேண்டுமென்ப தெமக்குத் தோன்றினமையால் "சைவமகத்துவதிமிரபாநு" வென்னும் இந்நூலை யியற்றப்புகுந்தாமெனவும், இது எவர்க்கும் விளங்கவேண்டி இந்நடையி லெழுதத்துணிந்தாமெனவு மறிக.

# நூல்.

க. க. சைவமகத்துவமியற்றியபண்டிதர் பரதகண்டத்தில் "சைவசமய அறிவு சுருங்கக் கிறிஸ்தசமய அறிவு பரம்பி வருகின்ற" தென்றும், "பலரும் சைவ" "சமயத்தைக் கைவிட்டுக் கிறிஸ்துசமயத்திற்" புகுகின்றார்களென்றும் சைவமகத்துவ முதற்பாட்டோயில் முழுவதும் ஒப்புக்கொண்டாலும் அப்படிச் சைவசமய அறிவு சுருங்கக்கிறிஸ்துவேத அறிவு பரம்பி வருவதற்கும் பலருஞ் சைவசமயத்தைக் கைவிட்டுக் கிறிஸ்துவேதத்திற் புகுகிறதற்கும் சில ஒவ்வாக்காரணங்களைச் சொல்லுகின்றார். எங்ஙனமெனின்:—

உ. ஙூ-வது. "பரதகண்டத்தில் எஞ்ஞான்றுந்தலைமைபெற்றோங்கியது சைவம். பரசமயங்கள் ஒவ்வோர்காலத்தோரோர்அரசனுதியராஞ்ஞையாலுயர்ந்தும் பின்னர்ப் பழையபடி தலைகுனிந்துவிட்டன. இவ்வாறாகவே இஞ்ஞான்றும் அங்கிலேயர் பிராஞ்சியர்முதலாய ஐரோப்பையர் லோகாதிகாரிகளாய்த் தேசந்தோறுந் தமதாணை மேற்படச் செய்யவே அவர்களால் அநுசரிக்கப்பட்ட கிறிஸ்த சமயமும் எழும்பித் தானேமெய்ச்சமயமென்றும் தன் வழியானல்லால் ஆன்மகோடிகட்குப் பாவநிவாரணமும் முத்தியுங் கிடையாதென்றும் வாதுகூறுகின்றது" என்கிறார். இதனால் சைவம் பூமியின் மேற்புறத்தில் மிகவும் அற்பபாகமாகிய பரதகண்டத்தில்மாத்திரமே இருந்தது இருக்கின்றதென்பதையும், தன்னை யநுசரித்த அரசர் காலத்தின்மாத்திரந் தலைநிமிர்ந்திருந்தது தன்னை யநுசரியாத அரசர் காலத்தெல்லாம் தலைவணங்கியே யிருந்தது இருக்கின்றது என்பதையும், அரசர் உயர்த்தவுயர்வதும் தாழ்த்தத் தாழ்வதுமா யிருக்கிறதென்பதையும் அவர் ஒத்துக்கொண்டதாயிற்று. கடவுள் எல்லாமனிதர்க்குந் தலைவராயும் எல்லா அரசரினும் மேற்பட்டவல்லவராயு மிருத்தல்பற்றி மெய்யானகடவுளாலருளப்பட்ட வேதமென்பது பூமியில் மனிதருள்ள இடத்தெல்லாஞ் செல்கின்றதாயும் அரசராணையின் மடங்காது மேற்கொள்ளுகின்றதாயு மிருக்கவேண்டும். கிறிஸ்துவேதம் மாத்திரமே பூமிமுழுவதையும் ஒருவாறாண்டிருந்த ரோமைநகரரச ராணையினும், பிராஞ்சுதேசம் இங்கிலண்டு தேசம் இந்துதேசம் இலங்கை முதலியவற்றை யாண்ட அரசராணையினும் மடங்காது மேற்கொண்டதாயும், பூமியின் எவ்விடத்துஞ் செல்கின்றதாயு மிருக்கின்றது. ஆதலால், இது மாத்திரமே மெய்யான சர்வேச்சுர னருளிய வேதமெனவும், சைவம் இத்தன்மையின்றி மேலே கூறியவாறு தானுள்ள சிற்றிடத்தும் அரசராணையுயர்த்த உயர்ந்துந் தாழ்த்தத் தாழ்ந்தும் வருதலின் மெய்யான கடவுட் சம்பந்த மில்லாததெனவும், அதனால் இது கூறுங்கடவுளாகிய சிவனும் மெய்யான கடவுளல்ல ரெனவும் அறியக்கிடத்தலறிக.

ஙு. உ-வது. "இந்நாளரசபாடைஇங்கிலிஷேயாக"லானும் "கலைஞானசாஸ்திரங்களைச் சுதேசபாஷையிற் கற்றுக்கொடுக்குங் கல்லூரிகளில்"லாமை "யானும் சமஸ்கிருததிராவிடங்கற்றுச் சைவசித்தாந்தநூல்களை வாசித்தறிந்தோர்சிலரன்றியிலர்; ஆகவே பெரும்பான்மையோர்

சைவத்தின் கொள்கையையும் அதனது மகிமையையு மறியாது அஞ்ஞானந்தகாரத்திற் சமயஅறிவு மழுங்கிக்கிடக்கின்றனர்" என்கிறார். இதனால், கலைஞான சாஸ்திரங்களைச் சுதேசபாஷையிற் கற்றுக்கொடுக்கும் பள்ளிக்கூடங்கள் இல்லையாயின் சைவம் சிறுத்து அழிந்துபோகுந் தன்மைய தென்பதைப் பண்டிதர் ஒத்துக்கொண்டதாயிற்று. கடவுள் சர்வவல்லவரா யிருத்தல்பற்றித் தம்வேதம் கல்வியில்லாராலும் அபிவிருத்தியடையச்செய்ய வல்லவராயிருத்தலால் அவர் வேதம் எவ்விதத்தாலும் நைந்துபோகக் கூடாது. அப்படியே கிறிஸ்துவேதம் கல்வியில்லாத மீன்பிடிகாரரினின்று வெளிப்பட்டும் நைந்துபோகாமல் அபிவிருத்தியாகிவருகின்றது; ஆதலால் அதுவே மெய்வேதமெனவும், சைவம் மேற்கூறினவாறு கல்லூரிகளில்லாமை காரணமாய்ச் சிதைதலின் மெய்க்கடவுட் சம்பந்தமான தன்றெனவும் ஆதலால் அது கூறுஞ்சிவனு மெய்யங்கடவு ளல்லனெனவும் அறியக்கிடத்தலறிக.

ச, ரு-வது. "சைவந் தன்னைத்தேடிவருவோர்க்குக்குருவானுணர்த்தப்படும். கிறிஸ்தசமயமோ அங்ஙனமாகாது தெருவழிச்செல்வோரும் நூதனார்த்தமாயாவது திரும்பிநின்று பார்க்கும்படி சந்திகடோறு நின்றுகுளறுங் குருபதேசிகளாற் றேடியுணர்த்தப்படும். ஆதலாற் சைவசமயஅறிவு சுருங்கக் கிறிஸ்தசமய அறிவு பரம்பிவருகின்றது" என்கிறார். ஒரு சமயத்தைப்பற்றி ஒருவர் சிறிதேனும் பேசக்கேட்டாலன்றி அதில் மற்றொருவனுக்கு விருப்பமுண்டாகக் கூடாது. தற்செயலாய் ஒரு புத்தகத்தை யொருவன் வாசித்தறியினும் அதுவும் அப்புத்தகத்தைச் செய்தவன் சொல்லக் கேட்டதேயாம். சைவசமயங்கூறுகிறபடியேயும் ஆன்மா மலங்களாற் பந்திக்கப்பட்டு அஞ்ஞானமுடையதாதலால் மனிதன் தானே யறிந்துகொள்ளுஞ் சக்தியிலன். "அறிவிக்கவன்றி யறியாவுளங்க ணெறியின்" எனவும், "மன்னவன்தன் மகன்வேட ரிடத்தேதங்கி வளர்ந்தவனை யறியாது மயங்கிநிற்பப், பின்னவனுமென்மகனீ யென்றவரிற் பிரித்துப் பெருமையொடு தானாகப் பேணுமாபோற், றுன்னியவைம் புலவேடர் சுழலிற்பட்டுத் துணைவனையு மறியாது துயருறுந்தொல்லுயிரை, மன்னுமருட் குருவாகி வந்தவரினீக்கி மலமகற்றித்தானாக்கி மலரடிக்கீழ்வைப்பன்" எனவும் "கிருமிகளை வலைத்துவளைந் தூதாநின்று கிருமியியல்பைக் கெடுத்துத் தன்னையொப்பனவாய வண்டுகளாகச்செய்யும் வண்டே போல ஒருமலமுடைய விஞ்ஞானகலர்க் கம்மலவியைபையும், இருமலமுடைய பிரளயாகலர்க் கவ் விருமலவியைபையும், மும்மலமுடைய சகலர்க் கம்மும்மலவியைபையு மொருங்கே யழித்துச், சிவமய மொன்றே யவர்பால் தோன்றச் செய்வர்" எனவும் (சைவமகத்துவ கக அ, ககக, கஉ0ம், பக்கத்தில்) இந்தப்பண்டிதர் எடுத்துக்காட்டியபாட்டும் கூறியவுரையும் உணர்த்துகிறபடியேயும் அஞ்ஞானாந்தகாரத்தில் அமிழ்ந்தியவரைக் குரு தானேதேடிப்போய் உபதேசிக்கவேண்டியதாகவே யிருக்கிறது. ஆதலால் பன்றிக்குணம் நாய்க்குணமுடையோரையொழித்து மற்றவரை வலியத்தேடிப்போய் மெய்வேதத்தை யுபதேசிப்பதே முறைமை. கிறிஸ்துவேதம் அப்படியே கற்பிக்கின்றமையால் அதுவே மெய்வேத மென

வும், அதனால் அது கூறுங் கடவுளே மெய்க்கடவுளெனவும், சைவம் அப்படி யெங்கும் பிரசங்கிக்கப்படா தெனப்படுதலால் "நஞ்சுடைமை தானறிந்து நாகங்கரந்துறையும்" என்றவாறு சைவம் நஞ்சும் கரவு முள்ளதெனவும், ஆதலால் ஒளிவளர இருள்சுருங்கியாங்கு இது தேய்கின்றதெனவும், அதனால் இது கூறிய கடவுளாகியசிவனு மெய்க்கடவுளல்லரெனவு மறியக்கிடத்தலறிக.

ரு. உ. சிவப்பொருளும், அச்சிவப்பொருளினுணைக்கு ளடங்கித் தன்னையும் பதியையுமுணரவல்லனவாகிய தொகைப்படாவநந்த ஆன்மாக்களும் அவ்வான்மஞானத்தைச் சிதைத்துநின்றதாகிய மலமும் தமக்கோர் நிமித்தகாரணமில்லாமல் நித்தியப்பொருள்களாய் அநாதிகாலத்திலேயே உள்ளனவாம். இவற்றுள் மலமானது ஆணவம், கன்மம், மாயையென்னு மூவியல் புடையது. ஆன்மாக்கள் அநாதியிலேயே மலத்தாற் பந்திக்கப்பட் டிருத்தலால் அஞ்ஞான முடையன. ஆணவமலம் ஆன்மாக்களுக்குக் கருமத்தில் விருப்பமுண்டாக்கச், சிவன்இரங்கி அவ்விருப்பத்தை யனுபவிக்க மாயைமலத்தாலேயே சரீரங் கொடுக்கின்றார். அவ்வாறு சரீரங்கொண்ட ஆன்மாக்கள் சுவேச்சையில்லாமல் மலவசத்தனவாய்க் கன்மமலத்தினால் நடத்தப்பட்டுப் பாவமேனும் புண்ணியமேனும் அறியாமையினாலே செய்கின்றன. ஆன்மாக்கள் இவ்விதத்திலே செய்கிற பாவத்துக்குச் சிவனே காலங்குறித்து ஆன்மாக்களை நரகத்திலேவிட்டுத் தண்டிக்கிறார். மறுபடி இவ்வாறு பிறப்பில் உழலுகையில் ஆன்மாக்களின் பக்குவங்கண்டு சிவன் தம்முடைய கருணையினாலேயே முன்போல அதற்குத்திரோபவனுயிராமல் அனுக்கிரகனாகி ஞானத்தை யுணர்த்துகிறார். ஆன்மாக்கள் மலத்தை நீங்கிச் சிவனையொப்ப மோக்ஷாநந்த முடையனவாய்ப் பஞ்சகிருத்தியமுஞ் செய்யவல்லன வாகுகின்றன என்று இந்தச் சைவமகத்துவ முதலிய சைவசமய நூல்கள் சொல்லுகின்றன.

சு. ஆ-வது. "பேசரியபரத்தினிலா ரோபமதாமூலப் பிரகிருதிதோன்றுமிதிற் சாத்திகமாமாயை, ஈசனிதிற்றோன்றுமிரா சதமவித்தைசீவ னிதிற்றோன்றுந்தாமதத்தா வரணம்விட்சேபமதாஞ், சூசகவிட்சேபமதிற்சூக்குமபூதமதாஞ் சூக்கவுடலிருகுணத்தாற் றோன்றிடுந்தாமதத்தின், மாசில்பஞ்சீகரணமதா யைம்பூதவடிவா யதிற்றூல சடந்தோன்று மனைத்துமிவ்வாறடங்கும்'' என்ற உபநிடதப் பாட்டும், ஞானசீவவாதக்கட்டளை முதலிய நூல்களும் மாயை சீவர்களாதியனைத்தும் பிரமத்தினின்று தோன்றி அப்பிரமத்தில்தானே ஒடுங்குமென்கின்றன. இவை சைவசித்தாந்தநூல்களாகிய சைவமகத்துவ முதலியவைகளாற் கூறப்பட்டவையென்று மேலே காட்டியவைகளுக்கு விரோதமாய் நிற்றல்காண்க. இவ்வாறு சைவர்களுடைய வேதவாக்கியங்களுள் ஒன்றை மற்றவை விரோதித்துக் கூறுகின்றமையால் ஒன்றுமெய்யென்று சைவர் கூறினும் மற்றவை பொய்யென அவராலேயே ஒப்புக்கொள்ளப் பட்டவையா யிருக்கின்றன. பொய்யுள்ளவேதம் கடவுளாற்கொடுக்கப் பட்டதாகாது. ஆதலாற் சைவருடைய வேதமும் அவை சம்பந்தமாய்

வந்த சாஸ்திராதிகளும் பொய்நூல்களா மெனவும், அவைகூறுங் கடவுளாகிய சிவனும் பொய்க்கடவுளா மெனவுமறிக.

எ. உ-வது. "சைவராற் கூறப்படுமோறு ஆன்மமலம் இருவகைப்படும். அஃது ஆணவமுங்கன்மமுமாம். அவ்வாறே ஆன்மாவில் ஆணவமலத்தால் யான் எனது என்னும் ஆணவமும் கன்மமலத்தாற் பாவ புண்ணியமும்வரும்" எனவும் "ஆணவமலம் ஆன்மாவிற்குக்கருமத்தில் ஓர் விருப்ப முண்டாக்கக், கருணை மூர்த்தியாகிய பரமசிவன் சரீரத்தைக்கொடுத் தனுபவிக்கச்செய்வன்" எனவும் சைவமகத்துவம் கூறுகின்றமையால் அது கூறுகிறபடியே ஆன்மாக்களின் விருப்பம் முன்னுண்டானதும், அதை அனுபவித்தற்காகவே சிருட்டிக்கப்பட்ட தநுகரண புவன போகங்க ளெல்லாம் பின்னுண்டாயினவைகளுமா யிருக்கவேண்டும், அச்சைவமகத்துவமே கூறுகிறபடி அநாதியிலேயே ஆன்மஞானத்தைச் சிதைத்து நின்றதும் உணர்வின்மையும் ஆன்மஞானத்தைச் சிதைக்கும் இழிதகைமையும் உடையதுமான மலமும், அம்மலத்தால் ஞானஞ் சிதைந்து அஞ்ஞானங் கொண்டிருந்த ஆன்மாக்களும் அப்போது படைக்கப்படாதிருந்தவையும் நாமரூப மில்லாதிருந்தவையுமான தனுகரணபுவனபோகங்களிலே விருப்பமுண்டாக்கவும் விருப்பங்கொள்ளவும் இயலுமா? இயலாதாகையின், ஆணவமலம் ஆன்மாவுக்குக் கன்மத்தில் விருப்பமுண்டாக்கினது மில்லை; ஆன்மா விரும்பினதுமில்லை. ஆதலால் இப்படிப்பட்ட ஆன்மாவும்மலமும் அநாதியிலிருந்ததுமில்லை. ஆகவே மலமும் ஆன்மாவும் அநாதியில் இருந்தனவென்று கூறும்வேதமும் அவை சம்பந்தமாய் வந்த சாஸ்திராதிகளும் பொய்நூல்களாமெனவும் அவைகூறுங் கடவுளாகிய சிவனும் பொய்க்கடவுளா மெனவுமறிக.

அ. ௩-வது. அந்தச் சைவமகத்துவமே சகலபுவனங்களும் மாயைமலத்தினின்று தோன்றினவென்று சொல்லுகின்றது. அதுகூறுகிறபடியே புவனங்கள்படைக்கப்படுமுன்னே அந்தமாயாபாசமானது இருத்தற்கு ஓரிடமுமிருந்ததில்லை. மலமான துஜடப்பொருளாதலால் தானிருத்தற் கோரிடமுமில்லாம லிருத்தல்கூடாது. ஆதலால் புவனங்கள் படைக்கப்படுமுன்னேமாயாபாச மிருந்ததில்லை. மேலிலக்கத்திற்கூறியபடி பாசம் பற்றிய ஆன்மாவும் அநாதியிலிருந்ததில்லை. அதனால்பாசமும்ஆன்மாவும் அநாதிகாலத்திலேயே யிருந்தனவென்னும் வேதமும் அவைசம்பந்தமானசாஸ்திராதிகளும் பொய்நூல்களாமெனவும் அவைகூறுங் கடவுளாகிய சிவனும் பொய்க்கடவுளாமெனவு மறிக.

௯. ௪-வது. அநாதியாயுள்ள தெதுவோ அது அழியுந்தன்மையதன்று. ஆதலின் பாசம்அநாதியாயுள்ளதாயின் அது அழிதல்கூடாது. சைவமகத்துவமானது "மலம் அழியுந்தன்மை யுடையது" "மும்மலமுடையசகலர்க் கம்மும்மலவினையையு மொருங்கேயழித்து" என்பதால் பாசம் அநாதியிலே யிருந்ததன்று. ஆதலால் பாசம் அநாதியாயுள்ளதென்னும் வேதமும் அவை சம்பந்தமான சாஸ்திராதிகளும் பொய்நூலாமெனவும், அவைகூறுங் கடவுளாகிய சிவனும் பொய்க்கடவுளாமெனவு மறிக. (எஎ-ம் இலக்கங்காண்க.)

கo. ரு-வது. ஆணவகன்மமலங்களால் அநாதியிலேயே பற்றப்பட்டு அஞ்ஞானத்தோடும் விருப்பத்தோடும் ஆன்மாக்கள் இருப்பதும் போதாதென்று சிவம்தாமே மாயைமலத்தையும் (தநுகரணபுவனபோகங்களாக) அவ்வான்மாக்களுக்குத்தந்துபந்தித்துவிட்டுத் தாமுந்திரோதாயி மலமாகிய சிவசத்தியால் மும்மலங்களையுந் தொழிற்படுத்தி ஆன்மாக்களைப் போக்கியப்பொருளிலமிழ்த்தித் திரோபவனுய் நின்று, அதனுல் சுவேச்சையின்றி மலத்தினுல் நடத்தப்பட்டு அறியாமற் பாவஞ் செய்யும் ஆன்மாக்களை அவைசெய்யும் பாவத்துக்காகச் சிவமே அவைகளை நரகத்திலேவிட்டு வாதிக்கிருனெலால் சிவன் நீதியில்லாதவராயிருக்கிருர். தாம்செய்யப்புகுந்த தொழிலால் தாம் நீதியில்லாதவராவாரெனத் தாம் அறியாதிருந்தமையால் சிவன் ஞானமில்லாதவராயுமிருக்கிருர். இவைமுதலிய குற்றங்கள் தமக்குவராமல் மலத்தை நீக்குஞ் சக்தி இன்னுந் தமக்கில்லா திருத்தலால் சிவன் வல்லமையில்லாதவராயு மிருக்கிருர். இவ்வாறுசிவன் நீதி ஞானம் வல்லமைமுதலிய நன்மைகள் இல்லாதிருத்தலாலும் ஒருகுறையுமில்லாமல் எல்லாநன்மையும் நிறைந்திருத்தலே தேவலக்ஷண மாதலாலும் சிவன் மெய்க்கடவுளல்லனெனவும், அவனைத் தெய்வமெனக் கூறு நூல்களும் மெய்க்கடவுட் சம்பந்தமானவை யல்லவென்னவு மறிக,

கக. ந, பண்டிதர் பசுவும் பாசமும் பதியையொப்ப அநாதியிலேயேயுள்ளவையெனச் சொல்லியதாலே தோன்றுங்குற்றங்களிற் சிலவற்றைச் சிலவுவ்வாநியாயங்களால் மறைக்கக்கருதிப், பசுபாசமிரண்டும் "இவ்வாறு அநாதிநித்தியப் பொருள்களா யிருப்பினும், அதனுல் இவைகள் ஈசுவரனுக்கு ஒப்பாகா" என்றுகூறி, அதற்குநியாயமாக.

கஉ. ஜ-வது. "ஈசுவரலக்ஷணத்திற் சில அமையப்பெறுமாயின் எல்லாலக்ஷணமுமுடையவா யிருத்தல்வேண்டுமென்பது அறிவின்மை. வெண்மைநிற முடையனவெல்லாம் பாலாகுமா? கரியனவெல்லாங் காக்கையாமா?" என்கிருர். இவர் சொல்லுகிறபடி சங்கு, முத்து, பால், வெள்ளிமுதலியவற்றிற்குப் பொதுவாகிய வெண்மை பாலுக்கே சிறந்த குணமன்று. களம்பழம், அஞ்சனம், காக்கை முதலியவற்றிற்குப் பொதுவாகியகருமை காக்கைக்கே சிறந்தகுணமன்று. அப்படியே தேவனுக்கும் பிறபொருளுக்கும் பொதுவாகிய லக்ஷணமிருக்குமாயின், அது தேவனுக்கேசிறந்தலக்ஷணமன்று. ஆதலின் அதுதேவலக்ஷணமென்று சொல்லப்படலாகாது. ஆதலால் தேவலக்ஷணம் பிறபொருளுக்கிராது. ஆகவே ஈசுரலக்ஷணத்திற்சில பிறபொருளுக் கமையாவெனவும், அமையப்பெறுமென்பது அறிவின்மையாமெனவு மறிக.

கங. உ-வது. "ஒருலக்ஷணம்பொருந்தினுல் ஒன்பதும் பொருந்தல்வேண்டுமென்பது, எங்ஙனம்பெறப்பட்டது. கடவுளினிலக்ஷணங்களெல்லாம் ஒன்றேடொன்று காரணகாரிய சம்பந்தமுடையவாயினன்றே அவ்வாறு வாதித்தல்கூடும், நீதிக்கும் நித்தியத்திற்கும் யாது சம்பந்தம்? இரக்கத்திற்கும் சர்வவியாபகத்திற்கும் தொடர்புண்டா? சர்வஞானியென்ருல் நிர்விகாரியென்று தானேயேற்படுமோ?" என்கிருர்,

கடவுளின் இலக்ஷணங்களென்று கூறப்படுபவை யெல்லாம் வெவ்வேறுய்வந்துகூடி யியைந்தனவாகாமல் ஓர்குறையுமின்றி யெல்லா நன்மையும் நிறைந்திருப்பதாகிய வோரோ தேவலக்ஷணத்தினின்று பிரிவுசெய்துபேசப்படுதலின், ஒன்றோடொன்று காரணகாரிய சம்பந்தமுமுடையன வெனினும் பொருந்தும். இங்கே பண்டிதர் நீதியென்றது தேவநீதியை யாதலால் அது குறைவற்ற நீதி. ஆதலால் அது குறையில்லாத நன்மையி லடங்கும். நித்தியமும் கடவுளுக்கு இல்லாவிடிற் குறையாமாதலின், இதுவும் இன்றியமையாத தேவலக்ஷணமாய் ஓர் குறையுமில்லாமையி லடங்கும். ஆதலால் இவ்விரண்டும் ஓர் குறையுமின்றி எல்லா நன்மையும் நிறைந்திருப்பதாகிய தேவலக்ஷணத்தைக் காரணமாய்க் கொண்டிருத்தலின், நீதிக்கும் நித்தியத்திற்கும் சம்பந்தம் உண்டாயிருத்தலறிக. அன்றியும் இங்கே பண்டிதர் இரக்கம் என்றது தேவஇரக்கத்தை யாதலால் அது குறைவற்ற இரக்கம், ஆதலால் அதுகுறைவில்லாத நன்மையிலடங்கும். சர்வ வியாபகமும் கடவுளுக்கு இல்லாவிடிற் குறைவாமாதலின், இதுவும் இன்றியமையாத தேவ லக்ஷணமாய் ஓர் குறையுமில்லாமையி லடங்கும்; ஆதலால் இவ்விரண்டும் ஓர் குறையுமின்றி எல்லா நன்மையும் நிறைந்திருப்பதாகிய தேவலட்சணத்தைக் காரணமாய்க் கொண்டிருத்தலின் இரக்கத்திற்கும் சர்வவியாபகத்திற்குந் தொடர்பு உண்டாயிருத்தலறிக. அன்றியும் "சீர்வளர்ஞானநீதியன்பூக்கந் திறந்தயை யானந்தமற்றை, யேர்வளர்குன்று நன்னருண்டாகி யெலாமணைத்தாகியொன்ருகி, நேர்வளர் பொலிவின் மிகைகுறை பன்மை நீப்பன நிறைப்பனவாகிப், பேர்வளரிறைவற் குருவிதேயுரிய பிணைவில வியல்பிதேயன்றே" என்ற தேம்பாவணிப் பாட்டோயில் "ஞானமே நீதியாய்த் தயையாய் மற்றவையாகவும், நீதியே ஞானமாய்த் தயையாய் மற்றவையாகவும், இத்தன்மையே மற்றக்குணங்களுமாகி, யொவ்வொரு நன்மையும் எல்லாநன்மையு மாகையிற் றம்முள் வேறுபடாமல் எல்லாம் ஒன்றுமாகையாற் பல நன்மைகள் கூடிப்புணரப்பட்டதோர்பொருள் கடவு ளன்று; இதுவுமதுவு மென்னுது பலகுணமுள்ளவ னென்னு தொருகுணமாய் ஓரியல்பாய் நின்றேன் கடவுள்" என்று கூறியபடி. சர்வஞானமே மற்றத் தேவலக்ஷணங்களுமாயிருத்தலால், சர்வஞானி யென்றால் நிர்விகாரியென்று தானே யேற்படுமெனவறிக.

கச. ந-வது. "கடவுளிலக்ஷணம் ஒன்றுளதாயின் மற்றையவெல்லாந் தாமேதொடருமென வாதிக்கின்றநீவிர் உமதுசமயத்திற் கூறப்பட்ட ஆன்மாதிகட்குக் கடவுளிலக்ஷணம் ஒன்றேனும் பொருத்தாதொழிந்தீரா? கடவுளையொப்ப அநந்தநித்திய வஸ்துவாயும் சித்தாயும் உண்மைப் பொருளாயும் ஆன்மாவிருக்கின்றதென்றும், உண்மைப்பொருளாகிய தோர் வஸ்துவாகச் சடமுளதென்றும் சொல்லுகின்றீரே. அநாதி நித்திய லக்ஷணம் ஒன்றை நாங் கூடச்சொல்வதினால் பதித்துவம் பதித்துவ மென்று பகர்கின்ற தென்னே?" என்கிறார். நாங்கள் ஆன்மாதிகட்குக் கடவுளிலக்ஷணம் பொருத்திலேம். நாங்கள் கூறுந் தேவலக்ஷணங்களுள் அநந்தநித்தியம் கிஞ்சித்துவஞானம் உண்மை

யென்பவற்றுள் ஒன்றுயினும் இருக்கவில்லை. இருக்குமேல் பண்டிதர் காட்டக்கடவர். ஆதலால் அநாதிநித்தியமாகிய தேவலக்ஷணம்ஒன்றைத் தேவனல்லாத பசுபாச லக்ஷணத்தோடு சேர்த்துச் சொல்வது தவறுமெனவறிக.

கரு. ச-வது. "அநந்தநித்தியத்தினின்று ஆதிநித்தியத்திற்கு யாது விசேஷம்? சர்வவியாபகத்திற் குணதிசைவியாபகம் குடதிசை வியாபகத்திற்குவிசேஷமானதா? அதுபோல முன்னர்நித்தியம் பின்னர் நித்திய மிரண்டும் ஒன்றற்கொன்று சமத்துவமுடையனவேயாம். இவற்றுள் ஒன்றுடைமையாற் பதியாகாதது மற்றதுடைமையானும் பதியாகாமலிருக்கும். ஆதலால் நித்தியமுடைய தெதுவும் பதியாதல் வேண்டுமென்பது பொருந்திலது" என்கிறுர்.

சர்வவியாபகத்திற் குணதிசைவியாபகம் குடதிசைவியாபகத்திற்கு விசேஷமானதன்றெனப் பண்டிதர் எடுத்துக்காட்டியபடி சர்வநித்தியத்தில் அநாதிநித்தியம் அநந்த நித்தியத்திற்கு விசேஷமாகாதிருக்குமேயன்றிச் சர்வநித்தியசம்பந்த மில்லாது பிரத்தியேகமான அநந்தநித்தியத்திற்குச் சர்வநித்திய சம்பந்தமான அநாதிநித்தியம் விசேஷமாகாதிராது. எங்ஙனமெனின், சர்வநித்திய சம்பந்தமில்லாத அநந்தநித்தியப் பொருள்கள் தமக்கோர் நிமித்தகாரணம் உடையன. அநாதிநித்திய வஸ்துவானது தனக் கோர்நிமித்தகாரணமிலது. ஆதலால் முன்னர்நித்தியம் பின்னர்நித்திய மிரண்டும் ஒன்றற்கொன்று சமத்துவமுடையனவல்ல. ஆதலால் இவற்றுள் ஒன்றுடைமையாற் பதியாகாதது மற்றதுடைமையாற் பதியாகு மெனவும், ஆதலாற் பசுவும் பாசமும் அநாதி நித்தியப் பொருள்களல்ல வெனவும், அதனுல் பசுவும் பாசமும் அநாதி நித்தியப் பொருள்களாமென்னும் வேதமும் சாத்திராதிகளுங் கடவுட்சம்பந்த மில்லாதவை யெனவும், அது பற்றி அவைகூறுங் கடவுளாகிய சிவனும் மெய்க்கடவுளல்ல ரெனவுமறிக.

கசு. ரு-வது. "அநாதியாய்உள்ளது பதிஒன்றே. பசுவும்பாசமும் பதியினுல்காரியப்பட்டு ஆதிகாலத்தே தோற்றின என்பீராயின், நீவிர் ஆதியென்றது எத்துணைக் கோடாகோடி யுகத்தின் முன்னதாயினும் ஆகுக. அவ்வாதியினின்று அதற்குமுன்னதாய் ஓர் நித்தியம் உளது. அந்த நித்தியத்தில் பதி யாதுசெய்துகொண் டிருந்தது? தன்னை யொழிந்து ஒரு பொருள் இலதாகவே சிருட்டி திதி சங்காரம்ஆதிய கிருத்தியங்கள்இல்லாது வாளா (சும்மா) இருத்தல் வேண்டுமே. அப்படிவாளா (சும்மா) இருந்த பதிக்குச் சிருட்டிகாலத்திலே ஓர்போதும் இல்லதாய நினைவும் கிருத்தியமும் அவற்றின் காரணமாகிய விகாரலக்ஷணமும் பொருந்துமா? பொருந்துமேல் கடவுளின் நிருவிகார லக்ஷணமென்பது எங்ஙனம்?" என்கிறுர்.

கஎ. ௲-வது. பாசம் பதியினுற் காரியப்பட்டு ஆதிகாலத்திலே தோன்றினதென்று நாங்கள் கொள்கிறதுமில்லை சொல்லுகிறதுமில்லை யெனவறிக.

கஅ. ௨-வது. சர்வேச்சுரன் சர்வஞானியா யிருக்கின்றமையால் நடந்தவைகளையும் நடந்துகொண்டிருந்தவைகளையும் நடக்க

விருந்தவைகளையும் அப்பொழுது நடக்கின்றவைகளாகவே அநாதியிலும் அறிந்திருந்தார். ஆதலால் தம்முடைய சிருட்டி திதி சங்காரமுதலியவற்றின் விவரமான காட்சியும் நினைப்பும் அவருக்கு அநாதியிலேயேயுண்டு. அவரதுஞானம் மெய்யான ஞானமாயிருந்தமையால் அந்த ஞானத்தில் அவர் அறிந்தவிதமாகவே அந்தந்தக் கிருத்தியத்தை அந்தந்தச் சமயத்தில் நடத்தத் தொடங்கி முதல்முதல் வானத்தையும் பூமியையும் படைத்தார்; அவை படைக்கப்பட்ட காலமே ஆதிகாலம். அவை படைக்கப்பட்டு அளவில்லாத காலமாயின. ஆதலால் சர்வேஸ்வரன் அநாதியில் ஒருதொழிலுமின்றிச் சும்மா இருந்ததுமில்லை; சிருட்டி தொடங்கிய காலத்தில் அவருக்கு ஒருபோது மில்லாததாகியநினைவு புதிதாயுண்டானதுமில்லை. அன்றியும் கடவுளின் லக்ஷணங்களெல்லாம் ஏககாலத்திலே வெளிப்படாமல் ஒவ்வொன்றாய் அதற்கு ஏற்ற காலத்தில் வெளிப்படவேண்டியதே முறைமை. அப்படித்தான் வெளிப்பட்டன. (சிவனுடைய பஞ்சகிருத்தியங்கள் முதலியவை ஏககாலத்திலேயே வெளிப்பட்டனவென்று சைவர்கள் சொல்வாராயின் நியாயமுஞ் சொல்லக்கடவர்.) ஆதலால் அநாதியில் சர்வேஸ்வரன் தமது ஞானத்தால் அனைத்தையும் அறிந்து ஆதிகாலந்தொட்டுச் சிருட்டியாதிகளை ஏற்ற தன்மையாய்த் தொடங்கிச் செய்துவருதலில் விகாரியாகானெனவறிக.

௧௯. ௯-வது. காமகுரோதாதிகளாலும் ஒப்புடைமையாதிகளாலுந் தேவலக்ஷணங்கெடவேறுபடலே விகாரலக்ஷணமும், அதுஇல்லாமையே நிர்விகாரலக்ஷணமுமாம். ஆதலால் அநாதியிற்செய்யாதகிருத்தியங்களை ஆதியிற்செய்யத்தொடங்கியது விகாரலக்ஷணமென்று பண்டிதர் இங்கேகூறியதும், சிருட்டியாதிகிருத்தியங்களைத்தொடங்கியபின்னரும் முன்செய்யாததைப்பின்செய்தல் விகாரலக்ஷணமென்று இந்தச் சைவமகத்துவத்தின் ௩எ-ம், ௯அ-ம் பக்கங்களிற்கூறியதும் பொருந்தாதனவாய்ச், சிவனைவிகாரியென்று சைவர்ஒத்துக்கொள்ளல்வேண்டுமென்று வற்புறுத்துபவையாயிருக்கின்றன. எங்ஙனமெனின், சிவமும் ஆன்மாவும் ஆணவமுதலியமலமும் அநாதியாயுள்ளவை. அநாதிகாலத்திலே ஆணவமலம் ஆன்மாவுக்குக்கன்மத்திலே விருப்பத்தையுண்டுபண்ணிற்று. ஆன்மா அவ்விருப்பத்தை அநுபவித்துக்கொள்ளக்கூடாமல் வருந்தியிருந்தது. அதுகண்டுசிவன் இரங்கி மாயைமலத்தால் உலகத்தையும்உடலையும் சிருட்டித்து, அவ்வான்மாவுக்கு அவ்வுடலைத்தந்து அவ்வுலகத்தில்வைத்தார் என்றுசைவம்கூறியவாறே உலகசிருட்டியும், அதற்குக்காரணமாயிருந்த சிவஇரக்கமும், அதன்காரணமாகிய ஆணவமலத்தின்செய்கையுங் காரணகாரியங்களாயிருத்தலால், இவையெல்லாம் ஏககாலத்திலேநிகழுந்தன்மையவல்ல. ஆதலால், அநாதிகாலத்தில் ஆணவமலம் ஆன்மாவுக்குவிருப்பத்தைத்தந்து, ஆன்மா அவ்விருப்பத்தால் வருந்தியிருந்தகாலமட்டும் சிவன் ஒருநினைவுமில்லாமலும், உலகம்படைக்கப்பட்டகாலமட்டும் ஒருகிருத்தியமுமில்லாமலும் இருந்தார். ஆதலால்சிவன் சைவம்கூறுகிறபடியே விகாரலக்ஷணமுடையவராயிருக்கிறார். அன்றியும், சிவன் சிருட்டியாதிகிருத்தியக்

தொடங்குங்காலத்தில் பிரமாதிபஞ்சகர்த்தாக்களும் இல்லையாதலால் அவர் முதலில்தனியாயிருந்து பஞ்சகர்த்தாக்களையும் சிருட்டித்துக்காத்துப், பின்னரோ அந்தப்பஞ்சகர்த்தாக்களிலும் அதிட்டித்துப் பஞ்சகிருத்தியமுஞ்செய்யத்தொடங்கினுரென்றும், சுப்பிரமணியர் பிரமாவுக்குப்பதிலாகச் சிருட்டிக்கிருத்தியஞ்செய்திருந்தகாலத்திற் சிவன்பிரமாவைவிட்டுச் சுப்பிரமணியரில் அதிட்டித்திருந்தாரென்றுஞ் சைவர்சொல்லவேண்டும். முன்னர்த் தாமேசிருட்டியுந்திதியும் தொடங்கியசிவன் பின்னர்த் துணைதேடிப் பிறரில் அதிட்டித்துப் பஞ்சகிருத்தியஞ்செய்கின்றமையால் சைவர்கூறுகிறபடியே சிவன் இதிலும்விகாரலக்ஷணமுடையவராயிருக்கிறுர். அன்றியும்சிவன் முன்நிகழ்ந்திராதவிதமாக மரித்தோரை உயிரோடெழுப்பல்முதலிய அற்புதங்களைச்செய்தனரென்று சைவர்சொல்லுவாராயின், அவர்கூறியவாறே அதிலும்சிவன் விகாரலக்ஷணமுடையவராயிருக்கின்றுர் எனவறிக.

உ0. இவையெல்லாம் இங்ஙனமாதலின், அநாதியாயுள்ளவர் சர்வேஸ்வரன்மாத்திரமே, மற்றவையெல்லாம் சர்வேஸ்வரனுல் ஆதிகாலத்தொட்டுப்படைக்கப்பட்டவை என்னும்வேதமே சத்தியவேதமாமெனவும், ஆதலால் அதுகூறுங்கடவுளே மெய்க்கடவுளெனவும், பதிபசுபாசங்கள் அநாதிய, ஆதலால் பஞ்சகிருத்தியமும் அநாதிய எனின், அது யாம்மேலேகாட்டியவாறு பொருந்தாதிருப்பதுமன்றி. ஆதிகாலமென்றற்கும் ஆதிகாலப்பொருள் என்றற்கும் ஓர்காலமும்பொருளும் இல்லையெனமுடிவதுமன்றி, முதலிற்சிருட்டிக்கப்பட்டபொருளின்வயதே சிருட்டிகர்க்கும்வயதாகிச் சிருட்டிகர் வயசுடைமையால் கடவுளல்லரென்றும் முடியுமெனவும், ஆதலால் பசுபாசங்களும் பஞ்சகிருத்தியங்களும் அநாதியஎன்னும்வேதமும் சாஸ்திராதிகளும் பொய்யானவையெனவும், ஆதலால் இவைகூறுங்கடவுளாகியசிவனும் பொய்க்கடவுளேயாமெனவும் அறிக.

உக. சு-வது. "சூனியோபாதானமாய்ச் செகத்தையேனும் பசுவையேனும் உற்பவிக்கச்செய்தல் கடவுளுக்குமாகாது. இதில் கடவுளதுசர்வவல்லமைபின்னப்படுதலை எட்டுணையுங்காணேம். கடவுள் தன்னையொப்பது (ஆகிய) ஓர்அநாதிநித்தியவஸ்துவைத் தன்னினின்றும் வேறுகப்பிறப்பிக்குமா? இருமூன்றைப் பத்தாகச்செய்யும்வல்லமையுடையதா? இதுபோலும் இயற்கைவிரோதங்களைக் கடவுள்செய்யவல்லவரென்றல் யுத்திக்கு இசையுமா? இயற்கைவிரோதம் என்றும் இசையாது; யார்க்கும் இசையாது. கடவுளுக்கும் இசையாததேயாம்......இன்மை இன்மையும், உண்மை உண்மையுமேயாம். இன்மையினின்று உண்மையையும் உண்மையினின்று இன்மையையும்ஆக்குதல் இயற்கைவிரோதமெனக்கொள்க" என்கிறுர்.

உஉ. இங்கே பண்டிதர்கூறியஇரண்டுவினுக்களும் வழுக்கள்பொதிந்தவையாயினும், கடவுள் தம்முடைய இயற்கைக்கு விரோதமானதைச் செய்யக்கூடாதென்பது எம்முடையசம்மதமே. எங்ஙனமெனின், கடவுள் தம்மையொப்பதாகிய ஓர் அநாதிநித்தியவஸ்துவைத் தம்மினின்றும்வேறுகப்பிறப்பிப்பாராயின் அவர் தமக்குஓர்ஒப்பையுடை

யவராகித் தேவலக்ஷணங்குன்றினவராவர். அதுபற்றி மெய்க்கடவுள் அவ்வாறுசெய்தல்கூடாது. அன்றியும் இருமூன்றுபொருள்களில் ஆறு ஒற்றைப்பொருள்களேயுள்ளன. ஆதலால் இருமூன்றை ஆறென்பதே உண்மை. அப்படியன்றி இருமூன்றைப்பத்தெனின் அதுபொய்யாம். பொய்மை சத்தியசுரூபியாகியகடவுளிடத்தே யிருக்கக்கூடாதாதலால் கடவுள் இருமூன்றைப்பத்தெனல்கூடாது. இதுபற்றியே கடவுள்தம் மியற்கைக்குவிரோதமானதைச்செய்யக்கூடாதென்று மெனவறிக. இவ்வாறேகடவுள் இருமூன்றைப்பத்தென்றாரெனல் பொருந்துமேயன்றிப் பண்டிதர்கூறுமாறு கடவுள் இருமூன்றைப் பத்தெனச்செய்யும்வல்லமையில்லரெனல் பொருந்தாது: எங்ஙனமெனின், கடவுள் ஆதாமென்னும்ஒருவனை ஆதாம்ஏவாளென்னும்இருவராகச் செய்தமையாலும், நோவனுடையமக்களும்மருமக்களுமாகிய இருமூவரை எண்ணிலாதவராகச் செய்தமையாலும் இருமூன்றைப் பத்தாகச்செய்யும்வல்லமை யுடையரெனவறிக. பண்டிதர்இருமூன்றென்பதும் பத்தென்பதும் (Abstract Number) பிரிநிலையெண்ணேயேயன்றி (Concrete Number)த்தொகைநிலையெண்ணேயல்லவெனின், அவ்விருமூன்றோடு அவற்றிலுள்ளஇரண்டை அவ்வெண்ணாலேயேபெருக்கி இதனால்வரும் ஈரிரண்டையுங்கூட்டப் பத்தாகும். ஆதலால் பிரிநிலையெண்களில் இருமூன்றைப் பத்தாகச்செய்யும்வல்லமை எமக்குமுண்டு. இவ்வாறேசர்வேஸ்வரன் ஒன்றுமில்லாமையோடு (இதுஇதுஆகுகவென்னும்) தம்வாக்கைக்கூட்டி அணைத்தையும்படைத்தா ரெனலாமே. இதுநிற்க.

உரு. யாம்மேலேகாட்டியவாறு கடவுள் தம்மியற்கைக்குவிரோதமானதைச் செய்தல்கூடாது. ஆதலால் கடவுள் தம்மையொப்பதாகிய ஓர்அநாதிநித்தியவஸ்துவைத் தம்மினின்றும் வேறாகப்பிறப்பிக்கமாட்டார். அன்றியும்இன்மைஇன்மையும் உண்மை உண்மையுமேயாம். ஆதலின்இருமூன்று ஆறேயன்றிப்பத்தல்ல. ஆதலால் கடவுள்இருமூன்றைப்பத்தென்னார். (இவ்வாறுஇருமூன்றைக் கடவுள்பத்தெனல் கடவுள்இயற்கைக்கு விரோதமாமன்றி, இருமூன்றைக் கடவுள்பத்தாக்குதல் கடவுளின்இயற்கைக்கு விரோதம்அன்றென மேலேகாட்டினும்) கடவுளின்இயற்கைவிரோதம் இப்படிப்பட்டதாயிருக்கப், பண்டிதர் ஒன்றுமில்லாமையினின்று செகத்தையேனும்ஆன்மாவையேனும்சிருட்டித்தல் கடவுளுக்குமாகாதுஎனவும், இன்மையினின்றுண்மையையும் உண்மையினின்றின்மையையும் ஆக்குதல் கடவுளின் இயற்கைக்குவிரோதமெனவும் கூறினதென்னையோ! ஒன்றுமில்லாமையினின்று செகத்தையாவதுஆன்மாவையாவதுபடைத்தல் கடவுளுக்குமாகாதுஎன்றது சாத்தியம். இது கடவுளின் இயற்கைக்கு விரோதமாயிருத்தலால் என்பது ஏது. இந்தச்சாத்தியத்தில் இந்தஏதுஇல்லாதிருக்க உள்ளதுபோலப் பண்டிதர் இந்தஏதுவுள்ளதிருஷ்டாந்தங்களை யிதற்குக்கூறுதல் விபக்ஷமாமெனவறிக. பண்டிதர் இந்தச்சாத்தியத்தில் ஏதுவுண்டென்பாராயின் அதை ஏதுதிருஷ்டாந்தங்களோடு காட்டக்கடவர், எல்லாப்பொருள்களுக்கும் ஓரேவிதஇயற்கையில்லை. தூக்கணங்குருவி புறத்துள்ளபொருளாற்கூடுகட்டுந்தன்மைத்து, கறையான் தனதுவாய்நீர்ச்சி

றுதுகளால் புற்றுண்டாக்குந்தன்மைத்து. அதுபோலக் கொஞ்சவல்லமையுள்ளமனிதர் ஒருபொருளைக்கொண்டே மற்றொருபொருளைச்செய்யுந்தன்மையர். ஆயினும் செகத்தையேனும் ஆன்மாவையேனுஞ் சிருட்டிக்குந்தன்மையரல்லர், சர்வவல்லவரானகடவுளோ ஒன்றுமில்லாமையினின்றும் செகத்தையும்ஆன்மாவையும் படைக்குந் தன்மையர். ஆதலால் கடவுள்ஒன்றுமில்லாமையினின்று அனைத்தையும்படைத்தலில் அவரியற்கைக்குவிரோதமில்லையெனவறிக. அன்றியும்இந்நூலின் எ, அ, கூ-ம் இலக்கத்தில் யாம்கூறியநியாயத்தின்படியே ஆன்மாவும் மலமும் அநாதியிலிருந்திருக்கக்கூடாதாதலால் ஒன்றுமில்லாமையினின்றே அனைத்தும் படைக்கப்பட்டிருக்கவேண்டியவைகளா யிருக்கின்றனவெனவுமறிக. அன்றியும் பண்டிதர் சைவமகத்துவத்தின் ககக-ம், பக்கத்தில்காட்டிய சைவஞானியின்பாட்டில் "உடைந்தசங்கினுசையு முயிர்களுமுடற்புகா" என்றிருத்தலால் சைவர்கொள்கையின்படி ஆன்மாவானது தான்பிரிந்தவுடலிலேமீட்டும்புகுதல் இயற்கைவிரோதம். ஆகவே (பெரியபுராணத்திற் கூறப்பட்டபடி) சிறுத்தொண்டர் குமாரனை சீராளனதுஉடலினின்றுபிரிந்த ஆன்மாவைச் சிவன் மீட்டும்அவ்வுடலிற்புகச்செய்தது இயற்கைக்குவிரோதம். ஆதலால் பண்டிதர் சிவன்சீராளனையுயிர்ப்பித்தது இயற்கைவிரோதமெனின் அது பொருந்துமேயன்றிச், சர்வேசுவரன் ஒன்றுமில்லாமையினின்று அனைத்தும்படைத்தது இயற்கைவிரோதமெனல் பொருந்தாதெனவுமறிக.

யாம் இதுகாறுங் கூறியநியாயங்களின்படி சர்வேசுவரன் ஒன்றுமில்லாமையினின்று அனைத்தையும்படைத்தலில் இயற்கைவிரோதமில்லையாதலாலும், அவர்இவ்வாறே சகலத்தையும்படைத்திருக்கவேண்டுமாதலாலும், கடவுள் சூனியோபாதானமாகவே அனைத்தையும் உற்பவிக்கச்செய்தாரென்னும்வேதமே சத்தியவேதமெனவும், ஆதலால் இதுகூறுங்கடவுளே மெய்க்கடவுளெனவும், "சூனியோபாதானமாய்ச் செகத்தையேனும்பசுவையேனும்உற்பவிக்கச்செய்தல் கடவுளுக்குமாகாது" பாசத்தைக்கொண்டே செகத்தைஉற்பவிக்கச்செய்தாரென்னும் வேதசாஸ்திராதிகள் பொய்யானவையெனவும், ஆதலால் அவைகூறுங் கடவுளாகியசிவனும் பொய்க்கடவுளாமெனவுமறிக.

உச. எ-வது. "பண்டிதர் விநாயக சுப்பிரமணிய வீரபத்திராயர்...சிவப்பொருளின் பலசத்தியாரூடிகளாக ஆண்டாண் டொவ்வொருகாலத்தி லோரோர்கிரியையைமுடித்தற்பொருட்டுச் சிவம்அதிட்டித்துநின்ற விசேடபுண்ணியான்மாக்களேயன்றிச் சிவத்தையொப்பதான பதிகளல்லர், அவ்வாறு சிவமதிட்டித்துநின்றவான்மாக்கள் ஆகமங்களிற் கூறப்படுமாறு *சம்புபட்சம்அணுபட்சமென்னு மீரியல்புடையன. மந்திரி தேசாதிபதி நியாயாதிபதிமுதலியோரால் நாம்நேரேயாளப்படினு மவர்கள்மூலமாய் நம்மையாள்பவள் ராணியொருத்தியேயாம். அதுபோலப் பிரமாவாற்சிருட்டிக்கப்பட்டும் விஷ்ணுவாற்றிதிக்கப்பட்டும் உருத்திரனாலழிக்கப்பட்டும்நடக்குமுலகம் அவர்கள்மூலமாகச் சிவனொருவராலேயே யவ்வாறுநடைபெறுகின்றதென்றறிக. பிரம

* சம்புபக்ஷம்=சிவபக்கம்; அணுபக்ஷம்=ஆன்மபக்கம்.

விஷ்ணு உருத்திராதியோர்பெயரே அவ்வக்கிரியைபற்றி அவரை அதிட்டித்துநின்ற சிவத்துக்குஞ் செல்வதன்றி அவ்வான்மாக்கள்சிவமல்ல" என்கிறார்.

உரு. ௧-வது. கயமுகனென்னும்அசுரனால் தேவர்களுக்குண்டாயிருந்த உபத்திரவத்தை நீக்கும்பொருட்டுத் தேவர்களோடுகூடிப்போய் யுத்தஞ்செய்து அவனைச்சங்கரிக்கவனுப்பும்படி சிவனும்உமையவளும் யானைகளாகிக்கூடி யானைமுகவிநாயகர் பிறந்தாரென்றும், சூரபன்மனென்பவனால்தேவர்களுக்குண்டாயிருந்தஉபத்திரவத்தைநீக்கத் தேவர்களோடுகூடிப்போய் யுத்தம்பண்ணி அவனைச்சங்கரிக்கவனுப்பும்படி சிவன்ஆறுமுகங்களோடுநின்று அந்தமுகங்களினின்று புறப்பட்ட ஆறுநெருப்புப்பொறிகளால் (*ஆறுபிள்ளைகளாகிக் †கார்த்திகைநக்ஷத்திரமென்னும் ஆறுமாதர்களுடையபாலுண்டிருந்தவரென்றும், ஆறுதலையும், பன்னிரண்டுகையும், இரண்டுகாலும், ஒருடலுமுள்ளவரென்றுஞ்சொல்லப்படுகிற) சுப்பிரமணியருண்டாயினரென்றும், சிவனுடையமாமனாகியதக்கன் சிவனுக்குவிரோதமாகச் செய்துகொண்டிருந்த யாகத்தையும், அதிலே சிவனுக்குவிரோதமாகக்கூடியிருந்த தேவர்களையு மழிக்கச் சிவன்கொண்டகோபத்திலெழுந்த வியர்விலே வீரபத்திரருண்டாயினரென்றும் சைவருடைய ஸ்காந்தமுதலிய புராணாதிகள் சொல்கின்றன. அசுரரையழித்தலும் மகத்தையழித்தலும் கடவுளே சிலரில் அதிட்டித்து நிற்றற்குரிய பெரியகாரியமல்ல. அங்ஙனமாக, ௧-வது. சிவன் அத்தொழிலைவெளிதின்முடிக்காமல், தாமேசிலரில் அதிட்டித்துப் போய்ப் போர்புரிந்ததனால் அவர் சர்வசக்தியில்லாதவராயிருக்கிறார். உ-வது. சிவன் யானையாகிப்புணர்ந்தமையால் காமசேட்டையுடையவராயிருக்கிறார். ஆதலால்பண்டிதர் விநாயகர்முதலியோரைச் "சிவப்பொருளின்பலசத்தியாரூடிகளாக ஆண்டாண்டொவ்வொருகாலத்தி லோரோர்கிரியையை முடித்தற்பொருட்டுச் சிவம்அதிட்டித்துநின்ற விசேடபுண்ணியான்மாக்கள்" என்றது சிவனைச் சர்வசக்தியில்லாதவரென்றும் மெய்யங்கடவுளல்ல ரென்றுங் காட்டுதலறிக.

உசு. உ-வது. சுப்பிரமணியர் பிரமாவைச்சிறையிலிட்டுப் பிரமாவின்சிருட்டித்தொழிலைப் பலநாள் அவரே செய்திருந்தபின் சிவன் சுப்பிரமணியரிடத்திற்போய்இதஞ்சொல்லிச் சிறைமீட்டு அத்தொழிலைப்பிரமாவுக்குவிடுவித்தாரென்று கந்தபுராணஞ்சொல்லுகின்றது. சிவனைக்கொல்லுதற்காகத் தாருகாவனத்திருஷிகள்செய்தயாகத்திற் புலி, மான், பாம்புகள், பூதங்கள், முயலகன்முதலியவைபிறந்தனவென்றுங் கந்தபுராணஞ்சொல்லுகின்றது. தக்கன்சேனையை அகோரவீரபத்திரரழிக்கும்போது பிரமா சிருட்டித்துவிடுவாரென்று அருணசலபுராணஞ்சொல்லுகின்றது. சிவனேசிருட்டிக்குரியராயின் சுப்பிரமணி

* சுப்பிரமணியர் ஆறுபிள்ளைகளாயிருந்தகாலத்திலும் ஒரு சுப்பிரமணியராயிருக்கிற இக்காலத்திலும் அவர் ஆறுவிசேஷபுண்ணியான்மாக்களோ ஒரேவிசேஷபுண்ணியான்மாவோ? மெய்யைத்தேடுங்கள்.

† கார்த்திகைநக்ஷத்திரம் ஆறுஸ்திரீகளாமே. இக்காலத்திற்கூடச் சைவருக்குத் தங்கள் சமயத்தில் உண்மை உண்டென்று நம்பிக்கையா.

யர்பலநாள்சிருட்டிசெய்திருத்தலும், சிவன் மீட்டும்அத்தொழிலைப் பிரமாவுக்குக்கொடுப்பித்தலும், பிரமாமுதலியவர்கள் சிவனுக்குவிரோதமானவைகளைச்சிருட்டித்தலுஞ் சம்பவியா. ஆதலாற் சைவபுராணங்கள் முதலியவை சொல்லுகிறபடியேயும் சிருட்டிமுதலியவை சிவனுடையதொழிலல்லவென்றுதலறிக.

உஎ. ங-வது. விஷ்ணு இராக்கதனையழிக்க ஸ்திரீரூபங்கொள்ளச் சிவன்அவளைமோகித்துத் துரத்திப்பிடித்துப்புணர அரிகரபுத்திரன்பிறந்தாரென்று கந்புராணஞ்சொல்லுகின்றது. இவரும் சிவப்பொருளின்சத்தியாரூடியாக ஒருகாலத்தி லோர்கிரியையைமுடித்தற்பொருட்டுச் சிவம்அதிட்டித்துநின்ற விசேடபுண்ணியஆன்மாதானே? ஆயினுங்காமாதிகள் மெய்யங்கடவுளுக்குரிய வல்லவாதலின் இதிலுஞ் சிவன் கடவுளல்ல ராதல்காண்க.

உஅ. ச-வது. ஓரான்மா ஒரேகாலத்தி லிரண்டுடலிலிருக்கக்கூடாதாதலாலும், விஷ்ணுஒரோகாலத்திற்பூலோகத்திலும்பரசுராமராகவுந்தசரதராமராகவுமிருந்தனரென்று ராமாயணங்கூறுதலாலும், சிவஞானசித்தியார்முதற்சூத்திரத்து கூ௦-ம்பாட்டுரையில்அயன்முதலோர் அணுக்களல்லரென்றும், உ-ம். சூத்திரத்து எச-ம் பாட்டுரையில் பிரமவிஷ்ணுக்களைப் பசுவர்க்கத்திலுள்ளவ ரென்னலாகாதுஎன்றுஞ் சொல்லியிருத்தலாலும் விஷ்ணு ஆன்மாவல்லர். பாசம்சடப்பொருளாதலால் அவர்பாசமுமல்லர். ஆதலா லவரும்பதியேயாம். ராமாயணபாலகாண்டத்துப் பரசுராமபடலம் விட்டுணுவுஞ்சிவனு மொருவரையொருவரெதிர்த்துவில்லம்புமுதலியவையெடுத்து யுத்தஞ்செய்தார்களென்று சொல்லுதலால் இவர்கள்வெவ்வேறான இருவரேயன்றியொருவரல்லர். ஆதலாற் சைவசமயம் பலபதிகளையுடையது. இரண்டுகடவு ளரிருப்பினும் அவரு ளொருவருக்கொருவர் கடவுளாகாராதலாலும், இவ்விருவரும் அம்பு வில் முதலிய ஆயுதமுதலியவைகளைக்கொண்டு பிறரோடுயுத்தஞ் செய்தவராயிருத்தலாற் கடவுளின்தன்மைஇல்லாதவராதலாலும், இவ்விருவருங்கடவுளல்லர். ஆதலாற்சிவன்கடவுளல்லரெனவாதலறிக.

உகூ. அ-வது. பண்டிதர்: "நல்லது. எல்லாம்ஒன்றாயும் பிரமவிஷ்ணு உருத்திராதியர் சிவம்அதிட்டித்தஆன்மாக்களாயும் சிவபெருமானின் பலசத்திகளைக்குறிப்பனவாயும் இருக்கின்றனவென்றீர், ஒருவருடையசத்திலக்ஷணங்களாயின் அவைக ளொன்றோடொன்றுமாறுபட்டுப் பகைத்து யுத்தஞ்செய்யுமா? பிரமவிஷ்ணுக்க ளிவ்வாறுயுத்தஞ் செய்திலராவென்பீராயின், சிருட்டியா திதியா மிகமகத்துவமுடையதென்பதையுணர்த்துவான் ரூபகாலங்காரமாக யுத்தபாவனையாய்க் கற்பித்தவர்ணனையேயன்றிக் குத்துப்பட்டு வெட்டுப்பட்டு யுத்தம்புரிந்து பகைஞராயெஞ்ஞான்றுமிருக்கின்றனரென்று கொள்ளற்பாலதன்று. ஆதியில் வர்ணனையாகப்பிறந்தபுராணத்தை அறிவிலாப் பேதைச்சனங்களுண்மையாய்ப் பாராட்டினு மறிவுடையோ ரஃதிற்குற்றஞ்சொல்லுதலும் அதினாற்கடவுளுக்கேதோஷங்கூறுதலு மழகல்லவெனக்கொள்க. அதுவுமன்றி அவர்கள்உண்மையாகயுத்தஞ் செய்தனரென்றேயாகுக, அதினாற்சிவத்துவத்திற்குத் தோஷமென்னோ? தேசாதிபதி

யும் நியாயாதிபதியுஞ் சேனாதிபதியும் நான்பெரியன்நீபெரியனெனவா துசெய்தால் ராணியின்மகத்துவமும் அரசியலும் பின்னப்படுமோ? அனுபட்சத்தா லவ்வான்மாக்கள்யுத்தஞ்செய்தனராயின் அதன்பயனாகியதண்டனையை யடைதற்பாலரெனவறிக" என்கிறார்.

௯௦. ௲வது. புராணமென்பது வேதோபாங்கநான்கு ளொன்றாய்ச் சர்க்க (உலகத்தினதுதோற்றம்), பிரதிசர்க்க (ஒடுக்கம்), வங்கிச (பாரம்பரியங்கள்), மனுவந்தர, வங்கிசானுசரிதம் என்னும்பஞ்சலட்சணங்களையும்; வைதீகதாந்தரீககருமத்தையுஞ் சொல்வதாதலால் அது வேதவாக்கியப்பொருள்களை வலியுறுத்திவிரித்துச்சொல்வதேயாமென்று சைவநூல்கள்சொல்லுகின்றன. ஆதலால் புராணத்திற்சொல்லப்பட்டகதைகளெல்லாம் சைவர்களால் உண்மையானகதைகளென்றேயொப்புக்கொள்ளத்தக்கவைகளாம். அல்லாமலும்சைவசித்தாந்த சாத்திரமாகிய சிவஞானசித்தியாரின்முதற்சூத்திரத்து ௪௮, ௪௯-ம்பாட்டுரைகளில், "சிந்திதனுயினு மசிந்திதனென்பதற்கு வேதத்துள் விச்சுவாதிகனென்பதுமுதலியநான்குசுருதிகளும் அருணசலபுராண முதலியபுராணங்களுஞ் சான்று" என்றிருக்கின்றது. மேலும்திருவாவடுதுறையாதீனத்துச் சிவஞானசுவாமிகள்செய்த திருவேகம்பரந்தாதியின் ௯௬-ம் பாட்டில், "பொருந்தங்குமரிக்குறும்பற்றிருவர்புகழ்சிவம்" என்றும், இதனுரையில் "(யான்பரம்யான்பரமென்று) போர்புரிதற்குக் காரணமாகியதமதுஅழிவில்லாதபொல்லாங்கு நீங்கிப் (பிரமவிஷ்ணுக்களாகிய) இருவருந்துதிக்கும்பரசிவமானது"என்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதலால் இவ்வாசிரியர்முதலியவர்களுக்குங்கூடப், புராணங்களும் புராணகதைகளாகிய பிரமவிஷ்ணுசண்டை முதலியவைகளும்உண்மையானவைகளென்றேயங்கீகாரமாம். ஆதலால் இச்சண்டைமுதலியவைகள் சிருட்டியாதியாமிகமகத்துவமுடைய தென்பதையுணர்த்துவான் ரூபகாலங்காரமாக யுத்தபாவனையாய்க்கற்பித்தவர்ணனைகளல்ல. இவைஇங்ஙனமாகப் பண்டிதர் இச்சண்டைமுதலியவைகளை ரூபகாலங்காரமென்றதும்,சைவசித்தாந்தசாஸ்திராதிகளுக்குரையெழுதினவர்கள் முதலியவர்களாகிய மிகுந்தபுத்திமான்களையெல்லாம் அறிவிலாப்பேதைச்சனங்களென்றுதுஷித்ததும் தஞ்சமயத்தவறினைமறைக்கக்கருதிக்கூறினவையேயன்றி வேறல்லவெனவறிக.

௯௧. உ-வது. அன்னமும்பன்றியுமாகிய பிரமவிஷ்ணுக்களிருவருஞ் சிவன்முடியடிகளைக்காணுமற்போனர்களென்று புராணஞ்சொல்லியதில் இவ்விருவர்க்குமிழிவுண்டாயினதேயன்றி யிவருளொருவருக்கேனுமுயர்வுண்டாகவில்லையாதலால், இதைச் "சிருட்டியா திதியாமிகமகத்துவமுடையதென்பதையுணர்த்துவான் ரூபகாலங்காரமாக யுத்தபாவனையாய்க்கற்பித்தவர்ணனை" யென்றது பொருந்ாது. அன்றித், தாழம்பூவைப் பொய்சொல்வித்ததும், சிவன்தாழம்பூவையணிவதை விலக்கியதுமுதலியவைகளுங்கூட இவ்வலங்காரத்துக்குப் பொருந்தாதன. ஆதலாற் புராணத்திற்சொல்லப்பட்டது நடந்தகதையாகச்சொல்லப்பட்டதேயன்றி, ரூபகமாகச்சொல்லப்பட்டதன்றெனவறிக.

௩௨. ௩-வது. பண்டிதர் அவரதுசைவமகத்துவத்து ௬-ம், ௭-ம்பக்கத்து "விஷ்ணுவின்றிருவவதாரங்களுள் ஸ்ரீராமாவதாரமும் கிருஷ்ணவதாரமுமேமிகச்சிறப்புடையன. அவற்றுள்ஸ்ரீராமாவதாரத்தில் விஷ்ணுவேசிவலிங்கபூசைசெய்தமையாலும், கிருஷ்ணவதாரத்திற்புத்திரசோகத்தாலும் பசிக்கனலினாலும்வருந்தி யறிவுமயங்கிவீழ்ந்த அருச்சுனன் சிவபூசைசெய்தன்றி யுணவருந்திலேனெனமறுத்துழி - மருவருகானக மலரினுலெலமைப், பொருவருபூசனை புரிதியையநீ, இருவருமொருவரோ யென்பதின்றுபோய், அருவனையவனடி யடைந்துகாண்டியே - யென்றமையானும், அதற்கருச்சுனனியைந்து செய்தபூசை சிவாகமவுனையிற்செய்யப்பட்டமையானும், கண்ணன்மேலணிமல ரனைத்துங்காயெரி, வண்ணன்மேற்காண்டலு மகிழ்ந்துமேதினி, யுண்ணுமாதவன்சிவ முருவமென்றுணர்ந், தண்ணலுமுடல்புள கரும்பினனரோ - எனக்கூறப்பட்டமையானும் விஷ்ணுவணக்கஞ் சிவவணக்கமேயெனக்காண்க" என்றதும், இராமாயணபாலகாண்டத்துப் பரசுராமபடலத்தில் "சீரிதுதேவர்தங்கள் சிந்தனையென்பதுன்னி, வேரியங்கமலத்தோனு மியைவதோர்வினயந்தன்னால், யாரினுமுயர்ந்தமூலத் தொருவராமிருவர்தம்மை, மூரிவெஞ்சிலைபேபிட்டு மொய்யமர்மூட்டிவிட்டான்" என்னும் ௨௮-ம் பாட்டுமுதலிய பாட்டுகளும் சிவனும்விஷ்ணுவுமொருவரேயெனவும், அவ்வொருவரே யிருவராகிஒருவனையொருவனெதிர்த்துயுத்தஞ்செய்தானெனவுங்காட்டி, இவர்கள் தெய்வத்தன்மையில்லாதவர்களென்றுங் காட்டுகின்றன. ஆதலாற் பண்டிதர் பிரமவிஷ்ணுமுதலியவர்கள் உண்மையாகயுத்தஞ்செய்தனரென்றேயாகுக. அதனாற்சிவத்துவத்திற்குத்தோஷமென்னே? தேசாதிபதியும் நியாயாதிபதியுஞ் சேனாதிபதியும் நான்பெரியன்நீபெரியனெனவாதுசெய்தால் ராணியின்மகத்துவமும்அரசியலும் பின்னப்படுமோ? அணுபட்சத்தாலவ்வான்மாக்கள் யுத்தஞ்செய்தனராயின் அதன்பயனாகிய தண்டனையையடைதற்பாலரெனவறிக" வென்றுகூறிச் சிவனுந்தம்முடையவில்லொடியுமட்டுஞ் சண்டைசெய்ததைமறைத்தல் பொருந்தாதெனவறிக.

௩௩. ௪-வது. பண்டிதர்: "யாதொருதெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகியங்கே மாதொருபாகனார்தாம் வருவர்" என்று சைவநூல் சொல்லுகின்றதென்கிறார்.

நாற்பத்தைந்துவருடத்துக்குமுன்னே சென்னபட்டணத்தில் ஏழுகிணற்றண்டையில் இந்துக்கள்நல்லதண்ணீரிறைத்தெடுக்கு மொருபெரியகிணற்றில் பொன்னம்மாள்என்னும்ஒருபெண் தண்ணீர் மொண்டுகொண்டிருந்தபோது அவள்கால்வைத்திருந்ததரையிடிந்து அவள்பூமிக்குள்ளேபோய்விட்டாள். அவளுக்குச்சொந்தக்காரர்வந்து வெட்டிச்சோதித்தும் அவள்சரீரம் அப்போதகப்படவில்லை. அவ்விடம் பெரியகிணற்றுப்பக்கமாயிருந்ததனால் அதைச்செவ்வையாகவெட்டிச்சோதிக்கப் பயந்தார்கள். அன்றேயொருபூசாரி அவ்விடத்தண்டையி லொருசிறுகுடிசைபோடுவித்து அவளைப் பாதாளப் பொன்னியம்மனென்று சொல்லித்தெய்வமாக்கி வன்னிக்கத்தொடங்கினான். சிலர்பேரில்ஆவேசமுண்டாகி அவர்க ளவளைத்தெய்வமென்றார்கள். பின்னர்அவளுக்

குவெகுபிரபலமாக உற்சவம் பலி காணிக்கைமுதலியவைகளும்நடந்து வந்தன. அவளது குடிசைக்கோயிலுங் கற்கட்டிடக்கோயிலாயிற்று. ஆனுற் சிலவருஷங்களுக்குமுன் அந்தக்கிணற்றிலே தூரொடுத்தபோது அவளதுஎலும்புகளகப்பட்டன. பிறகு அங்கே யவ்வளவுபிரபலமில்லை. எம்முடைய காலத்திலேயே யின்னுமிப்படிநடந்தவைகளநேகமுண்டு. இப்படிவாசிக்கவுமறியாத பூசாரிகளுண்டாக்கிய பாதாளப்பொன்னியம்மன், ஏகாத்தாள், மதுரைவீரன், காத்தவராயன், கறுப்பண்ணசாமி, மன்னார்சாமிமுதலியதெய்வங்களைக்கொண்டவர்களுக்கு அந்தத்தெய்வங்களாகி யங்கேபரமசிவனேவருதல் அவரது தெய்வலக்ஷணத்துக்குமிகச்சிறப்பாயிருப்பினும், பிரமாதி தேவர்களைக்குறித்துத் தக்கன் செய்தயாகத்தில் அந்தத்தேவர்களாகச் சிவன்போகாம லவர்களைப் பகைத்தது இழிவுள்ளதாயிருத்தலறிக.

௩௪. ௪. பண்டிதர் உலகஉற்பத்தியைப்பற்றிப்பேசத்தொடங்கி, ஊ-வது. "பதிபசுபாசம்என்னு மூன்றுபதார்த்தங்க...ளுட்பெருமையுடையது பதியேயாம், அப்பதியினுடைய ஆணையினல், பாசமூன்றுவகைத்தென்பது முன்னமேகூறினேம். அதிலொன்ருகியமாயையினின்று தனுகரணபுவனபோகங்களாகிய சர்வசடவஸ்துக்களுந்தோன்றும். ஆன்மாக்க ளீசுவரனதுகிருபாகடாட்சத்தினுற் பதியையறியுமறிவுதலைப்படும்பொருட்டுப் பூமியின்கண்ணே சடத்தோடு பலவகைப்பிறவிகளி லுற்பத்தியாகிவரும். அதற்குமாருய்த் தன்னைவணங்கும்பொருட்டுந் தன்மகிமையினிமித்தமாகவும் ஈசுவரன் ஆன்மாக்களைச்சிருட்டித்தானென்று நீவிர்சொல்வது யுத்தியா? கடவுளிலக்ஷணத்திற் கவ்வுரைபொருந்துமா ? ஆன்மசிருட்டிக்குமுன் அவர்அபூரணுநந்தரா யிருந்தனரா?—அபூரணுனந்தராயிருந்தனரன்று, நராதியோர் தன்னைவணங்கவேண்டுமென்ற அபேக்ஷையுடையவருமன்று. காரணம்பலவகைப்படும். அவற்றுள் இயற்பாவசம்பந்தகாரணமாய் ஆன்மாவைக்கடவுள் சிருஷ்டித்தக்கால் அஃது அவரைவழிபடுதலே அதன்கடமை. அதனையே யாம் அவ்வுரையாற்குறிப்பிக்கின்றேம்என்பீராயின், கடவுள் ஆன்மாவைச்சிருட்டித்த விசேஷகாரணந்தானென்ன? அதனைச்சொல்லவேண்டும்" என்கிருர்.

௩௫. இதில் ஊ-வது. சிவன் தமதுஆணையாற் பெருமையுடையவரல்லரென்பது காட்டுவோம்: சிவன் மலத்தினுல்வருந்தும் ஆன்மாக்களைக்கண் டிரங்கி, அம்மலங்களை அவ்வான்மாக்களினின்றுநீக்குங்கிருத்தியத்தில் அநாதியில்தானே கைவிட்டுக்கொண்டாரென்று பண்டிதர் வேறிடத்துங்கூறியிருக்கிருரல்லோ? அப்படியே அவர்அநாதியிலேயே செய்துமுடிக்காமை சிவனுக்குஅவ்வல்லமை யில்லாமையையும், மலங்கள்சிவனதுஆணைக்கு மடங்காதவல்லமையைக்கொண்டிருத்தலையுங்காட்டுகின்றதல்லோ? ஆதலால் சிவன் ஆன்மா மலம்என்பவற்றுள் சிவன் தம்மாணையாற்பெருமையுடையவரென்பது பொருந்தாதெனவறிக.

௩௬. அப்படியன்று. சிவன் அநாதியிலேதானே மலங்களை ஆன்மாக்களினின்றுநீக்கிப்போடக்கருதினதில்லை? ஆன்மாக்களுக்கு ஆணவமலத்தாலுண்டானவிருப்பத்தை அவை (தாங்கொடுக்கும்) உடலோ

டுகூடிவாழ்ந்து அநுபவித்தபின்னரே நீக்கக்கருதினுரெனின், அப்படி சிவன்கருதுதல் ஷ-வது. தன்சிசுக்கள்பசியால்வருந்துதலைக்காணுத தாயின்கருத்துப்போலிருத்தலால், இதிலேசிவன் சர்வஞானமில்லாத வராகிறுர். உ-வது. தன்சிசுக்கள் பசியால்வருந்துதலைக்கண்டாலும் அவற்றிற்கிரங்காததாயினது கருத்துப்போ லிருத்தலால், இதிலேசிவன் இரக்கமில்லாதவராகிறுர். ங-வது. தன்சிசுக்கள் பசியால்வருந்துதலைக் கண்டிரங்கினுலும் உடனே அப்பசியாற்ற வல்லமையில்லாததாயினது கருத்துப்போலிருத்தலால், இதிலேசிவன் மலத்தையுடனேநீக்கும்வல்லமையில்லாதவராகிறுர். ஆதலால் இந்தவிஷயத்திலும் சிவன் தம்மாணையாற்பெருமையுடையவராயிருக்கிறுரென்பதுபொருந்தாதெனவறிக

ஙஎ. அன்றியும் இவ்வாறு ஆன்மாக்களுக்கு உடலைக்கொடுத்து மலத்தைநீக்கக்கருதி அத்தொழிலைத்தொடங்கியசிவன் எல்லா ஆன்மாக்களுக்கும் உடனேஉடலைக்கொடாமையும், உடலைக்கொண்டஆன்மாக்கள்தாமும் ஒரேஉடலில் மலத்தினீங்கச்செய்யாமையும், கணக்கில்லாதயுகங்களாகியும், இன்னும்தாம்தொடங்கியதொழிலை முடிக்காமையும், அளவில்லாதஆன்மாக்கள் இன்னமும்ஒருடலும்பெருது மலத்தால்வருந்திக்கொண்டிருக்கும்படி சும்மாவிட்டிருத்தலும், உடல்பெற்ற ஆன்மாக்கள் ஸ்வதந்திரமின்றி மலதந்திரிகளாய் அறியாமைபொருந்தியிருக்கும்போது அவற்றிற்கு வேதாகமசாஸ்திராதிகளைத்தந்துஇதனைச் செய்க அதனைச்செய்யற்கவென விதித்தலும் விலக்கலும், அவ்வான்மாக்கள் மேற்கூறியவாறு பரதந்திரிகளாயிருத்தலாலும் அறியாமையினுலும் அவ்விதிவிலக்குகளில்தவறியகாலத்து அவைகளைநரகத்திற்புகுத்தித் தண்டித்தலும் சிவன் ஞானம் நீதி இரக்கமாதி தேவலக்ஷணமில்லாதவரெனக்காட்டுதலோடு வல்லமையில்லாதவராயிருக்கிறுரெனவுங் காட்டுதலால், இதனுலும்சிவன்தம்மாணையாற் பெருமையுடையவரென்பது பொருந்தாதெனவறிக.

ஙஅ. உ-வது. மாயையாதிமலங்களும, ஆன்மாக்களும் அநாதியிலிருத்தல்கூடாதென்பது இந்தச் "சைவமகத்துவதிமிரபாநு" வின் எ-அ-கூ-ம் இலக்கமாதிகளிற் காட்டியிருக்கின்றும். மாயைமலத்தால் சிவன்உடலாதிகளைப்படைத்து ஆன்மாக்களுக்குக் கொடுக்கிறுரென்பதில் சிவன்தேவலக்ஷணமில்லாதவரும்சர்வஅநீதரு மாகிறுரென்பதும் ஙடு-ஙகூ-ஙஎ-ம் இலக்கத்திற்காட்டினும். ஆதலால் "மாயையினின்று தனுகரணபுவனபோகங்களாகிய சர்வசடவஸ்துக்களும்தோன்றும். ஆன்மாக்கள் ஈசுவரனதுகிருபாகடாட்சத்தினுற் பதியையறியுமறிவுதலைப்படும்பொருட்டுப் பூமியின்கண்ணே சடத்தோடு பலவகைப்பிறவிகளினுற்பத்தியாகிவரும்" என்பது தவறுமெனவறிக.

ஙகூ. ங-வது. சர்வேஸ்வரன் நீதி, தயை, ஈகையாதிகளைஇயல்பாயுடையவர். அவை பிறிதுபொருளின்றி வெளிப்படாலக்ஷணங்களாதலின் அந்தஇயற்பாவசம்பந்தகாரணமாய் மனிதராதிகளும் உலகங்களும் படைக்கப்பட்டன. ஆதலாற் பரலோகபுத்தியையுடைய மனிதராதியோர் அக்கடவுளதுகட்டளையைச் சிரமேற்கொண்டு அவரைவழிபடுதலே அவர்களதுகடமை. அதனையே யாம்அவ்வுரையாற்குறிப்பிக்

கின்றேம். ஆதலால் கடவுள் ஒருகாலத்தும்அபூரணனாந்தரா யிருந்ததில்லையெனவறிக.

இங்கேயாம்காட்டிய பலவகைப்பட்டநியாயங்களின்படி சிவன் தமதுஆணையாற் பெருமையுடையவராகாதிருத்தலாலும், சர்வஜடவஸ்துக்களும் மாயைமலத்தினின்று ஆக்கப்படாதனவாயிருத்தலாலும் சிவன் தம்மாணையாற் பெருமையுடையனென்றும் மாயைமலத்தினின்று சர்வஜடவஸ்துக்களுந்தோன்றினவென்றுங் கூறும்வேதசாஸ்திராதிகள் பொய்ந்நூல்களாமெனவும், ஆதலால் அவைகூறுங்கடவுளாகிய சிவனும் பொய்க்கடவுளாமெனவும், ஒன்றுமில்லாமையினின்றே கடவுளால் அனைத்தும்படைக்கப்பட்டன வென்னும்வேதமே சத்தியவேதமெனவும், ஆதலால் இதுகூறுங்கடவுளாகியசர்வேசுவரனே மெய்யானதேவனெனவு மறிக.

சo. ஙி. பண்டிதர்: சிவன்கையிட்டதொழில் முற்றுப் பெருமையி லுண்டாகிய இழிவை மறைக்கநினைந்து, "சைவாகமத்தின்படி ஆன்மாத்தொகைப்படாவனந்தமேயாம். பின்னைச் சிருட்டியாற் பயனேதெனச்சொல்லிய தெங்ஙனம்? அனந்தமென்பது நமக்கதீதம். அதன்முடிவு நாமறியற்பாலரல்லேம், சிற்றுணர்வினராய்நாமிருக்கும் வரைக்கும் அதுநமக்குப்புலப்படாது. ஆயினு மான்மகோடியனைத்து முத்தியடைதல் முற்றுப்பெறுதென்று நீவிர்சொல்லியதென்னே? ஓரேகாலத்தி லித்தனையான்மாக்களைமாத்திரஞ் சென்மத்தில்விடலாம், அதற்குமேலேகூடாதென் றோர்நியமமுண்டா? அஃதுசாதனமாயினன்றோ நீவிர்சொன்ன தொக்கும், ஆன்மா வனந்தமாயிற் பிறவியுமனந்தமென்றாற் பேதமென்னே? பிறப்பிலேசுழன்றுழன் றனந்தான்மாக்களு முத்தியடையுமென்பதி லுண்டானவிரோதமென்ன? இத்தனை ஜீவரை இத்துணைக்காலத்திற் சென்மத்தில்விடலாமென்றாவது அன்றேல் இத்துணைக்காலத்தி லித்துணைஜீவர்கள் முத்திபெறலாமென்றாவது வரைப்பட்டதேல் அனந்தப்பட்டஜீவர்கள் முத்தியடைதல் அசாத்தியமாகும்? ஆத்துமாவநந்தமேற் ஜென்மமுமநந்தமாகலாம், ஜென்மமநந்தமாகவே முத்தியுறுபவருமநந்தமாகலாம்; ஆகவே யதில்எட்டுணையளவேனும் யுக்திவிரோதத்தை நாங்காண்கின்றிலம். அல்லவென்று நீவிர்சொல்லியவாறே ஜென்மஜீவிக டொகைப்பட்டன வெனவும் ஆகவேமுத்தியடைவோர் அநந்தரலர்எனவும் வைத்துக்கொள்வோம். அனந்தான்மாவி லொருசாரான்மாத்தொகையை முத்தியடைவித்தல் பயனில்செய்கையென்றுசொல்கின்றீர்? ஒவ்வொருஆன்மாவின்முத்தியும் அனந்தஆனந்தப்பேறேயாய்ப் பெரும்பயனுடைத்தாகக் கோடாகோடியான்மா முத்தியடைதலின்பெருமை யாம்நினைக்கவும் பேசவுமரியதேயாம். அல்லாமலுஞ் சர்வான்மமுத்திசாதன முமதுசமயத்துக்கே தோஷமாவதெனக்கொள்க" என்கிறார்.

சஅ. ஷ-வது. சைவசமயநூல்கள்சொல்லுகிறபடி ஆன்மாக்கள்மனிதராகப்பிறந்து ஞானநெறியில்நின்றாலன்றி முத்தியையடையா. ஆதலால் எல்லாஆன்மாக்களுமுத்தியடைதற்கு ஒருதரமாவது மனிதராகப்பிறக்கவேண்டும். மனிதர்கள் ஜனத்தொகை யெடுப்பினும்

ஜனனமரணக்கணக்கெடுப்பினாலுங் கணக்கிடப்படுகிறார்கள். இனியுங் கணக்கிடப்படுவார்கள். இக்கணக்குகள்முதலியவைகளால் கடந்தகாலத்திலிருந்தமனிதர்கணக்கும் எடுக்கப்படக்கூடும். ஆதலால்எல்லா மனிதரும் கணக்கிடப்படக்கூடியவர்கள். ஆதலால் "ஆன்மாத்தொகைப்படாவனந்தமேயாம்" என்றதுபொருந்தாதெனவறிக.

சஉ. உ-வது. சைவசமயநூல்கள் சொல்லுகிறபடி ஆன்மாக்கள்மனிதர்களாகப்பிறந்து ஞானநெறியில்நின்றாலன்றி முத்தியடையா. ஆதலால் எல்லாஆன்மாக்களு முத்தியடையுங்காலஞ்சமீபித்தற்கடையாளமாவது உலகில்மனிதரன்றி வேறுபிராணிகளில்லாமையாம். பூமியில்மனிதரன்றி வேறுபிராணிகளில்லாதகாலத்தில் மனிதரதுஉணவுக்கும்உடைக்குமுரியபொருளு மிராவாதலால் அந்தமனிதர் ஜீவிக்கும்வழியிராது. ஆதலால்சிவன் எல்லாஆன்மாக்களையுமுத்தியடையச்செய்ய அவரதுவேதமே யவரைத்தடுக்கின்றது. ஆதலால் எல்லாஆன்மாக்களையுமுத்தியடையச்செய்தல் சிவனுக்குக்கூடாதெனவறிக.

சங. ங-வது. சிவன் ஆன்மாக்களையெல்லாம் முத்தியடைவிக்கவேண்டுமென்று அநாதியிலேதொடங்கியதொழில் அநேகயுகங்களாகியு மின்னுமுடியவில்லையென்பதற்கு இப்போதுமுலகில் மனிதரும்மற்றப்பிராணிகளுமிருத்தலே சாக்ஷியாயிருத்தலால் சிவன் தாம்கையிட்ட அத்தொழிலைமுடிக்கச் சக்தியில்லாதவராயிருக்கிறார். ஆதலாற்சிவன் ஆன்மாவனைத்தையுமுத்திப்பெறுவித்தல் இனிமுடியாதென்பது நியாயமேயெனவறிக.

சச. ச-வது. "ஒவ்வொருஆன்மாவின்முத்தியும் அநந்தஆனந்தப்பேறேயாய்ப் பெரும்பயனுடைத்தாகக் கோடாகோடியான்மா முத்தியடைதலின்பெருமை யாம்நினைக்கவும்பேசவுமரிதேயாம்" என்று பண்டிதர்சொன்னதினாலே சிவன்கையிட்டதொழிலை முடிக்குஞ்சக்தியவருக்கில்லாமைகாட்டப்படுதேலறிக.

சரு. ரு-வது. அநேகர் மோக்ஷத்தையிழந்துவிட்டார்களென்று கிறிஸ்துவர்கள்சொல்லுநியாயத்துக்கும் சிவன்கையிட்டதொழிலையிவர்முடிக்கச்சக்தியில்லாமைக்குஞ் சம்பந்தமில்லாமையாற், பண்டிதர் "சர்வான்மமுத்திசாதன மும்மதுசமயத்துக்கே தோஷமாவதெனக்கொள்க"என்றது சிவன் எல்லாஆன்மாக்களு முத்தியடையச்செய்யக்கூடியவரென்றுநியாயஞ்சொல்ல இவர்க்குவழியில்லையென்பதைக் காட்டுதேலறிக.

சசு. சு. பண்டிதர்: தாம் "ஆன்மாக்கள் பூமியின்கண்ணேசடத்தோடு பலவகைப்பிறவிகளிலுற்பத்தியாகிவரும்" என்றது ஆட்சேபத்துக் குரியதாதலின், அதற்குச் சில ஒவ்வாநியாயஞ் சொல்லக்கருதி, "ஒருதரம்பிறந்தவன் மறுபடிபிறப்பதில்லையென்பீராயின், ஒருஆன்மாநாயாகவும் இன்னொன்றுகுதிரையாகவும் வேறொன்று மனுடனாகவும்பிறப்பதென்னோ? சர்வஜீவதயாபரன் நடுவுநிலைமை யுள்ளவராதலின் தகுந்தகாரணமில்லா திப்பேதங்குறியாரென்க" எனமுன்னர்ச் சொல்லினும், நாய்முதலியவற்றிற்கு ஆன்மாவுண்டென்றுதாபிக்குமுன்னர்த் தாம்இப்படிவினாவியது தகாதென்றுணர்ந்து பின்னர்,

ஙூ-வது. "மானிடஜென்மமே யான்மாவுடையது, மற்றைய ஆன்மாவில்லாது மனுடனதுவசதிக்காகச் சிருஷ்டிக்கப்பட்டதென்பீராயின், பாம்பு தேள் கொசுகு" சிங்கம் கரடிமுதலியவைகளைக் கடவுள் மனிதர்க்குத்துன்பத்தைத்தரும்படி பூமியிலேபடைத்துவைத்ததேன்? கடவுள்இவைகளைப் படைத்துவைத்திருத்தலால் "மிருகங்கள் மனுடருக்காகச் சிருட்டிக்கப்பட்டனவல்லவெனவறிக" என்கிறார். பாம்பு முதலியவை ஆதிமனிதர்பாவஞ்செய்யுமுன் அவர்களுக்குத்தீமையைச்செய்யுந்தன்மையைக் கொண்டிருந்ததில்லை. பின்பும், மனிதருக்குப் பகையாயெழும்பியஇவையெல்லாம் மனிதர்வீட்டிலும் காட்டிலும் மேட்டிலும் மற்றையவிடங்களிலும் இருக்கும்போதும் நடக்கும்போதும் ஏறும்போதும் மற்றத்தொழிலைச்செய்யும்போதும் கடவுளை நினைக்கவும், வணங்கவும், தங்களுக்குஆதரவாய்க்கூப்பிடவுஞ்செய்யக் காரணமாகியஅச்சத்தை அவரிடத்தேஉண்டாக்குபவையாயிருத்தலாலும், மருந்துமுதலியவைகளுக்கு உவுதலாலும், மிருகாதிகளும் மனிதர்க்காகவேசிருட்டிக்கப்பட்டனவெனவறிக.

சஎ. உ-வது. "மேலும் ஐரோப்பியமகாவைத்தியபண்டிதரும் வித்வசிரோமணியுமாகியடங்கனிசாசிரியர் தாமியற்றிய தெய்வச்செயல்விளக்கத்தில்'' மனுடமகத்துவப்பிரகரணத்தி னோர்வாக்கிய''த்தில் பூமியானதுமனிதருக்காய்ச்செய்ததாகாதுகாண்என்றார். "இஃது உமதுமதாசிரியர் கருத்தேயாக மிருகங்கள்மனுடர்க்காகச் சிருட்டிக்கப்பட்டனவன்றெனவறிக" என்கிறார்.

ஙூ-வது. எந்தநூலும் சாஸ்திரசங்கத்தாலும் திருச்சபைமேய்ப்பராலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி எடுத்துஉதாகரிக்கப்படத்தக்கதும் எமதுமதாசிரியரதுகருத்தென்று சொல்லப்படத்தக்கது மன்றதலின், இத்தன்மைகள் இல்லாததும் டங்கனிசென்பவராற் செய்யப்பட்டதுமான தெய்வச்செயல்விளக்கமென்னும் புஸ்தகம் எமக்குஉதாகரிக்கப்படத்தக்கதும், இஃது உமதுமதாசிரியர்கருத்தென்னப்படத்தக்கது மன்றெனவறிக. உ-வது. அந்த டங்னிசென்பவர் பூமிமனிதருக்காய்ச்சிருட்டிக்கப்பட்டதன்றென்று தமதுதெய்வச்செயல்விளக்கத்திற் கூறியும், அவ்வுரைக்குமாறாய்த் தாம் பூமியிலிருந்து தமக்கென்றுபடைக்கப்படாதவைகளைக் கவர்ந்துண்டஅநீதராயிருத்தலால் அவருரைத்தது நீதமுள்ளதென்றுகொள்ளத்தகாததென்றறிக. ங-வது. அவர்: பூமியானது மனிதருக்காய்ச்செய்ததாகாது என்றது அதையேற்றுக்கொண்டபண்டிதருக்கேவிரோதமாய்த், தனுகரணபுவனபோகங்களை ஆன்மாக்களுக்காகவேசிவன்படைத்தானென்பதைப் பொய்யாக்குதல்காண்க. இத்தெய்வச்செயல்விளக்கமென்பது இவ்வாறுஉதவாததாயிருத்தலால், பண்டிதர் இதனையெடுத்துஉதாகரணமாகக்காட்டியது பொருந்தாதெனவும், ஆதலால் மிருகங்கள்ஆன்மாஇல்லாது மனிதர்க்காகவேபடைக்கப்பட்டனவெனவும், அதனால் ஒருதரம்பிறந்தவன் மறுபடிபிறப்பதில்லை யெனவும், அதுபற்றி ஆன்மாக்கள் பூமியின்கண்ணே சடத்தோடு பலவகைப்பிறவிகளி லுற்பத்தியாகிவரு மென்பது பொய்மையெனவுமறிக.

௪அ. ௩-வது. "அன்றியும், நட்புப்பகைஅறிவுஞாபகம்ஆதிகள் மனோலக்ஷணங்களேயன்றிச் சடத்திற்குரியனவல்ல, ஓர்மிருகம்ஒருவனைநட்டலும் மற்றொருவனைப்பகைத்தலும் யாதுகாரணம்? சடம்அறியுமா? சிலமிருகங்கட்குஉள்ளஞாபகசக்தி மனுஷனிடத்தும் காண்கிலேம் ஆதலால் அவையெல்லாம்ஆன்மா உடையனவென்க" என்கிறார்.

௪௯. சீவன்கள் அபிவிருத்திசேட்டையையுடையவை யெனவும், இந்திரியசேட்டையை யுடையவையெனவும், ஞானமாகியஉத்தமசேட்டையையுடையவையெனவும் மூன்றுவகைப்படும். இவற்றுள் அபிவிருத்திசேட்டையைமாத்திரம்உடைய சீவனுக்கும் அபிவிருத்திசேட்டையோடு இந்திரியசேட்டையையும்உடைய சீவனுக்கும் கடவுள் புண்ணியம் பாவம் மோட்சம் நரகமுதலியவற்றைப்பற்றியஅறிவு இல்லாமையாலும், இன்னும்சிலகாரணங்களாலும், இவற்றின்உடல்கள் அழியும்போது இந்தச்சீவன்களும் அழிந்துபோகின்றன. ஞானமாகியஉத்தமசேட்டையையுடைய சீவன்கள்மாத்திரமே கடவுள் புண்ணியம் பாவம் மோட்சம் நரகமுதலியவற்றைப்பற்றியஅறிவுடைமையாலும் இன்னுஞ்சிலவேறுகாரணங்களாலும் தம்முடம்பு அழியும்போதும் அழியாமல், மோட்சத்துக்கேனும் நரகத்துக்கேனும் செல்லுகின்றன. இன்னும் இவ்விஷயத்தை விரித்துரைப்பிற் பெருகும். இதிற்க.

௫0. வேதாந்தசாத்திரத்தில் "மூவகைச்சாதிகளாவன: இகலோகபுத்தி, பரலோகபுத்திஎன்னும் இரண்டையும் உடையமனிதர்கள் உத்தமசாதி; பரலோகபுத்தியின்றி இகலோகபுத்தியைமாத்திரம்உடைய பசுபட்சிமுதலானதிரியக்குகள் மத்திமசாதி; இவ்விருவகைப் புத்தியும்இல்லாதவைகளாயிருக்கின்ற விருட்சாதிகள் அதமசாதி; இவைகளாம்" என்று சொல்லப்பட்டிருக்கின்றபடி மிருகாதிகளிடத்தில் இவ்வுலகபுத்திக்கேற்ற நட்புப்பகை அறிவு ஞாபகமுதலியவைகள்உள்ளனவாயிருக்குமேயன்றிவேறல்ல. அன்றியும் மிருகங்களுக்குஐந்தறிவு உள்ளனவேயன்றி ஆறுஅறிவுஇல்லை. சைவருடைய முனிவரிற்சிறந்தவரும் சத்தருஷிகளில் ஒருவருமாகிய அகத்தியனாரும் "ஐந்தறிவின் மேலதிகமாமனமே" என்று சொல்லியிருக்கிறார். ஆறுமுகநாவலரது பாலபாடம் *௩-ம்புத்தகத்து ௫-ம் பக்கத்திலும் "விலங்கும் பறவையும் அந்நான்கனோடு சத்தத்தையும்அறியும் ஐயறிவுயிர்கள். தேவர்களும்மனிதர்களும் அவ்வைந்தனோடு சித்தத்தாலறியுமறிவுமுடைய ஆறறிவுயிர்கள்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் மிருகமுதலியவைகளிடத்துஉள்ள "நட்புப்பகைஅறிவுஞாபகம்ஆதிகள் மனோலக்ஷணங்களே" என்றும், "ஆதலால்அவையெல்லாம் ஆன்மாஉடையன" என்றும் பண்டிதர்கூறியது பொருந்தாதெனவறிக.

௫க. ௪-வது. நாய்குதிரைமுதலியவற்றிடத்துஉள்ள "நட்புப்பகைஅறிவுஞாபகம்ஆதிகள்" யாவும் "ஆன்மஞானமல்ல, அவ்வம்மிருக இயல்பெனப்படும் என்பீராயின், ஒருசாதிமிருகத்துள் ஒன்றினுக்குக் குறைந்தஉணர்வும் மற்றொன்றினுக்குக் கதித்தஉணர்வும்வருவது எங்ஙனம்?" என்கிறார். இக்குணபேதம் பிராணிகளிடத்துமாத்திரம்

* இது இப்பொழுது ௪-ம் புத்தகம் எனப்படும்.

இருந்தாலல்லோ பண்டிதர் இக்கேள்விகேட்டு உத்தரவுபெறவிரும்ப வேண்டும்? சீவன்நீங்கிய சந்தனக்கட்டைகளாகியஒருசாதிப் பொருள்களிலே குறைந்ததும்கதித்ததுமானமணம்இருக்கஅறிகிறோம். சீவனில்லாத முத்துகளாகியஒருசாதிப்பொருள்களிலே குறைந்தவையும்கதித்தவையுமாகிய ஒளிமுதலியவைஇருக்க அறிகிறோம். சீவன்இல்லாத ஊசிக்காந்தக்கற்களாகிய ஒருசாதிப்பொருள்களிலே குறைந்ததும்கதித்ததுமாகிய கிரகிக்கும்சக்திஇருக்க அறிகிறோம். இப்படிச்சீவன் அற்றவைகளிலும் சீவனில்லாதவைகளிலுங்கூட ஒருசாதியாயுள்ள பொருள்களுள் வித்தியாசமானகுணம் இருத்தலால், ஒருசாதிமிருகங்களுக்குள்ள வித்தியாசமானகுணத்தைக்கொண்டு அவைகளுக்குமனோலக்ஷணங்கள்உண்டென்று பண்டிதர்கூறுவது பொருந்ாதெனவும், ஒருசாதிப்பொருள்களில் வித்தியாசமானகுணமிருத்தல் உலகம்நடைபெறுதற்கு மிகவும்ஏற்றதெனவும்அறிக.

ருஉ. ரு-வது. "மேலும்மனுடனிலும்மிக்கஅறிவு மிருகங்களிற் பலகாலும்காண்கின்றனம். உடம்பில் ஓர்நோயும் இல்லாதிருந்தும் தற்செயலாய்ச் சாநேரிடும்ஒருமிருகம் தனக்குச்சாநேரிடுவதை அறிந்து இரண்டொருதினமாக ஊண்உறக்கம்இல்லாதிருப்பது கேள்விப்பட்டிலீரா? என்கிறார். எனக்குஉடம்பில்ஓர்நோயும்இல்லை, எனக்குச்சாநேரிடுவதையறிந்தேன், இதுபற்றித்தான் நான் இரண்டொருநாளாக இரையெடாதிருந்தேனென்று அந்தமிருகம் பண்டிதருக்குச் சொல்லித்தான்உயிர்விட்டதோ? பண்டிதர் அதன்பாஷையை யறிந்திருக்கிறாரோ? அப்படியில்லாவிடின், அந்தமிருகத்துக்கு வியாதியில்லாதிருந்ததென்றும், தனக்குச்சாவுவருமென்று முன்னர்அறிந்துகொண்டிருந்தவிசனத்தாலேயே அதுஇரண்டொருநாள் உணவுகொள்ளாமலும் உறங்காமலும்இருந்ததுஎன்றும் பண்டிதர் அறிந்ததெப்படி? இது மிகவும்விபரீதார்த்தமாயிருத்தலால் பண்டிதர்சொல்லுவது பொருந்தாதெனவும், அந்தமிருகம் சாதற்குமுன் இரண்டொருநாள் உண்ணுதிருக்கவும்உறக்கமில்லாதிருக்கவும்செய்ததே அதனதுநோய்எனவுமறிக.

மிருகங்கள் ஆன்மாவுடையனவென்றுகொள்ளுதற்குப் பண்டிதர் கூறியநியாயங்களெல்லாம் இவ்வாறு பொருந்ாதனவா யிருத்தலால், யாம்கூறியவாறு மிருகங்கள்ஆன்மாஇல்லாது மனிதர்க்காகவேபடைக்கப்பட்டனவெனவும், அதனால்ஒருதரம்பிறந்தவன் மறுபடிபிறப்பதில்லையெனவும், அதுபற்றி ஆன்மாக்கள்பூமியின்கண்ணே சடத்தோடுபலவகைப்பிறவிகளில் உற்பத்தியாகிவருமென்பது பொய்மையெனவுமறிக.

ருங. எ. பண்டிதர் தாம் "ஆன்மாக்கள்பூமியின்கண்ணே சடததோடுபலவகைப்பிறவிகளி லுற்பத்தியாகிவரும்" என்றதைச், சைவர்கள்சீவகாருண்ணியர் என்றவெறுஞ்சொலாலே ஸ்தாபிக்கக்கருதி,

அ-வது. சைவர்கள் உயிர்க்கொலையை மறுக்கிறார்களென்கிறார். புல்மாமுதல் மனிதர்தேவரீறனவைகள் ஒரேதன்மையான ஆன்மாவையுடையனவென்பது சைவாதுகொள்கை. இப்படியிருக்க, அவர்கள் பசுமுதலியவற்றிற்குப் புல்முதலியவைகளை ஆகாரமாகக்கொடு

க்கிறார்கள்; வீடுமுதலியவைகளைக்கட்டப் பனைமுதலிய மரங்களைவெட்டிக் கொல்லுகிறார்கள்; கறிக்குக் கீரைத்தண்டு சேமத்தண்டு முதலியவைகளைப்பிடுங்கி அவைகளைக்கொல்லுகிறார்கள்; தங்கள்தலையிலுள்ள பேனைக் கொல்லுகிறார்கள்; தங்கள் பசுக்களுக்கு உண்ணிபிடிக்கிறபோது அவைகளைக் கொல்லுகிறார்கள்; தங்கள்குதிரைக்குநோயுண்டாகிறபோது அதன்வயிற்றுக்குள்ளே உடும்புக்குட்டியைவிடுகிறார்கள்; அன்றியும், ஆட்டுத்தலைக்கறி சமைத்துக்கொடுப்பிக்கிறார்கள்; தங்கள் தேவவிக்கிரகத்துக்கு முத்துமாலை முதலியவைகள்செய்யச் சிப்பிகளைப்பதைக்கப்பதைக்க அறுப்பிக்கிறார்கள்; அல்லது சிப்பிகள் செத்து அழுகும்படி செய்விக்கிறார்கள்; கறிக்கென்றெடுக்கிறகீரைமுதலியவைகளில் இனிதாய்ப்பிழைத்திருக்கும்புழுமுதலியவைகளை வேறுபடுத்தலாற் கொல்லுகிறார்கள்; தண்ணீரைக்காய்ச்சுவதாலும் உண்ணுவதாலும் அநேகம் பூச்சிகளைக்கொல்லுகிறார்கள்; மருந்துநிமித்தம் அநேகபிராணிகளைக் கொல்லுகிறார்கள், தங்கள்தேவர்களுக்கு ஆடு கோழி எருமைக்கடாமுதலியவைகளைப் பலியிடுகிறார்கள்; ஆடு, பசு, குதிரை, மனிதன்முதலியவைகளை யாகத்திற்கொன்று தங்கள்தேவர்களுக்கு உணவுகொடுக்கிறோமென்கிறார்கள். இப்படிச் சைவர்கள் கொலைசெய்கிறவர்களாயிருக்கப், பண்டிதர் சைவர்கள்கொலையை மறுக்கிறார்களென்பது சைவர்களின்தாய்மார்கள் மலடிகள்என்பதுபோலவிருக்கின்றதெனவும், சைவர்கள் சொல்லாற் கொலையைமறுக்கிறார்களேயன்றிச் செய்கையால்மறுக்கவில்லையெனவும், அதனால் அவர்கள் கொள்ளுங் கருத்தின்படியேயும் அவர்கள் சீவகாருண்ணியரல்லரெனவும் அறிக.

ருச. ஆறுமுகநாவலரதுபாலபாடம் ௩-ம்புத்தகத்து கசு-ம்பக்கத்தில் "அசரமாகிய மரமுதலியவைகளைக் கொன்றுபுசித்தல் பாவமாயினும், அவைகள் எழுவகைத்தோற்றத்துள்ளும் தாழ்ந்தபருவத்தை யுடையவையாதலால், அக்கொலையாலாகும்பாவம் சிறிதாகும். அசரபதார்த்தங்களை நாள்தோறும்கடவுள், அக்கினி, குரு, அதிதிகள் [பரதேசிகள், புதியவர்கள்] என்னும்நால்வகையோருக்கும் முன்னூட்டிப் பின் உண்பானாயின், அவ்வசரக்கொலையால்வரும்பாவமும், உழுதல், அலகிடல், மெழுகுதல், நெருப்புமூட்டல், தண்ணீர்கவர்தல், நெற்குத்துதல்முதலியதொழில்களால்வரும்பாவமும் அவ்வக்காலத்திலேயேநீங்கிவிடும்" என்றுசொல்லப்பட்டிருக்கின்றது. இதனால் ௧-வது. சைவர்கள் உயிர்க்கொலையைமறுக்கிறவர்களல்லர், உயிர்க்கொலையைச்செய்கிறவர்களென்று சைவர்களேயொப்புக்கொண்டதாயிற்று. ௨-வது. இப்படிக்கொல்லப்பட்டஅசரபதார்த்தங்களைக் குருக்களும் அதிதிகளுமாயிருப்பவர்கள் உண்ணுதலிலே அவர்களுக்கு அந்தச்சிறியபாவமும் வராமலிருப்பதுமன்றி, அந்தக்கொலைகாரருடையபாவத்தையும்நீக்குதலாற் புண்ணியமும்உண்டாகிறதென்றதாயிற்று. ௩-வது. வீடுகட்டுதல்முதலியவற்றிற்குப் பனை, தெங்குமுதலியவற்றைவெட்டிக்கொன்று வந்த பாவத்திற்கு (இவைகளைச்சமைத்துக்) குருக்களுக்கும் அதிதிகளுக்கும் இடக்கூடாமையால்)வேறுவிதபரிகாரம்வேண்டுமென்றதாயிற்று. ௪-வது

அறுக்கும்கத்தரிக்காய்முதலியபதார்த்தங்களிலேயுள்ள புழு, பேன், உண்ணி, சிப்பி, பலியிடுங்கோழி, ஆடுமுதலியவற்றைக்கொல்லும்பாவம் பெரியபாவமென்றதாயிற்று. ரு-வது. சைவர்கள் நாள்தோறும் இவ்வித மாகச்சிறியபாவங்களையும் பெரியபாவங்களையுஞ் செய்துவருகிற பாபிகளென்றதாயிற்று. ஆதலால்சைவர்கள் உயிர்க்கொலையை மறுக்கிறவர்களென்று பண்டிதர்சொல்வது எவ்விதத்தானும்பொருந்தாதெனவறிக.

ருரு. உ-வது. சைவர்கள் புலவருந்துதலைமறுக்கிறார்களென்கிறார். அகஸ்தியர்முதலிய முனிவர்கள் புலவருந்திவந்தார்களென்பது வாதாபிமுதலியவர்கதையால்வெளிப்படுதலாலும், சிவனடியார் நரமாம்ஸம்புசித்துவந்தார்களென்பது சிறுத்தொண்டர்கதையால் வெளிப்படுதலாலும், இக்காலத்துநடிப்பவர்களும் உயிர்க்கொலைக்குஅஞ்சியே மாமிசம்உண்ணுதலை மறுக்கிறவர்களாயின் அதனையெல்லாக்காரியங்களிலும் மறுக்கவேண்டியிருக்க,யாம்மேலேகாட்டியவாறு மரம், புழு, பேன், உண்ணி, சிப்பி, ஆடுமுதலியவைகளைக் கொல்லுகிறவர்களாயிருத்தலாலும் இதுவும்பொருந்தாதெனவறிக.

ருசு. ந-வது. உமதுசமயநூலிலே கூறியபடியேயும் தேவன் மனுஷனையும்மிருகங்களையும் படைத்துமுடித்தவுடனே கனி, மரம், பூண்டுமுதலியவைகளைத்தானே மனிதருண்ணக்கொடுத்தார். மனிதரதுதுர்நெறிகருதியல்லோ (கசுருள) வருஷத்துக்குப்பின்மீன், மிருகம், பறவைமுதலியவைகளையும் அவர்களுண்ணக்கொடுத்ததென்கிறார். மனிதரதுதுர்நெறிகருதியல்லவோ பின்மனிதர்புலவருந்துதற்குக் கடவுள்உடன்பட்டதுஎன்று பண்டிதர்சொல்லுகின்றாரே அப்படி அவர் சொல்லுதற்கு ஆதாரமெங்கே? வெறுங்கையால் முழம்போடலாமா? புடைவைவைத்துக்கொண்டல்லோ முழம்போடவேண்டும்? கடவுள் தம்மைஒருவர்கேட்டுக்கொள்ளாதிருக்க மிருகாதிகளையுண்ணும்படி மனிதருக்குக்கொடுத்தமையாலும் துர்நெறியுள்ளமனிதர் ஒருவருமில்லாதகாலத்திலே சகலநன்னெறிகளையுங் கைக்கொண்டவருக்குச்சொல்லியே கொடுத்தமையாலும் பண்டிதர் மனிதர்துர்நெறிகருதிக் கொடுத்தாரென்பதும் பொருந்தாதெனவறிக.

ருஎ. ச-வது. முதற்சம்மதியாததோர்செயலுக்குப் பின்னர்ச்சம்மதித்ததே கடவுளிலக்ஷணமன்று. ஆயினும்அவ்வுடன்பாடுஇல்லாமையாற் புலவுஅருந்தல்தகாதெனக்காட்டினரோ என்கிறார். மனிதர் மிருகமுதலியவைகளை யெந்தக்காலத்துங்கொல்லுதற்கும் உண்ணுதற்கும் கடவுளுக்குச்சம்மதியில்லையென்று பண்டிதர்கண்டுபிடித்ததெப்படி? ஆகாசத்தில்வீடுகட்டலாமா? சர்வேசுரன் ஆதாமேவாளைநோக்கி "இதோபூமியின்மீதெங்குமிருக்கிற விதைதரும்சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும்கனிமரங்களாகிய சகலவிதவிருட்சங்களையும் உங்களுக்குக்கொடுத்தோம்; அவைகள்உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது" என்றுசொல்லியிருத்தலால் அப்படிப்பொருள்கொள்ளலாகாதோவெனின், அதைக்கொண்டு அப்படிப்பொருள்கொள்ளக்கூடுமாயின், கடவுள் அதற்கு முன்வசனத்தில் "சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாசத்துப்பறவைகளையும், பூமியின்மேல்நடமாடுகிற சகலமிருகசீவன்களை

யும் ஆண்டுகொள்ளுங்கள்'' என்றதைக்கொண்டு மனிதர் மிருகமுதலியவைகளையெல்லாம்பின்உண்ணுதற்கு அப்போதே கடவுளுக்குச்சம்மதியிருந்ததென்று சொல்லக்கூடுமே; ஆதலால்இப்படிப்பட்டவிபரீதார்த்தத்துக்கெழாமல் அக்காலத்திலேமனிதர்உண்ணக் கனிமுதலியவை போதியனவாயிருந்தமையால் அவைகளையுண்ணக்கொடுத்தாரெனவும், சலப்பிரளயத்தின்பின்பல்குஞ்சனங்களுக்கு அவைகள்போதாவென்று கண்டமையால் மிருகமுதலியவைகளையும் உண்ணக்கொடுத்தாரெனவும், கடவுள் மிருகாதிகளைக்கொல்லுதலைத்தடாமையாலும் பாவமென்றுகருதாமையாலுமே பின்புஆபேல்ஆட்டைப்பலியிட்டதும் கடவுள் அதையினிதென்று ஏற்றுக்கொண்டதும்ஆயினஎனவும், முதற்சம்மதியாததோர்செயலுக்குப் பின்னர்ச்சம்மதிக்கிறது கடவுளிலக்ஷணம்அன்றென்னும்பண்டிதர் சங்கிலியாருக்கு உன்னைப்பிரியேன் பெண்ணேயென்று சத்தியம்பண்ணிக்கொடுத்திருந்த சுந்தரமூர்த்தியார் அதைமீறி அந்தமனைவியை அங்கேதானேவிட்டுப்போட்டுப், பரவைஎன்னு முதல் மனைவியிருந்த திருவாரூருக்குப்போகப் புறப்பட்டபோது அதற்குச் சம்மதியாமல் அவருடையகண்களைக்கெடுத்தும், பின்பு அதற்குச்சம்மதித்து அந்தக்கண்களை ஒவ்வொன்றாய்க் கொடுத்துவிட்டதுமன்றி அவருக்காக அந்தப்பரவையிடத்தில் தூதும்போனானென்று சைவர் கூறுஞ்சிவனேதேவலக்ஷணமில்லாதவனென்று ஒப்புக்கொள்ளுகிறாரெனவுமறிக.

மிருகங்கள் ஆன்மாவுடையனவென்றுகொள்ளுதற்குப் பண்டிதர் கூறியஇந்தநியாயங்களும் இவ்வாறுபொருந்தாதனவாயிருத்தலால், யாம்கூறியவாறு மிருகங்கள்ஆன்மாஇல்லாது மனிதர்க்காகவே படைக்கப்பட்டனவெனவும், அதனால் ஒருதரம்பிறந்தவன் மறுபடிபிறப்பதில்லையெனவும், அதுபற்றி ஆன்மாக்கள் பூமியின்கண்ணே சடத்தோடுபலவகைப்பிறவிகளில் உற்பத்தியாகிவருமென்பது பொய்மையெனவுமறிக.

௫அ. அ. பண்டிதர் ஆன்மாபலவுடம்புகொண்டு பலதரம்பிறக்குமென்றதை இன்னும் பலதிருட்டாந்தங்களால் ஸ்தாபிக்கக்கருதி,

௧-வது. கூன், முடம், பேடி, குருடுமுதலியவாகப் பிறவிபலபேதப்பட்டிருப்பதற்குக்காரணம் முற்பிறப்பின்கருமமல்லாமல் வேறென்ன? என்கிறார். இதற்குக்காரணங்கள்பலவுண்டு; ஆயினும் அவற்றையெல்லாம் இங்கேவிரிப்பிற்பெருகுமாதலின் சிலவற்றைமாத்திரம் இங்கேசொல்லிக்காட்டுவோம். அவற்றுள் ௧-வது. கருப்பந்தரிக்கிறகாலத்தில் தாய்தந்தைகளின்சரீரங்க ளிருக்கும்நிலைமைக் கேற்றவிதமாய்ப் பிள்ளைகள்பிறக்கும். ௨-வது. கருப்பந்தரிக்கிறகாலத்தில் தாய்க்கு எதிரிற்பட்ட உருவத்துக்கேற்றவிதமாய்ப் பிள்ளைகள்பிறக்கும். ௩-வது. கருப்பமாயிருக்குங்காலத்தில் தாய்கொள்ளும்உணவு, மருந்து முதலியவற்றிற்கேற்றவிதமாயும் பிள்ளைகள்பிறக்கும். ௪-வது. கருப்பமாயிருக்கிறகாலத்தில் தாய்அடையும்வியாதிக்கேற்றவிதமாய்ப் பிள்ளைகள் பிறக்கும். இவைமுதலியவைகளில் எவ்விதத்தாற்பிள்ளைகள் மேற்கூறப்பட்டவைமுதலிய அங்கவீனங்கொண்டுபிறப்பினும், பிள்ளைகள் உலகில்இப்படிப்பிறக்கக்கடவுள்செய்துவருதல் மனிதர் தங்களுக்கு இப்ப

டிப்பட்டகுறையையுடையசந்ததி உண்டாகாமற்செய்யக் கடவுளருளைச் சிந்தித்தலாதிகட்கு ஒருவழியாயிருத்தலால் இது மனிதராதுநன்மைக்காகவே செய்யப்பட்டதாயிருக்கின்றதெனவும், கூன்முதலியபிறவிப் பேதத்திற்குக்காரணம் இவையாயிருத்தலால் முற்பிறப்பின் கருமம் காரணமல்லவெனவுமறிக.

ருகூ. உ-வது. சிலர் ஐஸ்வரியவான்களாயிருக்கவும் சிலர்தரித்திரராயிருக்கவும் இவ்வாறுமனிதர்பேதப்பட்டிருக்கக்காரணம் முற்பிறப்பின்கருமமல்லாமல் வேறென்ன? என்கிறார். குயவன்செய்யும்பாண்டங்களெல்லாங் குடங்களாகவேயிருந்தால் கறிசமைத்தல்முதலியவையியலா. மனிதனுடைய கைவிரல்களெல்லாம் ஓரளவினவாயிருந்தால் கைத்தொழிலெல்லாம்செவ்வேநிகழா. மனிதனுக்கு உறுப்பெல்லாம்கண்ணேயாயிருந்தால் அவனுடையதொழிலெல்லாம் நிறைவேறா. இவைமுதலியவைபோலவே உலகி லெல்லாரும்செல்வராகவேனும் வறுமையுடையவராகவேனும்இருந்தால் உலகம்நடைபெறாது. அதுபற்றியேசர்வேசுரன் மனிதரை யுலகில் செல்வர்வறிஞராகவிட்டிருக்கின்றானெனவறிக.

கூ0. ந-வது. சிலர்அங்கபங்கமில்லாதவராயும், செல்வராயுமிருக்கும்போது வேறுசிலர்அங்கவீனராயும்வறியவராயுமிருக்க இவர்கள் கடவுளுக்குஎன்னதுரோகம்பண்ணினார்கள்? என்கிறார். இவர்கள் யாதொருதுரோகமுஞ் செய்தவரல்லரென்றுகொள்ளுதற்கு நியாயத்தை ருஅ-ருகூ-ம், இலக்கத்திலேதானே சிலர்கூனர்முதலியவராகவும் சிலர்தரித்திரர்முதலியவராகவும் பிறத்தற்குக் காரணங் காட்டியவிதத்தாற் சொல்லிக்காட்டியிருக்கின்றாம். ஆதலின் மீட்டுஞ்சொல்லிக்காட்டல் எமக்குஅவசரமென்றுதோன்றவில்லை, ஆயினும், பண்டிதர்கேட்டது போலவே இரண்டொருகேள்வி பண்டிதரிடத்திற்கேட்டு இதுவிஷயத்திற் பண்டிதர்கொண்டிருக்கு மயக்கத்தைத்தீர்ப்பாம்; மாயைமலத்தின் ஒருகூறு மனிதரின்தலைகளாயிருக்கும்போது மற்றொன்றுகால்களாயிருக்க இத்தக்கூறு சிவனுக்குஎன்னதுரோகஞ்செய்தது? மாயைமலத்திற்சிலகூறு பொன்னும்இரத்தினங்களுமாயிருக்கும்போது வேறுசிலகூறுமண்ணுங்கல்லுமாயிருக்க இவைஎன்னதுரோகம்பண்ணினவோ? மாயைமலத்திற்சிலகூறு சுவர்க்காதிகளாயிருக்கும்போது வேறுசிலகூறு நரகங்களாயிருக்க இவையென்னதுரோகஞ்செய்தனவோ? பண்டிதர் சொல்வாராக. இவையொருதுரோகமுஞ்செய்யவில்லை ஆன்மாக்களினிமித்தம் இவைகளைச் சிவன்இப்படிச்செய்தானெனின், உலகநன்மையினிமித்தமும் உலகநடைபெறுதல்நிமித்தமும் சர்வேசுரன் அவைகளை அப்படிப்படைத்தானென்க.

மிருகங்கள் ஆன்மாவுடையனவென்றுகொள்ளுதற்குப் பண்டிதர் கூறியஇந்தநியாயங்களும் இவ்வாறுபொருந்தாதனவாயிருத்தலால், யாம்கூறியவாறு மிருகங்கள்ஆன்மாஇல்லாது மனிதர்க்காகவேபடைக்கப்பட்டனவெனவும், அதனால்ஒருதரம்பிறந்தவன் மறுபடிபிறப்பதில்லையெனவும், அதுபற்றி ஆன்மாக்கள்பூமியின்கண்ணே சடத்தோடுபலவகைப்பிறவிகளில் உற்பத்தியாகிவருமென்பது பொய்மையெனவுமறிக.

சுக. கூ. பண்டிதர் ஆன்மாபலவுடம்புகொண்டு பலதரம்பிறப்பதில்லையென்பதற்குக் கிறிஸ்துவர்கள்காட்டும்பலநியாயங்களிற் சிலவற்றைச் சில ஓவ்வாநியாயங்களான்மறுக்கக்கருதி,

பூ-வது. முற்பிறப்பில் நமக்கு இன்னதுநிகழ்ந்ததுஎன்று நம்மில் ஒருவருக்கும்ஞாபகமில்லாதிருத்தலால் பலபிறப்புஉண்டென்றுகொள்ளுதல் முறைமையல்லவென்று கிறிஸ்துவர்கள்சொல்லுகிறதற்குஉத்தரவாகக், கனவிலுள்ளதைவிழித்திருக்கும்பொழுதிலும், விழித்திருக்கும்பொழுதில்உள்ளதைக்கனவிலும் காண்கிலேம். தோஷந்தலைக்கேறினகாலத்துள்ளநிலைமையைச் சுகமாயிருக்கும்போதும், சுகமாயிருக்கும்போதுள்ளநிலைமையைத் தோஷந்தலைக்கேறியிருக்கிறபோதும் அறியக்கூடாமை சாதாரணமாயிருக்கின்றன. பைத்தியகாரன் தன்னுடையநல்லநிலையின் அறிவையுணரான். நல்லநிலைதிரும்பவே பைத்தியநிலையிலுற்றதையறியான், ஒருபிறவியில்இவ்வாறுனல் முன்பிறப்பிலுற்றது இப்பிறப்பிலறியவருமா? வாராதெனக்கொள்கஎன்கிறார்.

சுஉ. பூ-வது. இந்தவிஷயங்களில் முன்ஸ்திதியையறியாதிருக்கிறதில் அவனுடையஆத்துமநன்மைக்கு யாதொருநஷ்டமும் வருகிறதில்லை. உ-வது. அவன்அந்தஸ்திதியைத் தானேஅறிந்துகொள்ளக்கூடாவிட்டாலும் அப்போதுஅறிந்திருந்தபிறராலேனும் அறிந்துகொள்ளக்கூடும். முற்பிறப்பிலுற்றதையோ எவர்களுந் தாங்களேயுமறியார்கள் பிறராலறிந்துகொள்ளவும் கூடாதவர்களாயிருக்கிறார்கள்; முற்பிறப்பிருக்குமாயின், தாங்கள்பிழைத்துப்போகத் தங்களுக்குமுற்பிறப்பில்நடந்ததை யறியவேண்டியவர்களாயுமிருக்கிறார்கள். ஆதலால் கடவுள் மனிதருக்குமுற்பிறப்பிலுற்றதை அறியுமறிவு கொடுக்கவேண்டியவராகவேயிருக்கிறார். அப்படி அவர்அவ்வறிவைக்கொடாவிட்டால் முற்பிறப்பு இருக்கக்கூடாது. முற்பிறப்பிலுற்றதாக வொன்றையும்நாம்அறிந்திலாமையால் முற்பிறப்புஇருந்ததில்லை. அதுஇல்லாமையால் பல பிறப்புஉண்டென்பது பொய்மையெனவறிக.

சுங. உ-வது. குற்றஞ்செய்த ஒருவனை அரசன் தண்டிப்பது அவன்மறுபடியும்அவ்வாறு குற்றஞ்செய்யாதிருத்தற்பொருட்டாதலால், கடவுள்ஒருவனைநரகிலிட்டு மீளப்பிறவியில்விடும்போது முதற்பிறவியிற்செய்த பாவகர்மங்களால்வந்ததண்டனையை யறியாதிருக்கச்செய்வது தர்மமன்றுஎன்று கிறிஸ்துவர்கள்சொல்லுகிறதற்குஉத்தரவாகக், கடவுள் தண்டனைக்காட்டிப் பயமுறுத்தி ஆன்மாக்களைப்பாவத்தினின்றுவிலக்குபவரல்லர்; தண்டனையாலாகும்பயத்தினுற் பாவஞ்செய்யாதொழிதலும் புண்ணியமன்று. கடவுளையறிந்து அன்புகசிந்து ஆனந்தக்கண்ணீர்சொரிய அவரடிச்செல்லுதலே புண்ணியமாவது. இது வேமுத்திதருவதென்றறிகஎன்கிறார்.

சுச. பண்டிதர் இவ்விதமாய்ச்சொன்னஉத்தரம் கிறிஸ்துவர்கள்சொல்லுகிறதை மறுத்தற்கேற்றவுத்தரம்அன்று. கிறிஸ்துவர்கள் நரகஆக்கினையைத்தப்பும்வழியைப்பற்றிப் பேசுகிறார்கள். பண்டிதர் அந்தவழிமுழுவதையும் விட்டுப்போட்டு மோட்சத்தையடையும்புண்ணியவழியைப்பற்றி உத்தரவுசொல்லுகிறார். அன்றியும், கடவுள் தண்

டனைகாட்டிப் பயமுறுத்தி ஆன்மாக்களைப்பாவத்தினின்றுவிலக்குபவரல்லர்" என்று ஆகமவிரோதங்கூறித்தப்பப்பார்க்கிறார். சைவாகமாதிகள்கூறியிருப்பதை இங்கேயிவர்மறைத்தால்மறையுமோ? ஆறுமுகநாவலரதுபாலபாடம் * ௩-ம் புத்தகம்-௯௨-௯௫-௯௭-ம் பக்கமுதலியவைகளிலேயும் "இப்படிவிரதத்தையிறக்காது நைட்டிகபிரமசாரியாயேயிருந்துகொண்டு பெண்களுடன்கூடுவோனாயின், தன்சரீரத்தின்வளர்ந்தஉரோமம் எத்தனையுண்டு அத்தனைவருஷமும் மிகக்கொடியரௌரவமுதலியநரகங்களிற் கிடந்தழுந்துவன். சுகசன்னி, நீரிழிவு, கயம், பெருவியாதிமுதலியநோய்களால்வருந்துவன். இவனுக்குப்பரிகாரம் ஒரு நூலினுமில்லை." "தன்மனைவிகொண்டுவந்தசீதனப்பொருளை அழித்தவனும் அளவில்லாதகாலம் நரகங்களிலேகிடந்தழுந்துவன். பிறவிதோறும் பிரமேகம்,கிரந்தி, பகந்தரம், அரையாப்பு, நீரடைப்பு, கிரகணி, அண்டவாயு, குன்மம், சூலை, பிளவை, க்ஷயம், மகாசுவாசம், ஈளை, மகோதாமுதலியஎண்ணில்லாதவியாதிகளினாலும்வறுமையினாலும் வருந்துவன்" "அதிதிகளுக்குக்கொடாதுஉண்கின்றவன்விஷத்தைஉண்கின்றான். இப்பாவிகளெல்லாரையும் இயமதூதர்கள் நரகத்தில்வீழ்த்தி இவர்களுடையநாக்குக்களிலே அக்கினியிற்காய்ச்சியஇருப்பாணிகளை அறைந்து, இவர்கள்பதைபதைத்துஅலறும்படி இவர்களுடையஉடம்புமுழுதினும் பஞ்சலோகங்களையும்உருக்கிவார்ப்பார்கள்" என்பவைமுதலியவைசொல்லப்பட்டிருக்கின்றன. சிவஞானசித்தியாரின் உ-ஞ்சூத்திரத்து கரு-ம் பாட்டுரை சிவன்தண்டித்தலும் பயங்காட்டற்கு. அதற்குந்தன்னருளேகாரணம் என்கின்றது. ஆதலால்பண்டிதர்சொல்லியது பொருந்தாதெனவும், பலபிறப்புஇருக்குமாயின் ஆன்மாமுற்பிறப்பிற்செய்த பாவகர்மங்களால்வந்ததண்டனையையறியாதிருக்கக் கடவுள்செய்வது தர்மமன்றெனவும், அதுபற்றிப் பலபிறப்புஉண்டென்பது பொய்மையெனவுமறிக.

௯௫. ௩-வது. "கறந்தபால்முலைப்புகா கடைந்தவெண்ணெய் மோர்புகா- உடைந்தசங்கினோசையு முயிர்களுமுடற்புகா-வடிந்தஓடைநீர்புகா வுதிர்ந்தபூமரம்புகா-இறந்துபோனமானுட ரினிப்பிறப்பதில்லையே" யென்றுசொன்னோர்சைவஞானியரோயல்லவா? ஆதலால் சைவர்கள்பலபிறப்புஉண்டென்பதுதகாதென்று கிறிஸ்துவர்கள்சொல்லுகிறதற்கு உத்தரமாகக், கறந்தபால் முன்உணவாகிப், பின்உதிரமாகமாறிப், பின்மாமிசமாகமாறி, அவ்வுடலழிந்தபின் அந்தமாமிசம்சாம்பலாகமாறிப், பின்எருவாகிப், பின்மரமாகிப், பின்பசுஉண்ண அதன்முலையிற் பாலாகும். ஆதலால்கறந்தபால் தன்பால்வடிவோடு திரும்பவும் உடனேமுலையிற்புகாதேயன்றி ஒருபோதும்பாலாகாதென்பதுகருத்தன்று. இறந்துபோனஆன்மா மீளவும்முன்இருந்தஅவ்வுடலில்இப்பிறப்பில் அந்தத்தாய்தந்தைக்கு மைந்தனாய்வருவதில்லையென்பதேஆசிரியர்கருத்து அதுபற்றியே இறந்துபோனஆன்மாஎன்னாமல், "இறந்துபோனமானிடர்" என்று ஆன்மாவையும் அதுஇருந்துசஞ்சரித்தஉடலையுங் கூட்டிக்கூறினரென்று கிரயப்பிரகரணத்திற்கூறுகின்றார். இங்கேஇந்தத்தந்தி

*௪-ம் புத்தகம்என் றிப்போதிதுவழங்கும்.

ரஞ்செல்லமாட்டாது. ஏனெனின், ௲-வது. "கறந்தபால்முலைப்புகா" என்றஒருஉவமைமாத்திரம் இங்கேசொல்லப்பட்டிருக்கவில்லை; ஆறுஉவமைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. "உடைந்த சங்கினோசையும்" "புகா" என்றதற்குஇவர்கூறியகருத்துப் பொருந்தாது. உ-வது. இறந்துபோனஆன்மா மீளவும்முன்னிருந்தஅவ்வுடலில் அப்பிறப்பில் அந்தத் தாய்தந்தைக்கு மைந்தனாய்வருவதில்லையென்பது யாவருமறிந்ததாயிருக்க, அதைப்பொருளாயெடுத்துக்கொண்டு அதற்கு ஆறுஉவமைகூற அவசரமில்லை. ௩-வது. "உயிர்களுமுடற்புகா" என்று பண்டிதர்கருத்திற்பாதியும் உவமையிற்கூறப்பட்டிருக்கின்றது. சவது. "இனிப்பிறப்பதில்லையே" யென்றது பின்ஒருகாலும் ஒருடலிலுங்கூடிப்பிறக்கிறதில்லையென்பதைச் செவ்வேயறிவிக்கின்றது. ரு-வது. இறந்துபோனஆன்மா இனிப்பிறப்பதில்லையேஎன்னுமல் "இறந்துபோன மானுடரினிப்பிறப்பதிலலையே" என்றது ஆன்மாவானதுதனியேபிறப்பதில்லையென்பதையும் மனிதரதுஆன்மாமாத்திரமே அழியாமலிருப்பது மற்றையவற்றின்உயிர்களெல்லாம் உடலழியும்போதேயழிந்துபோகின்றவை என்பதையுமுணர்த்துகின்றது. ஆதலால் இவ்வாறுஇதற்குப்பண்டிதருரைத்தவுரை பொருந்தாதிருத்தலாலும், இறந்தஆன்மா இனியொருகாலத்தும்பிறப்பதில்லையென்பதே இதற்குச்சரியானபொருளாயிருத்தலாலும், திருவள்ளுவரியற்றியஞானவெட்டியில் ௬௪௩-௬௪௪-௬௫க-ம் பாட்டுகள் "இருவினையுந்தனையுரைத்துஉலகத்தாசான் இரத்தவுடல்விழுந்தாவிபிரிந்தபின்பு-மறுசெனனமாகிவந்துடலெடுத்து வாழ்புவியில்வருவமென்று வகுத்துச்சொல்வார்-குருவறிந்துபுவியில்வந்துவயதுநூறு குறிப்பாகப் பிறந்திருந்தால்குழந்தையாமோ-அறிவதிதநற்பிறவிபிறப்பாரொன்று மதிதவெகுபொருள்களெல்லாம்பறிப்பாராண்டே. வித்திருந்தால்வினைவுமுண்டுமரந்தானுண்டு வேரற்றால்மரமதுவுந்துளிர்க்குமோசொல் - சத்தியமாமொழியவுந்தானுண்டேகேளீர் சாஸ்திரத்தைமெய்யெனவும்நம்பொணுது-செத்தசவமுயிரொடுங்கிநின்றபோது சிறுமதலையாய்ப்புவியிற்பிறப்பதேது-இத்தையினியறியாதஉலகத்தாசான் இறந்தவுடல்பிறக்குமென்றியம்புவானே" "தனக்கவஸ்தைவருகிறதையறியாமற்றான் சாஸ்திரங்கள்சொலிவயிறுதனைவளர்ப்பார்-கணக்காகவகுத்துமிவை பார்க்கும்போது கருத்திலுந்தான்மறுபிறவிகனவிற்காணேன்-எனக்குமுத்திதருவமென்றூரவருமாண்டார் எளிதானதீட்சைபெற்றுமிவருமாண்டார் உனக்கெனக்கென்றறிந்துவுரையுணர்ந்துகொள்வார் உவமையறிந்தவருரைத்துப்பறையென்றூரோ" என்றுகூறுதலாலும், எழுவகைத்தோற்றமென்னுநூலில் "நலந்திகழுந்தேவர்களு" மென்னும்பாட்டில் "குணத்தளவேயவர்குலங்கள்கூறலாமே" யென்றிருத்தலாலும் ஒருதரம்பிறந்தவன் மறுபடிபிறப்பதில்லையெனவும், அதுபற்றி ஆன்மாக்கள் பூமியின்கண்ணே சடத்தோடுபலவகைப்பிறவிகளிலுற்பத்தியாகிவருமென்னும் வேதாகமசாஸ்திராதிகள் மெய்க்கடவுளாற் கொடுக்கப்பட்டவையல்லவெனவும் அதனால், அவைகூறுங்கடவுளாகியசிவனு மெய்க்கடவுளல்லரெனவுமறிக.

௬௬. ௪0. பண்டிதர்: "மேலுமான்மா ஆதியுடைத்தெனில், மாசில்லாததிவ்யபரிபூரணபவித்திரராகியபதி ஆன்மாவைப்பாவகாரணமாகிய மலத்துடனேசிருஷ்டிக்குமோ? அப்படிச்சிருட்டித்ததன்று; தன்சாயலாகவே நிர்மலசகிதனுக ஆன்மாவைச்சிருட்டித்தார்; ஆதிதாய் தகப்பன்செய்தபாவத்தினுற் பாசம்இடையிலேயுண்டானதெனச்சொன்னுல், கடவுளதுசர்வஞானலக்ஷணத்திற் கிவ்வாறுசொல்லுதல்பொருந்துமா? பாவத்திலேவிழ்ந்துமடிவதாகியஆன்மாவை அவர்சிருட்டிப்பாரா? இஃதுயுத்திக்கிசையுமா? இசையாதெனக்கொள்க" என்கிறுர்.

௬௭. ௲-வது. நாமிந்தச்சைவமதத்துவதிமிரபாநுவின் ஏ-அ-கூ-ம் இலக்கங்களில் ஆன்மாவும்பாசமும் அநாதிநித்தியவஸ்துக்களல்லவென்று காட்டிவிட்டோமாதலின், ஆன்மாவோடுபாவமலமும் ஆதியுடையதேயாமெனவும், மாசில்லாததிவ்வியபரிபூரணபவித்திரராகிய சர்வேசுரன் ஆன்மாவைப் பாவகாரணமாகியமலத்துடன் சிருட்டித்ததில்லையெனவுமறிக.

௬அ. உ-வது. சருவேச்சுரன் சகலநன்மைச்சுரூபியாயுமிருத்தலால், நீதிதயையீகையாதிகளையுமுடையவராயிருக்கிறுர். அவருடைய நீதி தயை யீகைமுதலியவைகள் இவற்றிற்கேற்றஇலக்காக வேறுபொருளில்லாமல்இயங்கவியலாத இலக்ஷணங்களாகும். (இவற்றுள்நீதியானது துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனமாம்.) ஆதலால்இக்குணங்கள் தமக்கிலக்காகியபொருள்களைப் பெறவேண்டியவைகளாயிருக்தன. இவற்றினிமித்தமாகவே மனிதர்சிருட்டிக்கப்பட்டார்கள்; மனிதர்நிமித்தமாகச் சகலசராசரங்களுஞ்சிருட்டிக்கப்பட்டன. சம்மனசுகள் தேவநீதிக்கிலக்காகவும் மனிதர்க்குபயோகமாகவும் படைக்கப்பட்டன. இப்படிமனிதருஞ்சம்மனசுகளும் தேவநீதிக்கிலக்காகச்சிருட்டிக்கப்பட்டமையால் தேவவிதி விலக்குகளையும் அவற்றின்பலன்களையும்நினைக்கவும், ஆராய்ந்துணரவும், தனக்கிஷ்டமானதைச்செய்யத்துணியவுங்கூடிய மனம் புத்தி சித்தங்களையுடையஆன்மாமுதலியவைகளோடும் இவரைச்சிருட்டித்தார். * இவர்களையிவ்விதமாகச்சிருட்டித்தமையினுலேதான் பரலோகபுத்தியுமுடையஇவர்க்கு விதிவிலக்குமுதலியவற்றை வேதமாகத்தந்தார். சிவன்போல்பாசத்தின்வசப்பட்டுச் சுவதந்திரமில்லாதவர்க்கு அநியாயமாகக்கொடுக்கவில்லை. (இவற்றுல்இவரைப் புண்ணியஞ்செய்துநலமடையஎவினுரோயன்றிப் பாவஞ்செய்துதண்டனையடைய வேவினதில்லை.) ஆதலாற்பாவஞ்செய்தவனுக்குப்பாவகாரணம் அவனேயன்றிக் கடவுளல்லர். இப்படியிவர்கள் சருவேசுரனுடையநீதிமுதலியவற்றிற்கிலக்காகச்சிருட்டிக்கப்படவேண்டியவர்களாயிருந்து சிருட்டிக்கப்பட்டதனுலும், சர்வேசுரன் இவர்களை அறிவு சுவேச்சைமுதலியவற்றோடேயே சிருட்டித்ததனுலும் இவர்கள்இவ்விதமாகவே தம்மாற்சிருட்டிக்கப்படுவார்களென்றும் இவருட்சிலர்தவறுவார்களென்றும் அவர்தமது ஞானத்திலறிந்தபடியேயிவரைச்சிருட்டித்தலும் இவர்கள்தவறுதலும் நிகழ்தலாலும், இவர்கள்இன்னவாறுதவறுவார்களென்று கடவுள்தமது

* இந்தமனம்புத்தி சித்தங்கள் முறையே நினைவு புத்தி மனசு அல்லது சுவேச்சை யென்றுங் கூறப்படுமெனவறிக.

ஞானத்திற்கண்டதினிமித்தம் இவர்களைவேறுவிதமாகச்சிருட்டித்தாலும் அவரதுஞானம்தவறுகி அவர்மெய்க்கடவுளாகாராதலாலும், ஆதிதாய்தகப்பன்முதலியவர்கள்பாவஞ்செய்தபோதுதான் அகங்காரமுதலியபாவகாரணங்கள் உண்டாயினவென்றுசொல்வது கடவுளதுசர்வஞானலக்ஷணத்திற்குப் பொருந்துமெனவும், தன்இச்சையாற்பாவத்திலேவீழ்ந்துமடிவதாகிய ஆன்மாவையும் அவர்சிருட்டிக்கலாமெனவும், இதுயுத்திக்கிசையுமெனவும், இசையாதென்பது தவறெனவும், சிவன் அநாதியாயிருந்த ஆன்மாக்களுக்கிரங்கி, அவைகளெல்லாவற்றிற்கும்முத்தியளிக்க அநாதிகாலத்திலேயே கையிட்டுக்கொண்டாரென்பது முதலியவைகளே அத்தொழில் இதுவரையில்முடியாதிருத்தல் முதலியவற்றால் சிவன் சர்வஞானமுடையவரல்லரெனக்காட்டுமெனவுமறிக.

சுகூ. கக. பண்டிதர்பாசம்அநாதியதென்றதைத்தாபிக்கக்கருதி.

ஹ-வது. "ஒளிபொருந்தியதும் தனதுசுத்தநிலையிற்பொன்னேயாகிநிற்பதுமாகியசெம்பிலே களிம்புசேர்ந்துஅதன்சுத்தலக்ஷணத்தைக்கெடுத்துநிற்குமாறுபோலத், தன்னையநாதிநித்தியகாலந்தொட்டுச்சேர்ந்திருக்கு மாணவ கன்ம மலங்களா லான்மாவானது தனதுசுத்தஞானங்கெட்டு நீசத்துவபாவந்தொடருந்தன்மையுடையதாய்க் கிடக்கும். செம்புவேறு பொன்வேறன்று" என்கிறார்.

நாமிந்தச்சைவமகத்துவதிமிரமாநுவின் எ - அ - கூ - ம் இலக்கத்தில் ஆன்மாவும்பாசமும் அநாதிநித்தியவஸ்துக்களல்லவென்று காட்டிவிட்டோமாதலின், ஆன்மாவை அநாதிநித்தியகாலந்தொட்டு ஆணவகன்மமலங்கள்சேர்ந்திருந்ததுமில்லை, ஆன்மாவானது அநாதிகாலந்தொட்டுத் தனதுசுத்தஞானங்கெட்டு நீசத்துவபாவந் தொடருந்தன்மையதாய்க் கிடந்ததுமில்லையெனவறிக.

எ௦. உ-வது. ஆன்மாவினைப் பாச மநாதிநித்தியமாகப்பொருந்தியிருப்பதன்று, இடைக்காலத்திலேவந்துமேவியதென்றுசொல்வீராயின் ஆதியிற்சுத்தநிலைமையுடைத்தாயிருந்த ஆன்மாவைப், பின்னர்க்காலத் தசுத்தமடைதல்கூடுமோ? சுத்தவொளியாயிருப்பதனையிருள்வந்துசேருமா? ஒளியல்லாமையேயிருளாதலி னதனையிஃதுசேர்தல்கூடாமைபெற்றும். அதுபோலச் சுத்தமின்மையேஅசுத்தமாதலிற் சுத்தத்திலசுத்தந்தோன்றுதல் பொருந்தாதென்றறிக" என்கிறார்.

எக. ஹ-வது. இங்கேபண்டிதர்: "ஆதியிற் சுத்தநிலைமையுடைத்தாயிருந்தஆன்மாவை" என்றது, ஆதியிலேசிருட்டிக்கப்பட்டுப் பாவபுண்ணியமின்றிச் சுவேச்சையோடிருந்த ஆதிமனிதருடைய ஆன்மாவைக்குறிக்கின்றது. ஆதலாற்பண்டிதர் அநாதியிலேயே அறிவில்லாத ஆன்மாவினிடத்தே பின்னர்அறிவுவந்துகூடுமென்றுசொல்லுவது நாங்கள் ஆதியிலேபாவமில்லாத ஆன்மாவினிடத்தே பின்னர்ப்பாவம்வந்து கூடுமென்பதை முழுவதும் ஒத்ததேயன்றிவேறன்று ஆதலால் அவர் "ஆதியிற் சுத்தநிலைமையுடைத்தாயிருந்த ஆன்மாவைப் பின்னர்க்காலத் தசுத்தமடைதல்" கூடாதென்றது தவறெனவறிக. (இரண்டாம்வியாயத்துங் காண்க.)

௭௨. ௨-வது. சைவருடையசாஸ்திரமாகிய சிவஞானசித்தியாரின் ௨-ஞ் சூத்திரத்திலுள்ள "தூலமாமுருவினுக்குச் சூக்குமமுதலதற்கு, மூலமானதற்குமூல மோகினியதன்முதற்றான்" என்னும் ௱௦-ம் பாட்டு அசுத்தமாயைக்குச் சுத்தமாயை முதற்காரணமென்கின்றது. அல்லாமலும் இந்தப்பண்டிதரோ தமது சைவமகத்துவமென்னும் புத்தகத்தின் ௬௨-ம பக்கத்திற்காட்டிய "யானெனதெனுஞ்செருக்கை யிரித்தொளியாயெறிக்கு, ஞானதேசிகற்குத்தன்னை நதிர்கொடுத்திறைஞ்சாநின்ற, வானமாணுக்கற்கித்த வநுபவமறையலாகு, மேனையோர்க்கு ரைப்பினன்னோனிருள்புரை கிரயத்தெய்தும்" என்னும்பாட்டு: பாசநீக்கியொளியாயெறிக்குஞானதேசிகனும் பாவஞ்செய்து இருள்புரைநரகடைவானென்கின்றது. ஆதலால் சைவசாஸ்திரப்படியேயும் பாவ அசுத்தமில்லாதவரிடத்திினின்றும் பாவஅசுத்தமுண்டாமெனவறிக.

௭௩. ௩-வது. "அன்றியுஞ்சைவராற்கூறப்படுமாறு ஆன்மமலமிருவகைப்படும். அஃதுஆணவமுங்கன்மமுமாம். அவ்வாறேஆன்மாவில் ஆணவமலத்தால் யானெனதென்னு மாணவமுங் கன்மமலத்தாற் பாவபுண்ணியங்களும் வரும். ஆதிதாய்தந்தையர் கருமத்தாலாம் பாவத்திலன்றோசிக்கினர்? அவர்க் காணவமலமெவ்வாறு வந்தது? ஒன்றினின்று மற்றதுற்பத்தியாகுமா?" என்கிறார்.

அவர்கள் தாம் தெய்வம்போலாகிவிடவேண்டுமென்று கொண்ட துணிவுமுதலியவை ஆன்மசம்பந்தமாகிய பாவமென்றும், அவையின்றி விலக்கினமரத்தின் கனியையுண்டல் முதலிய சரீரசம்பந்தமாகியபாவம் நிகழாவென்றுமறிக.

௭௪. ௪-வது. மேலுங் கருமத்தினலாம் பாவமுஞ் சுத்தபாவம் அல்லது கற்பனுபாவமெனவும் அசுத்தபாவம் அல்லது தற்பாவமெனவும் இரண்டுவகைப்படும். சுத்தபாவம் அல்லது கற்பனுபாவமென்பது: செய்யப்படும் பாவமானது தன்னியல்பினுற் பாவமல்லாதிருப்பினுங் கற்பனையினு லத்தன்மைத்தாகும். ஒருகுழந்தை சோறுண்ணல்பாவமன்று. ஆயினுந் தந்தைதாயருண்ணவேண்டா மென்புழியுண்ணுங்காலஃது கற்பனையினுற் பாவமாகும் இல்லதையுள்ளதென்று கூறுதல்தற்பாவம். அஃது தன்னியல்பினுல் அசுத்தமானதாம். கற்பனையினு லவ்வாறுனதன்று. கற்பனுபாவமெத்துணைப்புரியினு மனதின்றூய்மைகெடாதே; இவற்றுட்கற்பனுபாவமொன்றினையேசெய்த ஆதாமேவாளிவர்களை யசுத்தபாவம்வந்து சருவியதெங்ஙனமோ?" என்கிறார்.

சைவருடையஉத்தரவேதத்தில் "பொய்மையும்வாய்மை யிடத்தபுரைதீர்ந்த நன்மைபயக்கு மெனின்" என்னுங்குறளும் இதனுரையுங் கூறுகிறபடிஇல்லதையுள்ளதென்றுகூறுதல்அசுத்தபாவமுமாகாது அற்பபாவமுமாகாது புண்ணியத்தைத்தருவதாகின்றது. ஆதலாற்பண்டிதர்சொல்லியது அவர்வேதத்திற்கேவிரோதமானதெனவும், பண்டிதர் தமதுசைவமகத்துவத்து ௬௫-ம் பக்கத்தில் "இறைவன்சொன்னவிதியறம்" "அவர்" "கற்பித்த" படிசெய்தல் "நமதுகடமை" யென்றபடி, தேவகற்பனைப்படி செய்தலேபுண்ணியமும் அதனைமீறுதலே மனத்தின் தூய்மைகெடுதற்குரிய அசுத்தபாவமுமா மெனவறிக.

எரு. ரு-வது. "அதுவுமல்லாமல் வித்திலிருந்து மரமுளைத்துவ ந்தாற்போலத் தந்தைதாயர துடலின்கூறேயாய சுக்கில சோணிதங்க ளினின்று அவற்றிற்கூக்கும ரூபமாய்க்கிடந்தவுடம்பு வளர்வதும் அவ் வாறுவளர்ந்தவுடம்பிற்குத் தந்தைதாயருடம்பே முதற்காரணமாய்சி ற்பதுமறிவோம். தந்தைதாயராத்மாக்களி லெத்துணைப்பிரமாணமே னு மைந்தரின்ஆத்மாவிற்புகுவதில்லை. ஒவ்வோருடம்பிலு மொவ்வோ ராத்மாவைக் கடவுள்பிரத்தியேகமாகப்புகுத்துவதல்லால் மற்றும்படி யல்லவே. அப்படியிருக்க ஆதாமேவாள்செய்தபாவம் மைந்தரையெ வ்வாறுபிடித்தது? ஒருஆன்மாபாவஞ்செய்தால் உலகத்திலுள்ள ஆன் மாவெல்லாவற்றையும் பாவம்வந்துமாட்டிக்கொண்டதா? ஆதலாலொ வ்வொருஆன்மாவுந் தன்னைப்பந்தித்தமலநிமித்தமே பாவத்திற்பயிலு வதென்றுணர்க" என்கிறார்.

ரு-வது. பண்டிதர்ஜென்மபாவமென்ப தின்னதென்றறியாதுபே சுகிறார். ஜென்மபாவமென்பதியாதெனின், சர்வேஸ்வரன் ஆதியில்மனி தனைப் பூமியிலுள்ளசகலஜீவசெந்துக்களுக்கும் மேலாகிய அந்தஸ்தோ டுசிருட்டித்து அவர்களுக்குவேண்டியஎல்லாவற்றையுநிறையத்தந்து ஒ ருமரத்தின்கனியைமாத்திரம் அவர்கள்தின்னுதிருக்கக் கற்பித்தார். அ ந்த ஆதிமனிதர்கள் சர்வேஸ்வரன்தங்களுக்குச்செய்த இந்தப்பெரியவு பகாரத்துக்காகவே அவர்சொன்னபடியெல்லாஞ்செய்து அவரைவண ங்கிவர அவர்க்குக்கடமையும் மீறினல்தண்டிக்கப்படநியாயமும் உண் டாயிருக்கச், சர்வேச்சுரன் : எம்முடையகற்பனைப்படி நடப்பீர்களா யின், உங்களுக்கு முங்கள்சந்ததியார்க்கும் மோக்ஷமுங் கொடுப்போம்; மீறியிக்கனியைத்தின்பீர்களாயின், நீங்களுமுங்கள்சந்ததியாரும் மோ க்ஷமிழந்து துன்பம், நோய், மரணமுதலியவற்றையு மடைவீர்களெ ன்றார். பிறகு அவர்களிவ்வுடன்படிக்கைமீறி நன்றிகெட்டவர்களாய்த் தேவன்விலக்கியமரத்தின் கனியைப்புஜித்தார்கள். அதனால் அவ ர்சந்ததிகளானஎல்லாமனிதரும் பிறக்கும்போதே மோக்ஷமிழந்தவர்க ளாயிருக்கிறார்கள். இப்படியிவர்கள்பிறக்கக் காரணமாயிருந்த (ஆதி தாய்தந்தையர்) பாவந்தான் செனமபாவ மென்பது. (சர்வேச்சுரன் அளவில்லாததயையுமுடையவராதலால் தாம்மனுஷாவதாரம்பண்ணி யேற்படுத்திய புதியவுடன்படிக்கையில் ஞானஸ்நானமார்க்கத்தால்மனி தரிழந்த மோக்ஷத்துக்கு மீளவும்அவரையுரியவராக்கினர். ஆதலால் செனமபாவமென்பது ஆன்மா தன்னைப்பந்தித்தமலநிமித்தம் பாவத்தி ற்பயில்வதன்றெனவறிக.

உ-வது. ஒருவனுடையபேறு செய்கைகளுடையபயன் அவன் சந்ததியுஞ்சுற்றமுங்கூட அடையுமென்பதைச், சைவருடைய உத்தர வேதத்து "எழுபிறப்புந் தீயவைதீண்டா பழிபிறங்காப், பண்புடைமக் கட்பெறின்" என்னுங்குறள்: "பழிக்கப்படாத நற்குணமுடையபுதல்வ ரைப் பெறுவானுயின்" "எழுதலைமுறை" "யிலும் துன்பங்களணுகா" என்பதனுலும், "கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றமுடுப்பதூஉ, மூண்ப தூஉமின்றிக்கெடும்" என்னுங்குறள் : "கொடுப்பதைக் குறித்துப் பொ

ருமைகொள்பவன் சுற்றமானது உடுக்கவாடையு முண்ணச்சோறுமில் லாமற் கெடும்" என்பதனாலும் பிறவற்றாலுமறிக.

எ௬. ௧உ. பண்டிதர்: சைவநூல் பாசம்அழியுமென்கிறதினாலே அது அநாதியதன்றென்றுவெளிப்படுகிற வுண்மையை மறைக்க,

ஜூ-வது. "அநாதியதிருளெனினும் ஒளிவரவிருளகலும். ஒன்றி ன்மைமற்றதாதலின். அதுபோல ஞானமின்மையே அஞ்ஞானமாவது; அஃதே மலப்புணர்வு; ஆதலா லஞ்ஞானமாகியமலப்புணர்வு அநாதிநித் தியமாயிருப்பினும் ஞானோதயமாகுங்காலத் தகன்றுவிடும்" என்கிறார்.

பண்டிதர்: இருளென்பது ஒளியில்லாமையும், அஞ்ஞானமென்ப து ஞானமில்லாமையுமாமென்றிங்கேகூறி அந்தஅஞ்ஞானமே மலப்பு ணர்வென்றுங் கூறுதலால், மலமென்பதொரு பொருளன்றென அவ ரேயொப்புக்கொண்டதாகி, அவர்அநாதிப்பிரகரணத்தில் "சிவப்பொரு ளும், அச்சிவப்பொருளினுணைக்குளடங்கித் தன்னையும் பதியையுமு ணரவல்லதாகியஆன்மாவும் அவ்வான்மஞானத்தைச் சிதைத்துநின்ற தாகியமலமும் தமக்கோர்நிமித்தகாரணமில்லாமல் நித்தியப்பொருள் களாய் அநாதிகாலத்திலேயேயுள்ளனவாம். இவற்றுண்மலம் ஆணவ ங் கன்ம மாயையெனு மூவியல்புடையது." என்றதைமறுத்துப் பொ ய்யாக்கி நாம்இந்நூலின் ௭-ம், அ-ம், ௬-ம் இலக்கத்திற் பாசம்அநாதியி லிருந்ததில்லை யென்றுகாட்டியநியாயத்திற் கநுகூலமாயிருக்கின்றதெ னவும், ஆதலால்அவர் "மலப்புணர்வு" என்றதும் அது அநாதியதாயினு ம் அழிதற்பாற்று" என்றதும் இருள்அங்கேயியங்குகின்றது, கரியவடிவி னதுஎன்பதுபோல மயக்கத்தாற்கூறியவை யாகின்றனவெனவுமறிக.

எஎ. உ-வது. பண்டிதர்: "அநாதியாயுள்ளதெது. அதுஅழிவில் லது, மலமநாதியாயுள்ளது; ஆதலான்மலமழிதற்பாலதன்று: அழிதற் பாலதெது, அது ஆதியுடையது; ஆன்மமலமழிதற்பாலது; ஆதலாலம் மலமாதியுடையது: என்பீராயின், அநாதியாயுள்ளதெது, அதுஅழிவில் லது; பரிசுத்தமநாதியாயுள்ளது; ஆதலாற்பரிசுத்தமழிவதன்று: ஆகவே, பாசமிடையிலேதோன்றற்பாலதன்று. ஆகவேபாசமநாதி நித்தியமாயு ள்ளது: நீவிர்கூறிய தர்க்கசாதனசாத்தியமே உமக்குஞ்செல்லாமையா லிவற்றுட்சாதனம்போலியாய்க் கிடந்ததென்றுணர்க" என்கிறார்.

ஆன்மாஆதியுடையதென்று நாங்கள்கூறுதலால், ஆன்மபரிசுத்த மும் அநாதியதன்றென்றே நாங்கள்கூறினதாதலாலும், அநாதியாயுள் ளபரிசுத்தம் தேவனிடத்துள்ளபரிசுத்தமேயன்றி வேறில்லையென்றே நாங்கள்சொல்லுதலாலும், இந்தப்பரிசுத்தம் அழிந்ததாகப் பண்டிதர் சொல்லவுமில்லை நியாயங்காட்டவுமில்லையாதலாலும், அவர்கூறியசா தனசாத்தியமாத்திரமே அவர்க்குஞ்செல்லாது. ஆதலால், அவர்சா தனமாத்திரமே போலியாய்க்கிடந்து, பாசம் அநாதியவல்லவென்று நிச் சயித்தலறிக.

எஅ. ௩-வது. பண்டிதர் "பரிசுத்தனாயிருந்த ஆன்மாவைப் பா சம்இடையிலேபிடித்த துண்மையாயின், முத்தியடைந்தும்பயன்யாது? அவ்விடத்திருந்து முத்தியநுபவிப்பது நிச்சயமா? அங்கேயும்பாசம்வ ந்துபிடியாதா சொல்லுவீராக.—அரசனகன்றுழி யவனாணையிற் கடப்

போரு மவனதுதிவ்வியசந்நிதானத்தி லவ்வாறுகடவார். அஃதேபோ
லப் பூமியிற்பாசமுறுங்குணமுடையதாகிய ஆன்மாவுங் கடவுளுடைய
மகாதிவ்வியசந்நிதானத்தில் அதிற்சிக்காதுஎன்பீராயின், ஆதிதாய்தந்
தையரைப் பாசத்திற்குட்படுத்தியபிசாசு கடவுள்சந்நிதியிலல்லவோம
லசகிதனானது? உன்சகோதரனெங்கே யென்றுகேட்ட கடவுளின்முகத்
துக்கெதிரேயல்லவோ காயீன் நான் அவனுக்கென்னகாவலாளென்றது?
ஆதலாற் கடவுள்சந்நிதானமகிமை அதனைவிலக்காதெனக.—பூமியிலே
மனுஷன்சுவாதீனனாயிருக்கின்றான், ஆதலாற் பாவஞ்செய்யுங்குண மு
டையன், மோக்ஷத்தில் அதுசெய்தற்கிடமுடையனல்ல னென்பீரா
யின், மோக்ஷத்தி லான்மாவிற்குச்சுவாதீனமில்லையென்று சொல்கின்
றீர்? அப்படியாயின் மோக்ஷலக்ஷணம்நன்றாயிருந்தது!! ஆண்டுக் கட
வுள் பலாத்காரமாகவா ஆன்மாக்களைச் சுத்தநிலையில் வைத்திருப்பர்?
அப்பெயர்ப்பட்டமுத்தி முத்தியாகுமா? சற்றேஆலோசித்துச் சொல்
வீராக.—பூமியிலிருக்குநாள் மனுஷனுக்குச் சோதனையின்காலம்.
மோக்ஷத்திலேசோதனைகிடையாது. ஆதலால் அவன்பாவத்தில்விழ
மாட்டா னென்பீராயின், சோதனைக்கிடங்கொடுப்பின் அவன் பாவத்
தில்வீழ்ந்துவிடுவன், ஆதலா லதற்கிடங்கொடாது மனுஷனைப் பத்தி
ரப்படுத்திவைக்கவேண்டுமென்று கடவுளுக்கு அவ்விடத்திலுண்டான
ஞானந் தானபேதத்தாற்பூமியில் மாறுபட்டதா? பூமியிலேயுமவ்வாறு
செய்துகொண்டால் அநேகான்மலாபமும் சர்வநன்மையுமாமே. இவ்
வாறுதந்திரோபாயத்தால் முத்தியில் வைத்துக்கொள்வது கடவுளுக்கு
த்தகாது. ஆன்மாவுக்குமஃதுமுத்தியாகாது. பாவஞ்செய்யுங்குணமு
ளதாங்காறு மான்மா ஆனந்தசகிதனாகாதே. ஓர்தந்தை தன்மைந்தனை
க்குறித் திவன்என்சொன்னெறியிலொழுகான், ஆதலால்நான் அவனுக்
கோர்போது மோர்நெறியும்விதிக்கின்றிலன்என்று லிவன்மைந்தனும
வன்றந்தையுமாவாரா? இவ்வுபாயந் தலைமேற்கொள்ளுங்கடவு ளாதி
காலத்திலேயேமனுஷனுக் கோர்கற்பனையுங்கொடாமல் விட்டுவிடலா
மே - நீவிர்சொல்வதைப்பார்த்தால் அநுபவஞானத்தினால் இந்தவுபாய
த்தைக் கடவுள்கைக்கொள்வதுபோலவும் ஆதிகாலத்தில் தன்கற்பனை
யைநரர்மீறிப்பாவஞ்செய்வரென்பது முன்னுணர்ந்திலர்போலவும் ஆ
கவே சர்வஞானமில்லாதவர்போலவுமாகின்றதே. இவ்வாறுவாதித்தல்
யுத்தியன்றெனவொழிக.—இரட்சகரின்பாதாரவிந்தத்தையடைந்து அ
வரது திவ்வியாநுக்கிரம்பெற்றஆன்மா பாசவியல் பற்றுப்போகின்றது.
ஆதலா லதுஒருபொழுதும்பாவஞ்செய்யக்கூடியதல்லவென்பீராயின்,
நீவிர்சொல்லும் பாசவியல்புஎன்ப தென்னோ? ஆதியிலே தனது சாய
லாகக் கடவுள்சிருஷ்டித்தபரிசுத்த ஆன்மாவுக்கும் இரட்சகரின்றிவ்வியா
நுக்கிரகத்தாற் பாசவியல்புமாறினஆன்மாவுக்கு மென்னபேதம்? இர
ட்சகராற் பின்னர்ப்புடமிட்டெடுக்கப்பட்டதூயநிலைமையை முன்னர்
த்தானேஆன்மாவுக்குக்கொடுக்கக் கடவுளாலாகாததென்ன? தன்னை
ச்சூழும்பரிசனமாய கெருபீனாதியரையெல்லாம் பாசவியல்புடனேதா
னா கடவுள்சிருஷ்டித்தனர்? இவர்களெல்லாங் கடவுளுடையதண்டசக்
திக்குப்பயந்துதானா அவரடிப்பட்டிருக்கின்றனர்? அப்படியாயின் அவ

ர்கள்புரியும்பூசனுவர்த்தனங்கள் கடவுளாலங்கீகரிக்கப்படத் தகுந்தன வேயாம! கடவுளதிகாரமுந் தண்டோபாயத்தால் ஸ்திரப்பட்டது!! முத்திலக்ஷணமுந் தெய்வச்சிறப்பும் நன்றாயிருக்கின்றன!!! மேலும் ஆன்மாவைப்பாசவியல்புடனே சிருட்டிக்கத்தக்ககடவுளும் பாசவியல்புடையரோயாம். கடவுளும் பின்னையோர்காலத்துப் பாவம்புரிபவருமோதெரியாதே. அப்படியாயின் எல்லாம்அடிதலைதடுமாறி, 'முத்தியுசிரயமாக மொழிநரகதுநல்விடாய்ப்-பத்திசெய்பன்பரெல்லாம் பாழ்நரகுறவாணத - மெத்திபவீடுதீயோர் மேவமற்றமலனுன - அத்தனும்பாவம்போற்றி ஞாதுதடுத்தற்பாலார்'—ஆஹா! கிஞ்சித்துவஅறிவுடையவனுங் கடவுளுக்குமுன் சூனியமுமானமனுஷனையுந் தேவதூதனையும்பிடிக்கவல்லதாகியபாசஞ் சர்வவல்லமை சர்வஞானஞ் சர்வவியாபகமுதலியபெற்ற மனோவாக்குக்கதீதமாகியகடவுளைப்பிடிக்குமென்று நீர்சொலது மகாஆச்சரியம். தேவனையாபாசம்பிடிக்குமென்று நினைக்கின்றீர்? தெய்வத்துக்கும்பாசத்துக்கும் மகாதூரம்மகாதூரமென்று சொல்விராயின், கிஞ்சித்சாமர்த்தியமுள்ளமனுஷனை அவனிலைமைக்கும் அறிவுக்குந்தகுந்த அற்பபாசம்பிடித்தது. பாசம் இடையிலே சூனியோபாதானமாய்த்தோன்றினதுதானே. ஒன்றுதோன்றவல்லதேல் இரண்டுதோன்றும், இரண்டுதோன்றவல்லதேல் இலட்சாதிலட்சந்தோன்றும்; சிறிதுதோன்றவல்லதேற்பெரிதுந்தோன்றும், சிறியபாசந்தோன்றிச் சிறியமனுஷனைப்பிடித்தவாறு பெரியபாசந்தோன்றிப் பெரியகடவுளைப்பிடித்தாலென்ன? ஒன்றற்குள்ளநியாயந்தானே மற்றதற்கும்வரும்.—கடவுள்பாவம்புரிதல் இயற்கைவிரோதம், பரிசுத்தம்பாவஞ்செய்யுமா? ஆதலா லவர்என்றும்பரிசுத்தராவரெனில், அஃதொப்புக்கொண்டனம்; இயற்கைவிரோதம் எஞ்ஞான்றும் எவருழியு மத்தன்மையுடையதே, இவ்வியற்கைவிரோதமேதலைக்கொண்டு நாஞ்சுத்தஆன்மாவிலும் பாவம்வராதென்றுசொல்கின்றனம். ஆதலாற்பாசமிடையிலேதோன்றினதல்லவென்பதை நிச்சயமாயுணர்ந்து, அஃது அநாதிநித்தியமென்று எந்தவேதம் சொல்லுகின்றதோ அதுவே கடவுளால் மனுஷருக் கருளப்பட்ட மெய்வேதமென்று கடைத்தேறுக" என்கிறூர்.

எகூ. மனிதர் தேவநீதிமுதலியவற்றிற்கிலக்காகப் படைக்கப்படவேண்டியவர்களா யிருந்தார்களென்று இந்நூலின் கூம் இலக்கத்திற்சொல்லியிருக்கிறோம். மனிதர்அதுகாரணமாய்ப் படைக்கப்பட்டமையால் அவர்களிவ்வுலகிலிருக்குமட்டுமே பாவபுண்ணியசோதனைக்குவிடப்படுகிறவர்களும், மரித்தபின் தமதுகிரியைக்குத்தக்க பலனையடைகிறவர்களுமாயிருக்கிறூர்கள். ஆதலால், பூமியிலுள்ளபோதுபாவநீங்கிப், புண்ணியங்களா லுலகம் பிசாசுமுதலியசத்துருக்களைச் செயித்து வெற்றியுடையவர்களாய்மரித்து மோக்ஷத்துக்குஅருகராகிறவர்களுக்கு அவரதுபெயரைக்கேட்பினுஞ் சத்துருக்க ளஞ்சியொளிக்கத்தக்கவல்லமை, நித்தியதூய்மை, நித்தியாநந்தமுதலிய அளவில்லாதமேலானவரங்களையும் பூலோகத்துள்ளவின்பங்களெல்லாந் துன்பங்களேயென் றுள்ளபடியேயறிதற்கேற்ற பேரின்பமோக்ஷத்தையும்அவர்கள் புண்ணியங்களுக்குவெகுமானமாகக் கடவுளருளுகிறூர். ஆதலால்மோக்ஷமடைந்

தவர்களுக்குப் பாவத்துக்குரிய இச்சையுண்டாவதுமில்லை, உண்டாக்கவல்லசத்துருவுமில்லை. ஆதலால், மோக்ஷமடைந்தவர்களுக்கு அங்கேசோதனையில்லையெனவும், அவர்கள்அதைநித்தியமாகவேயனுபவிப்பார்களெனவும், அங்கேயும்சுவாதீனராகவேஇருப்பார்களெனவும், பூமியிற்சோதனையில்விட்டிருந்தமையால் ஆதிமனிதர்க்கிவ்வெகுமான வரங்களில்லையெனவும் இவையேஇவ்விருதரத்தாருக்குமுள்ளபேதமெனவும், மனிதர்க்குப்பாவம் பூமியிலேஅவர்சோதனைக்குவைக்கப்பட்டிருந்தகாலத்தில்உண்டானதால் அவர்சோதனையினீங்கிமோக்ஷத்திற் புண்ணியபலனாகிய நித்தியாநந்தத்தைஅநுபவிக்கையிலு முண்டாகுமென்பதுமுதலியவை அறியாமையோடுங்கூடியதவறுகளாமெனவுமறிக.

அ0. கங. பண்டிதர்: சிவன் "சிருட்டிதிதிசங்காரதிரோபவாநுக்கிரகமெனு மைந்தொழிலுமுடையராய்ப் பிரமவிஷ்ணுருத்திரமகேசுரசதாசிவரொல்லாந்தானேயாய்நிற்"கிறார். "ஆன்மாஅவ்வாறுமுத்தியடைதற்குக் கடவுளின் றிவ்வியாநுக்கிரகசக்தியே விசேஷகாரணம்." "ஆன்மாவானது தன்னைப்பந்தித்தமலத்தின்காரியமாகிய வசேதனத்தினால் தனதுபிறவிகளிலியற்றிய பாவகர்மங்களைத்தீர்த்துமுத்தியளிப்பவன் பதியேயாம். நீதியுடையவர்பதியென்பதுமெய்யே. ஆயினும்··· அளவில்லாதவிரக்கமுமுடையரல்லவோ? கடவுளவ்வாறிரக்கமுடைமையால் நீதிபிசகுவாரா? அவரதுநீதி சற்றேனும்வசையற்றதல்லவோ என்பீராயின், இதனாலேநீதிக்குவழு வெவ்வாறுவரும்? நீதியுமிரக்கமுமொன்றற்கொன்றுவிரோதமானகுணங்களல்ல. அப்படிமாறுபாடான இரண்டுகுணங்களை யொருவனுடையவனாயிருத்தல்கூடாது. ஓர்காலத்தில்நீதியும் பின்னோர்காலத்திலிரக்கமுஞ்செறிந்து கடவுள்நிர்விகாரலக்ஷணங்குன்றுவர். அல்லாமல் ஏககாலத்திரண்டுமுடையராதல் கூடாது. கடவுளோஇரண்டு மேககாலத்திலுடையவர். ஆதலாலவையொன்றற்கொன்றுமாறுபட்டவையல்ல" என்கிறார்.

அக. ௸-வது. சுப்பிரமணியர் பிரமாவைச்சிறையிலிட்டுப் பிரமாவின்சிருட்டித்தொழிலைப்பலநாள் அவரேசெய்திருந்தபின், சிவன்சுப்பிரமணியரிடத்திற்போய் இதஞ்சொல்லிச்சிறைமீட்டு, அத்தொழிலைப்பிரமாவுக்குவிடுவித்ததாகக்கந்தபுராணஞ்சொல்லுகின்றது. சிவனைக்கொல்லுதற்காகத் தாருகாவனத்துருஷிகள்செய்தயாகத்திற் புலி, மான், பாம்புகள், பூதங்கள், முயலகன்முதலியவை பிறந்தனவென்றுங்கந்தபுராணஞ்சொல்கின்றது. தக்கனதுசேனையை அகோரவீரபத்திரரழிக்கும்போது பிரமாசிருட்டித்துவிடுவாரென்று அருணாசலபுராணஞ்சொல்லுகின்றது. சிவனேசிருட்டிக்குரியராயின் சுப்பிரமணியர்பலநாள்சிருட்டிசெய்திருத்தலும், சிவன்மீட்டும் அத்தொழிலைப்பிரமாவுக்குக்கொடுப்பித்தலும், பிரமாமுதலியவர்சிவனுக்கு விரோதமானவைகளைச்சிருட்டித்தலுஞ் சம்பவியா. ஆதலாற்சைவபுராணங்கள் முதலியவை சொல்லுகிறபடியேயும் சிருட்டிமுதலியவை சிவன்தொழிலல்லவென்று உகூம் இலக்கத்துக்கூறியிருக்கிறோம். ஆதலாற் சிவன்பஞ்சகர்த்தாக்களுந் தாமேயாய்நிற்கவில்லையெனவறிக.

அ௨. உ-வது. ஒன்றற்கொன்றுவிரோதமாகிய திதிக்கிருத்தியத்தோடு சங்காரக்கிருத்தியத்தையும், சிருட்டிக்கிருத்தியத்தோடு சங்காரக்கிருத்தியத்தையுங் கடவுளுடையவராயிருக்கிறார். அநேகபிராணிகள்திதிக்கப்படுகிற அல்லதுசிருட்டிக்கப்படுகிற அந்தக்காலத்திலேயே வேறநேகபிராணிகள்சங்கரிக்கப்படுகிறபடியால், கடவுள் ஒன்றற்கொன்றுவிரோதமாகிய இரண்டுகுணங்களை ஏககாலத்தில்வெவ்வேறுபொருளிடத்தி லுபயோகிக்கிறவராயிருக்கிறார். ஆனால்ஒரேபொருளை ஏககாலத்தில்திதிக்கவுஞ்சங்கரிக்கவுமாவது சிருட்டிக்கவுஞ்சங்கரிக்கவுமாவது * கூடாதாகையால்அவர்இவற்றுள்ஒருதொழிலையொருகாலத்திலும் மற்றதைப்பின்னொருகாலத்திலுமே செய்தல்வேண்டும். இப்படியவர்செய்துவருகிறதுபிரத்தியக்ஷமாயு மிருக்கிறது. இதனால்அவர் தமதுநிர்விகாரலக்ஷணங்குன்றினவராகவில்லை. ஆதலால்நீதியும்இரக்கமும் ஒன்றற்கொன்றுவிரோதமாகியகுணங்களாயிருப்பதினிமித்தம் இக்குணங்களையுடையகடவுள் இவற்றுளொன்றையொருகாலத்தும் மற்றதைப்பின்னொருகாலத்தும் ஒரேபொருளினிடத்துஒரேவிஷயத்திற்செயினும் அவரதுநிர்விகாரலக்ஷணங்குன்றாது. இதுபற்றியேகடவுள் ஆதிமனிதர் செய்தபாவத்திற்குத் தமதுநீதிகுன்றாமல் அவருக்காக்கினைவிதித்தும் பின்னருடனேதயைக்குரியவற்றைச்சொல்லிச், சொல்லியபடி மனிதனாகவவதரித்து மனிதர்பாவப்பழிக்குரியதண்டனையைத்தாமேயேற்றுச் சொல்லுதற்கரியகொடியவாதைக்குள்ளாகிமரித்தனர். கடவுளிப்படிச் செய்யாமல், தாம்இரக்கமுடைமையால் பாவிகள்செய்யும்பாவத்தைப் பொறுத்துக்கொண்டு அவருக்குமோக்ஷங்கொடுப்பாராயின், ௧-வது. மோக்ஷம்பாவத்துக்குத்தரும்வெகுமானப்பொருளாகும். உ-வது. புண்ணியவாளரதுபிரயாசம் வியர்த்தமாகும். ௩-வது. ஒருவருக்கும்புண்ணியத்திற்சந்தோஷமும் பாவத்தில்அச்சமும்உண்டாகா. ச-வது. தேவநீதியும்தேவஇரக்கமும் தாறுமாறாகும். ரு-வது. பாவத்தின்கனமும் மோக்ஷத்தினருமையும் அறியப்படா. சூ-வது. கடவுள்நிமித்தம்உயிரையுந்தருமன்பு மனிதர்க்குண்டாகாது. ஆதலாற்கடவுள் நீதிக்கிலக்கானவர்களிடத்தில் இரக்கத்துக்கிலக்கானவர்க்குச் செய்யவேண்டியதைச் செய்யலாகாது. சிவன் இச்செய்யத்தகாதவைகளைச்செய்கிறானென்று பண்டிதர்சொல்லுதலால் அவர்நீதியில்லாதவரா யிருக்கிறார். ஆதலாற்சிவன்கடவுளல்லனெனவறிக.

அ௩. கச. பண்டிதர். சேசுநாதனை இரக்கத்தால்மனுஷாவதாரம்பண்ணி ஞாநாசாரியராய்வந்தசருவேசுரனல்லனென்று காட்டல்வேண்டுமென்றுவிரும்பி,

௧-வது. "மரமறியாதார்க் கிலைபறித்துக்காட்டறகும். சற்குருலக்ஷணமறியாத சாந்துவிச்சர் ஆபிரிக்கராதியருக்கன்றே யேசுலக்ஷணஞ்சற்குருலக்ஷணமாவது! நீவிர்கூறுமாறு பாவஞ்சென்மபாவங்கன்மபாவமெனவிருவகைத்தாம். அவற்றுட்கன்மபாவந்தவிர்ந்தனனெனினும் மனுஷனாகிச்சென்மபாவத்திற்குட்பட்டவர் தானேபாவியாயினர்.

* கடவுள்தமக்கு விரோதமானவைகளைச் செய்யாரென்பது முன்னரேசொல்லியிருக்கிறோம்.

இவர்சற்குருவாவதெங்ஙனம்? தன்பாவந்தொலைப்பதற் கோர்சற்குருவ நிந்தனரா?—சென்மபாவத்தைத்தவிர்க்கும்பொருட்டாகவே சுவாமித னதவதாரத்தில் மனுடவித்தினல்தோற்றாது பரிசுத்தாவியினுற் கன் னிகாதேவியின்கருப்பத்திலுண்டாயினர். கன்னிகாபுத்திரனுகவே ஜெ ன்மபாவமவனைத்தொடர்ந்திலது, ஆகவே யிருவகைப்பாவமுமில்லாத பரிசுத்தராய்த் தானநுபவித்ததுன்பமனைத்தும் பிறர்பொருட்டாயனு பவித்தனரெனின், தந்தைதாயரதான்மாவி லோரணுப்பிரமாணமெ னினு மைந்தரதான்மாவிற்புகுவதில்லையென்பது முன்னமேயுணர்த்தி னேம். அவரினின்றுற்பத்தியாவ துடல்மாத்திரமே. ஆதலிற்சென்ம பாவ முடலின்சம்பந்தத்தினுலாதல்வேண்டும். இவ்வுடம்புசுக்கிலசோ ணிதமிரண்டுஞ்சேர்ந்தாவது. இவற்றுட்சுக்கிலத்திற்குப்பாவமில்லையெ ன்றுஞ் சோணிதத்திற்கேபாவமுரியதென்று மெவ்வாறுகொள்ளப்பட் டது? தானும்பாவஞ்செய்து தன்னேடிருந்தஆதாமையும்பாவஞ்செய் வித்து இருமடங்குபாவம்பூண்ட ஏவையின்சோணிதத்திற்கில்லாதபா வந் தானெருவனேபாவஞ்செய்துநின்ற ஆதாமின்சுக்கிலத்திற்கேறியது பேரதிசயமே. உடம்பின்சம்பந்தத்தாலாகியபாவம் ஆண்சம்பந்தமாயி னென் பெண்சம்பந்தமாயினென்? ஆதலால் யேசுசென்மபாவமுடை யரென்பதறிக.—சுக்கிலமின்றிச்சோணிதத்தானுஞ் சோணிதமின்றிச் சுக்கிலத்தானு முடம்புருப்பெறுது. ஆதலில் ஸ்திரிவயிற்றின்கண்ணு ள்ளசோணிதத்தா விரட்சகப்பெருமானது டலுருப்பெற்றதன்று. அற் புதமாயவதரித்துவளருமுடம்புக் கவள்வயிற்றேரிடனுகக்கொள்ளப்பட் டது. மனுஷனையீடேற்ற மனுடாவதாரமேதருந்ததெனக்கண்டு ஸ்தி ரீபுருடசம்பந்தமெட்டுணையுமில்லாது ஸ்திரிவயிற்றிலுண்டாகிவளர்ந்த து நம்பெருமானுடலென்பீராயின், உடற்சம்பந்தத்தாற்பாவமுளதா யின் உடலினெருகூற்றினுற்பாவமுளதென்றும் பின்னெருகூற்றிற்பாவ மிலதென்றுஞ்சொல்லுதல் பொருந்தாது. சோணிதசம்பந்தஞ்சிறிது மிலதென்றுசொல்லினுந் தாய்வயிற்றிலிருந்துதாயினிரத்தத்தாற்போஷி க்கப்பட்டஉடம்பு தாயுடம்பினின்றுவளர்ந்ததேயாம். அச்சம்பந்தமு மிலதெனச்சொல்லின், யேசுதாய்முலைப்பாலுண்டு வளர்ந்தவரோயாம்; அப்பால்அவளதுதிரமேயன்றிப் பிறிதன்று. ஆகவேயவள துடம்பின் சம்பந்தமிலதென்றுசொல்லுதல் பொருந்ாதென்றறிக" வென்கிறுர்.

௲-வது. இந்தநூலின் எ௫-ம் இலக்கத்தில் ஜன்மபாவம் இன்ன தென்றுவிளங்கக் காட்டியிருக்கிறேம். ஆதலால், அதுவிஷயத்திற் பண்டிதர்இங்கேகூறியவையெல்லாம் அறியாமையாற்கூறப்பட்டவைக ளேயாமெனவறிக.

உ-வது. ஆதிமனிதர் தங்கள்உடன்படிக்கையைமீறியதால் அவர் கள்சந்ததியாகியமனிதரெல்லாஞ் சென்மபாவமுடையவர்களாயிருக்க க்கொள்ளச், சேசுநாதரும்அவர்சந்ததியில்மனிதனுகப் பிறந்தபடியால் இவரும்சென்மபாவமுடையவராகாரோவெனின், ஆகார். ஏனெனின், அவர்கள் அந்தவுடன்படிக்கையைமீறுதலாலுண்டான சென்மபாவத் தினின்று அர்ச். மரியாயியையும் அவள்வித்தாயவதரிக்குந்தம்மையுஞ் சர்வேசுரன்விலக்கியிருந்தார். மேலும்இவர்கள்தாங்கள் ஆதாமின்சந்த

தியிற்பிறக்குமுன்னுமிருந்தவர்கள். இப்பொருள்களெல்லாம்மோசேயின் ஆ ஆகமம் ங-ம் அதிகாரத்து கரு-ம் வசனமுதலியவற்றில் "உனக்கும்இந்தஸ்திரீக்கும், உன்வித்துக்கும்இவள்வித்துக்கும் பகையையுண்டாக்குவோம். இவள்உன்தலையைநசுக்குவாள் நீயிவள்குதிகாலுக்காகப்பதிவிருப்பாய்என்றார்" என்பதுமுதலியவற்றிற் காணலாமெனவறிக.

ங-வது. சேசுநாதருடையதாயாருஞ் சென்மபாவமில்லாதவராதலால், பண்டிதர்சொல்லுகிறபடியேயும் சேசுநாதர்சென்மபாவமில்லாதவராயிருக்கிறார். ஆதலாற்சேசுநாதர் எவ்விதத்துஞ்சென்மபாவமில்லாதவரே. ஆதலாற்பண்டித ரவரைச்சென்மபாவமுடையவரென்றதும் அதனாற்சற்குருவல்லரென்றதும் அறியாமையெனவறிக.

அச. உ-வது. பண்டிதர்: கடவுள் சற்குருவாயவதரித்து வாதையநுபவித்தனரென்பது பொருந்துமா? தெய்வத்துவஞ் சர்வானந்தமுடையது. அஃது நித்தியமு மத்தன்மைத்து. நித்தியானந்தர் வாதையனுபவித்தல்கூடுமோ? வாதையடைந்தது மனுஷீகமாத்திரமேயெனின், பின்னைத்தெய்வீக மவதாரமெடுத்ததினு லாகியபயனென்றிலது. பயனில்லாச்செய்கை கடவுளுக்குரியதன்று. இப்படிப்பயனில்லாச்செய்கை யிஃதொன்றே? இன்னும்பல உமதுவேதத்தி லாங்காங்குக்கூறப்பட்டுக்கிடத்தல் காண்கின்றனம. உதாரணமாக, சீவவிருட்சமென்றொருமரத்தைக் கடவுள்ஏதேனென்னும்நந்தனவனத்திற்செய்துவைத்தனர். இதிற்புசிப்பவர் ஒருபொழுதுஞ்சாவடையாராதலிற் பாவஞ்செய்யுமுன்னும்ஆதாமேவா ளிதிற்புசித்திலரென்றேகொள்ளல்வேண்டும். பின்னும்புசித்திலர். பின்னை யிம்மரத்தைச்செய்துவைத்ததனு லாகியபிரயோசன மேதாவதுளதா? யெகோவாபயனில்செய்கையொன்றே? பயனில்சொல்லுமுடையார். ஆதாமைநோக்கி இக்கனியைப்புசித்தால் நீசாவாயென்றனர். சாவெத்தன்மைத்தென் றுதாமுணர்ந்தனரு? செத்தழிந்தமாந்தரைக்கண்டறிந்தஅநுபவமில்லாதான் சாவினியல்புணரவல்லனல்லன், ஆகவே நீசாவாயென்ற சொல்பயனில்சொல்லாம் இயல்புணராத தண்டனையையேற்றியது மகியாயமே. புண்ணியம்புரிந்தோர் துறக்கம்புகுவரென்றும் பாவம்பயின்றோர் பாழ்நரகக்குழிப்படுவரென்றும் உமதுவேதாகமஞ்சொல்வது பயனில்சொல்லாவென்பீராயின், அங்ஙனமன்று, துறக்கமாகியபேரானந்தமிஃது நரகமாகியகொடுவாதையிஃதென்று நாமுணர்தற்குச் செகத்தநுபவமாகியசிற்றானந்தமனோவாதைகள் சாதனமாகையால் அநுபவவறிவில்லாவிடினும்யுக்தியாற்கிரகிக்கலாம். செத்தாணைக்காணுதார் சாவையவ்வாறுகிரகித்தற்பாலரல்லரெனவுணர்க.—தெய்வீகம்பாடுபட்டிலதெனினும்அதன்சம்பந்தத்தினல் மனுஷீகம்மகத்துவ மடைந்ததெனின், சம்பந்தமென்றுநீவிர்கூறியதென்னே? சுகதுக்கத்துக்கில்லாதசம்பந்தம்யாதெனவறிகிலம்.—உடனிகழ்ச்சியெனின், சர்வவியாபககடவு ளெல்லாமனுஷருடனுங்கூடவேயிருக்கின்றனர். அவரிருந் துடனிகழாதமனுஷர்யாருமிலர். தெய்வானுக்கிரகம் வரப்பிரசாதமிவைகளெனின், அஃதவர் தனதவதாரமின்றி யோர்தொண்டனுக்களித்தல்கூடும், அடியார்மகத்துவ மிவ்வளவென்றறைதலெளிதன்று, சிவனதடியாரை யவரது மகத்துவத்தால்

நாஞ் சிவனெனவேபார்க்கின்றோம். ஆதலாலீண்டுநீவிர்கூறியஅவதார
த்தாற் பயனிலதென்றுணர்க.—அஃதன்றி யோருடலுக்கீரான்மாவா
குமா? கிறிஸ்துவினுடலுளிருந்தஆன்மாப் பசிதாகமுதலியதுக்கங்களை
யுடையதாகையா லஃதுமனுடஆன்மாவே, பின்னைத்தெய்வீக மாண்
டெங்கேகிடந்தது? அவர்முழுதுமனுஷனேயெனக்கொள்க. மேலுந்
தெய்வீகந் துன்பமநுபவியாது. மனுஷீகமாத்திரமே துன்பத்தையநு
பவித்ததென்றீர். மனுஷீகந்தெய்வத்தையொப்ப அநந்தமகத்துவமு
டையதன்று. எவ்வளவென்றுவரையறுத்துச்சொல்லல் எளிதன்றாயி
னும் அந்தப்பட்டதேயாம். அந்தப்பட்டஆன்மா அந்தப்பட்டமுப்ப
த்துமூன்றுவருஷத்துக்குள் அநுபவித்துத்தீர்த்தவாதைகளும் அந்தப்
பட்டனவே. இவ்வாறந்தப்பட்டதுன்பம் நீவிர்சொல்லுமாறு அநந்த
காலம்நரகத்திலிருந்து ஒருதனியான்மாஅநுபவிக்கப்போகிறதுயரத்திற்
கீடாகாதே. அப்படியாயின், அளவில்லாதகோடாகோடியான்மாக்களு
டைய நரகதண்டத்துக்கு எவ்வாறீடாகும்? ஆகவே யிதினாலும்நீவிர்
சொல்லியசற்குருஅவதாரம் வீணவதாரமாயினமைகாண்க.—ஆயிரம்
ரூபாகடன்பட்டானொருவன் அக்கடனிறுக்குஞ்சக்தியில்லாமையைக்
கண்டு கடன்கொடுத்தபுண்ணியவான் அநுதாபங்கொண்டு நீநூறுரூ
பாதரினுன்கடனை யான்தள்ளிவிடுகிறேனெனவிண்டாற், கடனாளி யத
னைச்சந்தோஷமா யங்கீகரிப்பதைவிட்டு என்கடன் நீபொறுத்துவிட்
டாற்போலத்தீருமாவென் றாக்ஷேபித்தறகுமா? அதுபோலக் கடவு
ணம்பாவத்தைப்பொறுத்துக்கொள்வதற் கோர்சங்கேதமேற்படுத்தினா
லதுநமக்குப்போதாதாவெனின், அதுமெய்யே, அப்படிச்சொல்லுகில்
ஈண்டுநீவிர்கூறியநீதியைச் சமரசப்படுத்தாதேயன்றோ இரக்கநிறைந்த
கடவுள் நமதுபாவத்தைப்பொறுத்துக்கொள்ளுகின்றார். வாங்கியநூ
றுரூபாவும்போக வெஞ்சியதொள்ளாயிரமும் இரக்கத்தினாலல்லவோ
விடப்பட்டன. நூறுரூபாவாங்கிக்கொண்டு விட்டமகத்துவத்தைப்
பார்க்கத் தன்பாலிரந்துநின்று நித்திய முன்புண்ணியத்தையேபெரிதா
கக்கொள்வன். கடனிறுக்குஞ்சக்திசிறிதுமில்லேன். என்கடனைப்பொ
றுத்திரக்ஷியென்பானை யொன்றும்வாங்காமல் விட்டுவிடுவதல்லவோ
பெருமகத்துவம்! ஆதலா லிஃதேகிறிஸ்துசமயமகத்துவமென்றுசொன்
னதையொழித்து இஃதேசைவமகத்துவமெனச்சொல்லுக. அப்படி
யாயின்சங்கேதம்யாவுமில்லாது தன்பால்வந்துதன்னையிரந்துகேளாமலி
ருப்பினும் பொறுத்துவிடுவதன்றோமிகப்பெரியது? அப்படியேபரமசி
வனானவர்பாவகர்மத்திற் சிக்கிய வான்மாவனைத்தையு மொருங்கேபொ
றுத்து ஒருமுறையிலேதானே சருவான்மாக்களுக்குமுத்திகொடுத்து
விடுதல் கூடாதாவெனின், அங்ஙனஞ்செய்தல்கூடாது, முதலாவது
அப்படிப்பொறுத்திரட்சிக்கப்பட்டஆன்மாத் தன்னையுங்கடவுளையுமறி
யாது. ஆகவேமுத்தியானந்த மடையவல்லதன்று. இரண்டாவது
அதுகடவுள்சித்தம்; அப்படியல்லவிப்படியென்றுசொல்லவல்லவர் யா
மல்லேம். மூன்றாவது, காரணமுள்ளளவுங் காரியமுளதேயாம். கர்
மமுள்ளளவும் அதின்காரியமாகியபிறவியும் பாவத்தின்காரியமாகியநரக
மு முளவேயாம், கடவு ளான்மாக்களைப்பிறவியிலும்நரகத்திலும்புகு

த்தல் கர்மபாவங்களின்பயனுமெனக்கொள்க. அதுவுமல்லாமல், பாவி களையிரட்சிக்க நீதியிடங்கொடாதென்றுசொல்வது பொருந்தாது. ஏ னெனிற் கடவுள் பாவிகளையிரங்கிப்பொறுத்துக்கொள்ளும்போது அப் பாவத்தினலிடர்ப்பட்டபிறிதொருகட்சியாதாவது நஷ்டமடைந்திருப் பினல்லவோ அந்தநஷ்டத்திற்குப்பதிலளியாது பாவிகளைப்பொறுத்தல் அநீதியாகும். ஈண்டவ்வாறாயதோர்பிறிதுகட்சி யில்லாமையறிக. அ ல்லாமலும் நீதியாவதென்ன, பழிவாங்குதலா? அல்லவே! அரசனுன வனை மன்னித்தானொருவனைப் பொறுத்துக்கொள்ளுதல் அநீதி யென்று சொல்வாருளரா? ஒருவன் வேறொருவனுக்குக்குற்றஞ்செய்தா லக்குற்றம்மற்றவன் அரசனிடமுறையிட, இவன்கூறுமுறைப்பாடுகே ளாது குற்றவாளியைப்பொறுப்பதன்றோ அநீதியென்னப்படுவது? தன க்குப்பிழைசெய்தவனைத் தான்வேறுகாரணங்கருதாதுதண்டிப்பது நீதி யல்லவே, அஃதுபழிவாங்குதலாம்; கடவுளவ்வாறுபழிவாங்குங்குண முடையரல்லர். பிதாக்கள்செய்தஅநியாயத்தைப் பிள்ளைகளிடத்தில் நாலுமூன்றுதலைமுறைபரியந்தம் பழிவாங்குவேனென்று சபதவார்த் தைசொல்லியிருப்பவர் கடவுளல்லரென்றுதேறுக என்கிறார்.

அடு. ஜ-வது. சைவருடையஉத்தரவேதமும் "அன்பிலாரெ ல்லாந் தமக்குரியரன்புடையா ரென்புமுரியர் பிறர்க்கு" என்கிறபடி யே அன்புடையவர் தம்முடம்பாலும் பிறர்க்குரியவராயிருப்பர். கட வுள் அளவில்லாதஅன்புடையராயிருத்தலால் அவர்அளவிடப்படாதவி தமாய்த் தம்முறுப்பாலும் பிறர்க்குரியராயிருத்தல்வேண்டும். மேலும் கடவுள்பரதுக்கதுக்கனென்னுங்காரணப்பெய ருடையராயுமிருக்கிறார். ஆதலாற் கடவுள்நித்தியாநந்தராயினும் பிறர்நிமித்தந்துக்கமுடைமை அவர்க்குஇன்றியமையாதகுணமாம். ஆறுமுகநாவலர்செய்தசைவவி னவிடை யிரண்டாம்புத்தகத்தின் கசுச-ம் இலக்கத்தில் "உருத்திரா க்ஷமாவது---தேவர்கள் திரிபுரத்தசுரர்களாலே தங்களுக்குநிகழ்ந்தது ன்பத்தை விண்ணப்பஞ்செய்துகொண்டபொழுது திருக்கைலாசபதி யுடைய மூன்றுதிருக்கண்களினின்றுபொழிந்த நீரிற்றோன்றியமணி யாம்" என்றுசொல்லப்பட்டிருத்தலாற்சிவனுந் தேவர்கள்துன்பத்துக் கழுதிருக்கிறாரென்று சைவரும்ஒப்புக்கொள்ளவேண்டியவர்களாயிருக் கிறார்கள். சருவேசுரன்மாத்திரமே மெய்யானகடவுளாயிருக்கிறதினல் இவர்மாத்திரமே எல்லாமனிதரிரக்ஷணியத்துக்காகவுந் தாம்மனுஷாவ தாரஞ்செய்து கடினபாடுபட்டுமரித்துத் தம்முடம்பாலும்பிறர்க்குரிய வராயினர். ஆதலால் இதுமேலானபெரும்பயனுள்ளசெய்கையேயன் றிச் சிவன்மண்சுமந்துபிரம்படிப்பட்டதுபோலவும், அருச்சுனனதுகை வில்லடிபட்டதுபோலவும், விஷ்ணுஉரலிற்கட்டுண் டடிபட்டதுபோல வும், பயனிலாச்செய்கையன்றெனவும், கடவுள்சற்குருவாயவதரித்து வாதையனுபவித்தனரென்பது பொருந்துமெனவுமறிக.

அகூ. உ-வது. ஒருமனிதன் இதுஎன்னுடையசரீரம்என்னும் போது அப்படிச்சொன்னவன்யார்? அவனுடையஆன்மாவென்னலா மோ? கூடாது. ஏனெனின், அவனேஎன்னுடையஆன்மாவென்றுஞ் சொல்லுகிறான். இப்படியொருவன்சொல்லுதலாற் சரீரத்தையும் ஆன்

மாவையுமுடையபொருளொன்று அவனிடத்திலிருக்கிறதென்றுதோன்றுகிறதல்லோ? ஆம். அந்தப்பொருள்தான்ஆள் (Person) என்றுசொல்லப்படுகிறது. அந்தஆள் ஆன்மாவிலேயேயுள்ள ஓர்தற்கிழமைப்பொருள். அப்படிஆத்துமாவையுஞ்சரீரத்தையுமுடையஆள்தான் கொற்றன் சாத்தன்என்று ஒருபெயரிட்டுவழங்கப்படுகிறவன். இப்படியொவ்வொருமனிதரிடத்திலும்ஒவ்வொருஆள்உண்டு; ஆனாற்சருவேசுரனிடத்திலேமூன்றாட்களுண்டு. அவருள்இரண்டாமாளாகிய சுதனாகியசருவேசுவரன்தான் மனுஷாவதாரம்பண்ணிச் சேசுநாதரானார். அவர் அர்ச். கன்னிமரியாயின் திருவுதிரத்தினாலேயுண்டாக்கியமனுஷசரீரத்தையும், புதிதாய்ப்படைத்து அதிற்புகுத்தப்பட்ட ஓரான்மாவையுமுடைமையால் அவர்மெய்யானமனிதனாகவுமிருக்கிறார். ஆயினும்அந்த ஆன்மாவில்ஆளாகஇருக்கிறவர் இந்தத்தேவஆள்ஒருவரேயன்றிவேறில்லை. ஆதலால்சேசுநாதர் தாம்இயல்பாயுடையதேவசுபாவமும் அவதாரத்திற்கொண்டமனுஷசுபாவமுமாகிய இரண்டுசுபாவத்தையுடையவராயிருந்தாலும் இரண்டுஆன்மாக்களையாவதுஇரண்டுஆட்களையாவதுஉடையவராயிருக்கவில்லை. ஆதலால் அவர்மனிதரிரக்ஷணியத்துக்காக மனிதசுபாவத்திலே பாடுகள்முதலியவைகளையனுபவித்தாலும் தேவஆளே அவைகளையநுபவித்தமையால் தேவனேபாடுபட்டார் தேவனேமரித்தார். ஆதலால்இதுமேலான பெரும்பயனுள்ள செய்கையேயன்றிப் பயனிலாச்செய்கையன்றெனவும்,ஆதலாற்பண்டிதர்பின்னைத்தெய்வீக மவதாரமெடுத்ததினாற் பயனொன்றிலதுஎன்றதும், இதுபயனிலாச்செய்கையென்றதும், சுகதுக்கத்துக்கில்லாதசம்பந்தம் யாதெனவறிகிலம்என்றதும், ஒருடலுக்கிரான்மாவாகுமாவென்றதும், கிறிஸ்துவினுடலுளிருந்தஆன்மா பசிதாகமுதலியதுக்கங்களையுடையதாகையா லஃதுமனுஆன்மாவே பின்னைத்தெய்வீக மாண்டெங்கேகிடந்தது? அவர்முழுதுமனுஷனேயெனக்கொள்க என்றதுமுதலியவைகளும்அறியாமையெனவுமறிக.

௮௭. ௩-வது. * ஜீவவிருக்ஷமானது ௧-வது. சருவேசுரன் அதின்கனியை ஆதிமனிதனுண்ணக் கொடுத்தற்கும், அதனால் அவர் அவனிடத்துக்காட்டினமேலான அன்பினை நாங்களறிதற்கும்உபயோகமாயிற்று. ௨-வது. சேசுநாதர்மரணமடைந்ததிருச்சிலுவை அதன்கனியில்முளைத்தமரத்தினாற்செய்யப்பட்டதாதலின் இக்காரியத்துக்குபயோகமாயிற்று. ௩-வது. சேசுநாதருக்கு உபமானப்பொருளாயிற்று. சருவேசுரனிதைப்படைத்ததில் இத்தனைப்பிரயோசன முண்டாயிருத்தலால் இதுவும் மேலானபயனுள்ளசெய்கையேயன்றிப் பயனில்செய்கையன்றெனவறிக.

---

*இப்படிப்பட்டதுதக்ககேள்வியன்று: ஏனெனின், கடவுள்ஜீவவிருக்ஷத்தையும் நன்மைதீமையறிகிற விருக்ஷத்தையும்வைத்து இவற்றுள் ஒன்றைத்தெரிந்துகொள் என்றதில், ஆதிமனிதர் ஜீவவிருக்ஷத்தையே தெரிந்துகொண்டிருந்தாலும் நன்மைதீமையறிகிறவிருக்ஷம் வேறுபயனில்லாததேயாகும்; கடவுள்ஒரோவிருக்ஷத்தைப்படைத்து இதன்கனியைத் தின்னவேண்டா மென்று சொல்லி, இவரிதைத்தின்னாதிருந்தாலும் இதுவும் வேறு பயனில்லாததேயாகும். ஆதலால்இதைத்தின்னாதே யென்று காட்டற்குபயோகமானதே அதன் பயனாமென்று அறியவேண்டியிருத்தலினெனவறிக.

அஅ. ௪-வது. சருவேசுவரன் ஆதிமனிதனுக்குப் பேசவும் பேச்சறியவும் வரந்தந்திருந்தார், அவனுக்கு அவைகளைச் சாடைகாட்டிக் கற்பித்ததில்லை. ஆதலால் அவன் சாவு இப்படிப்பட்டதென்றறியச் செத்தபொருளைக்கண்டிருத்தல் ஆவசியகமாயிருந்ததில்லை. ஆயினும் அவன் புல், பூண்டு, பறவை, ஊர்வனமுதலியவற்றி லிறந்தசிலவற்றைக் கண்டிருந்ததனாலுஞ் சாவிப்படிப்பட்டதென்றறிந்திருந்தானெனவறிக. அல்லாமலும் சைவர்களுடையவேதாகமங்களானவை புண்ணியஞ்செய்தோர் தேவலோகமடைவர், பாவஞ்செய்தோர்நரகமடைவரென்று சொல்வது பயனில்சொல்லாகாதென்றுகாட்டநினைந்து, பண்டிதர் தேவலோகமாகியபேரானந்தமிஃது நரகமாகிய கொடுவாதை யிஃதென்று நாமுணர்தற்குச் செகத்தனுபவமாகியசிற்றானந்தமனோவாதைகள் சாதனமாகையால் அநுபவவறிவில்லாவிடினும் யுக்தியாற்கிரகிக்கலாம்என்று கூறியது: (பல பிறவிச்செல்வர் மனோவாதையையும், பலபரமதரித்திரர் சிற்றானந்தத்தையுமறியார்களாதலால் அந்தப்) பிறவிச்செல்வருக்கு மனோவாதையையுண்டாக்குதற்குரியவைகளையும், பரமதரித்திரர்க்குச் சிற்றானந்தத்தை யுண்டாக்குதற்குரியவைகளையும் முன்னர்க்காட்டிப், பின்னரோநரகமோட்சமென்றசொல்லைக் கூறத்தகுமென்றுசொன்னதாகின்றது. ஆதலால், அப்படிச்சருவேசுரன் ஆதிமனிதனுக்குஇறந்தபுல் பூடுமுதலியவைகளையும், பறவைகிருமிமுலியவற்றையும்முன்னர்க்காட்டிச் சாவின்பொருளுணர்வூட்டினபின்னரோ நீயிக்கனியைப்புசிக்கிறநாளிலே சாவாயென்றுசொன்னுரென்றே பண்டிதர்வைத்துக்கொள்ளட்டுமே. எப்படிப்பார்த்தாலும் இதுபயனுள்ளசொல்லாகவேயிருத்தலாற் பயனில்சொல்லன்றெனவறிக.

அகூ. அப்படியாயின், பயனிலாச்செய்கையும் பயனிலாச்சொல்லும் எப்படிப்பட்டவைகளோவெனின்: சிவன் அநாதியில்எல்லாஆன்மாக்களும்படுந்துன்பத்துக்கிரங்கி அவைகளுக்கெல்லாமுத்தியளிக்கச் சிருட்டிமுதலியதொழிலைத்தொடங்கினாராம். இத்தொழில் அக்கருத்தைமுடித்து அப்பயனைத்தராமையால் இதுபயனிலாச்செய்கை.—அன்றியும், பண்டிதர் அவரதுசைவமகத்துவத்தின் அஉ-ம் பக்கத்தில் சிவனேவிஷ்ணுவாயுமிருக்கிறாரென்று சொல்லுகிறதுமன்றி, கூ-ம், எ-ம் பக்கங்களில் சிவன்விஷ்ணுவென்னுமிருவரு மொருவரேயென்று இரண்டுமேற்கோட்பாட்டும்காட்டியிருக்கிறார். ஆதலால், விஷ்ணுசிவனேயாம். விஷ்ணுராமாவதாரம்பண்ணினது இராவணனைக்கொல்லுதற்காம். ஸ்ரீராமர் இராவணனை அவன்சிவனது வரத்தாற்பெற்றஆயுள்முடிந்தபின் கொன்றார். அவன்சிவனதுவரத்தாற்பெற்ற ஆயுட்காலம் முடிந்தபின் அவனைக்கொல்ல ஒரொறும்புதானும்வேண்டுவதில்லையே; பிணியேபோதுமே. ஆதலால்இந்தஅவதாரமும் சிவனது பயனிலாச்செய்கையே. அப்படியன்று, இராவணன் தன்னுயுள்முடியுமுன்கொல்லப்பட்டானெனின், சிவன் அவனுக்குஆயுள்வரங்கொடுத்தது பயனில்சொல்லாம். அல்லாமலும், இராமர் விபீஷணனுக்கு இலங்கையைஎப்போதும்சிரஞ்சீவியாயிருந் தாளச்சொல்லிவரங்கொடுத்தார். அவ்விலங்கையை இப்போதுநம்முடைய விக்டோரியாசக்கரவர்த்தினியம்மா ளாள்கின்றமை

யாற், சிவன்சொல் பயனில்சொல்லாம். இப்படிச்சிவன்பயனில்செய்கையும் பயனில்சொல்லுமுடையவராயிருக்கப், பண்டிதர் அவர்செய்கையையுஞ் சொல்லையுமறைத்ததும் சருவேசுரனுடையபெரும்பயனுள்ள செய்கையையுஞ் சொல்லையும் பயனில்செய்கையும்பயனில்மொழியுமென்றதுங் கபடமாமெனவறிக.

கூ0. ரு-வது. சர்வேசுவரன் தமதுஅன்பினால்மனிதரை இரட்சிக்கவந்தபோதும் மனிதர்செய்தபாவத்துக்குரியதண்டனையைத் தாமனுபவித்துத்தீர்த்து, அவர்கள்தங்கள்பாவத்தாலிழந்த மோக்ஷத்தை மீளவுமடைதற்கானவழிகளை யுண்டுபண்ணினதினால் அவர்நீதிகுன்றினதில்லையல்லவோ? அப்படியே யெப்போது மவர்புதியவேற்பாட்டின்படி அவரவர் தகுதிக்கேற்றவிதமாகப்பாவங்களைமன்னிக்கிறார்: முழுப்பாவமுமன்னிக்கப்படுவதற் கேற்றவிசுவாசமும் நற்கிரியையுங்கொண்டவர்க்கு முழுப்பாவத்தையுமன்னிக்கிறார். அற்பபாவத்துக்குக்கூட உத்தரிக்குமுலகத்தில்விட்டு அதற்கேற்றபடிமனிதரைத்தண்டிக்கிறார். ஆதலால், அவர்எப்பொழுதும் நீதியைச்சமரசப்படுத்துகிறாரெனவும், ஆதலாற்பண்டிதர்காட்டிய ஆயிரம்ரூபா நூறுரூபாக்கடனுவமை எங்கள்வேதத்துக்குரியதன்றெனவும், கடனிறுக்குஞ்சக்தி சிறிதுமில்லேன் என்கடனைப் பொறுத்திரக்ஷி" என்றுமன்றாடலும் பாவப்பொறுத்தலடைதற்குரிய புண்ணியக்கிரியைதானாதலால் அப்படிப்பட்ட மன்றாட்டுக்குஞ் சருவேசுரன்மனிதர்பாவத்தைமன்னிக்கிறார் (அர்ச். மத். கஅ: உரு-உஎ.) எனவும், கடவுள்ஒருவரிடத்தில் பாவபரிகாரத்துக்குரிய நற்கிரியைமுதலியவையில்லாமலே அவரதுபாவத்தைமன்னித்தால், அதுகாம்இந்நூலின் அஉம் இலக்கத்திற்காட்டியபடி நீதியின்மைமுதலிய பலகெடுதிக்குக் காரணமாயிருக்குமெனவும், பண்டிதர்: "கடவுளான்மாக்களைப்பிறவியிலும் நரகத்திலும்புகுத்தல் கர்மபாவங்களின்பயனுமெனக்கொள்க" என்றிங்கேகூறியதும் வேறிடத்திற் சிவனேஆன்மாக்களின் பாவத்துக்கு அவைகளைக்காலங்குறித்து நரகத்துப்புகுத்துகிறாரென்றதுமுதலியவைகளும், ஒருவனதுபாவம் அவன்அதன்பரிகரிப்புக்குரியநற்கிரியைமுதலியவற்றைச்செய்யுமுன் மன்னிக்கப் படுவதன்றென்னுங்கருத்தையே தருகின்றதெனவும், சிவன்தம்மையவமதித்த தக்கனையும், தேவர்களையும், தாருகாவனத்துருஷிகளையும் *சங்கத்தாரையுங் கொடுமையாய்ப்பழிவாங்கினதை ஸ்காந்தமுதலியசைவபுராணமுதலியவைகள் பிரசித்தமாகக்காட்டும்போது, பண்டிதர் சருவேசுரன் தாம்கண்டிப்பானநீதியை யுடையவரென்றுகாட்டுதற்குப் பிரயோகித்த பழிவாங்கலென்னுஞ்சொல்லால் அவர்மேற்குறைசுமத்தவிரும்பிக், கடவுள் தனக்குப்பிழைசெய்தவனைத்தண்டித்தல்நீதியல்ல, பழிவாங்கு

---

* ஆதிகாலத்தில் பூமியிலேபாண்டிநாட்டில்மதுரைமாநகரத்திருந்தசங்கப்புலவர்கள் நம்மையவமதிப்புச்செய்ததின்பொருட்டு அவர்கள்கர்வபங்கமாகும்படி நாம்பிரமவிஷ்ணுசரஸ்வதிகளைத் திருவள்ளுவர்இடைக்காடர் ஔவையாக அவதரிக்கும்படிசெய்தனமென்று சிவனேபார்வதிக்குச்சொல்லினாரென்று திருவள்ளுவர்சரித்திரங்கூறுகின்றது. இது சிவன்பழிவாங்குங்குணமுடையரென்று காட்டவில்லையோ?

தலாம். பழிவாங்குபவர்கடவுளல்லரென்றுகூறித், தாம்கடவுளென்று பேசுஞ்சிவனையுந் தாமேகடவுளல்லரென்றுகாட்டியது அறியாமையெனவுமறிக.

௯௧. ௯-வது. ஆன்மாக்களை அநாதியிலேயே பந்தித்திருந்தமலமானது அவைகளினறிவைக்கெடுத்துவிட்டதுமல்லாமல் அவற்றிற்குக் கன்மத்தில்விருப்பமுங்கொடுத்ததாம். அதனால் ஆன்மாக்களிடத்துள்ளதுன்பத்துக்கிரங்கிச் சிவன்அவைகளுக்குமலத்தைநீக்கிச் சிவானந்தப்பெருவாழ்வாகியமோக்ஷத்தையருளும்படி அப்போதுசித்தமாகிச், சிலஆன்மாக்களுக்கு மலத்தாலுண்டானவிருப்பத்தை யனுபவிக்கும்படிக்கே, மலத்தினுலேயே, உடம்பும் அந்தக்கரணமும் உலகமும் போகமும் சிருட்டித்துக்கொடுத்துத், திரோதாயியினுல் மும்மலங்களையுந் தொழிற்படுத்தித், தாமுந்திரோபவனுய் ஆன்மாக்களையிருவினைப்பயன்களாகிய போக்கியப்பொருளில்அமிழ்த்திவிட்டு, இதனுல்ஆன்மாக்கள் செய்யும்பாவகன்மத்துக்குத் தாமேகாலங்குறித்து நரகத்திலவைகளைப் புகுத்திவாதிக்கிறுராம். அந்தஆன்மாக்கள்என்னசெய்யும்? தாமோ ஆணவமலத்தால் இயல்பாகவே அஞ்ஞானமுங்கருமத்தில்விருப்பமுமுடையவை. அதுகண்டுசிவனிரங்கித்தந்த தனுகரணபுவனபோகங்களும் மாயாமலங்கள். சிவன்இவைகளைத்தந்ததும் ஆணவமலத்தால்உண்டாக்கப்பட்டவிருப்பத்தையனுபவித்தற்கு. திரோதாயியென்னுஞ்சிவசத்தியோ மும்மலங்களையுந் தொழிற்படுத்துகின்றது. சிவனே போக்கியப் பொருளில்அமிழ்த்துகிறுர். சிவன்பாவகன்மஞ்செய்யவிட்டால் ஆன்மாக்கள்பாவத்தைத்தான்செய்யும், சிவன்புண்ணியகன்மஞ்செய்யவிட்டால் ஆன்மாபுண்ணியத்தைத்தான்செய்யும். தங்களுக்குவேறுவழியில்லாமையாற் சிவன்செயற்படி ஆன்மாக்கள்பாவஞ்செய்ய, அதற்காக அவைகளைச்சிவன் நரகத்திற்புகுத்திவாதித்தல் இரக்கச்செய்கையா? கொடுமையும்அநீதமுமேயன்றி இரக்கமல்லவாதலால், சிவன்ஆன்மாக்களுடையஇந்தத்துன்பத்துக்குத் தாமேகாரணமென்று உடனேஇரங்கி அவைகளின்மலங்களைநீக்கி அவைகளுக்கறிவுண்டாக்கி மோக்ஷந்தருதல் அவர்கடமையாம். சிவன்அப்படிச்செய்யாமைக்குக்காரணம், ஆன்மாக்களெல்லாம்உடனேதங்களையும்சிவனையுமறியவும் பாவகாரணமாகியமலங்களைநீங்கவும் முத்தியானந்தமடையவுஞ்செய்யச் சிவனுக்கு வல்லமைமுதலியவையில்லாமையேயன்றிப் பண்டிதர்சொல்லும்இக்காரணங்களல்லவெனவும், ஆதலாற்பண்டிதர்: "அங்ஙனஞ்செய்தல்கூடாது, மூதலாவது, அப்படிப்பொறுத்திரக்ஷிக்கப்பட்டஆன்மாத் தன்னையுங்கடவுளையுமறியாது. ஆகவேமுத்தியானந்தமடையவல்லதன்று" என்றது சிவனுக்குவல்லமையில்லாமையை மறைக்கக்கருதியுரைத்த வீண்போக்கெனவுமறிக.

௯௨. ௧௰. பண்டிதர் கிறிஸ்துவேதமானது மரித்தமனிதரெல்லாருங் கடையுகாளில் அவரவர் ஆத்துமசரீரத்தோடே யுயிர்த்தெழுவார்களென்பதையும், அவருட்புண்ணியவாளர் அந்தஆத்துமசரீரத்தோடுமோக்ஷத்துக்கெழுந்தருளி அங்கேபேரானந்தத்தை நித்தியமாயிருந்தனுபவிப்பாரென்பதையும் மறுக்கநினைந்து,

ரு-வது. "பஞ்சபூதகாரியமாகியதேகமில்லா தான்மாச்சுகதுக்கங்களையநுபவியாது. ஆதலி லவைநுகர்தற்பொருட் டித்தேகம்வேண்டுமென்பீராயின், நீவிர்சொல்லியதனுண்மை யாண்டுப்பெறப்பட்டது? பஞ்சப்புலனுமடங்கிச் செத்ததோர்பிணம்போலித்தேகமானதுகிடப்ப ஆன்மாவானது கனவின்கண்ணே சகலவித வின்பதுன்பங்களையுமநுபவித்தல்காண்கின்றேம். அஃதன்றிச் சடப்பொருளாகியதேகமில்லாத உமதுகெருபினுதியர்முத்தியின்பமநுபவித்தலும் பாவஞ்செய்துபிசாசுத்தன்மைபூண்டசித்துப்பொருள்கள் நரகவாதையநுபவித்தலுமுளதென்று நீவிர்சொல்வதென்ன! ஆதலாற்பூததேக மான்மாவினதுஇன்பதுன்பங்களுக்கு இன்றியமையாதஅவசியமன்றென்பதுணர்க" என்கிறுர்.

நாங்கள் பஞ்சபூதகாரியமாகியதேகமில்லாமல் ஆன்மாவானதுசுகதுக்கங்களையநுபவியாதுஎன்கிறதும், ஆதலால்அவைகளை அநுபவித்தற்பொருட்டு இந்தத்தேகம்மோக்ஷத்தில்வேண்டுமென்கிறது மில்லையென வறிக.

கூரு. உ-வது. பண்டிதர் கடவுள்பயனில்செய்கை செய்பவரல்லரென்பது முன்னமேகூறினோம். ஆதலால்தேகமிருப்புழி யஃது பயனுளதாதல்வேண்டும். கண்ணிருப்பி னஃதுகாணல்வேண்டும். நாவுருசித்தல்வேண்டும், மெய்பரிசித்தல்வேண்டும், மூக்குமோத்தல்வேண்டுமெனவே கண்செல்லுந்திசையிலில்லாதனபொருள்கள்யாவும் ஆன்மாவிற்குத் தெரியாதிருத்தல்வேண்டும். ஆன்மாவினுனந்தத்திற்குக்காரணம் ஞானமே. எத்திசையினுமுள்ளபொருள்களை யொருங்குகாணும்ஞானசுதந்தரனுகிய வான்மாவைக் கண்செல்லுமோர்வழிப்பொருளைமாத்திரங்காணவைத்தல் அதன்ஞானவியல்பைக்குறைத்தலாம்; ஆதலாற்பேரறிவுடையதாகாது. ஆகாதபோதே பேரானந்தமடையாதெனக்கொள்க. இப்படியேமற்றைநான்குபுலனுமிருத்த லான்ம அறிவைக்குறைத்துஆனந்தத்தைக்கெடுத்தலாம். மேலும்பூததேகம்பளுவுடையது. ஆதலா லந்தரத்திற்செல்லாது. ஆகவே யான்மாச்சிறைப்பட்டுக்கிடக்கும். இஃதுமுத்தியிலுள்ளபேரானந்தத்தைக் கெடுப்பதாமென்றுணர்க" என்கிறுர்.

கூச. ரு-வது. மோக்ஷவாசிகளுடையகண்கள் சேசுநாதர்முதலியவர்களைக்கண்டுகளிக்கும், நாக்குஅவரைத்துதித்துப்பாடிக்களிக்கும், சரீரம்அவருடையதிருவடிகளைவருடிச்சிரமேற்சூடி யாநந்தக்கூத்தாடும் மூக்கு அவர்திருவடிகளில்வானோர்பெய்யும் வானுலகமலர்முதலியவற்றின்பரிமளத்தைமோந்துகளிக்கும், செவிகள் அவரைவானோர்துதிப்பதையும் இசைக்குந்தேவகானங்கள்முதலியவைகளையுங் கேட்டுக்களிக்கும்.—உ-வது. சரீரத்தோடுபூமியிலிருந்தவர்களிலும் தேவகிருபையால்தீர்க்கதரிசனவரமடைந்தவர்கள் நெடுந்தூரத்தில் நடந்தகாரியங்களையும் நடந்துகொண்டிருந்தகாரியங்களையுங் கண்டுஞ்சொன்னுர்களாதலால் மோக்ஷத்தில்மேலானவரங்கள்பெற்றுச் சருவேசுரனைத்தரிசித்திருப்பவர்கள் எவ்விடத்திலுள்ளதையுங் காண்பார்கள்.—ந-வது. பூததேகம்பளுவுடையதாயினும் கடவுளதுசெயலால் அத்தேகத்தையுடையபறவைகள் அந்தரத்திற்செல்லுகின்றன. சைவருடையபுராணங்களும்

சிவனேறியமாடும், சுந்தரமூர்த்தியேறியவெள்ளையானையும், சேரமான்பெருமாணாயனாரேறியகுதிரையும் அந்தரத்திலெழுந்தனவென்கின்றன. ஆதலால்தேகமானது முத்தியிலுள்ளபேரானந்தத்தைக்கெடுப்பது மன்றெனவுங், ஆதலாற்கடவுள்மனிதனையுயிர்ப்பித்தல் பயனில்செய்கையன்றெனவும், முன்னே ௮௯-ம் இலக்கத்திலே நாம்காட்டியவாறு சிவன்செய்கையுஞ்சொல்லுமே பயனில்செய்கையுஞ் சொல்லுமாமெனவுமறிக.

௯௫. ௩-வது. பண்டிதர்: "ஓர்தேகத்திலேயிருந்துசெய்த பாவபுண்ணியங்களின்பலனை அத்தேகத்திலிருந்தேஆன்மாஅனுபவிப்பதுதகுதி; ஆதலால்நடுத்தீர்ப்புநாளிற் சகலசீவாத்மாக்களுமுயிர்த்தெழுந்திருக்குமென்று நமதுசத்தியவேதஞ்சொல்லுகின்றது. அச்சரீரம்இவ்விடத்துள்ளசரீரம்போல இழிவுள்ளசரீரமன்று. அழியாதமகத்வசரீரமென்பீராயின், தேகத்திலிருந்துசெய்த பாவபுண்ணியங்களின்பலனை அத்தேகத்திலிருந்தே ஆன்மா அனுபவித்தல்வேண்டுமெனிற் பூமியிலேயிருந்துசெய்தபாவபுண்ணியத்தின்பலனைப் பூமியிலிருந்தன்றோ அநுபவித்தல்வேண்டும். முத்தியும்நரகமும்பின்னையேனுளவோ? பூமியிலு மவ்வவ்விடங்களிலிருந்து செய்தனவற்றின்பலனை யவ்வவ்விடங்களிலிருந்தேயனுபவித்தல்வேண்டும் ஒவ்வோரிடத்திற்செய்தபாவபுண்ணியப்பலனெவ்வோர்காலத்தநுபவித்தாலன்றோ அஃதுகூடும். செய்தவனனுபவிப்பதே தகுதி. இடத்திலுமொருசம்பந்தமுண்டா? அவ்விடத்துள்ளசரீர மிழிவுள்ளசரீரமன்று மகத்வசரீரமென்றீர். அதன்பயனென்னோ? ஈண்டுக்குருடுமுடமுமாயிருந்தோ ராண்டுப்பூரணசரீரம்பெறின் அவர்பெற்றது தாமிருந்துபாவபுண்ணியமியற்றியசரீரமல்லவே. பின்னை முன்னர்ச்சரீரமேகொள்ளல்வேண்டுமென்பதற் கெட்டுணையேனுமோர்காரணங்காண்கிலேம். அழியாதமகத்வமுடையதேதவிர விண்டுள்ளகுறைவுமுதலிய அங்குமுளதாகிற் குருடுஞ்செவிடுமாயிருந்து கடவுளின்றிவ்வியாநுக்கிரகம்பெற்று முத்திபெற்றோரடைந்தமுத்தி யென்னமுத்தி. இவ்வாறுசொல்வதறிவாகுமா?" என்கிறார்.

௯௬. ௧-வது. மனிதன்செய்த புண்ணியபாவங்களின் பலனாகியமோக்ஷானந்தத்தையும் நரகவாதையையும் மனிதனடைவதேதகுதியாம். மனிதனென்பது ஆத்துமமுஞ்சரீரமும்பொருந்தியபொருளாதலால், மனிதன்செய்தபுண்ணியபலனை அவனான்மாமாத்திரமனுபவித்தல் மனிதனனுபவித்தல்ஆகாது, ஆதலாற், புண்ணியஞ்செய்தமனிதன் மோக்ஷானந்தமனுபவித்தற்கு, அவனுடலினின்றும்பிரிந்தஆன்மாவானது அவ்வுடலைக்கூடுதல் ஆவசியகமாமெனவறிக.—௨-வது. புண்ணியவாளர் குருடர், முடவர், செவிடர்முதலியஅங்கவீனர்களா யுயிர்த்தெழுவதில்லையெனவறிக.

௯௭. ௪-வது. பண்டிதர்: "ஒருவனுடலமப்பொழுதப்பொழுதுமாறி எண்பதுபிராயத்தில் ஒருவனுக்குப்பத்துப்பன்னிரண்டு சரீரமாகுமே. இதில் எந்தச்சரீரமவனோடெழுந்திருப்பது. குழந்தையுடம்பா? விருத்தாப்பியஉடம்பா? வாலிபஉடம்பா? அல்லது எல்லாமா? எல்லாம்பெறுதல்கூடாது. ஒன்றாயின் மற்றதிலிருந்துசெய்தபாவபுண்

ணியப்பல னனுபவிப்பதெங்ஙன்? ஆதலாலுடம்புபெற்றும் பெற்றநோக்கம் நிறைவேறாது பயனில்செய்கையாகுமே" என்கிறார்.

கூஅ. உயிர்த்தெழுபவர்கள் முப்பத்துமூன்றுவயதுக்குரியசரீரத்தோடெழுந்திருப்பார்களென்று சாஸ்திரிகள்சொல்லுகிறார்கள். மருந்துமுதலியவைகளின்சக்தியால் நாற்பதுவயசுள்ளவன் முப்பதுவயசுக்குரியதேகத்தையும், ஐந்துவயசுப்பிள்ளை ஏழுவயசுக்குரியதேகத்தையுமடைகிறதையும், அதனாலவர்க்குநன்மையுஞ்சந்தோஷமுமேயன்றி முன்னிலைமையிலுங்கேடுந்துக்கமும் உண்டாகாமையையும், பிரத்தியக்ஷமாகக்காண்கின்றோமல்லோ! அப்படியே, உயிர்த்தெழும்மனிதர் இந்தவயசுக்குரியதேகத்தையுடையவராயிருத்தலில் அவருக்கின்பமன்றித் துன்பத்துக்குரியமாற்றஞ்சிறிதுமிராதெனவும், ௬௩-ம் வயசுக்குரியவுடம்போடுயிர்ப்பவர் வேறுவயசுக்குரியபாவபுண்ணியப்பலனையநுபவித்தல்: ௨௦-ம் வயதிற்குற்றஞ்செய்தவன் அதன்பலனாகியதண்டனையை அரசனால ௨௧-ம் வயசில் அநுபவித்தலும், ௫௦-ம் வயதுமட்டும்யோக்கியதையுடனுத்தியோகஞ்செய்தவன் ௭௦-ம் வயதிலும் அதற்குவெகுமானசம்பளம்பெற்றுமகிழ்தலும்போலவெனவும், ஆதலால் உடம்பைப்பெற்றநோக்கம் நிறைவேறுமெனவும், ஆதலால் இதுபயனில்செய்கையன்றெனவுமறிக.

கூகூ. ரு-வது. பண்டிதர்: இவ்வுலகத்திலொருவனுடல் புல் பூண்டு விருக்ஷ மிருகமாதியவற்றிற்கலப்பது மிவைமீளப் பிறமனுஷருடையஉடம்பிற்புகுதலுமாக ஒருகூறிருவருடம்பிற்குப் பொதுவாதல் காண்கின்றனம். அக்கூறு நடுத்தீர்ப்புநாளில் யாருக்குரியது. அதையிருவருடம்பிலும்பொருத்தல் கடவுளாலுங்கூடாதே. ஆகவே சகல ஜீவாத்மாக்களுந் திரும்பமுன்பெற்றதேகம்அடைதல்கூடாதகாரியமாயஃதுளதெனச்சொல்லுஞ்சத்தியவேத மசத்தியமாகின்றதே. ஈண்டுரைத்தனவற்றால் உடல்திரும்பஎழும்புதல் முதலாவதுதகுதியின்மையும் இரண்டாவதுஅவசியமில்லாமையும் மூன்றாவதுகூடாமையும் நாலாவதுமுத்தியைக்கெடுப்பதுமென்றுணர்க" என்கிறார்.

௧௦௦. ரு-வது. ஒருவனுடல், முன்னேபுல்பூடுவிருக்ஷம்மிருகமுதலியவற்றிற்கலக்கவும், பின்னர்ப் பிறமனுஷருடையவுடம்பிற் கலக்கவுஞ்செய்து, அதனால்ஒருகூறு பலருடம்பிற்குப் பொதுவாயிருக்கச்செய்யும் வல்லமையுள்ளகடவுளுக்கு அந்தப்பிறமனுஷருடம்பிற் கலந்தகூறினைப்பிரித்து, அதன்சரீரத்திற்சேர்த்து முன்போலவொருசரீரமாக்க இயலாதென்பதறிவன்றெனவும், சைவருடைய பெரியபுராணமும்: கைலாச தரிசனஞ்செய்யவிரும்பிப் பண்ணின பிரயாணத்தில்மாம்ஸந்தேய்ந்துசிந்த எலும்புகளுமுறிந்துகிடந்த அப்பமூர்த்திநாயனார், பிறகுசிவன்எழுந்திருவென்றபோது, அழிந்தவுறுப்புகளெல்லாம் முன்போலகிரம்பப்பெற்றுச் சிறந்ததேகத்தோடுமெழுந்தனரென்றும், சிலவருஷங்களுக்குமுன் முதலையால்விழுங்கப்பட்ட தம்பிள்ளையைக்குறித்துத் துக்கப்பட்டுக்கொண்டிருந்த பிராமணர்க்கிரங்கிச், சுந்தரமூர்த்திநாயனார்ஒருபதிகம்பாட, அந்தமுதலை அந்தப்பிராமணப்பிள்ளையை, அன்றைத்தினமட்டுமானவருஷங்களுங் கூட்டியுள்ளவயசுக்குரியவுடம்போ

டு உயிர்த்ததென்றுஞ்சொல்கின்றதனாற், பண்டிதர்கூறியது அவர்சமயத்துக்கும்விரோதமானதெனவும், ஆதலாற்சருவேசுரனுக்கு மனிதனையவரவருடம்போடுயிர்த்தெழச்செய்தல் கூடுமெனவுமறிக. சாத்தனுடலிற்கலந்த கொற்றனுடற்கூறினைப்பிரித்துச் சாத்தனுடலாக்கும்போது, கொற்றனுடலின்கூறுகுறையாதோவெனின், சர்வவல்லபமுள்ளகடவுள் தந்தையுந்தாயுமாகியஇருவருடலிலும் ஒருகேடும்உண்டாகாமலே அவ்வுடலின்கூறாகியசுக்கிலசோணிதங்களை அவர்பிள்ளைகளினுடம்பாகும்படிசெய்கிறார். அல்லாமலும், தாயினுடலில்ஒருகேடுமுண்டாகாமலே அவ்வுடலின்கூறாகியமுலைப்பாலைப் பிள்ளையினுடையவளருமுடம்பாகும்படிசெய்கிறார். இப்படிக்கடவுள் ஒரேசரீரத்துக்குரியகூறுகொண்டு அந்தச்சரீரத்துக்கு அற்பக்கேடு முண்டாகாமலே வேறுசரீரத்தையுஞ்செய்யக்கூடியவராயிருத்தலால் சாத்தனுடலின்கூறுகுறையாமலே கொற்றனுடற்கூறினைப்பிரித்துக் கொற்றனுடலாக்கக்கூடியவராயுமிருக்கிறாரெனவறிக.—அன்றியும், ஒருசரீரத்திலே கத்திவெட்டுமுதலியவைகளாலே மாம்ஸம்அறுந்துபோயிருக்கும்போது கடவுள்புதுமாம்ஸம்வளர்வித்து அந்தச்சரீரத்தினது மாம்ஸமாக்குகிறார். ஆதலாற்சருவேசுரன் கடையுகநாளிலேஎல்லாமனிதனையும்உயிர்ப்பிக்கும்போது இருவருடம்புக்குப்பொதுவாயிருக்கும்ஒருகூறினை ஒருவருடம்பில்உரிமைப்படிபொருந்தும்போது குறையுமாம்ஸமுதலியவைகளைவளர்வித்து, அவ்வுடம்புகளினுடையமாம்ஸமுதலியவைகளாக்குதலும் அவராற்கூடுமெனவறிக. ஆதலாலும் முன்சொன்னபடியேயும், உடல்திரும்பஎழும்புதல் தகுதியும், ஆவசியகமும், கூடுமானதும், முத்தியைக்கெடாததுமாமெனவும், ஆதலாற்சத்தியவேதமாத்திரமேசத்தியவேதமாமெனவுமறிக.

௧௦௧. ௩-வது. பண்டிதர்---"பிறவியில்விடாது முத்திசாதனமான்மாக்களுக்குக்கொடுத்தல் கடவுளுக்கருமையாவென்பீராயின், கர்மாதிகளியற்றுவதற் குடம்பவசியமேயாம். முத்திசாதனங் கடவுள்வேறுவழியாய்க்கொடுத்தல் கூடுமாகூடாதாவென்பது, கிஞ்சித்துவஅறிவுடையேமாதலின், யாமுணர்கிலம். கடவுள்விட்டவழியி லோர்விரோதங்காண்கிலேம். வேறுவழியிலதா எனக்கேட்பதற்கு நாமுரியரல்லேம். மேலும்எந்தவழியில்விடினு மிந்தக்கேள்வியேவருமென்பதுணர்க." என்கிறார்.

௧௦௨. சிவன்: மலபந்தத்தினால் அறிவில்லாதிருந்த ஆன்மாக்கள் கருமமுதலியவைகள்செய்யும்படிக்கே அவற்றிற்குச்சரீரத்தை மலத்தினாலேயேயமைத்துக்கொடுத்தது அவைகள்பாவஞ்செய்யவிட்டவழியாயிருத்தலாலும், அப்படித்தாமேயவைகளைப்பாவஞ்செய்யவிட்டு அவைகள்செய்தபாவத்திற்காகத் தாமேகாலங்குறித்து அவைகளைநரகத்திற்புகுத்திவாதித்தல் அவர்நீதியிரக்கமுதலியவைகளில்லாதவரென்று தெரிவிக்கும்வழியாயிருத்தலாலும், முத்திசாதனத்துக்குச்சிவன்விட்டவழிவிரோதமானவழியேயெனவும், இத்தவறுஆன்மாக்களுக்குந்தமக்கும்வராதவழியைத்தெரிந்துநடத்தாமைசிவனுக்குஞானமும்வல்லமையுமில்லாமையேயெனவுமறிக.

௧௦௩. ௭-வது. பண்டிதர்: ஆன்மா "முத்தியையடையும்போது முதலிலேசாலோகபதவியடையும். சாமீபசாரூபசாயுச்சியபதவிகளைப் பின்னொன்றொன்றாய்ப்பொருந்தும். ஞானம்வளர்ந்துவளர்ந்துவரக் கடைசியிலான்மாவானது தானும்பதியையொப்பதாகிய ஞானமடைந்து சர்வானந்தசகிதனாகும்" என்கிறார்.

௧௦௪. சிவஞானசித்தியாரின் ௮-ம் சூத்திரத்து ௨௯-ம் பாட்டுரையாவது: சிந்தித்தற்கருமமேமேற்கொண்டு பேரறிவாகியசிவமுஞ் சிற்றறிவாகியதாமும் ஞாயிற்றினொளியுங்கண்ணொளியும்போ லத்துவிதமாய்நிற்றலான் தாமுளராதலறியப்பெறாது சிவத்தோற்றமொன்றே காணப்பெற்று, நிருவிகற்பஞ்சவிகற்பமிரண்டிற்கு மிடைநிலத்தேநிற்பதொன்பதாம்என்கின்றது. ஆதலால்சாயுச்சியபதவியென்பது ஆன்மா வேறுசிவன்வேறாயிராமல் சூரியனொளியுங்கண்ணொளியும்போல ஆன்மாவினதுதோற்றமின்றிச் சிவனோடத்துவிதமாகி நிற்றலாதலாலும், அப்படியொன்றாய் நிற்றல்நிருவிகற்பசவிகற்பமிரண்டற்கு மிடைநிற்றலாகாது ஆன்மாசூனியமாகிவிடுதலேயாமாதலாலும், ஆன்மாசூனியமாகிவிடுதலே சாயுச்சியபதவியாம். ஆதலாற்பண்டிதர்ஆன்மாவானது கடைசியிற்சர்வானந்தசகிதனாகும்என்றதுந் தவறாமெனவறிக.

௧௦௫. ௧௬. பண்டிதர்: கிறிஸ்துவர் நரகம்நித்தியமென்பதுமுதலியவைகளைமறுக்க நரகத்தன்மைசொல்லத்தொடங்கி,

ஓ-வது. "தனக்குவமையில்லாதானாகியகடவுளையறியாது தனதசேதனத்தி னிவ்வுலகத்தினிடத்தேயான்மாவானது புரியாநின்றகருமாதிகளால் அவ்வப்பிறவிகடோறு மீற்றிலேநரகத்தில்வீழ்ந்து, தாணியற்றியகருமாதிகட்கேற்பப் பரமசிவனால்நியமிக்கப்பட்டகாலம்வரைக்கும் அவ்விடத்திலிருந்து சொல்வதற்கரிதாகிய கொடியவாதையை அநுபவிக்கும்" என்கிறார்.

சிவனே ஆன்மாக்கள்நரகத்திற்படும்வாதைக்குக் காலங்குறித்தலால், யாம்இந்நூலின் ௯௧-ம் இலக்கத்திற்காட்டியிருக்கிறபடி அவர் அநியாயம், கொடுமை, வலியின்மைமுதலியவைகளை யுடையராயிருக்கிறாரெனவறிக,

௧௦௬. ௨-வது. பண்டிதர்: "இவ்வாறுஆன்மா நரகத்திலேகொடியவாதையைஅநுபவிப்பது நெருப்பைத்தீண்டினான்சூடுண்ணுதலும் நஞ்சையருந்தினான்உயிரிழத்தலும்போலத் தான்செய்தகருமத்தின்காரியமாகுமேயன்றிக் கடவுளாற்பழிவாங்கப்படுந்தன்மையதன்று" என்கிறார்.

பாவஞ்செய்தவரான்மாக்கள் அவர்மரித்தவுடனேதாமேநரகத்துக்குப்போகிறதுமில்லை, நரகத்தால்இழுத்துக்கொள்ளப் படுகிறதுமில்லையாதலாலும் சிவஞானசித்தியாரின்முதற்சூத்திரத்து ௫௦-ம்பாட்டுரை: சிவன் "கோபமுடையவர்போலவுயிர்கள்செய்தகன்மங்களுக்குத் தக்கபடிதண்டித்து" என்கின்றமையாலும், ஆன்மாக்கள்நரகத்திலேகொடியவாதையையநுபவிக்கச்சிவனே காலங்குறிக்கிறானென்றுபண்டிதருஞ் சொல்லியிருத்தலாலும், நாம்மேலேகாட்டியபடிசிவன்தொழிலே ஆன்மாக்கள் பாவஞ்செய்யக்காரணமா யிருத்தலாலும் ஆன்மாநரகத்திலே

கொடியவாதையையநுபவிப்பது நெருப்பைத்திண்டினன்சூடுண்ணல்மு தலியவைபோன்றதன்று, மேலேநாம்சொன்னபடிசிவனது அநீதக்கொடுமையாலாவதேயாமெனவறிக.

௧௦௭. ௧-வது. பண்டிதர்: "நீவிர்கூறுமாறு நரகம்நித்தியமன்று. சர்வஜீவதயாபரகடவுள் ஆன்மாவைநித்தியநரகிற்செலுத்துவாரல்லர். ஆன்மாவநந்தபாவஞ்செய்ததாயினன்றோ நரகமுமநந்தமாகும். வரைப்பட்டவாழ்நாளையுடையதாகியஆன்மா அநந்தபாவஞ்செய்யுமா? அந்தப்பட்டவான்மாஅந்தப்பட்டகாலத்திலியற்றியபாவமும் அந்தப்பட்டதன்றிஅநந்தமாகாது. இவ்வாறந்தப்பட்டபாவத்திற்குக் கடவுள்ஆன்மாவைஅனந்தகாலம் அனந்தவாதையனுபவிக்கவைப்பாராகில் அவரது சர்வதயாலக்ஷணமெங்ஙனே? மேலுங்கடவுள்ஒவ்வொருஆன்மாவுக்குஞ்செய்வதெல்லாம் நன்மையேயன்றோ? அப்படியாகில்நரகிற்புக்கவான்மாவுக் கவர்செய்தநன்மையாது? எல்லாம்நன்மையேசெய்வாராதலிற் சிவமெனப்போற்றப்படுவா ரவ்வாறுநித்தியவாதையளிப்பாரல்லர். ஆதலானரகத்தில்வீழ்ந்தோர் தம்பாவத்திற்கேற்பதோர் காலமாத்திரமே அவ்வாதையநுபவிப்பாரென்றறிக" என்கிறார்.

ஓ-வது. இந்நூலின் ௪௬-ம் இலக்கமுதல் ௬௫-ம் இலக்கம்வரையிற்கூறியநியாயங்களால் மறுபிறப்பில்லை யென்பதைஸ்தாபித்தோம். மறுபிறப்பில்லாதபோது நரகத்துக்குப்போனஆன்மாவுக்குப் பிறகு போகுமிடம்வேறில்லாமையினல் நரகம்நித்தியமாமெனவறிக. ௨-வது. "உண்ணுமையுள்ளதுயிர்நிலையூனுண்ண வண்ணுத்தல்செய்யாதளறு" என்னுந்திருவள்ளுவர்குறள் மாம்ஸம்புசித்தவர்நரகத்தினின்று வெளிப்படார். என்கின்றது. ஆறுமுகநாவலரதுபாலபாடம் ௩-ம் புத்தகத்து ௬௫-ம் பக்கமுதலியவைகள் "தன்மனைவிகொண்டுவந்தசீதனப்பொருளையழித்தவனும் அளவில்லாதகாலம்நரகத்திலேகிடந்தழுந்துவன்" என்கின்றன. இவைகள்பாவத்தின்கனகனத்தைநோக்கி நித்தியகாலமும் அளவில்லாதகாலமும் நரகத்திற்புகுவோர்களுக்குக் குறிக்கப்பட்டனவேயன்றிப் பாவத்தின்கணக்கைநோக்கியல்லவென்றுகாட்டலால், பண்டிதர் "அநந்தபாவஞ்செய்யினன்றோ நரகமுமநந்தமாகும்" என்றதுமுதலியவைகள் சைவவேதசாஸ்திரங்களுக்கும் விரோதமானவைகளெனவும்,ஆதலாற்கிறிஸ்துவர்கள்சொல்லுகிறபடி ஆன்மாக்கள்கனபாவத்திற்கு நரகத்தில்நித்தியமாய்வாதையனுபவித்தலும் அற்பபாவத்திற்கு உத்தரிப்புத்தீயுலகத்தில் அந்தந்தப்பாவத்திற்கேற்றவிதமாயுத்தரித்து மோக்ஷமடைதலுமேதகுதியாமெனவுமறிக. ௩-வது. நரகம்அநித்தியமென்றும், பிறவிபலவாமென்றும், ஆன்மாக்களெல்லாம் ஒருகாலத்தில் மோக்ஷமடையுமென்றும்கடவுளறிவிப்பாராயின்,நாம்இந்நூலின் அ௨-ம். இலக்கத்திற்கூறியபடி மனிதர்கள்பாவத்துக்கஞ்சாமை புண்ணியத்தில் விருப்பமில்லாமைமுதலிய குணங்களுடையவராகிக், கடவுளினீதிமுதலியவைகளும்விபரீதமாய்முடியுமெனவறிக.

௧௦௮. ௪-வது. பண்டிதர்: "அநந்தமகத்துவகடவுளுக்குச்செய்தபாவமாகையால் அப்பாவம்அநந்தமாகும்...என்பீராயின், மனுஷனெப்படிப்பாபம்புரிந்தானுயினு மஃதுதனக்குவிரோதமாவதன்றி அப்பா

வத்தாற்கடவுளின்மனம்விகாரப்படுதல்கூடுமோ! நெருப்பிற்கைவைத்த வன் றன்விரலைச்சுட்டுக்கொள்வதன்றி நெருப்பிற்குவிகாரம்வரும்படி செய்வதில்லை. காஞ்செய்யும்பாவத்தாற் கடவுளதுமனம்விகாரமுற்றுத் துன்பமடையினன்றோ நீவிர்சொல்வதொக்கும். பாபத்தின்பெருமை அப்பாவத்தினுலுண்டாகும் விகாரத்தின்பெருமையா லளக்கப்படுவ தென்றுணர்க" என்கின்றார்.

ஆறுமுகநாவலர்செய்தபாலபாடம் ௩-ம் புத்தகத்தின் ௬-ம் ௧௦-ம் பக்கத்தில் "குடிகளுக்குச்செய்யுந்தீமையினும் மகாராசாவுக்குச்செய் யுந்தீமை மிகக்கொடியது; அதுபோலவே ஆன்மாக்களுக்குச்செய்யுந் துரோகத்தினும் கடவுளுக்குச்செய்யுந்துரோகம் மிகக்கொடியது. குடி களுக்குச்செய்ததீமை இராசாவினாலேபொறுக்கப்படினும் பொறுக்கப் படும், இராசாவுக்குச்செய்ததீமையோ பொறுக்கப்படமாட்டாது. அது போலவே ஆன்மாக்களுக்குச்செய்ததுரோகம் கடவுளாலேபொறுக்க ப்படினும் பொறுக்கப்படும், கடவுளுக்குச்செய்ததுரோகமோ பொறு க்கப்படமாட்டாது. எங்கும்வியாபகமாய்இருந்து எல்லாமறியும்இயற் கைஇல்லாதவனாதலால், இராசாவுடையதண்டத்துக்குத் தப்பினுந்தப் பலாம். எங்கும்வியாபகமாய்இருந்து எல்லாமறியும்இயற்கையைஉடை யவராதலால், கடவுளுடையதண்டத்துக்கோ தப்பமுடியாது. ஈசு ரத்துரோகமஎவ்வகைப்பட்டபிராயச்சித்தத்தாலுந்தீராது.— ஈசுரத்து ரோகிகளுக்கு, நரகத்திலே, இயமதூதர்கள், இரத்தவெள்ளம்சிந்தும்படி இருப்புமுளைகளை நெருப்பிலேகாய்ச்சி, தலையிலும், கண்களிலும், செ விகளிலும், நாசிகளிலும், வாயிலும், மார்பிலும், அறைந்து, உடம்புமு ழுதும் தாமிரமுதலியஉலோகங்களைஉருக்கியநீரைச் சொரிவார்கள். மயிர்க்காறோறும் அக்கினியிற்காய்ச்சியஊசிகளை அழுத்துவார்கள். அவயவங்கடோறும் இருப்பாப்புக்களை மாட்டுவார்கள். பின்புநெய்நி றைந்தசெப்புக்கடாரத்திலேவிழுத்திக் காய்ச்சுவார்கள். ஈசுரத்துரோ கிகள் அந்தச்செப்புக்கடாரநெய்யிலே சந்திரசூரியர்உள்ளவரையும் குப் புறக்கிடந்துவருந்துவார்கள்—இப்படிநரகத்துன்பத்தைஅநுபவித்தபின், பூமியிலே மலத்திற்கிருமிமுதலியவைகளாய்ப்பிறந்திறந்துஉழன்று, பின் பு மனிதப்பிறப்பைஎடுத்து, வலி, குட்டம், கயம், நீரிழிவு, பெருவியாதி, மூலவியாதிமுதலிய மிகக்கொடியநோய்களினாலும் பசியினாலும் வருந் துவார்கள்" என்றுசொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால்சைவசமயப் படியேயும் கடவுளுக்குச்செய்த துரோகபாவம் மகாகனமானபாவமா மெனவறிக. அல்லாமலும், ஆறுமுகநாவலர்செய்தசைவவினாவிடை ௨-ம் புத்தகத்தின் ௨௨௦-ம் இலக்கத்தில் "சிவபூசைஎழுந்தருளப்பண் ணிக்கொண்டவர்...பூசைபண்ணாதுபுசிப்பது பெருங்கொடும்பாவம்" என்றுசொல்லப்பட்டிருக்கின்றது. இதுசொல்லுகிறபடி பூசைசெய்யா மைபெருங்கொடும்பாவமானதால், சைவசமயநூற்படியேயும்கனமான பாவத்துக்குக்காரணமாவது கடவுட்சம்பந்தமானவிஷயத்தில் அவர்வி தித்ததைச்செய்யாமையேயாமன்றிக் கடவுள்மனவிகாரமுற்றுத்துன்ப மடைதலன்றெனவும், இந்தப்பெருங்கொடும்பாவஞ்செய்தவன் பெரு நெருப்பிற்கையைவைத்தவன் தனதுகைவெந்துபுண்ணாகியாறுமலே

சன்னிகண்டுசாவதுபோல நரகத்திற்கொடியவாதைகயைநீங்காதனுபவித்துச் சாவாமற்சாவானெனவுமறிக.

௧௦௯. ௫-வது. பண்டிதர்: "தண்டனையநுபவிக்கச்செய்யும்போது அத்தண்டனையின்காரணமிஃதென் றான்மாவையுணரவையாதிருப்பிற் றண்டனையகியாயமென்பதுமிகவுஞ்சரி. அங்ஙனமாகவே யிப்பிறப்பிலிப்படிப்பிறத்தற்கு முற்பிறப்பிலின்னனபுரிந்தனன்யானென வான்மாவீண்டுணர்தல்வேண்டுமே. அவ்வுணர்வையாவரொருவரிடத்திலுங் காண்கிலம். ஆதலால்மறுபிறவிபொய்யென்பீராயின், தண்டனையைக் குறித்தன்றோ அவ்வாறுசொற்றனம். பிறவியைத் தண்டனையென்று யாவர்சொன்னார். பாவத்தோடொப்பப் புண்ணியமும்பிறவியின்காரணமாயிருப்பதேயாம். கடவுளையுந்தன்னையுமறியுமறிவுவருமட்டும் பாவபுண்ணியமிரண்டும் பிறவிக்குவித்தெனத்தேறுக. எப்பிறப்பு மெங்கிலையும் இன்பதுன்பமிரண்டும்பயக்கவல்லது. அவ்வாறின்பம்பயக்கவல்லதோர்பிறவியைத் தண்டனையென்று கூறுதறகாது. பிறவியடைந்து முத்திசாதனமடைதல்வேண்டுமாதலிற் பிறவியுறுவதெனவும், பிறவியிலியற்றியபாவத்தின்றண்டனைநரகமெனவுங்கொள்க" என்கிறார்.

ஆறுமுகநாவலர்பாலபாடம் மூன்றாம்புத்தகத்து ௧௩௩-ம் பக்கத்திலே "கணவன்சொற்படிநடவாதவள் நாயாகவும்நரியாகவும்பிறப்பள். கணவனையிகழ்ந்தவள் புலியாய்ப்பிறப்பள். பரபுருஷனையிச்சித்தவள் பேய்வடிவமடைவள். கணவன்பசித்திருக்கப்புசித்தவள் பன்றியாய்ப்பிறப்பள்" என்றும், ௮௨-ம் பக்கத்திலே "அவன்தருமத்தைவிற்றபாவத்தினாலே யானையாய்ப்பிறந்தான்" என்றும், ௧௨-ம், ௧௩-ம் பக்கத்திலே "கொலைப்பாவிகள்எண்ணில்லாதகாலம் நரகத்துன்பத்தை அநுபவித்து, பின்பூமியிலேபிறந்து, ஈளை, காசம், குட்டம், பெருவியாதி, நெருப்புச்சுரம், கைப்பிளவைமுதலியநோய்களினால்வருந்தி உழல்வார்கள்" என்றும்சொல்லப்பட்டிருக்கின்றன. கைலாசத்திலிருந்தஆலாலசுந்தரர் மோகபாவத்தாற் பூமியில்நம்பியாரூரராகப்பிறந்தாரென்று பெரியபுராணஞ்சொல்லுகின்றது. அவாவேயெவ்வகைப்பிறப்பிற்குங்காரணமென்று தமிழ்மறையின் "அவாவென்பவெல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றுந்-தவாஅப்பிறப்பீனும்வித்து" என்னுங்குறள்சொல்லுகின்றது. தருமம் பிறப்பைநீக்கிமோக்ஷத்தைத்தருவதென்று ஷெதமிழ்மறையின் "வீழ்நாள்படாஅமைநன்றாற்றினஃதொருவன் வாழ்நாள்வழியடைக்குங்கல்" "சிறப்பீனுஞ்செல்வமுமீனுமறத்தினூஉங் காக்கமெவனோவுயிர்க்கு" என்னுங்குறள்கள்சொல்லுகின்றன. ஆதலால்எவ்வகைப்பிறப்பும் பாவதண்டனையென்றும், இருள்சேராததருமம் பிறப்பைநீக்கிமோக்ஷந்தருவதென்றும் சைவசமயங்கூறுகின்றதெனவும், இந்தப்பண்டிதரோ தாமியற்றியசைவமகத்துவத்தின் ௧௦௫-ம் பக்கத்தில், "தனக்குவமையில்லாதானாகிய கடவுளையறியாது தனதசேதனத்தினா லிவ்வுலகத்தினிடத்தே யான்மாவானதுபுரியாநின்றகருமாதிகளால் அவ்வப்பிறவிகடோறு மீற்றிலேநரகத்தில்வீழ்ந்து, தானியற்றியகருமாதிகட்கேற்பப் பரமசிவனால்நியமிக்கப்பட்டகாலம்வரைக்கும் அவ்விடத்திலிருந்து சொல்வதற்கரியதாகிய கொடியவாதையை யநுபவிக்கும்" என்று

சொல்லி, இதனால், தண்டனையைப் பிறவியென்று தாமேயேற்றுக்கொண்டிருக்கிறானெனவும், ஆதலால்சிவன்: ஆன்மாதண்டனையையநுபவிக்கும்படிசெய்யும்போது, அத்தண்டனையின்காரண மிதுவென் றந்தவான்மாஉணரவையாதிருப்பின், அது அநியாயமேயெனவும், அங்ஙனமாக, இப்படிப்பிறத்தற்கு, முற்பிறப்பிலின்னபுரிந்தேன்யானென எந்தஆன்மாவு மிங்கேயறிந்திராமையால் மறுபிறவிபொய்யேயாமெனவுமறிக.

கக0. கஎ. பண்டிதர்: கடைசியாக ஆசாரகிருத்தியங்களையும் விசுவாசத்தையுங்குறித்துப்பேசத்தொடங்கி,

ழ-வது. கடவுளைவணங்கவேண்டிய ஆசாரகிருத்தியங்கள் ஒவ்வொருசமயத்திலும் ஒவ்வொருவிதமாயுணர்த்தப்படுகின்றன. தர்க்கசாஸ்திரத்தால் அளவிடப்படுங்கால் இஃது தகும் அஃது தகாதென்றுசொல்லப்படுந்தன்மைய தொன்றுமில்லை. ஒன்றாற்பயனுண்டென்றும் மற்றென்றாற்பயனில்லையென்றுஞ் சொல்லலாகாது. கடவுளிலேபற்றிய அன்புவிசாலிக்க மனமானது அவனதுதிருவடித்தாமரைகளிற்செல்லுமாயின் எதனைத்தான் தீதென்றுசொல்லலாம்? அதுவன்றியாதுபுரியினுந்தீதேயாகும் என்கிறார்.

உலகிலுள்ளஎல்லாச்சமயங்களும் தமக்குள்பேதமுடையன. மெய்யானகடவுள்சத்தியசுரூபியாதலால் ஒருபொருளையேஒருசமயத்தில் ஆமென்றும, மற்றொருசமயத்தில் அன்றென்றுஞ்சொல்லாராதலால், அச்சமயங்களுள் ஒன்றேகடவுளாலருளப்பட்ட சத்தியவேதாசாரசமயமும் மற்றவைபொய்ச்சமயமுமாம். மெய்யானகடவுள்தாமருளியமெய்யானவேதத்தால் எதனைஎவ்வாறுசெய்யவிதித்தாரோ அதனையவ்வாறுசெய்தலேபுண்ணியமும், அதற்குவிரோதஞ்செய்தல்பாவமுமா மாதலால், மெய்யானகடவுளால்விதிக்கப்பட்ட ஆசாரகிருத்தியமாத்திரமே தக்கதும்பயனுள்ளதுமாமன்றி, மற்றவைஅவையுள்ளனவல்லவெனவும், மெய்யானகடவுள்விதித்ததைச்செய்யாமல் அவர்விலக்கியதையாவது வேறொன்றையாவதுசெய்தல் உண்மையாய்ப்பார்க்குமிடத்து அவரிடத்துப்பற்றியஅன்புவிசாலிக்க மனமானது அவரதுதிருவடித்தாமரைகளிற்செல்லுதலாகாதெனவுமறிக.

ககக. உ-வது. பண்டிதர்: "பெற்றதாயர் தமதுகுழந்தைகளைக் கங்கையிலமிழ்த்திச் சிசுவதைசெய்வதும்புண்ணியமா? நினைக்கவேநெஞ்சம்பதைக்கிலதாஎன்பீராயின், ஆபிரகாஞ்செய்தாற்புண்ணியம் அரிவையர்செய்தாற்பாவமென்பதாநுமதுவிதி? ஆர்செய்யினுமென்? அகத்தன்றேபுண்ணியமுளது. மனத்துக்கண்மாசிலனாதலனைத்தற னாகுல நீரபிற. தன்குழந்தையைக்கொல்லும்படிகடவுள்கேட்டனரொன்று யாவனொருவன்விசுவசிப்பனாயின், கடவுள்கேட்டாரென்பதுமெய்யாயினும் பொய்யாயினுமாகுக, விசுவசித்தவாறுதன்கடமையைச்செய்யும்வரைக்கும் அவன்கடவுளுக்குத்தொண்டுசெய்திலன். கொல்லாதொழிவதே பாவமெனத்தேறுக" என்கிறார்.

அபிரகாமோடுசருவேசுரன்நேரிற்பேசினார்; பிள்ளையில்லாதஇவருக்குப்பிள்ளைவரங்கொடுத்தார்; கொடுத்தபடி இவருக்குப்புத்திரன்பிறந்தான். அதனால்சருவேசுரன் இவர்குமாரனைத்தமக்குப்பலியிடக்கேட்

டபோது, அப்படிக்கேட்டவர்சர்வேசுரன்தானென்று திரிபின்றியிவரா யிருந்தார். சர்வேசுரன் நியாயமில்லாதவைகளைச்செய்வியாராதலா ல், அதற்குடனேயமைந்து இவரதுஒரேபேறானகுமாரனை அவருக்கு ப்பலியிடத்துணிந்தார். சர்வேசுரன் இவரப்படிச்செய்யச் சொன்னது தம்முடையஒரேபேறானகுமாரன் மனிதர்பாவங்களினிமித்தந் தமக்கு ப்பலியாகப்போகிறதின்சாயலாக இதைக்காண்பித்தற்காகவாதலால், அ ந்தப்பலி நடக்கவிருந்தசமயத்தில்அந்தப்பிள்ளைக்குப்பதிலாக ஆட்டுக் கடாவைப்பலியிடும்படி மீளவுமறிவித்ததுமன்றி இவருக்குஅநேகவரங் களையுந்தந்தருளினர். பெற்றதாயர் கங்கையிலே தம்பிள்ளைகளையெறி தலோ: கங்கையானதுதெய்வமல்லாமையினாலும், தேவகற்பனைஇப்படி யிருக்குமென்று இந்தத்தாயர்கள்நம்புதற்கு ஒருகாரணமுமில்லாததி னாலும், இக்கொலைகளைச்செய்தபோதெல்லாம் ஒருதெய்வமும்இவைக ளைத்தடுத்ததும் அவர்களுக்குவரங்கொடுத்ததுமில்லாமையினாலும், இ க்கொலையைக்கடவுள்செய்வித்தற்கு இன்னஆவசியகம் உண்டாயிருந் ததென்று இதுவரையில்வெளிப்படாமையினாலும், மூடபத்தியுங்கொ டியகொலைப்பாதகமுமேயன்றிவேறல்லவெனவும், ஆதலால்பண்டிதர் தாயர் தன்குழந்தையைக்கொலைசெய்யும்வரைக்கும் அவர்கள்கடவுளு க்குத்தொண்டுசெய்கிலர். கொல்லாதொழிவதேபாவமெனத்தேறுக என்றது அறியாமையெனவுமறிக.

கக௨. ங-வது. பண்டிதர்: "கடவுளால்வராது பொய்யாய்வந் தவிசுவாசமும் புண்ணியத்தைத்தரவல்லதாஎன்பீராயின், அதற்குஞ் சந்தேகமா? ஒவ்வொருவனுடையபாவபுண்ணியமு மவனவன்விசுவா சத்தாலேயேஅளக்கப்படுமென்றறிக" என்கிறார்.

பெரியபுராணம்: சிவன், சிவனடியார்வேடமா யொருபக்தரிடத் திற்போய், அந்தப்பக்தரின்மனைவியைத் தமக்குக்கொடுக்கக்கேட்டார். அவர்அதற்குச்சம்மதித்துத் தம்முடையமனைவியை யவர்க்குக்கொடுத் ததுமன்றிஇதினிமித்தமாகத் தம்முடையஇனத்தவரால் அந்தஅடியார் வேடத்தவர்க்கு வழியில்ஓரிடையூறும்வாராமல்ஆயுதபாணியாகி அவ ரோடுவழிவிடப்போய், அந்தப்பெண்ணை அவர்கொண்டுபோகாமற்றடுக் கவந்த தம்மினத்தவரெல்லாரையுங் கொன்றுவிட்டாரென்கிறதுபோல, விபூதி ருத்திராக்ஷமணிந்துகொண்டுவந்து மனைவியைக்கேட்கிறவரெல் லாருக்கும் தம்மனைவியைக்கொடுத்து, இதைத்தடுக்குமினத்தவரை யுங்கொல்லும்விசுவாசம் பெரியகொடும்பாவத்தைத்தரவல்லதாதலால் இப்படிப்பட்டவிசுவாசம் மூடத்தனமாமெனவும், இப்படிப்பட்டவிசு வாசத்திற்குஅளப்பது நரகக்காணிதானெனவும், விசுவாசிக்கத்தக்கது பாவத்துக்குரியசெயலாயிருக்கலாகாதெனவுமறிக.

ககங. ச-வது. பண்டிதர்: "அப்படியாயின் ஓர்சமயங் கடவு ளாலருளப்படினென், அருளப்படாவிடினுமென், மனமானததனைக்க டவுளான்அருளப்பட்டதென விசுவசித்தொழுகியதேற் புண்ணியமா மெனவும், ஆகவேபொய்ச்சமயத்தோரிலு முத்தியடைவாருளரெனவு ங் கூறுகின்றீராஎன்பீராயின், அநுசரித்தசமயம் பொய்ச்சமயமாயி னும் மனத்தின்கட்புண்ணியமுடையரேல் அவரதுபுண்ணியம் முத்தி

க்குப்பரம்பரைக்காரணமாகி, நேரேமுத்தியையளியாதொழியினும் முத்தியடையும்வழியிலாவது அவரைவிடும். விசேடபுண்ணியமுடையரா கிற் சாலோகசாமீபபதவிகளுமடைதற்பாலரெனவறிக. நமதறிவுக்கேற்பக் கடவுளைவழிபடுதலேநமதுகூறு. மற்றையவெல்லாங்கடவுள்கூறெனக்கொள்க'' என்கிறார்.

ககச. ௲-வது. தகாதவிசுவாசம்மூடத்தனமென்பதும் அதன் பயன்நரகக்காணிதானென்பதும் மேலேகாட்டினும். அதுநிற்க. முதலாவது: ஒருசக்கரவர்த்தியின்சட்டத்துக்குவிரோதமாக ஒருசட்டத்தையுண்டுபண்ணித், தன்னையேசக்கரவர்த்தியென்றுவணங்கச்செய்யுமொருநீசன் அந்தச்சக்கரவர்த்திக்கு விரோதியாயிருக்கிறான். அவன் சிலமூடரைமயக்கித் தன்னையேசக்கரவர்த்தியென்றுநம்பிப் பணிபவராக்கிக்கொண்டாலும், அவனோடே அவனைச்சேர்ந்தஅந்தமூடரும் தண்டனைக்குப்பாத்திரரென்பதற்குச் சந்தேகமில்லையல்லோ? அப்படியே கடவுள்வேதத்துக்கெதிராக ஒருபொய்வேதத்தையுண்டுபண்ணிக், கடவுளின்தன்மையில்லாததன்னையே கடவுளென்றுவணங்கச்செய்கிற நீசன் கடவுளுக்குவிரோதியாயிருக்கிறான். அவன் அந்தப்பொய்வேதத்தாற் சிலரைமயக்கித் தன்னைவணங்குகிறவராக்கிக்கொளினும், அவனோடு அவரும் நரகதண்டனைக்குப்பாத்திரரென்பதற்குச் சந்தேகமில்லை. இரண்டாவது: தக்கபடிவிசாரியாமல் தனவானாகியதகப்பனை விட்டுத், தகப்பனுக்குவிரோதியாகியஒருதரித்திரனையே தன்தந்தையென்றுநம்பிப்புகழ்ந்து, தன்தந்தையைத்தந்தையல்லவென்று சொல்லிநிந்திக்கிறவன் அவனுடையஆஸ்திக்குஉரியனாகானென்பதற்குச் சந்தேகமில்லையல்லோ? அதுபோலவே விசாரித்தறியாமல், கடவுளுக்கு விரோதமாய்நிற்குமொருவனைக் கடவுளென்றுநம்பிப்புகழ்ந்து, மெய்யானகடவுளைக் கடவுளல்லவென்றுதூஷிக்கிறவன் அவரதுமோக்ஷானந்தத்துக் குரியனாகானென்பதற்குச் சந்தேகமில்லை. மூன்றாவது: தானிருக்குமூருக்குக் கிழக்கிலுள்ளபட்டணத்துக்குப்போகவேண்டியவர் அதின்வழியையறிந்தவரைச் சரியாகவிசாரித்துக்கண்டு, அவர்சொல்லைக்கேட்டு, அவர்சொன்னபடிகிழக்கைநோக்கிச்சென்றாலன்றி, அவ்வழியறியாதவருடையசொல்லைக்கேட்டு மேற்கேசென்றால்அப்பட்டணத்தைச் சேராமற்போவதுமன்றி, மேற்கடலையுஞ்சேருவாரென்பதற்குச்சந்தேகமில்லையல்லோ? அப்படியே மோக்ஷப்பட்டணத்தைச்சேரவேண்டியவர்கள் அதன்வழியையறிந்தபெரியோரை விசாரித்தறிந்து கண்டு அவர்சொற்போல்நடந்தாலன்றி, அவ்வழியறியாதவர்சொல்லைக் கேட்டுநடந்தால், மோக்ஷஞ்சேராமற்போவதுமன்றி நரகத்திலும்விழுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால்கடவுள்வேதமல்லாததைக் கடவுள்வேதமென்றுவிசுவசிக்கிறவர்கள் அதிற்புண்ணியமென்று சொல்லுகிறவைகளைப் புரிந்தொழுகினும், நரகமடைவரேயன்றி மோக்ஷத்தையேனும் அதற்குச்சமீபமானஇடத்தையேனும் அதன்வழியையேனு மடையாரெனவறிக.

ககரு. உ-வது. பண்டிதர்: "அநுசரித்தசமயம்பொய்ச்சமயமாயினும் மனத்தின்கட்புண்ணியமுடையரேல், அவரதுபுண்ணியம் முத்

திக்குப்பரம்பரைக்காரணமாகி நேரேமுத்தியையளியாதொழிபினும் முத்தியையடையும்வழியிலாவதுவிடும்" என்றதும்பிறவும் பண்டிதர்க்கே அந்தப்புண்ணியபலன்விஷயத்தில் ஒருநிச்சயமுமில்லையென்றுகாட்டுகிறதுமன்றி, நாம்முன்னேசொல்லியபடி மறுபிறப்பென்பது பொய்யாயிருத்தலினால், அந்தப்புண்ணியத்தி லொருபிரயோசனமுமில்லையென்றுகாட்டுதலுமறிக.

௧௧௬. ௩-வது. மெய்யானகடவுளின்வேதம் இன்னமும்வந்துவழங்காதவிடத்திலுள்ளவராயும் அதன்பெயரைக்கூடக்கேட்டிராதவராயுமிருப்பவர்கள்: மெய்யானவேதம் வேறொன்றுண்டென்றறியாமையால், தாமனுசரிக்குமதத்தைமெய்வேதமென்றுநம்பி அதுசொல்லிய படிதம்மனசாட்சிக் கெவ்வளவும்விரோதமில்லாமற் சரியாகநடப்பாராயிற், கடவுள்நீதியுள்ளவராதலால் அவர்களதுமரணசமயத்திலே தம்முடையதூதனையனுப்பி அவர்க்குத்தம்மையறிவித்துத், தமதுவேதத்தையேவிசுவசித்துக்கைக்கொள்ளச்செய்து, மோக்ஷத்தையருளுவரென்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும், பொய்மதங்களிற்பாவவழிகள்மிகுதியாயிருத்தலின், அந்தஆபத்துவழிகளையெல்லாம்ஒருவர்விலகி யொருகுற்றமுமில்லாதொழுகுதல் அருமையெனவும், எங்குஞ்சத்தியவேதம்வந்துவழங்குமிக்காலத்தில் ஒருவன் தன்மரணத்துக்குப்பின், நானுமதுசத்தியவேதத்தைக்குறித்துக் கேள்விப்பட்டதில்லையென்று சருவேசுரனிடத்திற்சொல்லித் தப்பவழியில்லாமையாற், சத்தியவேதத்தைவிசுவசித்துக் கைக்கொண்டுநடந்தோர்க்கல்லது மற்றொருவருக்கும்மோக்ஷமில்லையெனவு மறிக.

சைவமகத்துவதிமிரபாநு முற்றிற்று.

கடவுள் துணை.

# விவிலியவிரோததிக்காரம்.

## தற்சிறப்புப்பாயிரம்.

### விருத்தம்.

சீர்விமலசருவேச னருளினருண்மெய்ம்மறையின் சிறப்புந்தூய்மை
ஏர்விலகுசைவசம யத்தவறுஞ்செவ்விதினிங் கெவருமோர்ந்து
நேர்விலகுநெறிநீங்கி நன்னெறியிநொழுகிவிண்ணி னிலவிவாழ்வான்
ஓர்விவிலியவிரோத திக்காரஞ்சொலப்பரன்ற ளுளத்துக்கொள்வாம்.

## நூல்.

க. க, சத்தியவேதபுத்தகத்திலுள்ளதீர்க்கதரிசனங்கள் சேசுநாதர்பிறத்தற்கு அநேகநூறுவருஷங்களுக்குமுன்தொடங்கித் தீர்க்கதரிசிகளால் தங்கள்தங்கள்காலத்தி லெழுதிவைக்கப்பட்டுவந்தவைகளாயிருந்தும், அவற்றி லவரைக்குறித்துச்சொல்லப்பட்டயாவும் அவரிடத்தில்நிறைவேறியிருத்தலால், அந்தத்தீர்க்கதரிசனபுஸ்தகங்கள் சேசுநாதரை மனுஷாவதாரம்பண்ணிவந்தமெய்யானதேவனென் றெவருமொப்புக்கொள்ளச்செய்தற்குச் சிறந்தசாக்ஷிகளாயிருத்தலால், விவிலியவிரோதஞ்செய்தபண்டிதர் அவரைக்கடவுளல்லவென்றுமறுக்க, முதல்முதல் சத்தியவேதபுத்தகத்துள்ளதீர்க்கதரிசனங்களைச் சாதாரணமானவைகள்போலக்காட்டநினைந்து,

உ, ஜூ-வது, "தீர்க்கதரிசனம்ஓர்நூல் கடவுளாலருளப்பட்டதென்பதற்குச் சான்றாகாது. அதனதுநிறைவேற்றம் யாண்டும்எச்சமயாநுசாரிகளுள்ளுமுள. தீர்க்கதரிசனம் இக்காலத்தும்உளது: இற்றைக்குநாற்பதுவருஷத்திற்குமுன் அங்கிலேயசீமைக்கல்லூரியொன்றிற் படித்துக்கொண்டிருந்ததுரைமக்கள்நால்வர் தமதயல்வீதியி லொருவன்தீர்க்கதரிசனஞ்சொல்கின்றானெனக்கேள்வியுற்று அவனிடம்போக, அவ னவர்களுக்குப் பின்நடப்பனவற்றைவிவரித்தான். அவர்களுள் ஒருவர்பிராஞ்சுதேசத்திற்கும் ஒருவர்ஆஸ்திரேலியாவுக்கும்போக இருவர்இந்தியாவுக்குவந்தனர். மூவரும்மரித்துப்போக ஒருவர்இன்றும்இந்தியாவிலேதானேஇருக்கின்றார். இந்நால்வரும் நாலுதேசத்தில்ஒருயிர்போலுநட்பினர். இறந்துபோனமூவரதுபிற்சரித்திரமுழுமையும்இப்போஇருக்கிறதுரைமகனுக்கு நன்குதெரியும். இந்நால்வருக்கும் அவராயு

ளுட்களெல்லாஞ்சம்பவித்த விசேஷசங்கதியனைத்து மவனால்முன்சொல்லப்பட்டவைகளாயிருந்ததுமன்றி அவன்சொல்லியவற்றி லொன்றுவதுநிறைவேறுமற்போகவில்லை. இருக்கிறதுரைமகனுக்கும் அவரையறிந்தமற்றுந்துரைமக்களுக்கு மிஃதுபேராச்சரியம். ஒருவருக்குநிறைவேறி மற்றவருக்குநிறைவேறுதிருந்தா லொற்றையிரட்டைபிடித்ததெனலாம். ஒருவரைப்பார்த்து உன்மனைவியினதுஇரண்டாங்கர்ப்பம் ஏழுமாதத்தில்அழிந்துபோக அவளுக்குத்தலையில்தோஷமேறி மூன்றுநாளாக ஸ்மரணைகெட்டிருப்பாள்-தோஷமாறக் காதுசெவிடாய்விடுமென்றும், மற்றொருவனைப்பார்த்து நீஅதிகசெல்வனுக் கோமேமகனாயிருக்கின்றேனென்று அகந்தைகொண்டிருக்கின்றாய்-வர்த்தகநஷ்டத்தினால் உன்றந்தைகாலத்திலேயே நீதரித்திரதிசையடைவாய். உனக்குஇளமையிற்கலியாணமுமில்லை இளம்பெண்கிடைப்பதுமில்லை-ஆயினும் நீகீழைத்திசையிற்சென்று ஒருவிதவையைவிவாகஞ்செய்துஅதன்வழியாய் மறுபடியுஞ்செல்வனாவாய். உன்னைவிவாகம்பண்ணிய இரண்டாம்வருஷாரம்பத்தில் உன்மனைவி தன்முதல்தாரத்துப்பிள்ளைகளையிழந்துவிடுவாளென்றும் அவன்கூறியவைகள் ஒற்றையிரட்டையெனற்பாலவையா? விவிலியநூலில் இவ்வளவுதெளிவாய்ச்சொல்லப்பட்டதீர்க்கதரிசனங்களைக் காண்கிலேம். எப்படிச்சொன்னானென்பது நமக்கதீதமாயினுஞ் சொல்லியதும் நிறைவேறியதும்மெய்யே. இப்படிஅனேகதிருஷ்டாந்தங்களை யென்காலத் தென்கண்ணாரவேகண்டிருக்கின்றனன், ஆகவே தீர்க்கதரிசனங் கடவுள்வேதத்தின்முத்திரையன்று" என்கிறார்.

௩. ஸூ-வது. இதிற்பண்டிதர்: "தீர்க்கதரிசனம்ஓர்நூல்கடவுளாலருளப்பட்டதென்பதற்குச் சான்றாகாது" என்றது கிறிஸ்துவர்கள்மாத்திரமே தீர்க்கதரிசனபுஸ்தகங்களையுங் கடவுளருளியவேதநூலென்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிச்சைவர்கள் வைத்துக்கொண்டிருக்கவில்லை: ஏனெனிற், சிவன் தீர்க்கதரிசனமாகமுன்னறிவித்த தொன்றுமில்லை; சிவனதுதீர்க்கதரிசியாக ஒருவருமிருந்ததுமில்லையென்று அவர்சொன்னதாயிற்று. மேலும்பண்டிதர் "அதனதுநிறைவேற்றம் யாண்டும்எச்சமயாநுசாரிகளுள்ளும்உள" என்றது: சத்தியவேதத்திலுள்ளதீர்க்கதரிசனபுஸ்தகங்களிலே சேசுநாதரைக்குறித்துச்சொல்லப்பட்டவையெல்லாம் அவரிடத்துநிறைவேறினதையும் இவர்ஒப்புக்கொண்டதாயிற்று. அல்லாமலும்பண்டிதர்: தீர்க்கதரிசனம் இக்காலத்தும் உளது. அங்கிலேயசீமையிலொருவன் நான்குபிள்ளைகளுக்கு நாற்பதுவருஷத்துக்குமுன்சொன்னவைகளில் ஒன்றுந்தவறாம லெல்லாம் நிறைவேறின; அவன் எப்படிச்சொன்னானென்பதுநமக்கதீதம்என்றது: அவன் அப்படிச்சொல்லும்படிகடவுளேயறிவித்தாரோ, பிசாசறிவித்ததோ, அவனாலேயேஅவனுக்குஒருசக்தியுண்டாயிற்றோ நம்மறிவுக் குண்மையெட்டவில்லையென்றதாயிற்று. இப்படிப்பண்டிதர் தாங்குறித்தவொருமனிதன் இன்னவிதத்தால்தீர்க்கதரிசனஞ்சொன்னானென் றறிந்துகொள்ளச்சக்தியில்லாதவராயிருக்க, இவர் எழுநூறுவருஷத்துக்கு முன்தொடங்கிக் கடவுளுடையதீர்க்கதரிசிகளென்பவர்கள் கடவுளாலறிவிக்கப்பட்டவைகளென்றுசொல்லியெழுதிவைத்த இரட்சிப்புக்குரிய

தீர்க்கதரிசனபுஸ்தகங்களைக் குறித்து அவற்றிற்சொல்லப்பட்டவைக ளெல்லாம் நிறைவேறினபின்னரும், அவை "கடவுளாலருளப்பட்ட வையென்பதற்குச்சான்ருகா" என்றுசொல்லத்துணிந்ததுதகாததும் அறிவீனமுமன்ரு? "நடுவுநிலைமைகுன்ருதுபகர்வீராக."

ச. உ-வது. பண்டிதர்: தாம் "தீர்க்கதரிசனம்ஓர்நூல் கடவுளாலருளப்பட்டதென்பதற்குச் சான்ருகாது. அதனதுநிறைவேற்றம் யாண்டும்எச்சமயாநுசாரிகளுள்ளுமுள" என்றதை மெய்ப்பிக்கும்படி சொல்லியகதையை யுண்மை "மொழியென்றுகொள்ளாது சூதுமொழியென்பதே" "சிறப்பு" எனெனின், ௩-வது. பண்டிதர்அங்கிலேய சீமையில் ஒருவன்நாற்பதுவருஷத்துக்குமுன் பள்ளியிற்படிக்கும்நாலு பிள்ளைகளுக்குத் தீர்க்கதரிசனஞ்சொன்ஞன். இந்நால்வருள் ஒருவர் பிராஞ்சுதேசத்துக்கும், ஒருவர்ஆஸ்திரேலியாவுக்கும் மற்றிருவர்இந்தியாவுக்கும் அவன்சொல்லியபடிபோயினர். அவருள்மூவர்மரித்துபோயினர். மரித்தஅந்தமூவர்சரித்திரமும் உயிரோடிருக்குமற்ருெருவருக்குத்தெரியும்என்கிறதினுலும், பண்டிதர்அங்கிலேயசீமைக்காவது பிராஞ்சுதேசத்துக்காவது ஆஸ்திரேலியாவுக்காவது போனவரல்லராதலாலும், பண்டிதர்தீர்க்கதரிசனஞ்சொன்னவனையும் கேட்டுக்கொண்டவருள்மூவரையு மறியாதவராயிருக்கிருர். ஆதலால் மற்ருெருவர்சொன்னசொல்லைக்கேட்டுத்தான் இதைச்சொல்லியிருத்தல்வேண்டும். ஆதலால்இக்கதை யுண்மையென்றுகொள்ளுதற்கிடமில்லை. உ-வது. அந்தத்தீர்க்கதரிசனஞ்சொன்னவர் கேட்டவரென்னப்படுகிறஐவருடைய பெயர், அவர்கள்தந்தையர்பெயர், குடும்பப்பெயர், சமயப்பெயர்முதலியவற்றுள் ஒன்றையாவதுபண்டிதர்தெரிவிக்கவில்லை. இவற்றுளொன்றையுமெவ்வளவுந்தெரிவியாமை அந்தத்தீர்க்கதரிசனஞ்சொன்னவர்கிறிஸ்துவேதகுருவோ, ஒருபக்திமானே; அதைக்கடவுளாலறிந்துசொல்லினரோ அல்லரோ, பண்டிதர்க்குச்சொன்னவர்நிரீச்சுரவாதியோ, பேய்மந்திரவாதியென்ருவது விபசாரகாரனென்ருவது திருச்சபைக்குப்புறம்பாக்கப்பட்டவரோ, அதனுற்கிறிஸ்துவேதத்தின்மேற்பகைகொண்டு இக்கதையைக்கட்டிவிட்டவரோ வென்று உண்மையைவிசாரித்தறியவொட்டாமல் மறைத்தற்குதவுதலால் இதுசூதுமொழியென்றுசொல்லப்படத்தக்கதாயிருக்கின்றது. ஆதலால்இக்கதையாவது இப்படிப்பட்டகதையாவது தேவவாக்காகிய தீர்க்கதரிசனபுஸ்தகங்களைக் கடவுளாலருளப்பட்டவை யல்லவென்றதற்குமாத்திரமல்ல, தீர்க்கதரிசனத்தினதுநிறைவேற்றம் யாண்டும்எச்சமயாநுசாரிகளுள்ளுமுளஎன்றதற்குங்கூடச் சான்ருகாதெனவறிக.

ரு. உ-வது. பண்டிதர்: "விவிலியநூலுட்கூறப்பட்டதீர்க்கதரிசனங்கள் சிலேடசப்தாரூடிகளாகி யெடுத்தபாட்டுக்கெல்லாம் பயன்கொள்ளக்கூடியவைகள். காரியநிறைவேற்றத்தால் அர்த்தமறியப்படுந்தகைமையுடையவைகளைத் தீர்க்கதரிசனமொழியென்னுது சூதுமொழியென்பதன்ருேசிறப்பு!" என்கிருர்.

சு. ௩-வது. சைவசமயகுரவராகிய மாணிக்கவாசகர்சொல்லச் சிவன்கையாலெழுதப்பட்டதென்று சைவராற்சொல்லப்படுந்திருச்சிற்

றம்பலக்கோவையின் பாயிரமாகிய "ஆரணங்காணென்ப ரந்தணர்யோகிய ராகமத்தின்-காரணங்காணென்பர் காமுகர்காமநன் னூலிதென்ப-ரோரணங்காணென்பரெண்ணெழுத்தென்ப ரின்புலவோர்-சீரணங்காய சிற்றம்பலக்கோவையைச் செப்பிடினே" என்னும்பாட்டுப்படி, ஒருபொருளுள்ளஒருநூலை அப்பொருட்பழக்கமில்லாதவர்கள் தங்கள்தங்கள் போக்குப்படி வேறுபொருளுள்ளநூலாகச்சொல்லுத லுண்டல்லோ? அப்படியேகிழவிகள்கதைபோலல்லாம லாழ்ந்தபொருள்கொண்டுள்ள சத்தியவேததீர்க்கதரிசனங்களைச் சரியாகச்சத்தியவேதநூற்பழக்கமில்லாதபண்டிதர்தம்போக்குப்படிச், "சிலேடசப்தாரூடிகளாகி யெடுத்தபாட்டுக்கெல்லாம்பயன்கொள்ளக்கூடியவைக" ளென்றாலும், சத்தியவேதநூற்பழக்கமுள்ள குருக்கள்முதலியஞானசாஸ்திரிகள் அவற்றுள்ளசரியானபொருளைமாத்திரமே யவற்றின்பொருளாகவுணர்ந்துணர்த்துகிறார்கள். இப்படியேயக்காலத்துமுணர்ந்திருந்தமையினாலேதான் கடவுள்மனுஷாவதாரம்பண்ணிச் சேசுநாதராகவருமுன்னேதானே யூதகுருக்கள் முதலியவர்களுந் தங்களுக்கொருஇரட்சகர் இன்னகாலத்தி லின்னவிடத்திலின்னவிதமாகப்பிறப்பாரென்றறிந் துணர்த்தியதுமன்றி, யவனைக்கண்ணாரக்கண்டுவணங்கவும்விரும்பி, அதுவாய்த்தற்குமுன்னர்த்தாம்மரியாமலிருக்கக்கடவுளைமன்றாடி,யவ்வரத்தையுமடைந்திருந்தார்கள். ஆதலால்சத்தியவேதத்துள்ளதீர்க்கதரிசனங்கள் மெய்வேதநூலறிவில்லாமல் வேறுபோக்குடையவர்க்கேயன்றி, அவ்வறிவுடையஞானிகளுக்கு "எடுத்தபாட்டுக்கெல்லாம்பயன்கொள்ளக்கூடியவைக" ளுமல்ல, "அவற்றுட்சிலவன்றிமற்றவைகாரியநிறைவேற்றத்தால் அர்த்தமறியப்படுந்தகைமையுடையவைக" ளுமல்லவெனவறிக.

எ. உ-வது. காரியநிறைவேறுமட்டும் பொருள்வெளிப்படாமல் மறைத்துவைக்கப்படவும் ஒருநிமித்தத்தால்முன்னர்த்தானேயெழுதுவிக்கப்படவும் ஆவசியகமானசிலவற்றைச் சர்வேசுரன்அத்தன்மையோடுமுன்னறிவித்தலை அவருடையசர்வஞானமுதலியவைகளைக்காட்டுந் தீர்க்கதரிசனமொழியென்று வியக்கவேண்டியதிருக்கச் சூதுமொழியென்றல்அறிவாகாதெனவறிக.

அ. ங-வது. பண்டிதர்: "மேலும்யெகோவா ஒருதீர்க்கதரிசிமோசம்போவானாயின் அவனையானேமோசம்போகச்செய்தேனென்கின்றார் (எசே-கச ம். அதி, கூ.) பொய்யின்ஆவியையேவித் தீர்க்கதரிசிகளின்வாக்கைப் பொய்யாக்குகின்றார். (க. இரா. உஉ-ம் அதி. உங.) இஸ்ரவேலரைவஞ்சிக்கிறகடவுளாயிருக்கின்றார். (ஏரே. ச-ம்அதி. க0) தனதுசனங்கள்பொய்யைவிசுவசிக்கும்படி செய்கின்றார்.(உ.தெச. உ-ம் அதி. கக.) அப்படியாயின்இன்னுந்தீர்க்கதரிசனத்தில்விசுவாசமா? நடுவுநிலைமைகுன்றாதுபகர்வீராக" என்கிறார்.

கூ. ஆ-வது. எசேக்கியேல் கச-ம் அதிகாரத்து கூ-ம் வசனத்திற்சொல்லப்படுகிறதீர்க்கதரிசி சர்வேஸ்வரனுக்குவிரோதமாகப் பொய்முதலியவைகளைச்சொல்லி இசறவேலரைவஞ்சித்த அக்கிரமதீர்க்கதரிசிகளிலொருவன். ஆதலாலவனைத்தண்டிக்கிறபோது அவன்சொல்வதுந்தவறும்படிசெய்து அவனைக்கடினமாகத்தண்டிப்பேனென்று

கடவுள்சொல்லுகிறார். (இந்தஅதிகாரத்து க0-ம் வசனத்திலும், இப்பு
த்தகத்து கரு-ம் அதிகாரத்திலுங்காணலாம்.) இதிற்சர்வேசுரனதுநீதி
யும் அவர்மனிதரிடத்துவைத்தஅன்பும் வெளிப்படுகின்றனவேயன்றி
யொருகுறையும்வெளிப்படாமையறிக.

க0. உ-வது. முதல்இராசாக்களின்புத்தகத்தின் உஉ-ம் அதி
காரத்து உரு-ம் வசனத்தில் (கத்தோலிக்குவேதபுஸ்தகத்தின்படிஇரா
ஜாக்களின் ந-ம் புத்தகத்தின் உஉ-ம் அதி. உரு-ம் வச.) சருவேசுரன்
அக்கிரமகாரராகியதீர்க்கதரிசிகளையும் இசறவேலரசனையுந் தண்டிக்கும்
பொருட்டு, அந்தத்தீர்க்கதரிசிகளதுசொல்லையுந் தவறுக்குதற்குச்செ
ய்த்துசொல்லப்பட்டிருக்கின்றது. (இவ்வசனத்துக்குமுன்னுள்ளவசன
ங்களிலும், முன்னுள்ளஅதிகாரங்களிலுங்காணலாம்.) இதிற்சருவேச
னதுநீதிவெளிப்படுகிறதன்றியொருகுறையும்வெளிப்படாமையறிக.

கக. ந-வது. எரேமியாவின்தீர்க்கதரிசனபுஸ்தகத்தின் ச-ம்
அதிகாரத்து க0-ம் வசனத்தில் "ஐயோஆண்டவராகியகடவுளே! அப்
படியானால் உங்களுக்குச்சமாதானமிருக்குமென்றுசொல்லி யிந்தச்ச
னங்களையும்எருசலேமையும்வஞ்சித்தீர்; இதோபட்டயம் பிராணன்ம
ட்டுமெட்டியிருக்கிறதேயென்று நான்சொன்னேன்" என்றிருக்கிறது.
இது: தம்முடையஜனங்கள் துர்க்கிரியைகளினால் தம்மைப்பிரிந்திருக்
கக்கண்டு, நீங்கள்மனந்திரும்புங்கள் நாம்கிருபையுடையோம், நம்மு
டையகோபமுங்கள்மீதி லிறங்கப்பண்ணோமென்று சொல்லியிருந்தசர்
வேசுரன், மீளவுமவர்கள்முன்னினுமதிகமாக அக்கிரமங்களையேசெய்
கிறதைக்கண்டு, அவர்கள்இனியேனும்மனந்திரும்பாவிடில் அவர்களைத்
தண்டிப்போமென்று எரேமியாதீர்க்கதரிசிக்குச்சொன்னபோது, அந்
தத்தீர்க்கதரிசி சர்வேசனைநோக்கிச்சொன்னவாக்கியமாம். (இந்தஅதி
காரத்திலும் ந-ம் அதிகாரமுதலியவற்றிலுங்காணலாம்.) இதன்கருத்
தென்னவெனின், நீர்இவர்களிடத்துமுன்னேகாட்டின தயைக்குரியவா
ர்த்தையின்படியேதான் இப்போதும் இவர்களைத்தண்டியாமலிருக்கவே
ண்டும். உம்முடையநீதியின்படி தண்டிக்கவேண்டாமென்று புத்திர
சுதந்தரத்தோடுமன்றாடினதாம். இதிற்சர்வேசுரனதுநீதி, விசேஷதயை,
அவரடியாருக்குள்ளசுதந்தரம் வெளிப்படுகின்றனவேயன்றி யொருகு
றையும்வெளிப்படவில்லையெனவறிக.

கஉ. ச-வது. அர்ச். சின்னப்பர் தெசலோனிக்கேயருக்கெ
ழுதின உ-ம் நிருபத்தின் உ-ம் அதிகாரத்து கக-கஉ-ம் வசனங்களில்
"ஆகையால்சத்தியத்தைவிசுவசியாமல் அநீதியிற்பிரியப்படுகிறயாவரும்
ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள்பொய்யைவிசுவசிக்கத்த
க்கதாகக் கொடியவஞ்சகத்தைத் தேவன்அவர்களுக்குஅனுப்புவார்"
என்றிருக்கிறது. இதில "அவர்கள்பொய்யை விசுவசிக்கத் தக்கதாகக்
கொடியவஞ்சகத்தைத் தேவன்அவர்களுக்குஅனுப்புவார்" என்றதற்கு
இந்நூலையெழுதியவரது சொந்தப்பாஷைநடையின்படியேயும் கிரேக்
குப்பாஷைநடையின்படியேயும், அவர்கள் பொய்யைவிசுவசிக்கத்தக்க
தாகக் கொடியவஞ்சகமுள்ளது அவர்களிடத்தில்வரும்போது, தேவ
ன்தடுக்கமாட்டார் என்பதேபொருளாம். இது தமிழ்ப்பாஷைநடையு

மாம்: "மறந்தும்பிறன்கேடு சூழற்கசூழி னறஞ்சூழுஞ்சூழ்ந்தவன்கேடு" என்னுங்குறளுரையில் "அறக்கடவுளெண்ணுதலாவது: அவன்கெடத் தானீங்கநினைத்தல்" என்றிருத்தல்காண்க. இது, சிவன் விஷ்ணுவைப் புத்தனாகவனுப்பி அநேகரைவஞ்சித்ததுபோன்றதன்றாகி, இதிற்சர்வே சுரனுடையநீதி வெளிப்படுகிறதன்றி, யொருவஞ்சிப்பும்வெளிப்படவி ல்லையெனவும், ஆதலாற்பண்டிதர்: சத்தியவேதத்துள்ளதீர்க்கதரிசன புஸ்தகங்கள் கடவுளாலருளப்பட்டவையல்லவென்றுகாட்டற்கு இந்த வேதவாக்கியங்களையெடுத்துக்காட்டியதறியாமையெனவுமறிக.

கங. உ. பண்டிதர்: பின்னும்பழையவேற்பாட்டுக்குக் குற்றங் கூறநினைந்து, ௲-வது. "பூமி சிருட்டிக்கப்பட்டு நாளதுவரைக்கும் ஐயாயிரத்தெண்ணூற்றுச்சில்லறைவருடஞ்சென்றனவென விவிலியநூ ல்கூறப், பதினாயிரம்வருஷங்களுக்குமுன் கல்லுருவாய்மாறியவென்பு களும் வாயுதேயுகளின்சக்தியால்விகாரமுற்றிக் கல்லின்றன்மைபெற்ற கனிவர்க்காதிகளும் பூமியினகத்துக்காணப்படுதல் தாயின்சவலைப்பிரா யத்தில் அவள்மைந்தன்அவளைத்தாராட்டிவளர்த்துக், கன்னிகாபரு வத்தில் மன்றல்முற்றுவித்தனனென்னுங்கதைபோலிருக்கின்றதே. உ ருவும்வடிவுமில்லா திருட்பிழம்பிலும் சலசமாசத்திலு மமிழ்ந்திக்கி டந்ததன்றி அந்நாளில்முழுவதும்தோற்றியதல்லவெனின், மிருகாதிக ளும் கனிவர்க்கங்களும் வந்ததெங்ஙனே? சரம்அசரம்பொருந்தி யொ ருகாலத்துநடைபெற்றிருந்தபூமியைச் சம்ஹாரஞ்செய்து, பின்னர்இந் நூலுட்கூறியசிருஷ்டியைத் தோற்றுவித்ததெனின், வாயுதேயுமுதலி யபூதங்களை யழித்துச்சிருட்டித்ததென்னே? அப்பிரயோசனசம்ஹார சிருட்டி ஆதிபகவனின்ஞானத்துக்கீனமல்லவா? சாத்திரத்தைச்சுட் டுச் சதுர்மறையைப்பொய்யாக்கியென்று சந்திகடோறுமுந்திநெளித்த லையொழித்துச், சாத்திரத்தால்யேகோவா தந்தமறைபொய்யாகிக் க்ஷே த்திரத்தினீர்மைகெடும் என்றல்லவோ விவிலியாநுசாரிகள்புலம்பல் வேண்டும்" என்கிறார்.

கச. ௲-வது. பூமிசிருட்டிக்கப்பட்டுநாளதுவரைக்கும் ஐயாயி ரத்தெண்ணூற்றுச்சில்லறைவருடஞ்சென்றனவெனவிவிலியநூல் கூற வில்லையெனவும், அதிற்சொல்லப்பட்டிருக்கிற பரம்பராமுதலியவற்றை முன்னும்பின்னுந்தள்ளிக்கணக்கிட்ட சாஸ்திரிகள் அப்படிச்சொல்லியி ருக்கிறார்களெனவும், அவைகளைநுட்பமாகவாராய்ந்து கணக்கெடுத்த கிறிஸ்துவசாஸ்திரிகள்மனிதர்சிருட்டிக்கப்பட்டுச் சேசுநாதர்ஜனனம்வ ரைக்கும் எண்ணாயிரம்வருஷங்களாயினவென்கிறார்களெனவுமறிக.

கரு. உ-வது. பதினாயிரம்வருஷங்களுக்குமுன்னேதானே கல் லுருவாய்மாறியஎன்புகளும் கனிகளாதிகளும் பூமியினகத்துக்காணப் படுகின்றனவென்றுசொன்ன பிருதிவித்துவசாஸ்திரியாவர்? அவர்இப் படிச்சொல்லியபிருதிவித்துவசாஸ்திரம் எந்தச்சாஸ்திரசங்கத்தா லங் கீகரிக்கப்பட்டது? இவைகளைவெளிப்படுத்தி இந்தச்சாஸ்திரியென்பவர் சாஸ்திரிதான், இந்தச்சாஸ்திரம் ஒருநோக்கநிமித்தங்கோணிச்சொல் லப்பட்டதன்று. இன்னசாஸ்திரசங்கத்தா லங்கீகரிக்கப்பட்டதுதானெ ன்று நியாயங்களால் மெய்ப்பிக்குமுன், பச்சைமண்குதிரையைநம்பி

யாற்றிலிறங்கினதுபோலவும், பாற்சமுத்திரம், தயிர்ச்சமுத்திரம், நெய்ச்சமுத்திரம், கருப்பஞ்சாற்றுச்சமுத்திரம், தேன்சமுத்திரம், அச்சுவினிமுதலியபெண்கள், சந்திரனுகியபுருடன், முதலியவைகளையறிவிக்கும் பூமிசாஸ்திரவானசாஸ்திரங்களைநம்பிப் புராணங்களெழுதப்புகுந்தவர்களைப்போலவும், பதினுயிரம்வருஷத்துக்குமுன் கல்லுருவாய்மாறின என்பும்கனிவர்க்காதிகளும்பூமியிலகப்படுகின்றனவென்னும் பிருதிவித்துவசாஸ்திரத்தைநம்பிப் பண்டிதர்சத்தியவேதநூற்கண்டனத்திலிறங்கியது புத்தியன்றெனவறிக.

கசு. ௩-வது. பிருதிவித்துவ (ஜியாலொஜிகல்) சாஸ்திரிகளினரசாகியகுவியெர் (Cuvier) என்பவர், பிராஞ்சு சாஸ்திரசங்கத்துக்கு க௮0சு-ம்வருஷத்தில் எழுதின (ரிபோர்ட்டில்) செய்தியில்: “பிருதிவித்துவ”) சாஸ்திரத்துக்கு உள்ளகாரியம் (Fact) மாத்திரமே அஸ்திவாரமாய்இருக்கவேண்டும். அப்படிப்பட்ட அஸ்திவாரம்போடாமல் அந்தச்சாஸ்திரத்தை வீண் எண்ணங்களின் காரியமாகியசாஸ்திரமாக மாற்றிவிட்டார்கள். ஆதலால்இப்போதுசிரிப்புவராமல் பிருதிவித்துவசாஸ்திரமென்கிறபெயரை யுச்சரிக்கக்கூடாமையாயிருக்கிறது. இப்போதுபிருதிவித்துவசாஸ்திரஏற்பாடு (ஜியாலொஜி System) ௮0-உண்டு. நிதமும்சிலஏற்பாடுகள் புதியனவாயுண்டாகிறதையுங்காண்கிறோம். அந்தஏற்பாடுகளை உண்டுபண்ணினவர்கள் தங்களுக்குள்ளேபண்ணுகிறதர்க்கம் முடியாமற்போகிறதற்கு முகாந்தரம்யாதெனின், அவைகளில் ஒன்றுமெய்யாயிருந்தாலும் அதனுடையநிசத்தையறியஒருவருக்கும்வழியில்லை. ஒருகாரியம் (Fact) ஒருகாரணத்தினுலேயுண்டாயினதாவென்றறியக் காரணத்தினுடையஇயல்பையும், அந்தக்காரியத்தைச்சார்ந்த சகலத்தையும்அறியவேண்டும். அப்படியிருக்கப், பிருதிவித்துவசாஸ்திரவேற்பாட்டினை யுண்டுபண்ணுகிறவர்கள் தாங்கள்அறியாதகாரியங்களுடையகாரணங்களைத் தேடுகிறவர்களா யிருக்கிறுர்களேயல்லாமல் வேறென்ன? இப்படிச்செய்கிறதைவிடச் சிறுபிள்ளைத்தனமுண்டோ? பூமியினியல்பையும் அதன்உள்ளொழுங்கையும் அறியாதிருக்கிறோம் என்பதுபோதாது, அதனுடையமேல்தோலி னியல்பைமுதலா யறியாதிருக்கிறோம். அந்தப்பிருதிவித்துவசாஸ்திரவேற்பாடெல்லாம் ஆகாசத்தில்கட்டுகிறஅரமனைபோலே, தானேகலைந்துபோகின்றன” என்று சொல்லியிருக்கிறுர்.

கஎ. பவ்வொன்(Buffon)என்னும்பிராஞ்சுபிருதிவித்துவ (ஜியாலொஜிகல்) சாஸ்திரியானவர் (Theory de la Terre) பூமிசாஸ்திரத்தின் முதற்காண்டத்தில்: “பிருதிவித்துவசாஸ்திரவேற்பாடு (ஜியாலொஜிகல்சிஸ்டெம்)எல்லாம் எத்தன்மையவெனின், இப்படியாவது அப்படியாவதுஇருக்கலாமென்கிற வெறுந்தோற்றங்களொழிய மற்றப்படியல்ல. ஒவ்வொன்றின்மேலும் மனேகற்பிதமா (Imagination) யாயிரங்கதைகளையுண்டுபண்ணலாம். அப்படியுண்டுபண்ணுகிறவர்கள் அந்தக்கதைகளையே பிருதிவித்துவ சாஸ்திர மென்று சொல்வார்கள்!!!” என்று சொல்லுகிறுர்.

கஅ. ஒருபிருதிவித்துவ (ஜியாலொஜிகல்) சாஸ்திரி பூமியானது ஆதியில்நீராளமாயிருந்து பின்இறுகி யித்தன்மையாயிருக்கிறது. ஆத லால் "பூமியின்நடுவில நீரிருக்கு" மென்கிறார்-மற்றொருவர் "பூமிஅக் கினிநீராளமாயிருந்து பிறகுஇறுகிற்று. ஆதலால்நடுவில்அக்கினியிருக் கிறது. புகையாய்ப்பறந்தவையெல்லாம் நக்ஷத்திரங்கள்முதலியவாயி ன" என்கிறார். பிருதிவித்துவசாஸ்திரங்கள் இத்தன்மையவானால், இ தைநம்பிக் கிறிஸ்துவேதகண்டனத்தில்நுழைவ தறிவாமா?

கக. இன்னமும் புரே (Bouree) என்கிறபிருதிவித்துவசாஸ்திரி யோவெனின்: "இக்காலத்தில்பிருதிவித்துவசாஸ்திரத்தை (Geology) நன்றாயாராய்ந்துபார்க்குமளவில், அதுஎவ்விதமாக இருக்கிறதெனின், மோசேயென்பவர் வேதத்திலெழுதிவைத்திருப்பதற்கு ஒருபொருளட் டவணைபோலிருக்கிற"தென்று சொல்லுகிறார் (Le Monde Jan. 1873.)

உ0. பிருதிவித்துவசாஸ்திரத்திற்சொல்லப்படுகிற எல்லாவற்றை யும் உள்ளகாரிய (Fact) மாகநம்புதல் பிசகென்பதற்கும், அதில்விசே ஷமாக, மோசேயெழுதியசத்தியவேதாகமத்திற் சொல்லியவற்றிற்குப் பொருளட்டவணைபோலிருப்பவைமாத்திரமே உள்ளகாரியமாமென்பத ற்கும் நியாயங்காட்டினோம். இனிப் பதினாயிரம் வருஷத்துக்குமுன் கல்லுருவாகமாறின மிருகத்தினென்பும்கனிவர்க்காதிகளும் பூமியினு ளிருந் தகப்படுகின்றனவென்பதையேற்றுக்கொண்டாலும் அதனாலே சத்தியவேதத்துக்கு விரோதமில்லையென்பதற்கும்நியாயங்காட்டுவோம்:

உக. கிறிஸ்துவசாஸ்திரிகள் மனிதசிருட்டிமுதல் சேசுக்கிறிஸ் துநாதர்ஜனனமட்டும் அ000ஆண்டு ஆயினவென்கிறானென்பது முன்னே சொல்லினோமல்லோ? இவற்றோடுசேசுக்கிறிஸ்துநாதர் பிறந்தபின்னரா யின இந்த கஅகூக வருடமுங்கூட்ட கூஅகூக ஆண்டு ஆயின. அல்லாம லும், சத்தியவேதம்உலகசிருட்டியைக்குறித்துப்பேசுகையில், முதலா ம்நாளாயிற்று இரண்டாம்நாளாயிற்றுஎனச் சும்மாசொல்லாமல், சாயங் காலமும்விடியற்காலமுமானதினால்என்பதும் அவற்றின்முன்வைத்துச் சொல்லுதலால் அந்தஒவ்வொருநாளும்இக்காலத்துநாழிகைநாள்போன் றதன்றென்று நிச்சயிக்கவேண்டியிருக்கிறதல்லோ? ஆலதாலும் இன் னும்பலநியாயங்களாலும் சாஸ்திரிகள்அந்தவொவவொருநாளும் அநே ககாலத்துக்கொத்ததென்று சொல்லியிருக்கிறார்கள். ஆதலால்பதினா யிரம்வருஷத்துக்குமுன்கல்லாகமாறின மிருகத்தினென்பும்கனிவர்க்கா திகளும் பூமியினுள்ளிருந்திப்போதகப்படுகின்றனவென்பதை யேற்றுக் கொளினும், இதற்குச்சத்தியவேதஞ்சொல்லியது விரோதமாகாதென வும்; ஆதலால், "சாத்திரத்தாலேகோவா தந்தமறைபொய்யாகிக் கேத் திரத்தினீர்மை கெடும்" என்பதறியாமையெனவும், அகஸ்தியர் ஆறெ ழுத்தந்தாதியிற்சொல்லியபடி "சாத்திரம்வேதஞ் சமயம்வண்ணாத்தித் தண் ணீரில்விட்ட-மூத்திரம்போம்படி போமனனே" என்றுபண்டித ரோபுலம்பல்வேண்டுமெனவுமறிக.

உஉ. ரு. பண்டிதர்: உ-வது. "ஆரரத்துமலையினுமிகச்சிறியன வாய நெருப்புமலைகள் பூமியிற்பலவுள. காலத்துக்குக்காலம்அவற்றாற் கக்கப்பட்டகீச்சுக்கட்டங்கள் அவ்வவ்விடத்திற் படைபடையாய்க்கிடக்

கின்றன. அவற்றுட்டண்ணீரில்மிதக்குந்தன்மையுடைய லேசானபொருள்கள் பலவுண்டு. பிருதிவித்துவசாஸ்திரத்தினால் அப்பொருள்களில் அநேகம் விவிலிய நூலிற்கூறப்பட்ட சலப்பிரளயகாலத்திற்குமுன் கக்கப்பட்டனவென்பது பூரணமாய்ச்சாதிக்கப்படுமாதலிற், சலப்பிரளயத்தின்றன்மை குன்றிப்போகவில்லையா? இதற்குச்சமாதானங்கூறும்ஆசிரியர்பலர் தம்மாற்கூறப்படுஞ்சலப்பிரளயம் பூமிமுழுவதும் பரவியதன்றெனவுரைப்பர். ஆராத்தினையொத்தமலைக்குப் பதினைந்துமுழத்திற்கு மேலே மிதந்தபிரவாகம்பூமிமுழுவதும்பரவாதுவின் றடங்குமாவென்பதைச் சலத்துவசாஸ்திரவிபுணரிடம் அவ்வாசிரியர்கற்றுணர்வாராக. தரைக்குமேலெழும்பியவெள்ளஞ் சமத்துவநிலைகண்டன்றியொடுங்குமா" என்கிறார்.

௨௫. பிருதிவித்துவசாஸ்திரத்தின்தன்மையை ௧௫-வது முதலியஇலக்கங்களிற்காட்டினோம். இதுநிற்க, சிலமலைகளிலேயுண்டாயிருக்கிறகணவாய்கள் இயல்பாயுண்டானவைகளல்ல. இப்போதையநீரோட்டத்தாலுண்டாகிறவைகளுமல்ல வேறெதனாலுண்டாயின? தாமுண்டானமலைகளுக்குவெகுதூரத்திற் பாறைகளகப்படுகின்றன. சமுத்திரத்துமணலுங் கிளிஞ்சிலுஞ் சமுத்திரத்துக்குவெகுதூரமான பலவிடங்களில் மனிதராற்கொண்டுவரக்கூடாதமிகுதியாயிருக்கின்றன. வடசீமையிலேயில்லாத காண்டாமிருகம், யானை, ரினோசெரோஸ் (Rhinoceros) என்னுமிருகம், எருமைமுதலானவைகளும் அவைகளின்உறுப்புகளும்அங்கே அகப்படுகின்றன. ஒன்றாய்ச்சேருகிறதற்குவழியிராதகெபியிலே கிளிஞ்சில், புலியெலும்பு, சிங்கம், யானை, ரினோசெரோஸ் (Bhinoceros) கரடி, மாடு, குதிரைமுதலியபுல்லுத்தின்னுமிருகங்கள் முதலியவற்றினெலும்புகள் ஒருமிக்கக்கலந் தகப்படுகின்றன. இவையெல்லாமொன்றாய் அடைதல்கூடாது. (இவைகளில் துஷ்டமிருகங்களினெலும்பு அதிகம்.) பேவியேர் (Baviere) என்றராச்சியத்திலேகைலென்ரொயூத் (Gailenreuth) என்கிறகெபியிலே இவைகளைப்பார்க்கலாம். இப்படிப்பட்டவைகள் ஓரிடத்தில்மாத்திரமல்ல, பூலோகமெங்குமகப்படுகின்றன. மேலும்இவைகளெல்லாம்அகப்படுகிற உயரத்தைப் பார்க்குமிடத்து, ஜலத்துவசாஸ்திரப்படி, ஜலம் பூமியையெல்லாமூடியிருத்தல்வேண்டும்.

பிருதிவித்துவசாஸ்திரிகளினரசாகிய குவியெர் (Cuvier) என்பரோவெனின்: பொலைப் (Polipe) மலைவளருகிறதிட்டத்தையும், கெபிகளிலேநீர்க்கசிவுக்கல்லுகள் வளர்கிறதிட்டத்தையும், முகத்துவாரத்தினால் சமுத்திரத்தில்மணல்வளருகிறதிட்டத்தையும், இலைமுதலியவற்றின்மண்வளருகிறதிட்டத்தையும், இவைமுதலியவைகளையும்பார்க்கும்போது, பிருதிவித்துவ சாஸ்திரத்தில் ஒன்றுநிச்சயமாயிருக்கிறதென்றுஸ்தாபிக்கவரின், ௫000-௬000 வருஷத்துக்குள்ளேதான், ஒருகுழப்பமிருந்திருக்கவேண்டுமென்கிறார்.

இவைகளெல்லாஞ் சலப்பிரளயம் உண்டாயிருந்ததை மெய்ப்பிக்குஞ்சாக்ஷிகளாயிருத்தலால் சத்தியவேதத்திற்சொல்லப்பட்ட ஜலப்பிரளயத்தன்மை குன்றிப்போகவில்லையெனவும், "பாலன்றனதுருவா

யேழுலகுண்டாவிலையின்-மேலன்றுகண்டுயின்றாய் மெய்யென்பர்-ஆல
ன்று-வேலைநீருள்ளதோ விண்ணதோமண்ணதோ-சோலைசூழ்குன்றெ
டுத்தாய் சொல்" என்றஇறந்தவினை விலக்கலங்கார வுதாரணப்பாட்டுப்
படிச், சைவசமயத்துக்குரிய ஜலப்பிரளயம் பொய்யாகி அதன்தன்
மையே குன்றிப்போயினதெனவுமறிக.

௨௪. ௪. பண்டிதர், ௩-வது: "சந்திரசூரியநட்சத்திரங்களைத்
தேவன்நாலாம்நாளிலேஉண்டுபண்ணினுரென்னும வாக்கியத்திற்கு விவி
லியவியாக்கியானுசிரியர்கள் * சந்திரசூரியநட்சத்திரரின்பிருதிவித்துவ
மாதியிற்படைக்கப்பட்டுக்கிடந்தனவென்றும், முன்முதலாநாட்படைக்
கப்பட்டுப் பூமிமுழுவதும் வியாபித்திருந்தஒளியைத் தேவன்நாலாநா
ளிலேதிரட்டிச் சந்திரசூரியநட்சத்திரங்களில்வைத்தனரென்றும், இந்
நாளில் அவைகள்நமக்குத்தோற்றுமாறு முதன்முதல் நாலாநாளிலேபூமி
க்குத்தோற்றினவென்றும் பொருள்கூறுவர். † சந்திரசூரியர்அவ்வாறு
தோற்றினமை நமக்குப்புலப்படுகின்றது. நாலாநாளில்ஒளிபெற்றநட்ச
த்திரங்கள் எத்தனைவருஷங்களின்பின்புபூமியிற் காணப்படலாமென்ப
தைக், ககோளசாஸ்திரிகளிடங்கற்றறிந்து, நாலாநாளினட்சத்திரச்
சிருட்டிப்புப் பொய்யென்றுணர்வாராக" என்கிறார்.

௨௫. அரகோ (Arago) என்னும்பிராஞ்சுவானசாஸ்திரி, நக்ஷ
த்திரத்தின்கதிர்பூமியில்வர அநேகவருஷகாலஞ்செல்லுமென்றுசொன்
னபோது, ஒருமாணுக்கன் உங்கள்கணக்குச்சரியாயிருந்தாலவேதபுத்த
கக்கணக்குப் பிசகுமேயென்றுகேட்டார். அதற்குஅவர்மீளவும, நட்
சத்திரங்களைப்படைத்தவருக்கு உடனேதெரியும்ஒளி கொடுக்கத்தக்க
நக்ஷத்திரங்களைப்படைக்கத் தெரியாமற்போய்விட்டதோ? என்றார்.

இப்போது நக்ஷத்திரவொளி கொஞ்சங்கொஞ்சமாகத் தானேயிற
ங்குகிறதெனின், இப்போதையமனிதர்சரீரம் வித்தினின்றுகொஞ்சங்
கொஞ்சமாய்வளர, அப்படியேகொஞ்சங்கொஞ்சமாக இவர்புத்தியுமவ
ளர்கின்றது. இவ்விதமாக அப்போதையமனிதர்படைக்கப்படவில்லை
யல்லோ? அதுபோலவே அன்றுமற்றநக்ஷத்திரங்களைக் கொஞ்சங்கொ
ஞ்சமாகக் கதிரிறங்கத்தக்கவிதமாகப்படைத்தகடவுள் அன்றுவேண்
டியமட்டும் அன்றேதெரியத்தக்கவொளியோடும் படைத்தனரெனவும்,
இந்தப்பண்டிதரும் அரகோவென்னும்வானசாஸ்திரியின் மாணுக்கராா
யிருப்பின், இவருக்கிதுவிஷயத்தி லிவ்வளவுவிபரீதமுண்டாயிராதென
வுமறிக.

௨௬. ரு. பண்டிதர், ௪-வது: "சாயங்காலமும் விடியற்காலமு
மானதால்முதலாநாளாயிற்று. அவ்வாறேஇரண்டாநாளாயிற்று. அவ்வா

* சந்திரசூரியநட்சத்திரர், † சந்திரசூரியர். என்றுயர்திணையிலிம்மொழி
களைப் பண்டிதரிங்கேகூறியது: சந்திரன் தேவகுருவின்மனைவியைத் தன்னி
டத்துக்குக்கூட்டிக்கொண்டுபோய் அவளாற்புதனென்னும்ஒருபுத்திரனைப்பெற்
றனனென்றும், சூரியனுக்குக் காளிந்திஎன்னும்புத்திரியுமுண்டென்றும், தக்க
னுடையஇருபத்தேழுபெண்களாகிய நட்சத்திரங்களில் கார்த்திகைநட்சத்திரம்
சுப்பிரமணியராகிய ஆறுகுழந்தைகளுக்குப் பால்கொடுத்த ஸ்திரியென்றுஞ்
சைவபுராணுதிகள்சொல்லும் கதைகளைநம்பினதனுலாக்கும்.

றேமூன்றுநாளுமாயிற்றெனக்கூறப்படுகின்றது. முதனாளில்சிருட்டிக்கப்பட்டஒளியானது நாலாநாள்வரைக்கும் பூமிமுழுவதும்வியாபித்திருந்ததேல் முதல்மூன்றுநாளு மிரவுபகலுண்டுபட்டதெவ்வாறோ? பூமிமுழுவதும்வியாபித்திலது, ஒருசாரிருளும் ஒருசார்ஒளியுமாயெல்லைப்பட்டுக்கிடந்தனவெனின், இருளிருந்தஇடத்திலொளியும் ஒளியிருந்தஇடத்திலிருளும்மாறிவந்ததெப்படி? பூமியுருளும்போது அதன்மேலிருந்தஒளியும்இருளும் அதனோடுகூடச்செல்லாதுநிற்குமாளென்பதை விஞ்ஞானசாஸ்திரிகளிடங்கற்றறிக. மேலும்அவ்வாறெதிர்த்திருந்தனவென்றாற், பூமிதன்சூரியச்சுற்றோட்டத்தால் அவற்றைநீங்கிச்செல்ல, இரண்டாமூன்றுநாளில் ஒளிமுற்றுமகன்று, பூமி பழையபடியிருட்பிழம்பிலமிழ்ந்திப்போகுமல்லவா?" என்கிறார்.

உஎ. ஒளிபூமிமுழுதும்ஓடிச்சுற்றிவந்திருந்தாலும், ஒளி அந்தரத்திலே ஓரிடத்துநிற்கப்பூமியேயுருண்டிருந்தாலும், சாயங்காலமும்விடியற்காலமு முண்டாகுமெனவும், இவ்வாறுதான் மூன்றுநாளு மிரவுபகலுண்டுபட்டனவெனவும், இப்படியுண்டுபடுமோவென்று பண்டிதரோயொருவிஞ்ஞானசாஸ்திரியிடத்துக்கேட்டறிதல் உத்தமமெனவும், தக்கன்யாகசாலையிலிருந்துசூரியன்பல்லுடைபட்டபோதும் சந்திரன்காலினாலேதேய்க்கப்பட்டபோதும் இரவுபகலுண்டுபட்டவிதத்தைப் பண்டிதர்சொல்வதுநலமெனவுமறிக.

உஅ. கூ. பண்டிதர் ரு-வது: "பூமியின்கடுமையால்வாடிய பயிர்வகைகளுக்குப் பனியையனுப்பிச் சீதளமுண்டுபண்ணினராமே. கழனியிற்பயிரிடும்பள்ளருக் கிதுசம்மதமாமா? சூரியகாந்தியால்மூன்வரண்டுபோன வெப்பமானதரைகள்தானுங் கால்வாய்களினால் நீர்பாய்ச்சப்பட்டுச்சேறுகுங்கால், வெகுநாட்சேறாய்க்கிடக்கின்றனவே. சலசமாசத்தில்அமிழ்ந்தி நீர்த்துப்போய்க்கிடந்தபூமி நாலைந்துதினத்திற்குள்ளாகக் கடுந்தரைகாட்டிப் பயிர்வகைகளைவாட்டியது பேரதிசயம்! பேரதிசயம்!!" என்கிறார்.

உகூ. சர்வேசுரன்தண்ணீரைப்பூமியினின்றுவேறுபிரித்தபோதே (மோசேமுதலாகமத்தின்முதலதிகாரத்து கூ-ம் வசனம்) பூமிவறண்டுபோகவேண்டியிருக்க, நாலாந்தினத்தில்வறண்டிருந்ததைக்குறித்து இவர்ஆச்சரியப்படுகிறதைப்பார்க்கும்போது, இவருக்குஆச்சரியப்படுகிறதன்மை வழக்கமென்றுதோன்றுகின்றது. பண்டிதர் இதுவிஷயத்திலாச்சரியப்படுகிறதைவிட்டுச், சகரர்சமுத்திரத்தைத்தோண்டினவிஷயத்திலும், அதைக்கும்பமுனி யுள்ளங்கையி லுழுந்தினளவாக்கியுண்டு, மூத்திரமாகமறுபடிவிட்டவிஷயத்திலும் ஆச்சரியப்படின், அதுசிறப்பாமெனவறிக.

௩௦. எ. பண்டிதர், கூ-வது: "ஆதியாகமத்தில் முதலாநாளிரண்டாநாளெனப்பட்டன வோரோர்தினமன்று, பலநாட்டொகுப்பெனச் சமாதானங்கூறுமாசிரியரே! சாயங்காலமும் விடியற்காலமுமானதா லோர்நாளாயிற்றுஎன வெளிப்படையாய் ஒரொருதினமேகுறிக்கப்பட்டதன்பொருளை நீவிர்மாற்றியது உமதுவேதமொழி உமக்கே ஒவ்வவில்லையெனத் தூற்றியதாகுமே. இதைவிட்டு அவ்வுரை

பொய்யென்பது தெளிவென்றுபோற்றுமின்! வெளிதின்றுசாற்றுமின்!!" என்கிருர்.

௬௧. கிறேக்குப்பாஷையில்நாள்என்பதற்கும் காலம்என்பதற்கும் பொருள்ஒன்றேயாம். * கீழ்த்திசைத்தேசங்களிலும்இச்சொற்களுக்கு இப்பொருளே வழங்குகின்றதென்று சாஸ்திரிகள் சொல்லுகிருர்கள். அர்ச். அகுஸ்தீனும்வேதத்திற்ருனேபலவிடங்களில் நாளென்பதுங்காலமென்பதும் ஒருபொருளில்வருகின்றனவென்று சொல்லியிருக்கிறர். ஓர்நாளாயிற்றென்றுவாளாகூருமல், சாயங்காலமும்விடியற்காலமுமானதனுல் ஓர்நாளாயிற்று, என்றிங்கேகூறப்பட்டிருக்கின்றது. இக்காரணங்களினுலே இந்நாட்களை ௬௦ நாழிகை நாட்களாகக்கொள்ளாமற் காலத்தொகுப்புகளாக கொள்ளுதல் நியாயமானதாகவே யிருக்கின்றது. ஆயினும்இந்நாட்களைக் காலத்தொகுப்புகள்தானென்று நாங்களுறுதியாய்க்கொள்கிறதில்லை. பிருதிவித்துவசாஸ்திரமென்பது வீண்தோற்றத்தை யுள்ளகாரியம்போல் எடுத்துக்கூறுநூலென்று மெய்ப்பிக்கப்பட்டதனுல், காலத்தொருப்பென்றுநாங்களுறுதியாகக்கொள்ள ஆவசியகமுமில்லை. ஆதலால், கிறிஸ்துவர் சிருட்டிவிஷயமாகச் சத்தியவேதத்திற்சொல்லப்பட்டிருக்கிறநாட்களைக் காலத்தொகுப்பென்பது அம்மொழிஅவர்க்கேசரிப்படவில்லையென்று மாற்றியதன்றெனவும், பண்டிதர்முதலியசைவர்கள்: பிரமா விட்டுணு முதலியவர்கள்சண்டைமுதலியவைகளை ஆதியில்ரூபகாலங்காரமுதலியவாகச் சொல்லப்பட்டவையேயன்றி யதார்த்தமானவையல்லவென்றதும், இவற்றையதார்த்தமானவைகளென்றுகொண்ட சைவஞானசாஸ்திரிகளை அறிவிலாப்பேதைச்சனங்களென்றதுமுதலியவைகளுமே அவர்கள்வேதமொழி யவர்களுக்கேபொவ்வவில்லையெனத் தூற்றியதாகுமெனவுமறிக.

௬௨. அ. பண்டிதர், எ-வது: "ஆதியாகமம் ௪௬-ம் அதிகாரம், யாத்திராகமம் க-ம் அதிகாரமுதலியபலவிடங்களிற் கானனிலிருந்து எகிப்திற்குப்போன யாக்கோபின்சந்ததியார் ௬௬-பெயரெனவும், யாக்கோபையும் அந்நாளில்எகிப்திலிருந்த அவன்மகனுகியயோசேப்பையும் பிள்ளைகளையுஞ்சேர்த்து எ௦. பெயரெனவும் பரிஷ்காரமாகக்கூறப்பட்டிருப்பதுமன்றி, அவ்வெழுபதுபெயருடையபெயரும் இன்னதுஇன்னதென்று தெளிவாகச்சொல்லப்பட்டிருக்கின்றன. யூதாவின்பௌத்திரராகிய எத்சரோனும்ஆமூலும் அவர்களில்இருவராம். யோசேப்பு பார்வோனின்மந்திரியானபொழுதுஅவன்வயது ௩௦, அதற்கு ௯-வருஷத்தின்பின் யாக்கோபுங் குடும்பமும் அவனிடம்போனுர்கள்; ஆகவே அவர்கள்போனபோது அவன்வயது ௩௯. யாக்கோபுஇரண்டும்மனைவியையும் விவாகம்பண்ணியபின் ௪-ம் வருஷத்தில்யூதாவும் எ-ம் வருஷத்தில்யோசேப்பும்பிறந்ததனுல், யூதா யோசேப்பிற்கு மூன்றுவருஷத்திற்குமூத்தவன். ஆதலால், எகிப்துக்குப்போனபோது யூதாவுக்குவயது - ௪௨. யோசேப்பு இஷ்மவேலருக்குவிலைப்பட்டபோது அவன்

* தமிழிலும் நாள் என்பதும்காலம் என்பதும் ஒரேபொருளில்வழங்குகின்றன: "அந்தநாள்வந்திலையருங்கவிட்புலவோ யிந்தநாளுெந்துவந்தெனையடைந்தால்" என்னுங்குமுணராஜாவினகவல்முதலியவற்றிற்காண்க.

வயது - கஎ. யூதாவுக்கு - உ௦. யூதாவுக்கு அப்போகலியாணமில்லை. யோசேப்புவிலைப்பட்ட அந்நாட்களில் (அதாவதுஉடனேயென்றுவைத்துக்கொள்வோம்) அவன்கலியாணம்பண்ணினான். ஆகவேஅவன்விவாகத்திற்கும் எகிப்திற்குப்போனதற்கு மிடையிலுள்ளன ஆக - உஉ-வருஷமாகும். இந்த உஉ-வருஷங்களுக்குள், யூதாகலியாணம்பண்ணி மூன்றுபுத்திரரைப்பெற்றான். அவர்களில்மூத்தவன்வளர்ந்து பிராயமாகி மணம்புரிந்து புத்திரசந்தானமில்லாமல்இறந்துபோக, அவன்றம்பிபிராயமாகித் தனதுஅண்ணியைவிவாகஞ்செய்தான். அவனும்பிள்ளையில்லாமல்இறந்துவிட இளையவன்பிராயமானான். இவன்அவளைவிவாகஞ்செய்யும்படி பலருந்தூண்டியும் மாட்டேனென்றுமறுத்ததனால், அவன் அண்ணிவிதவையாகி மனோசஞ்சலமுற்றுத், தன்பிதாவினூர்போய்ச்சேர்ந்து, அங்கேகாலந்தள்ளினாள். பின்புதன்மாமனாகியயூதா அங்கே வருவதையறிந்து தகுந்தசமயம்பார்த்திருந்து, வேசிவேடமாய்அவன் முன்வந்து அவனைச்சேர்ந்து, இரண்டுபிள்ளைகளைப்பெற்றாள். இந்தப் பிள்ளைகளில் ஒருவன்வளர்ந்துபிராயதிசையடைந்து மன்றல்முற்றி, மேற்கூறியஎத்சரோன் ஆமூலென்பவர்களைப்பெற்றான். இதெல்லாம் இருபத்திரண்டுவருஷத்திற்குள் நடந்தசம்பவங்களாம். இதிற்கூறிய ஒவ்வொருவரும் கூ - வயதில்விவாகஞ்செய்து - எ - வயதாமுன்பிள்ளை பெற்றாலன்றி, மேற்கூறியசம்பவமெல்லாம் நிகழ்தற்பாலனவா? ஆயினும், இது கடவுளால்அருளப்பட்டசத்தியவேதமாமே" என்கிறார்.

கூங. ௲-வது. யோசே ௲ ஆகமத்தின் சகூ-ம் அதிகாரத்து அ-வது முதல் உ௫-வதுவரையுள்ளவசனங்கள் எசித்துக்குவந்தயாக்கோபின்சந்ததியாரின்பெயர் இன்னதின்னதென்று எ௦ பெயரைக்குறித்துக்காட்டி, அவருள்இருவர் கானான்தேசத்திலே மரித்துப்போயினரென்றுசொல்ல, உகூ-உஎ-ம் வசனங்கள் யாக்கோபோடேஎசித்துக்குப் போன அவர்கர்ப்பப்பிறப்பானவரெல்லாம் கூகூ பெயர்; யோசேப்புக்கு எசித்திலேபிறந்தவரிருவர்; ஆகஎசித்துக்குப்போனயாக்கோபின்குடும்பத்தார் எ௦ பெயரென்கின்றன. யாத்திராகமத்து ௲ அதிகாரத்தின் முதலைந்துவசனங்கள்: யாக்கோபுடன் எசித்துக்குப்போனஅவருடையபுத்திரர் பதினொருவருடையபெயர்களை இன்னதின்னதென்றுசொல்லி, அவர்குடும்பத்தாரெல்லாரும் போனார்களென்றும், அவர்கர்ப்பப்பிறப்பானவரெல்லாம் எ௦ பெயரென்றும், யோசேப்புஎசித்திலிருந்தாரென்றுஞ் சொல்லுகின்றன. இவற்றுள்

கூச. முதலாவது: ஆதியாகமத்தின் சகூ-ம் அதிகாரத்து உகூ-ம் வசனத்தில், "யாக்கோபினோடேஎசித்துக்குப்போனவராகிய அவரது கர்ப்பப்பிறப்பானவர் கூகூ பெயர்" என்பதற்குப்பொருள்: யாக்கோபின் கர்ப்பப்பிறப்பானவர்களில் கூகூ பெயர் அவரோடுகூடஎசித்துக்குப்போனார்களென்பதன்று. ஏனெனின், முதலாவது, மேற்கூறியஅதிகாரத்து உஎ-ம், கஉ-ம், அ-ம், உஎ-ம் வசனத்திற்சொல்லுகிறபடி! எசித்திற்பிறந்தவர்களென்றுசொல்லப்படுகிற யோசேப்பின்பிள்ளைகளிருவரும், யூதாவின்புத்திரருட் கானான்தேசத்திலிறந்துபோனவர்களாகச்சொல்லப்படுகிற இருவருமாகிய நால்வருங்கூட, எசித்துக்குப்போனவர்களுடையடாப்பிலுந் தொகையிலுஞ் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கானான்தே

சத்தில்மரித்தவர்களும், எசித்திலேபிறந்து அங்கேயேயிருந்தவர்களும் யாக்கோபோடே கானான்தேசத்தி லிருந்தெசித்துக்குப் போயிருத்தல் கூடாததாலாலும், கானான்தேசத்தினின்று யாக்கோபோடேஎசித்துக்குப்போனவர்களுடையஇடாப்பில் சொல்லப்படவேண்டியவர்களல்லராதலாலுமெனவறிக.

௩௫. இரண்டாவது: யாக்கோபின்கர்ப்பப்பிறப்பானவருள் ௬௬ பெயர் யாக்கோபோடேயெசித்துக்குப்போனதில்லை. ஏனெனின், ஷ-௪௬-ம் அதிகாரத்தின் கரு-கஅ-உஉ-உரு-ம் வசனங்களும் யாத்திராகமத்தின் ௲ அதிகாரத்து ரு-ம் வசனமுஞ் சொல்லுகிறபடி, யாக்கோபின்கர்ப்பப்பிறப்பானவர் ௭௦ பெயர். அவருட்கானான்தேசத்தில்மரித்தவர்இருவரும், எசித்திலிருந்தயோசேப்பும், யோசேப்பின்புத்திரருமாகியஐவரும்போக,(எஸ்ரோனையும்ஆமூலையுங்கூட்டிக்கொண்டாலும்) யாக்கோபின் கர்ப்பப்பிறப்பானவருள்ளே கூ௫ பெயர்மாத்திரமே அவரோடேஎசித்துக்குப்போயிருத்தல் கூடுமோதலாலெனவறிக.

௩௬. மூன்றாவது: எஸ்ரோனும்ஆமூலும் யாக்கோபோடே எசித்துக்குப்போனதில்லை. ஏனெனின், யூதாகானானிலிருந்தகாலத்தில் அவருக்குண்டாயிருந்த சந்ததிகளையும் அவைகளுண்டானவிதத்தையுங்குறித்து, விபரமாகச்சொல்லுகிற மோசேமுதல்ஆகமத்தின் ௩அ-ம்அதிகாரம் அறிவிக்கிறபடி: யூதா அங்கேஒருகானானியஸ்திரியை விவாகம்பண்ணி மூன்றுபிள்ளைகளைப்பெற்றார். அவருள்இருவரும் அந்தமனைவியும் இறந்துபோனார்கள். பின்புஅவர்தாமாரைக்கூடி இரண்டுபிள்ளைகளையிரட்டைப்பிள்ளைகளாகப்பெற்றார். ஆதலால்அவருக்கங்கே இந்தஐந்துபுத்திரர்உண்டாயிருந்தனரேயன்றிப் பேரப்பிள்ளைகள்உண்டாயிருக்கவில்லையாதலாலும், மோசேமுதலாகமத்தின் ௪௫-ம் அதிகாரத்து க௦-ம்வசனம்: "நீரும்உம்முடையபுத்திரரும் பௌத்திரரும்" என்றதுமுதலியவை யாக்கோபின்பௌத்திரருக்குப்புத்திரரில்லையென்றுகாட்டலாலும், மோசேமுதலாகமத்தின் ௪௬-ம் அதிகாரத்து ரு-௬-௭-ம்வசனங்கள்: பின்பு, யாக்கோபு சத்தியக்கிணற்றினின்றுபிரயாணமானார். இஸ்ரவேலின்புத்திரர் தங்கள்தகப்பனாராகிய யாக்கோபையும், தங்கள்குழந்தைகளையும், தங்கள்மனைவியரையும் பார்வோன்அந்தவிருத்தாப்பியருக்கனுப்பின வண்டிகளின்மேலேற்றிக்கொண்டார்கள். யாக்கோபு தாம் கானான்தேசத்திற்சம்பாதித்த எல்லாவற்றோடும், தம்புத்திரரோடும், புத்திரருடையபுத்திரரோடும், தம்புத்திரிகளோடும், தம்எல்லாச்சந்ததியாரோடும்எசித்தில்வந்தார்" என்கின்றபடியே யாக்கோபுஎசித்துக்குப்போனபோது அவரோடேஅவருடையபுத்திரரின்பேரர்போனதில்லையாதலாலும், கஉ-ம் வசனமானது எஸ்ரோனும்ஆமூலும் கானானிற்பிறந்தவர்களென்று சொல்லாமையினாலுமெனவறிக.

௩௭. நாலாவது. ௪௬-ம் அதிகாரத்து உ௭-ம்வசனம் "எசித்துக்குப்போன யாக்கோபின்குடும்பத்தவரெல்லாரும் ௭௦பெய"ரென்றுரைத்த ௭௦ பெயருக்குக்கணக்குக்காட்டப், பண்டிதர்: உ௬-ம்வசனஞ்சொன்ன ௬௬பெயரோடு யோசேப்பையும் அவர்புத்திரரிருவரையும்

யாக்கோபையுங்கூட்டிச்சொன்னதுபிசகு. ஏனெனின், யாத்திராகமத்துமுதலதிகாரத்தின் ஐந்தாம்வசனமும் பிறவுஞ் சொல்லுகிறபடி, இவர்யாக்கோபின் கர்ப்பப்பிறப்பானவரிலேயே எ0பெயருக்குக் கணக்குக்காட்டல்வேண்டும். இவர்அப்படிக்காட்டாமல் யாக்கோபையுஞ்சேர்த்து எ0பெயருக்குக் கணக்குக்காட்டுதலின லெனவறிக.

அப்படியாயின், ஷெசகூ-ம்அதிகாரத்தின் உகூ-உஎ-ம்வசனங்களில், யாக்கோபோடேஎசித்துக்குப்போன அவர்கர்ப்பப்பிறப்பானவர்களெல்லாம் சுகூபெயர், யோசேப்புக்கு எசித்துத்தேசத்திற்பிறந்தவர்கள் இருவர், எசித்துக்குப்போனயாக்கோபின் குடும்பத்தாரெலலாம் எ0-பெயர்என்று சொல்லப்பட்டிருப்பவைகளுக்குப் பொருளென்னையோவெனின், யாக்கோபுக்கு அவர்எசித்துக்குவரும்போது கானுன் தேசத்தில் அவர்கர்ப்பப்பிறப்பாயுண்டாயிருந்தவர்கள்: மரித்த இருவரோடும் யோசேப்போடுங்கூடி சுகூபெயர்; எசித்தில்யோசேப்புக்குப் பிறந்திருந்தவர்இருவர்; அவர்எசித்துக்குவந்தபிறகுபாரேசுக்குப் பிறந்தவர்கள் எஸ்ரோன்ஆமூல்என்றிருவர். ஆகஇந்த எ0பெயரும்எசித்துக்குவந்தயாக்கோபுமரணமடையுமுன் அவருக்குண்டாயிருந்த சந்ததியார்என்பது பொருளாமெனவறிக.

கூஅ. உ-வது. யூதா: யோசேப்புவிற்கப்பட்டவுடனே சகோதரரைப் பிரிந்துபோய், ஒரு கானுனியாளை விவாகம்பண்ணி, மூன்று வருடத்துள் மூன்று பிள்ளைகளைப் பெற்றார். மூத்தவனுக்கு கஎ-ம் வயதின் துவக்கத்திற் கலியாணமாயிற்று, அவன் துட்டனுயிருந்ததால் ஒருமாசத்துள் அவனைக் கடவுள் சாவடித்தார். இறந்தவனுக்குச் சந்ததியில்லாமையால் அவனுக்குச் சந்ததி யுண்டாக்கும்பொருட்டு, அவன்மனைவி பத்துமாசத்துக்குப்பின் மைத்துனரிருவருள்மூத்தவனுக்கு மனைவியாகக்கொடுக்கப்பட்டாள். இவன்வஞ்சனைசெய்ததாற் கடவுள் உடனே இவனையுஞ் சாவடித்தார். யோசேப்பு இஷ்மவேலருக்குவிலைப்பட்டதுமுதல் இதுவரையிலான வருடங்கள்பதினெட்டு. இரண்டுவருஷத்துக்குப்பிறகு யூதா தாமாரைக்கூடி, ஒன்பதுமாதம்போய் இரட்டைப்பிள்ளைகளா யிரண்டுபிள்ளைகள் பிறந்தன. இவைகளெல்லாம் உக-வருஷத்துக்குள் சம்பவிக்கக்கூடியவைகளா யிருத்தலால், இருபத்திரண்டுவருடம் இவைகளுக்குத் தாராளமாகப் போதுமானவை யெனவும், ஆதலாற்சத்தியவேதமானது அறிவுடையோருக்கு என்றுஞ்சத்தியவேதந்தானெனவும், ஜடப்பொருளாகியசிலாவை யுயர்திணைப்பொருளென்றும், அதற்குச்சூரியனுல்ஒளிகுறைதலையும்சிரம்புதலையுந் தக்கனுகிய அதன்மாமனதுசாபத்தாலுஞ் சிவன்தமதுசிரத்திலணிந்துகொண்டதினுலு மாகுவனவென்றுஞ்சொல்லுகிற சைவருடையவேதமே அசத்தியவேதமெனவுமறிக.

கூக. கூ. பண்டிதர் அ-வது: "இதுவும்ஓர்அற்புதம். இஷ்மவேலும்ஈசாக்குஞ்சகோதரர். ஈசாக்கின்புத்திரன்யாக்கோபு: யாக்கோபுக்குப்பிறந்தபுத்திரரில் மூத்தவனுக்கு உ0-வயதாவதற்குமுன்னே இஷ்மவேலுக்குப் புத்திரர் பௌத்திரர் பௌத்திரபௌத்திராதியோர்பிறந்து, பிரத்தியேகமாய்ஓர்பெருஞ்சாதியாகி, இஷ்மவேலரொன்னு நாம

த்திஞ லுலகத்திற்பிரசித்தமாய் அறியப்பட்டார்கள். சின்னஆசியாமு தலாய் எகிப்தீருக அவர்கள்பெயரொட்டினதுமன்றி, அந்தந்த ஊரில விசேஷவர்த்தகமும் அவர்கள்கையிலேஅமைந்திருந்ததாம். வானத் தின்நட்சத்திரத்தைப்போலவுங் கடற்கரைமணலைப்போலவும் பெருகு வாயென்று, விசேஷஆசீர்வாதம்பெற்றஈசாக்கும் இப்படிப் பெருகவில்லையே. என்ன பருக்கம! என்னஆச்சரியம்!!" என்கிறூர்.

சO. இஷ்மவேல் ஆபிரகாமின் அசு-ம் வயதிற்பிறந்தார். (ஆதி. கசுஃ கசு.) ஆபிரகாம் கOO-ம் வயதிலஈசாக்கைப்பெற்றூர். (ஆதி. உக. ரு.) ஆகையால் ஈசாக்குக்குஇஷ்மவேல் (கரு) வயசுமூத்தவர்.—ஈசாக்கின் சுO-ம் வயதிலே யாக்கோபுபிறந்தார். (ஆதி. உரு. உசு.) ஆதலால் யாக்கோபுபிறந்தபோதுஇஷ்மவேலுக்குவயசு எரு.—யோசேப்பு இஷ்மவேலருக்குவிலைப்பட்டபோது வயசு கஎ. (ஆதி. ௩எஃ உ.)—அவர்பார்வோனின்மந்திரியானபொழுதுவயசு ௩O. (ஆதி. சகஃ சசு.) —பின் கூ-ம்வருஷத்தில், அதாவது செழுமைக்காலம்போய்க் கருப்புத் தொடங்கி உ-ம்வருஷத்தில் யாக்கோபும்அவர்குடும்பமும் எசித்துக்கு அவரிடத்திற்போனூர்கள். (ஆதி. சரு: சு.)—அப்போதுயோசேப்புக் கு ௩கூ-வயது.—அப்போதுயாக்கோபுக்கு க௩O-வயது. (ஆதி. சஎஃ உஅ.)—ஆதலால்யோசேப்புஇஷ்மவேலருக்கு விலைப்பட்டபோது யாக்கோபுக்குவயசு கOஅ; ஈசாக்குப்பிறந்து கசுஅவருஷ. இஷ்மவேல்பிறந்துவருஷ கஅ௩.—இந்தஇஷ்மவேலுக்கு கஉ-பிரபுக்கள்பிறக்கவும், இவர்பெரியஜாதியாகவும் தேவவாக்குத்தத்தமுமுண்டு. (ஆதி. கஎஃ உO.) —ஈசாக்குக்குப்பாலெடுத்தபோதுஇஷ்மவேலுக்குவயது கஅ. அந்நாளில் அவர் அபிரகாமைவிட்டுப்பிரிந்துபோனூர். அவர் உOவயசிற்கல்யாணஞ்செய்து, ௩௩வயசுக்குள் கஉபிள்ளைகளைப்பெற்றூர். அவர்களுள்ளும் அவர்கள்சந்ததியாருள்ளும் ஒவ்வொருவரும்ஐந்தைந்துபிள்ளைகளைப்பெற்றுலும், பின்ஏழாந்தலைமுறையில் *௩௩எருOOஇஷ்மவேலருண்டாயிருப்பாரகளென்று கணக்கறிந்த யாவருமறிவார்களாதலால் இதுவுமோரற்புதமன்றெனவும், சிவன்சிவனடியார்வேடமாய்வந்து துரோணுசாரியாரைச்சாதங்கேட்க, அவர்தம்மனைவிக்குத்தரவுபண்ணிப் போக, அவள்சிவனுக்குச்சாதம்படைக்கவர, வந்தபதிவிரதையைநோக்கி நீ நிருவாணமாய் வந்துபடைத்தாலன்றி உண்ணேனென்று சிவன் சொல்ல, அவள்தன்தலைமயிரால் தன்னுடம்பை மூடிக்கொண்டுவரப் போக, அவள்வருமுன்னேதானே விரகநோய்தாளாமையாற் சிவன் சுக்கிலத்தையந்தச்சாதத்தில்விழ்த்த, அவளதைப் பெண்குதிரைக்கு வைக்க, அதுஅதனையுண்டு உடனேஅசுவத்தாமனைப்பெற்றதென்பதே ஓரற்புதமெனவுமறிக.

சக. கO. பண்டிதர்ஃ கூ-வதுஃ "யாத்திராகமம் கஉ-ம். அதி. சO-ம்வசனத்தில் இஸ்ருவேலர்எகிப்தில்—ச௩O—வருஷந் தங்கியிருந்தார்களென்று சொல்லப்படுகின்றது. இஸ்ருவேல ரெகிப்திற்குப்போனபோது யாக்கோபும், மகன்லேவியும், லேவிமகன்கோகாததுங் கூடப்போன-எO-பெயரிற்சேர்ந்தவர்கள். கோகாத்தின்வயது-க௩௩. அ

*இஷ்மவேல்பிறந்ததுமுதல்ஆன கஅ௩வருஷத்துக்குள்.

வன்புத்திரன் அம்ராமின்வயது-கஙஎ. இவன்புத்திரன்மோசே-அ0பிரா
யமானபோதுஇஸ்ரூவேலனைச்சிறைமீட்டான். இம்மூன்றுதொகையு
ஞ்சேர்ந்து-ஙரு0ஆகும். இதில்கோகாத் எகிப்துக்குவரமுன்சென்றவ
யதையும், அம்ராம்பிறந்தபின் அவன் இருந்தகாலத்தையும், மோசே
பிறந்தபின் அம்ராம் இருந்தவருஷங்களையுந்தள்ளினால், இன்னும்அதி
கங்குறையும். அப்படியிருக்க-சங0-வருஷம்இஸ்ரூவேலர்சிறையிருந்த
னரென்றுகூறப்பட்டவாக்குஅசத்தியமல்லவா? அல்லாமலும், லேவி
சங-பிராயத்தில்எகிப்துக்குவந்தான். அவன் கூச-வருஷம் எகிப்திலிருந்
துஇறந்தான். அவன்மகள்யோகேபாத். அவள்குமாரன் மோசே, மோ
சேயின் அ0-வருஷத்தையும் லேவியிருந்த கூச-வருஷத்தையும் யோகே
பாத்பிறந்தபின் லேவிஇருந்தவருஷங்களையும் கணக்கேற்றினால், இஸ்ரூ
வேலர் எகிப்திலிருந்தது சங0-வருஷமாயின், யோகெபாத் மோசை
யைப்பெற்றது உசூ0-உஎ0-வயதிற்குமேலேயாதல்வேண்டும். கஙC-
கச0-வருஷமேஅக்காலத்தில் மனுஷனுடையவயதாக-உஎ0-வயதிற்கு
மேலேயோகெபாத் பிள்ளைப்பெற்றாளென்பதுபொருந்துமா? பழைய
உடன்படிக்கைமொழிக்குமாறுபடப் பவுல்கலாத்தியருக் கெழுதியதிரு
பத்தில், சங0-வருஷத்தை ஆபிரகாமழைக்கப்பட்டகாலத்தினின்றுக
ணக்கேற்றினார். பூருவாபரவிரோதமுற்றதாயினுங் கணக்குக்கிசைந்த
தாதலால் அதனையேயுண்மையாகக்கொள்வோம். அதில் அழைப்புக்
காலந்தொடுத்து ஈசாக்கின்செனனமட்டுஞ்சென்றவருஷம்-உரு-அதன்
மேல்யாக்கோபின்செனனம்-சூ0-அதன்பின்இஸ்ரூவேலர் எகிப்துக்குப்
போனதுவரைக்கும்-கங0-ஆகவே இஸ்ரூவேலர்-உகரு-வருஷம்எகிப்தி
லிருந்தார்கள். இதிற்சென்றதலைமுறைநாலு. எகிப்தைவிட்டுப்புறப்ப
ட்டமோசே-ஆரோன்-தாத்தான்-அபிரான்-ஆச்சான்-நாஷோனுதிய லெ
ல்லாரும்முதற்போனவர்களில் மூன்றுநாலாந்தலைமுறையேயாம். இஃ
திவ்வாறிருக்க, புறப்பட்டபோர்வீரர்-சூ-இலட்சமபெயராகவே அவர்
வயதுப்பெண்களும் சூ-இல. பெயரிருத்தல்வேண்டும். இருபதுவய
திற்குட்பட்டஆண்குழந்தைகள்-ரு-இல-மும், பெண்குழந்தைசள்-ரு-
இல-மும், விருத்தாப்பியதிசையடைந்த ஆண்பெண் மூன்றிலடசத்து
க்குக்குறையாமலுமிருத்தல்வேண்டுமென்பது பற்பலதேச சரித்திரமு
ங்குடிமதிப்பும் அறிந்தோர்அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். விவிலி
யவேதவியாக்கியானமெழுதியவர்களே இக்கணக்கைஒத்துங்கொண்ட
னர். ஆகவேபுறப்பட்டவர்களின்தொகை உரு-இலக்ஷத்திற்குக்குறை
யாது. போனவர்களோ-எ0-பெயர். இவர்களிலிருந்துநாலுதலைமுறை
க்குள்ளாக-உரு-இல, பெயர்வந்ததெப்படி? இஸ்ரூவேல்பெண்ணெவ்
வொருத்தியும் நூறுநூறுபிள்ளைப் பெற்றனளாயினன்றோ மூன்றுதலை
முறைக்குள்மேற்படிப்பெருக்கங்காணலாம். மேலும் ஆண்பிள்ளைகளுக்
குள் தலைப்பிள்ளைகளின்தொகை உஉ தூாஎ௰ங பெயராம், இதனாலும்
ஓரொருத்தி-கூ0-பிள்ளையாவது பெற்றிருத்தல் வேண்டுமென்றாகிறது.
பூலோகவியல்புக்கிதுமாறுபட்டதல்லவா? விசேஷ ஆசீர்வாதமபெற்ற
இஸ்ரூவேலே கங. பிள்ளைக்குமேலேபெறவில்லையே"?என்கிறார்.

சஉ. ஆ-வது. வேதசாஸ்திரியுஞ்சேசுநாதருடைய அப்போஸ்த
லருமாகிய அர்ச். பவுல் (சின்னப்பர்) கலாத்தியருக்கெழுதினதிருபத்

தின் ௩-ம் அதிகாரத்து ௧எ-ம் வசனமானது: மோசே ௫ ஆகமத்தின் ௧௫-ம் அதிகாரத்து ௧௩-ம் வசனத்துக்குவியாக்கியானமாயெடுத்துரைக்கப்பட்டிருக்கிறதினாலும், அதில் ஒருமாறுபாடுமில்லாமையாலும், பண்டிதரும்பழையவேற்பாட்டின்னவாக்கியத்திற்குப் புதியவேற்பாட்டுஇன்னவாக்கியம் இன்னநியாயத்தால் மாறுபட்டதென்றுகாட்டாமையாலும், பண்டிதர்: "பழையஉடன்படிக்கைமொழிக்குமாறுபடப் பவுல்கலாத்தியருக்கெழுதியநிருபத்தில்" என்றதேமாறுபாடெனவும், பவுல்அப்போஸ்தலர் பழையஉடன்படிக்கைக்குமாறுபட வெழுதினதில்லையெனவுமறிக.*

௪௩. உ-வது. அரச். சின்னப்பர் கலாத்தியருக்கெழுதினநிருபத்தின் ௩-ம் அதிகாரத்து ௧எ-ம் வசனத்தில் ௪௩௦வருஷத்துக்குக்காட்டினகணக்கைப் பண்டிதரொத்துக்கொண்டமையால், அதுவிஷயத்தில் நாம்யாதுஞ்சொல்ல அவசியமில்லையெனவறிக.

௪௪. ௩-வது. சருவேசுரன்ஆபிரகாமுக்குச்சொல்லியபடி (ஆதி. ௧௫: ௧௬.) எசித்தைவிட்டுப்புறப்பட்டவர்களிற் சிலரேனும் எசித்துக்குமுதற்போனவர்களின் நாலாந்தலைமுறைமனிதராயிருக்கவேண்டுமெனவறிக.

௪௫. ௪-வது. பண்டிதர் மோசேமுதலிய ஆறுமனிதருடைய பெயரைச்சொல்லி, அவர்கள்யாக்கோபோடேயெசித்துக்குப்போனவர்களிற் சிலருடையநாலாந்தலைமுறைமனிதரென்றது: எசித்திலிருந்துபுறப்பட்டமற்றெல்லாரையும் நாலுக்குமேற்பட்டதலைமுறைச்சனங்களென்றுவது இத்தனையாந்தலைமுறைச்சனங்களென்று தாமறியவில்லையென்றுவது அவர்சொன்னதுமாயிற்று. மோசேமுதலியசிலர் மேற்கூறியபடி நாலாந்தலைமுறைச்சனமாயிருந்தது முதலியவற்றினிமித்தமாக முதல்முதல்எசித்துக்குப்போன இஸ்ரவேல்புத்திரர் எ௦பெயரில் ௧௦ பெயரைக்கழித்துவிடினும் ௬௦பெயருண்டு. இந்த௬௦பெயரும் இவர் சந்ததியாரும் சராசரிதலைக்குஅவ்வாறு பிள்ளைகளைமாத்திரமேபெற்றிருந்தாலும், ஏழாந்தலைமுறையில் உஎ,௯௯,௩,௬௦. பெயருண்டாயிருக்கக்கூடுமெனவும், காந்தாரி துரியோதனுதி ௧௦௦பிள்ளைகளைப்பெற்றது போல் இவருள்ஒவ்வொருத்தியும் நூறுபிள்ளைகளைப்பெற அவசியமில்லையெனவுமறிக.

௪௬. ௫-வது. எண்ணுகமத்தின் ௩-ம் அதிகாரத்து ௪௩-ம்வசனஞ்சொல்லுகிறபடி, சீனயிமலையில் கர்த்தர்மோசேயோடேபேசினநாளிலே இஸ்ரவேல்புத்திரரில்முதற்பேறுனஆண்பிள்ளைகள் உஉஉஎ௩ பெயரிருந்தார்கள். இதுகொண்டுபண்டிதர் "ஒரொருத்தி ௬௦பிள்ளையாவது பெற்றிருத்தல் வேண்டுமென்றுகிறது" என்றது அறியாமை. ஏனெனின், இதில் ௫-வது. ஒருமாதத்துக்குட்பட்ட தலைச்சன்பிள்

---

*சமரித்தான்பிரதியிலும் கிரேக்குபிரதியிலும்: "இஸ்ரவேல்புத்திரர் கானுன்தேசத்திலும் எசித்துத்தேசத்திலும் பராதீனமாயிருந்தவருஷங்கள் ௪௩௦" என்றுஎழுதப்பட்டிருக்கின்றது. மொழிபெயர்ப்பிற் "கானுன்தேச" மென்றது விடுபட்டுப்போயிற்று, இப்படிமொழிபெயர்ப்பில் விடுபட்டஎழுத்துஞ் சொல்லும்அநேகம். அவையெல்லாம்சாஸ்திரிகளாற் குறித்துவைக்கப்பட்டிருக்கின்றனவெனவறிக.

ளைகளின்தொகை சேர்க்கப்படவில்லை; உ-வது. முதற்பேறானபெண் களின்கணக்குச் சேர்க்கப்படவில்லை; ங-வது பாரோனரசனுடைய அக்கிரமநிமித்தம் ஆற்றிலெறிதல் முதலியவைகளாற் கொல்லப்பட்டவருளிருந்தமுதற்பேறானவர்க ளெண்ணிச்சேர்க்கப்படவில்லை; ச-வது. வியாதிமுதலியவைகளாலிறந்த முதற்பேறானவர்கள் சேர்க்கப்படவில்லையாதலாலும், ஒருவனுடையநாலுமனைவியர் கங பிள்ளைகளைப்பெற்றிருந்தாலும் இவருள்முதற்பிறந்த (வொருத்தியின்) பிள்ளைமாத்திரமே முதற்பேறானபிள்ளையென்றுசொல்லப்படுதலாலுமெனவறிக.

சஎ. கக. பண்டிதர். க0-வது: யோசுவா-அம், அதி: ஙச-ஙரு-ம் வசனம்முதலிய பலஇடங்களில் மேற்படி உரு-இல-சனங்களைக் குழந்தைகுட்டிகளனைவரோடும் வரும்படிசெய்து, அவர்கள்அனைவருங் காதாரக்கேட்கத்தக்கதாக, மோசேயும்யோசுவாவும் பேசினார்களாம். இத்தனைபெயரும் ஆறுசதுரமைலில்நிற்கமாட்டார்களே. பொய்யைப் பேசினும் பொருந்தப்பேசுதல்வேண்டாமா?" என்கிறார்.

சஅ. ௲-வது. இதில் "அவர்களனைவருங் காதாரக்கேட்கத்தக்கதாக மோசேயும்யோசுவாவும்பேசினார்கள்" என்று மேலேகுறித்தவாக்கியங்கள்சொல்லுகின்றனவென்று பண்டிதர்சொல்லியது பொய்மையெனவும், யாத்திராகமத்தின் உச-ம் அதிகாரத்து எ-ம்வசனத்தில் "உடன்படிக்கையின்புஸ்தகத்தையெடுத்துச் சனங்களின்காதுகேட்க வாசித்தார்" என்றது எல்லாச்சனங்களையுங்குறித்ததன்றெனவுமறிக.

சகூ, உ-வது. யோசுவாவின்புஸ்தகத்தின் அ-ம் அதிகாரத்து ஙங-ஙச-ஙரு-ம்வசனங்கள் "இஸ்ரவேல்சனங்களை ஆசீர்வதிக்கும்படி கர்த்தரின்தாசனாகியமோசே முதல்கட்டளையிட்டிருந்தபடியே, இஸ்ரவேலரெல்லாரும், அவர்களுடையமூப்பரும், அதிபதிகளும், நியாயாதிபதிகளும், அந்நியர்களும், இஸ்ரவேலில்பிறந்தவர்களும் கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியைச்சுமக்கிறலேவியரான ஆசாரியருக்குமுன்பாகப், பெட்டிக்குஇருபுறத்திலும் பாதிபேர்கெரிசிம்மலைக்குஎதிர்புறமாகவும் பாதிபேர்ஏபால்மலைக்குஎதிர்புறமாகவும்நின்றார்கள்.—அதற்குப்பின்பு, அவர் நியாயப்பிரமாணஆகமத்தில்எழுதியிருக்கிறபடி நியாயப்பிரமாணத்தில்சொல்லிய ஆசீர்வாதமும்சாபமுமாகிய சகலவார்த்தைகளையும்வாசித்தார்.—மோசேகட்டளையிட்டஎல்லாவற்றிலும் யோசுவா இஸ்ரவேலின்முழுச்சபைக்கும், ஸ்திரீகளுக்கும், பிள்ளைகளுக்கும், அவர்களுக்குள்நடமாடிச்சஞ்சரித்தஅந்நியர்களுக்கும்முன்பாக, ஒருவார்த்தையும்விடாமல்வாசித்தார்." என்கின்றன. இந்தச்சனங்கள் கூ0மைல்தூரத்துக்குப் பரவியிருந்தால்தானென்ன? அதில்விரோதமில்லை. யோசுவாஎல்லாரையுமாசீர்வதிக்கவும் எல்லார்முன்னுந்தாம்வாசிக்கவேண்டியதை எல்லார்முன்னும்வாசிக்கவும் எல்லாரையுமழைப்பித்துநிறுத்தித்,தாம்வாசிக்கவேண்டியதில் ஒருசொல்லும்விடாதுவாசித்தார். செவ்வையாகக் காதிலேவிழக்கூடாத தூரத்திலிருந்தவர்கள் அதைக்கேட்டவர்களைக்கேட்டறிந்து கொண்டார்கள். இப்பொழுதும் எங்கள்குருக்கள் அறிவிக்கஆவசியகமானதை இப்படித்தான் அறிவிக்கிறார்கள். அக்காலம் திருவிழாக்காலமாய் இருபதினாயிர முப்பதினாயிர

மனிதர் அங்கேவந்திருந்தாலும், குருசொல்லும்சொற்சத்தங்கேட்கக்கூடாததூரத்திலிருக்கிறவர்கள் கேட்டவர்களைக்கேட்டுத்தான் தெரிந்துகொள்ளுகிறார்கள். துரைத்தனத்தார் பறையறைவித்தறிவிக்கும் விளம்பரமுதலியவைகளை யூரவரெல்லாரு மிப்படித்தானறிகிறார்கள். இப்படிப்பட்டவைகளை அனுபவித்திராதவர்க் கிது அதிசயம்போலத் தோன்றினும், அவ்வனுபவமுள்ளவர்களுக் கிதுசாதாரணமாகவேயிருக்குமாதலால், இதுபொருந்தச்சொல்லவேண்டியபொய்யன்றெனவும், தேவர்கள்பாம்பைக்கயிறாகவும், மந்தரகிரியைமத்தாகவும், சந்திரனைமத்துத்தறியாகவுங்கொண்டு, பாற்கடலைக்கடைந்தபோது, அந்தப்பாம்புகக்கினவிஷத்தையுண்டு சிவன்காளகண்டரானாரென்பதும், யானைமுகவிநாயகர் தம்முடையவொருகொம்பையொடித்து அதையெழுத்தாணியாகவும், மகாமேருவையேடாகவுங்கொண்டு, ஐந்தாம்வேதமாகியபாரதத்தையெழுதினாரென்பதுமே பொருந்தாதபொய்களெனவுமறிக.

௫௦. கஉ. பண்டிதர்: கக-வது, "லேவியராகமம்-௪-ம்-௬-ம் அதிகாரங்களில், ஆரோனும் அவன்குமாரரிருவருமே ஒவ்வொருதினமும் இந்த-உ௫-இல-சனங்களுடையஇருப்பிடத்திலுள்ள அழுக்குகளை நீக்கல்வேண்டுமென்றுவிதிக்கப்பட்டது. ௫-இலட்சஞ்சனமுள்ள சென்னைமாபுரியொன்றினுக்கு ஆயிரக்கணக்கானதோட்டிகளும்-கஉ௫-வண்டிகளும்வேண்டியனவாக. இதுபொய்யென்பது பகுத்துக்காட்டல் வேண்டுமோ?" என்கிறார்.

௫க. லேவியராகமத்தின் ௪-ம்அதிகாரத்து கக-கஉ-ம் வசனங்களிலும், ௬-ம்அதிகாரத்து க௦-கக-கஉ-ம் வசனங்களிலும் தேவாலயத்திற்பலியிடப்பட்டபொருள்களையுந் தகனபலியிலுள்ளசாம்பலையும் ஆசாரியனே அப்புறத்திற்சுத்தமானஇடத்திற் கொண்டுபோய்விடும்படி சொல்லப்பட்டிருக்கிறதேயல்லது, பண்டிதர்சொல்லியபடியாவது அதற்குச்சிறிதேனும்ஒத்தபடியாவது சொல்லப்பட்டிருக்கவில்லை. இந்தப்பிரத்தியக்ஷமுழுப்பொய்யினாற் பண்டிதர்சத்தியவேத சத்தியவசனத்தைக்குறித்து "இதுபொய்யென்பதுபகுத்துக் காட்டல்வேண்டுமோ?" என்றது அதிசயப்படத்தக்கதாயினும் பொய்மெய்யைவெல்லாதெனவறிக.

௫உ. க௩. பண்டிதர்: கஉ-வது, "இந்த-உ௫-இல-சனத்தையும்-௬-இல-யுத்தவீரரையும் வைத்துக்கொண்டு, யாத்திராகமம்-உ௩-ம்-அதி. உ௭-௩௦-வசனங்களில் யெகோவாஎன்னசொன்னார்: மிருகாதிகள் அதிகரித்து உங்களைநாசம்பண்ணிப்போடாதபடிக்கு இன்னும் அதிகமாய்நீங்கள் பெருகும்வரைக்கும் ஆமோரியர்முதலியசனங்கள் இந்தஊரிலே தங்கியிருக்கட்டுமென்றாராம். உலகம்முழுதிலுமுள்ளசனம் அ௦-கோடி. உலகத்திலோர்கியுதாமிசமானகானானுக்குங் காற்கோடிசனத்துக்கும் இதுபயமானமானால், உலகமுழுதும் மிருகாதிகளால் நாசமாய்ப்போய்விடவேண்டாமா? முத்தொகைவினாக்கற்றபிள்ளைகளே கொஞ்சம்பஞ்சியைப்பாராது கணக்கிட்டுச்சொல்வீராக" என்கிறார்.

௫௩. அக்காலத்தில் இஸ்ரவேலரிருந்தஇடத்திற்குச்சமீபத்திலே துஷ்டமிருகங்கள்மிகுதியாயிருந்ததினா லிவர்களுக்குஅவைகளாற்சேதமுண்டாகாதபடி கடவுளிவ்விதமாக விவர்க்குச்சொன்னார். பண்டிதரோ அக்காலத்திற் பூமியினெவ்விடத்திலுஞ்சமமாகப் பூமிக்கேற்றபடி

ஜனத்தொகையிருக்கவும், சனத்தொகை யளவுக்கேற்றபடி அங்கங்கே
துஷ்டமிருகங்கள்சஞ்சரிக்கவுங் கண்டாற்போல முததொகைவினுவ
திந்தபிள்ளைகளையழைத்துக் கணக்கிட்டுச்சொல்லும்படிகேட்கிறார். பூ
மிசாஸ்திரமும்பூர்வீகசரித்திரமும்வாசிக்கிறபிள்ளைகளே! பூமியில்மனி
தரும்துஷ்டமிருகங்களு மிவ்விதமாகத்தானுசஞ்சரிக்கிறார்கள்? கொ
ஞ்சக்காலப்பிரயாசத்தைப்பாராமற் புத்தகத்தைப்பார்த்தாவ திதற்கு
த்தரஞ்சொல்வீராக.

௫௪. க௪. பண்டிதர்: க௩-வது? மேலே யெடுத்துக்காட்டிய
வாறு இஸ்றவேலரில்-௨௫-இலட்சஞ்சனமுளராக, அவர்கள் அனைவ
ருங்கர்த்தருடையகூடாரவாயிலில் ஒருங்குதிரண்டுசேரவேண்டு மென்
றும் மோசேயைநோக்கி அவ்வாறவர்களைக்கூட்டிச் சேர்ப்பாயாகவெ
ன்றுங் கர்த்தர்விதித்தாராம். அப்படியே அனைவோரும்வந்துசேர்ந்து
கூடாரத்தில்நடந்தசங்கதிகளைக் கண்ணாரப்பார்த்துத் திரும்பினாராம்.
யாவன்ஒருவன் வராதிருப்பானேல், அவனுக்குத்தண்டனையுண்டென்
றும் விதிக்கப்பட்டது. பெண்களையுங் குழந்தைகளையுந்தவிர்த்து ஆ
ண்மக்களாவதுவந்துகூடியிருத்தல்வேண்டுமே. இன்னும் அவர்களுளு
ள்ள விருத்தாப்பியரையுந்தள்ளி ௨௦-பிராயத்திற்குமேற்பட்டு யுத்தவீ
ராயிருந்த-௬-இலட்சத்து ௩௫௫௫0பெயராவது அவசியம்வந்திருத்
தல்வேண்டும். இவர்கள்வந்துகூடியகூடாரம் பத்துமுழஅகலமும் மு
ப்பதுமுழநீளமுமாகப் பத்துமுழமான அகலப்பக்கத்திலே வாசல்வைக்
கப்பட்டிருந்தது. மேலும்அதன்வெளிப்பிரகாரஞ் சுற்றிலும்நூறுமுழ
நீளமும் ஐம்பதுமுழஅகலமுமாம். ஆளொன்றுக்குஒருசதுரமுழமா
கச் சொல்லியபத்துமுழஅகலத்திற்குமுன் மேற்கண்ட-௬-இலட்சம்
பெயரைநெருக்கிஅடைத்துவைப்பினும் அவர்களைவைத்தவரிசை-௨௦-
மைல்தூரமாகும். கூடாரத்தைவிட்டு வெளிப்பிரகாரஅகலத்துக்குஅ
டுக்கினாலும் நாலுமைல்தூரம்பிடிக்குமே. இவர்கள்கூடாரவாசலிற்கூ
டினதுந் தரிசனம்பண்ணினதும் மெய்க்கதைதானு? இந்தப்பொய் கந்
தபுராணத்திலுமில்லை யென்றுபடிக்கும்பழமொழியையொழித்துச்-ச
த்தியவேதத்தினகத்துஞ்சுத்தப்பொய் யிப்படிக்கிராதெனப் பழமொழி
சொல்வதனன்றேசிறப்பு.—ஆண்டாசாரிமாராய் நின்றோர் - அ௩௫௫0அம
பெயராமே. இந்தஎண்ணாயிரவரையாவது பொதிந்தடைத்து வைக்க
இடமிருந்ததா? வெளிப்பிரகாரமுழுவதும் நெருக்கியடைத்தால் ௫௦
பெயரைவைக்கலாம். இதுவாசத்தியவேதம்! இதுவாமெய்மமறை!!"
என்கிறார்.

௫௫. இந்தியாவிலும் அர்ச். சவெரியார்கோயில்முதலிய சிலயாத்
திரைக்கோயிலிலே திருவிழாக்காலத்திலே இலட்சம்பேருக்குமேலாக
வுஞ்சனம்வந்துகூடுகிறார்கள். சிலகோயில் மிகவுஞ்சிறியனவா யிருநூறு
பெயர்தங்கவுங் கூடாதனவாயிருந்தாலும், ஞாயிற்றுக்கிழமைப் பூசை
முதலியவைகளைக் காணவுங்கேட்கவும் எல்லாக்கிறிஸ்துவர்களுக்குங் க
டனுண்டாயிருத்தலால், அங்கே அத்தனைக் கிறிஸ்துவர்களுங் கோயிற்
குப்போய்க்கூடி அவைகளைக்கண்டுங்கேட்டும்வருகிறார்கள். பூசைகால
த்தில்அவருட்சிலர் கோயிலினுள்ளேயும்மற்றவர்வெளியிலேயுந்தா னிரு

க்கிறார்கள். ஆயினும் அவரெல்லாருங்காணவேண்டியதைக் கண்டவரும் கேட்கவேண்டியதைக் கேட்டவருமடையும்பலனை யடைகிறவரேயாமாதலால், அவைகளைக்கண்டவருங்கேட்டவருமேயாம்; அவருட்கொஞ்சங்கொஞ்சம்பெயராக எல்லாருங் கோயிலினுட்பிரவேசித்துக்காணவேண்டியவைகளைக்கண்டு வணங்கிவருதலுமுண்டு. சைவருடையதேவர்கோயிலிலே திருநாட்காலத்திற்போய்க்கூடுகிற பெருந்தொகைச்சைவஜனங்களு மிப்படித்தான்தீபாராதனைமுதலியவைகளைக் கண்டுவணங்குகிறார்கள். இதுபோலத்தான் யூதருடையபரிசுத்ததேவாலயத்தில் இஸ்ரவேல்புத்திரர் அக்காலத்தில்வந்துகூடியதும் காணவேண்டியதைக்கண்டதும் கேட்கவேண்டியதைக்கேட்டதுமெனவும், ஆதலால் "இந்தப்பொய்கந்தபுராணத்துமில்லை" என்னும்பழமொழிபழமொழியேயாமெனவும்; மற்றதுவீண்புதுமொழியெனவுமறிக.

௫௬. கரு. பண்டிதர் கச-வது: கடவுளாற்பரிசுத்தமாக்கப்பட்டதினம் ஏழாநாளாகியசனிவாரமாம். பின்னைஆதிவாரத்தைஅநுசரிக்க விதியெங்கேபெற்றனரோ? கடவுள்கற்பனையும்பாராது ஓய்வுநாளின்காரணமுந்தேராது தாம்நினைத்தபடிசெய்பவர் வேதப்புரட்டரல்லவா?" என்கிறார்.

௫௭. கிறிஸ்துவர்களையும் அவர்குருக்களையு மேற்றிராணியாரையும்நடத்தியாளும்படி. (அர்ச். அருள. உக: கரு, கசு, கஎ.) அர்ச். இராயப்பருக் கதிகாரங்கொடுத்தசேசுநாதர் "பூமியில் நீயெதைக்கட்டுப்படுத்துவாயோ அததுபரமண்டலங்களிலுங் கட்டுப்பட்டதுமாய்ப் பூமியில்நீயெதைக்கட்டவிழ்ப்பாயோ அததுபரமண்டலங்களிலுங் கட்டவிழ்க்கப்பட்டதுமாயிருக்கும்" (அர்ச். மத். கசு: கக.) என் றிப்படிப்பட்டஅதிகாரமுங் கொடுத்திருக்கிறபடியால், இந்தஅப்போஸ்தலர் தாம்பெற்றஇந்தஅதிகாரப்படியே முன்சனிக்கிழமையிலிருந்தஓய்வுநாளைச் சிலகாரியங்களின்பொருட்டு ஞாயிற்றுக்கிழமையில் மாற்றிவைத்திருக்க, இதனைக்குறித்துப்பண்டிதர் "கடவுள்கற்பனையும்பாராது ஓய்வுநாளின்காரணமுந்தேராது நினைத்தபடிசெய்பவர்வேதப்புரட்டரல்லவா?"என்றதறியாமையெனவும், "ஆதியில்வர்ணனையாகப் பிறந்தபுராணத்தை யறிவிலாப்பேதைச்சனங்களுண்மையாய்ப்பாராட்டி" னரென்றவர்முதலியவர்களேவேதப்புரட்டரெனவுமறிக.

௫௮. கசு. பண்டிதர், கரு-வது: "ஏழாநாளி லோய்ந்திருந்து அதைப்பரிசுத்தமாக்கினர்-மேலும், ஓய்வுநாளைப் பரிசுத்தமாகஆசரிக்கநினைப்பாயாக-ஆறுநாளுநீவேலைசெய்து ஏழாநாளி லோய்ந்திருந்து அதைக்கடவுளுக்கென்று செலவிடுவாயாகவென்பது யெகோவாஅருளியபத்துக்கற்பனையிலொன்று. மனுஷர்யாவரு மநுசரித்தொழுகல்வேண்டுமெனக்கருதி யெகோவாஓர்கற்பனையைஅருளுவாரேல், அஃதியாவர்க்குமொருங்கொத்திருத்தல் வேண்டும். அதொழிந்து மேற்கூறிய இக்கற்பனை வலைஞர், இரும்புண்டுபண்ணுவோர், கண்ணுடிசெய்வோர், கப்பலோட்டிகள்முதலிய தொழிலாளிகட்குச்செல்லாமை கடவுளின் ஞானத்திற்குப்பொருந்துமா? இரவிலேமீன்பிடித்து அம்மீனைப் பகலிலேவிக்கிரயப்படுத்திச் சீவனம்பண்ணும் வலைஞனுக்குக் கடவுளால்நியமி

க்கப்பட்ட ஓய்வுநாளாவதெது? பரதகண்டமுதலிய கீழைத்தேசத்தோராற்கொள்ளப்படுமாறும் யெகோவாவால்முதலிலே சாயங்காலமும்விடியற்காலமுமானதா லோர்நாளாயிற்றெனக்கியமிக்கப்பட்டவாறுஞ் சூரியோதயந்தொடுத்துச் சூரியோதயம்வரைக்கு மோர்நாளாயினுமாகுக. அன்றேல் அங்கிலேயர்முதலிய மேலைத்தேசவாசிகளாற் கொள்ளப்படுமாறு அர்த்தராத்திரியின் றர்த்தராத்திரிவரைக்கு மோர்நாளாயினுமாகுக, சாயங்காலத்தில்வலையின்சிக்கெடுத்து இரவில்மீன்பிடித்து விடியற்காலத்தில்விற்பது வலைஞன்றொழில். இவன் ஆதிவாரத்தில் விற்பனைசெய்யப்படாதாதலாற் சனிவாரத்திரவில் மீன்பிடியாதொழிந்தும் ஆதிவாரத்திரவில்மீன்பிடித்தல் விலக்கப்பட்டதாற் சோமவாரத்தில்விற்பனையொழிந்தும் இருப்பதுபொதுத்தருமமா? வலியஉரலுக்கோர்பக்கத்திடி. மெல்லியமத்தளத்திற்கிருபக்கத்துமிடியென்றாற்போல எளியவலைஞனிடத்திலா இரண்டுநாட்கேட்கின்றார்!—நூற்றிருபதுநாழி ஓயாமல்தொழில்நடந்தாலன்றி உலையிலிட்டகல்லுருகிஇரும்பாவதுமில்லை. மணலுருகிக்கண்ணாடியாவதுமில்லை. மூட்டியஉலையிற் பலமாசமாகஇடையறாதுவேலைநடந்தாலன்றி இத்தொழிலாளர் பிரயோசனமடையார். ஓய்வுநாளாசரித்தற்பொருட்டுச் சனிவாரத்தில்உலையாற்றுவாராகில் மறுபடிசோமவாரம்மூட்டியஉலை புதவாரத்திற்குமுன்பயன் கொடாதாகவே இவர்கள்வாரமொன்றிற்கு மூன்றுநாள் கைவிட்டுக்கொடுத்தல்வேண்டும். குருகுலத்தானுக்கிரண்டோடாயினும்போனது. இவருக்கின்னுமொன்றுகூடி மூன்றாயிற்று.—கப்பலோட்டிபாடும் அதுவே. மூன்றுநாலுமாதங் கரைதெரியாதுகப்பலோட்டும்ஓர்மாலுமி இந்நாளையநுசரிப்பதெவ்வாறு?—வைத்தியர்க்குமௌஷதக்கடைக்காரருக்கும் இந்நாளநுசரிப்பெப்படிப்பொருந்தும்? தம்மைப்புணையாயேறிய பிணியாளிகளை நடுக்கடலினிடைக்கவிழ்ப்பாரா?—சிறுபயிருலகில்விர்த்தியாகுமா? இன்றைக்குநீர்ப்பாய்ச்சிய அப்பயிர் அழுகிவிடுமென்பதுமநாளைவிட்டுமறுநாள்நீர்பாய்ச்சாதொழியில், அஃதெரிந்துபோமென்பதும் யார்க்குந்தெரியுமே. பின்னைஇடையில்வருமோய்வுநாட் கிப்பயிராளிசெய்யுமாறென்னோ?....—ஆதலாலிக்கற்பனை சர்வஞானசுதந்தரகடவுளா லருளப்படமாட்டாதென்றுணர்க” என்கிறார்.

௫௯. ௲-வது. சூரியாஸ்தமன காலமே யூதருக்குநாளினதுதுவக்கமாமாதலால், யூதருள்மீன்பிடிக்கிறவர்கள் ஓய்வுநாளையாசரித்தற்கு இரண்டுநாளைத்தொழிலை நிறுத்தல்வேண்டுவதில்லை. கிறிஸ்துவர்களுக்கு வேதசம்பந்தத்தில் இராத்திரி ௧௨-மணிநேரமே நாளினதுதுவக்கமாமாதலால், இவருள்வலைஞர்சனிக்கிழமைப்பகலிலேயேவலைச்சிக்கறுத்துச் சென்னபட்டணமுதலிய விடத்திலுள்ளவலைஞர்போல் இராத்திரி௯-௧௦-மணிக்குமுன்மீன்பிடித்துவந்துவிற்று, ௧௨-மணிக்குமுன்வலைச்சிக்கறுத்துக்கொண்டுஞாயிற்றுக்கிழமையிராத்திரி ௧௨-மணிக்குப்பின் மீளவும்மீன்பிடிக்கச்செல்கின்றார்களாதலின் இவர்களும்ஓய்வுநாளையாசரித்தற்கு இரண்டுநாளைத்தொழிலை நிறுத்தல்வேண்டியதில்லை. ஆதலாற்சர்வேசுரன்எளியவலைஞனிடத்தி லிரண்டுநாள்கேட்கவில்லையெனவும், கேட்கிறதொன்றதறியாமையெனவுமறிக.

சு0. உ-வது. கஉ0. நாழிகைக்குஇரண்டுநாளாகும். ஆதலால் இரும்புண்டுபண்ணுவோரும் கண்ணாடிசெய்வோரும் ஆறுநாளைக்குவேலைசெய்துஒருநாளை ஓய்வுநாளாகஆசரித்தற்காக அவர்கள்மூன்றுநாளைத் தொழிலைநிறுத்தல்வேண்டுவதில்லையெனவும், இந்தஓய்வுநாளில்உலையாறுதிருக்கச்செய்தற்கும் பலவிதமானசூத்திரங்களுண்டெனவும், அதிகப்பிரயோசனங்கருதி மலசலமோசனம்பண்ணாமலும் ஆகாரநித்திரையில்லாமலும் பலமாதமாகஇடையறாது வேலைசெய்வோர் பிசாசினையொப்பரென்றுசொல்லப்பட்டுப், பிணியினால்விரைவிலே தப்பாமலிறப்பராதலால், ஓய்வுநாளையாசரித்தல் இவருடலுக்குச்சௌக்கியத்தைத் தருவதுமாமெனவும், ஆதலாற்சருவேசுரன் மனிதர்ஓய்வுநாளையாசரிக்கத்தந்தகட்டளையால் இரும்புண்டுபண்ணுவோருக்குங்கண்ணாடிசெய்வோருக்கும் அதிபிரயோசனமுண்டாகிறதேயன்றி வாரத்தில மூன்றுநாளைத்தொழில நஷ்டமுண்டாகிறதில்லையெனவும், உண்டாகுமென்றதறியாமையெனவுமறிக.

சுக. ங-வது. யூதர்கள் வெள்ளிக்கிழமைச்சூரியாஸ்தமனத்துக்குமுன்னாழிகையிலும், சனிக்கிழமைச்சூரியாஸ்தமனமானபின் உடனேயும் பயிர்க்குத்தண்ணீர்ப்பாய்ச்சினால், அவர்ஓய்வுநாளையுமாசரித்துப் பயிர்க்கு நித்தியமுந்தண்ணீர்ப்பாய்ச்சினதுமாகும்; யூதர்வியாழக்கிழமைச் சூரியாஸ்தமனத்துக்கு முன்னாழிகையிலும், சனிக்கிழமைச்சூரியாஸ்தமனமானபின்உடனேயும் பயிர்க்குத் தண்ணீர்ப்பாய்ச்சினால், அவர்ஓய்வுநாளையுமாசரித்துச் சிறுபயிர்க்கு ஒன்றைவிட்டொருநாள்தண்ணீர்ப்பாய்ச்சியதுமாகும். கிறிஸ்துவர்கள் சனிக்கிழமையிராத்திரி கஉ-மணிக்குமுன்னாழிகையிலும் ஞாயிற்றுக்கிழமையிராத்திரி கஉ-மணியானவுடனேயும் பயிர்க்குத்தண்ணீர்ப்பாய்ச்சினால், இவர்கள் ஓய்வுநாளையுமாசரித்துப் பயிர்க்குநித்தியமுந்தண்ணீர்ப்பாய்ச்சியதுமாகும். கிறிஸ்துவர்கள் வெள்ளிக்கிழமையிராத்திரி கஉ-மணிக்குமுன்னாழிகையிலும் ஞாயிற்றுக்கிழமையிராத்திரி கஉ-மணியானவுடனேயும் பயிர்க்குத்தண்ணீர்ப்பாய்ச்சினால், இவர்கள் ஓய்வுநாளையுமாசரித்துச் சிறுபயிர்க்குஒன்றைவிட்டொருநாள்தண்ணீர்ப்பாய்ச்சியதுமாகும். ஆதலால்ஓய்வுநாளையாசரித்தலிற் பயிர்க்குக் கெடுதியுண்டாகிறதில்லையெனவும், கெடுதியுண்டாமென்றது அறியாமையெனவுமறிக.

சுஉ. ச-வது. கப்பலோட்டிகள் பலவூர்களுக்குப்போய் அங்கங்கேயிறக்கவேண்டியதையிறக்கிவிட்டு ஏற்றிக்கொள்ள வேண்டியதையேற்றிக்கொள்வார்களாதலாற், கிறிஸ்துவர்களாகிய கப்பலோட்டிகள் ஓய்வுநாளையாசரித்தற் கிசைவாய்வாய்க்கிறஇடத்தில் தங்கள்கப்பற்கு நங்கூரம்போட்டுவைத்து, ஓய்வுநாளையாசரிக்கிறார்கள்; வைத்தியரும் ஓய்வுநாளையாசரிக்கிறார்கள்; ஔஷதக்கடைக்காரரும் தங்கடைகளைச் சாத்தி, ஓய்வுநாளையாசரிக்கிறார்கள். ஆனால்சீவனுக்குஆபத்துவராமற் காப்பதற்கும் உபகாரஞ்செய்வதற்கும் ஓய்வுநாளில்வேலைசெய்யவுத்தரவுண்டு. அதிற்குற்றமில்லை. (அர்ச். மத். கஉ: க—கரு) என்றுஓய்வுநாளையாசரிக்கக்கட்டளையிட்ட சருவேசுரனேசொல்லியிருத்தலால், ஓய்வுநாளிற் கப்பல்நிறுத்தப்படக்கூடாதவிடத்திலோடுமாயிற் கப்பலோ

ட்டிகளும், யாருக்கேனும் ஆபத்தான வியாதியுண்டாயிருக்கு மாயின் வைத்தியரும்ஔஷதக்கடைக்காரரும் தங்கள்தொழிலைச் செய்யவுத்தரவுண்டெனவும், ஆதலாலிவர்களைக்காட்டி ஓய்வுநாளின் மேற்குற்றங்கூறியது மறியாமையெனவுமறிக.

௬௩. ௫-வது. சைவருக்குரியநித்தியகருமவியலானது (ஆறுமுகநாவலரதுசைவவினாவிடை யிரண்டாம்புத்தகத்து உ௩௩-ம்இலக்கம்) "மலசலமோசனஞ்செய்யத்தக்கஇடம்....திருக்கோயிலெல்லைக்கு நானூறுமுழத்தூரத்தினதாய், ஈசானதிக்கொழிந்ததிக்கினிடத்ததாயுள்ள தனியிடமாம்" என்கின்றது, இக்கருமம் வியாதியாளர்முதலியோரொழுகுதற்கியலாததாதலின், மனுஷர்யாவரும்அநுசரித்தொழுகுதற்குரிய கருமமன்று. ஆதலாற்பண்டிதர்மேலேசொல்லியபடி இக்கற்பனைசர்வஞானசுதந்தரகடவுளாலருளப்பட்டதன்று. சைவர்கள்இக்கற்பனை சிவனாலருளப்பட்டதெனலால் சிவன்சர்வஞானசுதந்தரரல்லரொன்று பண்டிதர்கூறினதாதலறிக.

௬௪. ௭. பண்டிதர்: பிறகுபுதியவேற்பாட்டுக்குங் குற்றங்கூற நினைந்து, ௧-வது: "ஒருவனுக்கு மனதிலேயாதாயினுமொரு கவலையுளதாங்காற் பகல்முழுதுமதுவேயவன்சிந்தனையாகும். இரவிலஃதேயவனதுகனவாகும். ஓர்புருஷனுக்குப்பெண்சாதியின்கவலையையொத்த பெருங்கவலையிலது. அதிற்புதுமனைவியர் விசேஷம். அதிலுங்கரணுநுபோகங்களுக்குக்கையில்வராது இன்றோநாளையோவெனக் கணந்தோறுமனதைக்கவர்ந்துகொள்ளையாடி அவனைக்கைக்கிளைத்துயரிலமிழ்த்தாநிற்கு மோர்கன்னியாலாகுங்கவலை மிகப்பெரியதாம். இதனுண்மைஇல்லறம்பூண்டோர்யாருமறிவர். இஃதிங்ஙனமாக, யோசேப்பு தனக்குநியமிக்கப்பட்டமரியாள் தன்னையறியாதுகருப்பந்தரித்தனளெனக்கேள்வியுற்றபோது மவன்மனமெவ்வாறுவருந்தும்? அவன்பிறகாரியத்தில் தன்மனதைச்செலுத்தக்கூடியதாயிருக்குமா? இரவுபகல்அவனுக்குவேறுசிந்தனையாகுமா? பகலில்அவன்நினைப்பதும் இரவிற்கனுக்காண்பதும் வேறொருவிஷயமாமா? பின்னேஇவன்கனவு மரியாளின்கற்புக்கோர்சான்றெனபதென்னோ? கனுக்கண்டதுண்மையாயினுங் கண்டதுகனவுதானே. ஆகவேவந்துசொன்னவன் காபிரியேலென்பதற்குச்சாட்சியேது? நனவில்வெளியாய்நின்று ஓர்தேவதூதன்சொன்னனாயினும் மனோசஞ்சலமிகுதியாலவ்வாறுகண்ட தோர்உருவெளியென்றுநம்பத்தக்கதாயிருக்கக், கனவுகனவென்று சொல்வதுதகுதியா? மனோசாஸ்திரமறிந்தபெரியோரே கபடமில்லாது சொன்மின். கனவாலுணர்த்துங்கடவுள் அவன்அவளதுகருப்பநிலைமையையறியுமுன்னவது உணர்த்தினராயின், அவனதுகனவும் அவளது கருப்பநிலைமையுமொன்றற்கொன்றுசாட்சியாகும். மரியாள்கருப்பவதியாயினளென்று யோசேப்பறிந்து மனோசஞ்சலத்திலமிழ்ந்தியபின்னு கடவுள்கனவுவரவிட்டார்? கடவுளதுஞானம்நன்றாயிருந்தது!! இப்படிப்பட்டதோர்கனவிலா கடவுள்தன்வேதமுழுதுந் தொங்கிநிற்கும்படி வைப்பர்? அதுவுங்கல்விகேள்விகளாலுயர்வில்லாத தோர்ஏழைச்சிற்பாசாரியின் கனவா? நாலுபெயர்சாட்சியாய் அத்தூதன்வரலாகாதா? விண்ணினின்

ளோர்அசரீரிபிறக்கப்போகாதா? உண்மையானகிறிஸ்தவனே நீஉன்னை அவ்விம்யாசேப்பாகப்பாவி. இப்படிப்பட்டதோர்கனுவால் உன்னையறியாதுகர்ப்பவதியாகிய உன்மனைவியை நீஅங்கீகரிப்பாயா? ஒளியாமற் சொல்லு. இன்னுஞ்சிலகேள்விகேட்பாருளர். அவைசமயதூஷணமாகுமென்றஞ்சி அவற்றையான்கேட்கிலன். கனவினுண்மையைப்பெலப்படுத்துதற்கானவிசேஷசம்பவம் வேறேதாவதுகூட நிகழ்ந்ததாயின், அதாவதுமனதிற்கோர்திர்ப்தியாகும். அப்படியுமொன்றைக்காண்கிலேம். கர்ப்பந்தரித்தசிசு அபூர்வமாயிரண்டொருமாசத்திற்பிரசவமாய் அல்லதுமனுஷீகத்துவத்திற்குமாறானவேறெந்தவிதமாயாவ துற்பத்தியாகுமேல், தேவசிசுவென்றெத்துக்கொள்ளலாம். மானுஷிய சிசுக்கள் போலப் பத்துமாதம்வயிற்றிலிருந்துபிறந்து தாய்முலைப்பாலுண்டுவளர்ந்து மற்றெத்தானுமோர்விகாரம்பூணுதகுழந்தை உண்டானதும் மானுஷியத்தன்மையாகவேயிருத்தல்வேண்டும்" என்கிறார்.

௬ரு. ௲-வது. பண்டிதர்: ஒருநீதிமானென்று வேதத்தாற்சொல்லப்பட்டஉத்தமரும், துறவியும், தேவகட்டளையினிமித்தமே விவாகத்துக்குடன்பட்டவரும், அப்படியேகன்னியா யெப்போதுமிருக்கப் பிரதிக்கினைபண்ணிக்கொண்டு தேவகட்டளையினிமித்தம் விவாகத்திற் குடன்பட்ட அர்ச். மரியாயியாகியதன்மனைவியோடுபேசி யில்லறத்திலே தாங்கள்முன்தெரிந்துகொண்டதுறவறத்தையே கைக்கொண்டொழுகத்தீர்மானித்துக்கொண்டவருமாகிய அர்ச். சூசையப்பருக்குக்கைக்கிளைத்துயரிலமிழ்ந்துஞ்சாமானியனை யுபமானமாக்கியது பொருந்ததெனவறிக.

௬௬. உ-வது. வேதத்தில் (அர்ச். மத்- க: ௧௯.) "அப்படியிருக்க அவளுடையபத்தாவாகியசூசையப்பர் நீதிமானுயிருந்ததினாலும் அவளையவமானப்படுத்த அவருக்குமனசில்லாமையினாலும் இரகசியமாயவளைநீக்கிவிடக்கருதினார்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இது. இதில் "இரகசியமாய்" என்றதினால். அர்ச். மரியாயி கருப்பங்கொண்டதுசூசையப்பராலன்றென்று அப்போதுஅவரன்றி வேறொருவருமறியாரென்றகருத்துள்ளதாயிருக்கப், பிறருமறிவர், பிறரேமுன்னறிந்தவர், அவர்சொல்லியே சூசையப்பரறிந்தனரென்னுங்கருத்துப்படக், "கேள்வியுற்ற"னவென்னுமொழியைப்பண்டிதருபயோகித்ததும் பொருந்தாதெனவறிக.

௬எ. ௩-வது. தன்மனைவிமேற்சந்தேகங்கொண்டவனுக்கு அந்நினைவாலுண்டாகுங்கனவில் அவன்தனதுசந்தேகத்துக்கொத்தவிதமாக, ஒருசோரநாயகன்வந்ததுபோலவும் அவன்அவளொடுபேசியிருந்துபோனதுமுதலியவைபோலவுங் காண்பானேயன்றி, விசுவாசிகளாகியநீதிமான்கள் சிலசமயத்தில்நித்திரையிற்காண்பதுபோலத் தேவதூதன்வந்து அந்தச்சந்தேகநீங்குதற்கானவுறுதிமொழிகளையுணர்த்தக் காண்கிறதில்லை. அர்ச். சூசையப்பரோ: சம்மனசுதோன்றிஇந்தக்கருப்பமுண்டானவிதத்தையும். இதுவிஷயமாயுள்ள வேதவாக்கியத்தையும் இனித்தாம்இந்தவிஷயத்தில் நடந்துகொள்ளவேண்டியவிதத்தையும் தமதுசந்தேகநீங்கத் தமக்குச்சாங்கோபாங்கமாகச் சொல்லியுணர்த்தக்

கண்டார். பின்மனைவிசொல்லக்கேட்டதும் தாம்நித்திரையிற்கேட்டதற்கொத்திருத்தலையறிந்தார். ஆதலால்இத்தன்மையையுடைய இக்காட்சியை ஒருநீதிமானுகியசூசையப்பர் கைக்கிளையுடையோருக்கு அவர்நினைவின்படிதோன்றுங்கனவொத்ததாகவெண்ணவும், அவர்மனைவியாகியகன்னிமரியாயின்கற்பினுக்குச் சான்றன்றெனமறுக்கவும்வேண்டுமென்று பண்டிதர்சொல்லியதறியாமையெனவறிக.

மேலும்சருவேசுரன் தமமுடையபக்தருள் அர்ச்சியசிஷ்டசூசையப்பருக்குமாத்திரமே தாமறிவிக்கவிரும்பினதைச் சொப்பனத்தில்அறிவித்தாரென்று நினைக்கவேண்டுவதில்லை. அவருக்குமுன்னிருந்த பக்தர்களுக்கும் பெரும்பாலும்சொப்பனத்திலேயே யறிவித்துவந்தாரென்பதைப் பழையவேற்பாடென்னும்வேதபுத்தகத்திலே பலவிடத்திற் காணலாம். இதுநிற்க. சிவன்சுந்தரமூர்த்திக்கும், சிவகோசரியாருக்கும், (பழையாறையில்வருந்திய அப்பமூர்த்திக்காக) அரசனுக்கும், (தண்டியடிகணுயனுருக்காகச்) சோழவிராஜாவுக்கும், பாணபத்திரருக்கும், கூற்றுவநாயனுருக்கும் (திருநின்றவூரிலிருந்த பூசலார்நாயனுருக்காக) அவ்வரசனுக்கும், (திருநீலகண்டயாழ்ப்பாணருக்காகத்) தம்முடைய எல்லாஅடியார்களுக்கும், குங்கிலியக்கலையநாயனுர்மனைவிக்கும், திருநாளைப்போவார்நாயனுருக்கும், தில்லைவாழந்தணர்க்கும், திருநாவுக்கரசுசுவாமிகளின்சகோதரியாகிய திலகவதிக்கும், புகழ்த்துணைநாயனுருக்கும் தாமறிவிக்கவிரும்பியவைகளைச்சொப்பனத்திலே அறிவித்தாரென்றும், சிவகோசரியாரும், கூற்றுவ நாயனுரும், தண்டியடிகணுயனுரும் சிவன்தங்களுக்குச் சொப்பனத்திலேசொல்லியவைகள் தாங்கள் முன்கருதியிருந்தவைகளுக்குச் சம்பந்தப்பட்டவைகளாயிருந்தும் அவைகளை உண்மையானவைகளென்று நம்பிக்கொண்டார்களென்றுஞ் சைவர்களுடையபெரியபுராணஞ்சொல்லுகின்றது. ஆதலாற்பண்டிதர் "கனுக்கண்டதுண்மையாயினுங் கண்டதுகனவுதானே. ஆகவேவந்து சொன்னவன் காபிரியேலென்பதற்குச்சாட்சியேது"? என்றதுமுதலியவைகளும்அறியாமையேயெனவறிக.

௬அ. ௪-வது. சர்வேசுரன் கன்னிமரியாய் கருப்பிணியாகுமுன் அதனைக்குறித்துச்சூசையப்பருக்கறிவித்தனராயின், கடவுளாலறிவிக்கப்பட்டதைவிஸ்வசித்துத் தேவகட்டளைப்படியொழுகும் புண்ணியம் இதுவிஷயத்திற்சூசையப்பருக் குண்டாயிராமற்போவதுமன்றித் தன்பத்தாவுக்குத்தன்மேற் சந்தேகமுண்டாகியுந் தேவரகசியத்தைத் தேவகட்டளையின்றிவெளிப்படுத்தாது மறைத்தபுண்ணியங் கன்னிமரியாய்க்குமுண்டாயிராது. இவைமுதலியகாரணங்களாற்சர்வேசுரன்இதனைமுன்னரேஅர்ச். சூசையப்பருக்கறிவியாதிருக்கப், பண்டிதர்இதனுற் சர்வேசுரனதுஞானத்துக்குக்குறைவுசொல்லலறியாமையெனவும், சருவேசுரனது ஞானம்: பஸ்மாசுரனுக்குவரங்கொடுத்தபின் அவனுக்குப்பயந்தோடி ஐவிரலிக்காயிலொளித்த சிவனதுஞானத்தை யொத்ததன்றெனவுமறிக.

௬௯. ௫-வது. சருவேசுரன் தாம்தீர்க்கதரிசன வேதபுத்தகத்திலறிவித்திருந்தபடி, கன்னியின்வயிற்றிற்பிறக்கச்சித்தமானுலும் சர்

வேசுரன்பூமியில்மனுஷாவதாரம்பண்ணி வந்துவிட்டாரென்று பிசாசு றியாமல்மறைக்கவும், தம்முடையதாய்விஞகவிபசாரதோஷஞ் சொல லப்படாதிருக்கவுமே அவளுக்குக்கல்யாணஞ்செய்வித்தமையால், கன் னிகருப்பவதியாயினது அப்போதுமறைக்கப்படத்தேவசித்தமாயிருந்த து. அப்படியே அவளதுபத்தாவும் அதனாலவளுக்கிழிவுவராமல்மறை க்கத்துணிந்திருக்கப், பண்டிதர்சம்மனசாவது அசரீரியாவது அவளோநா லுபேராவதுபலரோவதறியத் தூற்றுவிக்கவேண்டுமென்றது மறியா மையெனவறிக.

எ0. சு-வது. சர்வேசுரன் தன்தாயின்கன்னிமை கெடாமலுற் பவித்ததுபோலவே யற்புதமாகப்பிறந்ததும், பிறந்தபோதுசம்மனசுக ள்வந்துபாடினதும், நக்ஷத்திரமூன்றுசாஸ்திரிகளுக்கு வழிகாட்டியழை த்துவந்ததுமுதலியவைகளும், முன்போலவேசம்மனசு கித்திரையில் தோன்றி எசித்துக்குப்போகச்சொல்லியதுமுதலியவைகளும் சேசுநா தர்தேவகுமாரனென்பதைக்காட்டுவனவாயிருக்க, அவர்ஆத்தும சரீர முதலியவைகளைக்கொண்டிருத்தலும் ஒன்பதுமாதந் தாய்வயிற்றிலிரு ந்ததுமுதலியவைகளும் தேவன்மனுஷனாகவேயவதரித்துப் பிறந்தாரெ ன்பதைக்காட்டுகின்றன. இங்ஙனமாயிருக்கப், பண்டிதர்கனவினுண் மையைப் பெலப்படுத்துதற்கானவிசேஷசம்பவம் வேறேதுங்கூடநடந் ததில்லையென்றதும், அவர்அபூர்வமாயிரண்டொருமாசத்திற்பிறவாமை யாற் சேசுநாதர்கடவுளல்லரென்றதுங்கூட அறியாமையெனவறிக.

எக. கஅ. பண்டிதர்: உ-வது: "சாஸ்திரிகளுக்குத் தோற்றிய நக்ஷத்திரத்தின்கதையை யெட்டுணையும்நம்பிலேம். அற்புதமாய்த்தோ ன்றிவழிகாட்டின நக்ஷத்திரம் வழிதப்பிப்போகுமா? பெத்தலேகேமி லேபிள்ளைகிடக்க ஏரோதின்வீட்டுக்குச்சாஸ்திரிகளைக் கொண்டுபோ மா? ஏரோதுக்குக் குழந்தையைக்காட்டிக்கொடாமல்மறைத்துவைப் பதே கருமமாய்க்கொண்டு, சாஸ்திரிகளை அவனிடத்தில்திரும்பிப்போ கவிடாதயெகோவா முதலேநக்ஷத்திரத்தைத் தடுக்க ஞானமில்லாது போயினாரா? ஊரிலுள்ளகுழந்தைகளையெல்லாங் கொல்லுவிப்பது க டவுளுக்குவப்பாமா? மேலும் இச்சாஸ்திரிகள்யாவர்? அஞ்ஞானிகளும் புறச்சமயிகளுமாம். அவர்கள்யூதசிசுவை வணங்கப்போனதும் நூத னமே" என்கிறார்.

எஉ. ௲-வது. இந்தச்சாஸ்திரிகள்எருசலேமிற்போக இரண்டு வித அவசியமுண்டாயிருந்தன. அவற்றுள்௲-வது. இந்தச்சாஸ்திரிகள் இராஜாக்களாயுமிருந்தமையால், இவர்களுடைய பரிவாரங்களோடேயி வர்கள்போதற்கு இராஜபாட்டையே யிசைவானதாதலால், அந்தப்பா ட்டையா லிவர்கள் எருசலேமுக்குப்போக லாவசியகமாயிருந்தது. உ-வது. சாஸ்திரிகள்சேசுநாதனைவணங்கவந்ததை ஏரோதறிவானாயி ன், அவனால்யூதகுருக்களும்வேதபாரகர்களுமறிந்து, சேசுநாதனைமூ ன்றரசர்கள் நக்ஷத்திரம்வழிகாட்டவந்து வணங்கினதற்குச் சாக்ஷிகளா வார்கள். அவர்கள்சாக்ஷியையூதர்களொத்துக்கொள்வார்கள். இந்த நன்மையுண்டாதற்கும் இந்தச்சாஸ்திரிகள்எருசலேமுக்குப்போத லா வசியகமாயிருந்தது. ஆதலால், இக்காரியத்தினிமித்தம் இச்சாஸ்திரி

கள்எருசலேமுக்குப் போகுவித்தசர்வேஸ்வரனதுஞானத்தைப் பண்டிதர் (ஆன்மாக்களுக்கெல்லா முத்தியளித்தல்தமக்கியலாதென்றறியாத) சிவனதுஞானம் போலெண்ணிக்குறைசொல்லிய தறியாமையென வறிக.

எங. உ-வது. பிலேட்டோ (Plato) என்பவரதுபோதகானுசாரியாகிய சால்சிடியஸ் (Chalcidius) என்பவர் (In Tim. No. 125.), சிலநூர்க்குறிநக்ஷத்திரங்களைக்குறித்து ஹோமெர் (Homere) என்பவர்எழுதினதைப்பற்றிப் பேசிவருகையில்: "அதிககனத்துக் குரியதும் பரிசுத்தமுள்ளதுமாகியவோர்சரித்திரமுண்டு. அதுஓர்நக்ஷத்திரம் நோய்களுக்குக்குறியாக அல்ல, மனுஷர்களைக்காப்பாற்ற ஓர்தெய்வம்இறங்கினதுக்கு அடையாளமாகத்தோன்றினதென்றும், கல்தேய(Chaldea) ஞானிகள் அந்நக்ஷத்திரத்தை வழிகாட்டியாகக்கொண்டு, பிறந்த தெய்வத்தைத்தேடிப்போனார்களென்றும், அவரைக்கண்டுபிடித்து ஆராதித்தார்களென்றும்சொல்லுகிறார்கள்" என்றும்பேசியிருக்கிறார். இப்படிச் சாஸ்திரிகள் நட்சத்திரங்காட்டினவழியேவந்து சேசுநாதனைவணங்கிப் போனதற்கு நல்லசாக்ஷியுமிருக்கப், பண்டிதர் "சாஸ்திரிகளுக்குத் தோற்றியநக்ஷத்திரத்தின்கதையை யெட்டுணையும்நம்பிலே" மென்றதறியாமையெனவறிக.

எச. ந-வது. பண்டிதர் சிவன்அதிட்டித்துநிற்கும் பிரமவிஷ்ணுக்களின் சண்டையைக்குறித்து, அவ்வான்மாக்க ளனுபக்ஷத்தால் யுத்தஞ்செய்தனராயின், அதன்பயனாகியதண்டனையையடைதற்பாலர்" அதனாற்சிவத்திற்குத்தோஷமென்னோ?" என்று தமதுசைவமகத்துவத்தின்நஉ-ம்பக்கத்திற்சொல்லி, அதற்கும்விரோதமாக இங்கே, எரோதுசிசுக்களைக்கொன்றதைச் சருவேசுரன்கொல்வித்தாற்போல "ஊரிலுள்ளகுழந்தைகளை யெல்லாங்கொல்விப்பது கடவுளுக்குவப்பாமா?" என்றதும், சிவன்இயற்பகைநாயனாரால், அவரது குற்றமில்லாதசுற்றத்தாரை அநியாயமாய்க்கொல்வித்ததைநினையாமையும் அறியாமையென வறிக.

ச-வது. தாங்களேகிறிஸ்துவேதத்திற் பிரவேசித்த அஞ்ஞானிகளுட் பலர்மேலான்சாஸ்திரிகளென்று சரித்திரபுஸ்தகங்கள் தெளிவாயறிவிக்கும்போது, சர்வேசுரனதுநக்ஷத்திரம் வழிகாட்ட அஞ்ஞானிகளாயிருந்தசாஸ்திரிகள்போய்க் கிறிஸ்துநாதனைக்கண்டுவணங்கிக் கிறிஸ்துவர்களானதைப்பண்டிதர்நூதனமென்ற தறியாமையெனவறிக.

எரு. கக. பண்டிதர் ந-வது: "தன்னிடஞ் சாஸ்திரிகள்வராமையைக்கண்டபோது எரோதுக்குஉண்டானகோபஞ் சடிதியில்வந்த கோபமல்லவே. பற்பலதவறுகளிழைத்தவனாயினும் எரோதுஇராசயுத்தியில்மிகச்சிறப்புடையனென்று அக்காலத்துஇதிகாசமெழுதிய யோசிபாசர்சொல்லுகிறார். பின்னை அவ்வரசன் சாஸ்திரிகளாற்கூறப்பட்டபிள்ளை யெவ்விடத்துளதென்று வேவுகாரராற்றேடிக்கொல்ல நினையாது, ஒருஆலோசனையுமின்றி நியாயநெறிகடந்து கொடுங்கோலரசருஞ்செய்யநினையாத சர்வசிசுசம்ஹாரமொன்றுவிதிப்பானோ? இவ்வேரோதின்தவறுகளையெல்லாம் விவரித்தெழுதியயோசிபாசர்இச்சங்கார

த்தைக்குறித்துமாத்திரங் கூறுதொழிந்ததென்னே" என்கிறூர்.

எசு. இதிற்பண்டிதரோ, "பற்பலதவறுகளிழைத்தவனுயினும்ஏரோது"என்றதனுல், ஏரோது அஸ்மோனேயவொன்றமக்கபேயர்களிற் கடைசிப்பிரபுவாகிய அந்திகோனென்பவனைக் கொலைசெய்வித்தவன், தன்ஸ்திரீயையும், இரண்டுகுமாரர்களேயும், யூதர்களிலநேகம் பெரியோர்களேயும், முன்தனக்குப்பிரதானஆசாரியர்களாயிருந்த மக்கபேயர்களேயும், கொலைசெய்தபாதகனென்றுரைத்துக்கொண்டும், அவன்சேசுநாதரினிமித்தஞ் சிறுபிள்ளேகளேக்கொல்வித்ததில்லையென்கிறூர். மக்ரொபியுஸ் (Macrobius) என்னும்அஞ்ஞானசாஸ்திரியும் சாத்துர்ன். உ-ம்காண்டத்துச-ம்அதிகாரத்தில் (Saturn Lib 2. ch. 4.) "சிரியாதேசத்தில் ஏரோதேயென்றயூதேயாஅரசன் கொலைசெய்யக்கட்டளேயிட்ட இரண்டுவயசுக்குட்பட்டபிள்ளேகளுக்குள் அவன்மகனும்கொலைசெய்யப்பட்டானென்று அகஸ்துஸ் (Augustus) என்பவர் அறிந்து, ஏரோதனுடையமகனுயிருக்கிறதைவிட அவனுடையபன்றியாயிருக்கிறதுஉத்தமமென்றூர்" என்றெழுதியிருக்கிறூர். ஆதலால், பண்டிதரிப்படிச்சொல்லுதல் அறியாமையெனவறிக.

எஎ. உ0. பண்டிதர்: ச-வது: "அல்லாமலும் அச்சம்ஹாரத்திற்குத்தப்புவிக்கும்பொருட்டு யேசுவைஎகிப்திலேகொண்டுபோய்வைத்திருக்கும்படி கடவுள்கட்டளேயிட யோசேப்பும்மரியாளுங் குழந்தையைஅவ்வூருக்குக்கொண்டுபோய்அங்கேதங்கியிருந்தார்கள். ஏரோதுஇறந்தபின் கடவுள் அவர்களுக்குவெளிப்பட்டு, நீங்கள்இனிஉங்கள்ஊருக்குப்போங்களென்றுகற்பித்தார்; அவ்வாறவர்கள்போகையில், இடையிலேமறுபடியுந்தோன்றி அங்கேபோகாதேயுங்கள் குழந்தைக்குஇன்னும்மோசம்வரத்தக்கதாயிருக்கிறதென்றூர். இதுகடவுளின்ஞானந்தானு!" என்கிறூர்.

எஅ. அர்ச். மத்தேயுசுவிசேஷத்தின்உ-ம்அதிகாரத்து-கக-உ0-உக-உஉ-உங-ம்வசனங்களில், "ஆனுல்ஏரோதனிறந்தபின்பு இதோகடவுளின்தூதன் எஜிப்திலேசூசையப்பருக்கு நித்திரையில்தரிசனமாகி, நீரெழுந்திருந்துகுழந்தையையு மதின்தாயாரையுங்கூட்டிக்கொண்டு இஸ்ருயேல்தேசத்துக்குப்போயிரும். ஏனெனிற் பிள்ளேயின்பிராணனே (ப்பறிக்க)த்தேடினவர்கள் மடிந்தார்களென்றூர். (சூசையப்பர்) எழுந்து குழந்தையையும்அதின்மாதாவையுங்கூட்டிக்கொண்டு இஸ்ருயேல்தேசத்துக்குவந்தார். ஆயினும்அற்கேலாவுவென்பவன் தன்தகப்பனுகியஏரோதனுக்குப்பதிலாய் யூதேயாதேசத்தில் இராச்சியபாரம்பண்ணுகிறுனென்றுகேள்விப்பட்டு அங்கேபோகப்பயந்தார். மீளவுநித்திரையில்எச்சரிக்கப்பட்டுக் கலிலேயாநாட்டில் ஒதுங்கிப்போய், நாசரேத்தென்னுநகரிற்சேர்ந்துவாசம்பண்ணினூர். நாசரேயனென்றழைக்கப்படுவாரென்கிறதாகத் தீர்க்கதரிசிகள்சொன்னது நிறைவேறும்படியாயிற்று" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது: ஒருதேவதூதன் எசித்திலேசூசையப்பருக்கு நித்திரையில்தோன்றி ஏரோதுமரித்ததையறிவித்து, அவர்இஸ்ராயேல்தேசத்தில் போயிருக்கும்படிசொன்னூர். அப்படியேசூசையப்பர் அவரும்அர்ச். மரியாயியும்முன்வாசமாயிருந்த

நசரேத்தூருக்குப்போகும்படி புறப்பட்டுநடந்தார். ஆனாலப்பொழுது யூதேயாவில்ஏரோதின்மகன் இராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருந்ததைக்கேள்விப்பட்டதனால், யூதேயாநாட்டுவழியால் நாசரேத்துக்குப் போகப்பயந்தார். அப்பொழுதுசம்மனசுமறுபடிமுன்போல்அவர்க்குத் தோன்றிப் பயப்படாம லந்தவூரிற்போயிருக்கஎச்சரித்தார். சூசையப்பர் யூதேயாவுக்குக்கீழ்ப்பாரிசமாயொதுங்கிக் *கலிலேயாவிலே போய் நாசரேத்திற்சேர்ந்து வாசம்பண்ணினார்என்பதே. இந்தவேதவாக்கியங்களுக்குச், சர்வேசுரனுடையதூதன் சூசையப்பருக்குஎசித்திலேகித்திரையில்தோன்றினபோது சொன்னவூருக்குப்போகும்படிக்கே மறுபடி தோன்றியெச்சரித்தாரென்பதும், அதற்கேசூசையப்பர் போனாரென்பதுமே வெளிப்படைப்பொருளாயிருத்தலாற், பண்டிதர் "இதுகடவுளின்ஞானந்தானா?" என்றதுஅறியாமைஎனவும், அங்கேபோகாதையுங்கள்குழந்தைக்குஇன்னும்மோசம்வரத்தக்கதாயிருகிறதென்று" சருவேசுரன்சூசையப்பருக்குமறுபடிதோன்றிச்சொன்னானென்றதுபொய்யெனவும், பஸ்மாசுரன் யார்தலைமேற்கைவைத்தாலும், அவர்எரிந்துபோக அவனுக்குவரங்கொடுத்தபரமசிவன், அந்தஅசுரன்அந்தவரத்தைப் பரீக்ஷிக்கச்சிவன்தலைமேல் தன்கையைவைக்கப்போனபோது, ஓடிஐவிரலிக்காயி லொளித்துக்கொண்டதனால், சிவன்விஷயத்தில்இதுகடவுளின்ஞானந்தானாஎனி லதுபொருந்துமெனவுமறிக.

௭௯. ௨௧. பண்டிதர்: ரு-வது: "நசரேயனென்றழைக்கப் படுவானென்னுந் தீர்க்கதரிசனம்நிறைவேறும்படி நசரைக்குஅவர்களை அனுப்புதல்கருதி யிவ்வாறு செய்தாரென்று சமாதானமுரைப்பாருமுளர். இந்தத்தீர்க்கதரிசன மெங்கேயுளது? யாவராலுரைக்கப்பட்டது? விவிலியநூல் இல்லதும்முகமனாலெடுத்துப்பேசுமே" என்கிறார்.

௮௦. கலிலேயநாட்டவர்கள் இழிவாயெண்ணப்பட் டிருந்தார்கள். (அர்ச். அருள. ௭: ருஉ.)-அந்நாட்டிலுள்ளநாசரேத்தூரவர் மிகவுமிழிவாயெண்ணப்பட்டிருந்தார்கள். (அர்ச். அருள. ௧: ௪௬.)—இந்தவூர்க்குடிகள் மிகுந்ததுஷ்டத்தனத்தா லிழிவுகொண்டிருந்ததனால் நசரேயனென்பது துஷ்டனைக்குறிக்கும் பழமொழியாயிருந்தது. சேசுநாதர் அவ்வூர்க்குடியாகினதால்எசாயாதீர்க்கதரிசனத்தின் ௧௨-ம்அதிகாரத்து ௧௨-௯-௩-ம்வசனங்களிலும், ௬௮-ம்சங்கீதத்தின் (புரோடெஸ்டான்டர்புத்தகப்படி௬௯-ம்சங்கீதத்தின்) ௯—௧௦-ம் வசனங்களிலும், சகரியாசின்தீர்க்கதரிசனத்தின்௯-ம்அதிகாரத்து௯-ம்வசனத்திலும் சொல்லப்பட்டபடி அவர்அப்போது அக்கிரமகாராரு ளொருவராய்த் தாழ்வாய்மதிக்கப்பட்டவரானார். தீர்க்கதரிசிகள்சொல்லியிருந்தவைகள் இப்படியப்போது சேசுநாதரிடத்தில் நிறைவேறினமையால், "நாசரேயனென்றழைக்கப்படுவானென்று தீர்க்கதரிசிகள்சொன்னது நிறைவேறும்படியாயிற்று" என்றுஅர்ச். மத்தேயு தாமெழுதியசேசுநாதர் சுவிசேஷத்தின்௨-ம்அதிகாரத்து௨௩-ம்வசனததிற்சொலலினார். ஆதலால் "இல்லதுமுகமனாலெடுத்துப்பேசு"வதுசத்தியவேதமன்றெனவும், பாற்கட

*நாசரேத்தூரும் அதையுடையகலிலேய நாடும் இஸ்ராயேல் தேசத்திலுள்ளவைகளேயாம்.

ல்தயிர்க்கடல் நெய்க்கடல் கருப்பஞ்சாற்றுக்கட லுண்டென்னுஞ்சைவசமயநூலேயாமெனவும், விவிலியநூலென்றதறியாமையெனவுமறிக.

அக. உஉ. பண்டிதர்: கூ-வது: யோசேப்புஒருஎளியசிற்பாசாரி. அவன்மனைவியும்ஓர்தரித்திரி. பெத்லகேமுக்குப்புறப்பட்டபோது இப்படிஇவர்கள்எகிப்துக்குப்போகவும் நசரைக்குஓடவும் அங்கங்கேஅனேகநாள்தங்கவுந் தக்கதாகச்செலவுக்குக்கொண்டுபுறப்பட்டவர்களல்ல. பின்னையிவர்கள்சீவனத்திற்குவழி யெங்கேகிடைத்தது? அவர்களுக்குப் பசிதாகமுதலியவில்லாமற்போகும்படி செய்தனரா?" என்கிறார்.

அஉ. இதற்குமற்றநியாயங்கள்சொல்ல ஆவசியகமில்லையாதலால் அவைநிற்க. சேசுநாதனைவணங்கவந்த சாஸ்திரிகள் காணிக்கையாக வைத்தபொன்னிற் சிறிதேஇவர்களதுசீவனத்திற்குப்போதுமெனவறிக.

அங. உங. பண்டிதர் எ-வது: "யேசுவின்அவதாரமகிமை அவரதுபிற்சரித்திர விசேஷத்தால் நம்பற்பாலதென்பீராயின், பொய்க்கிறிஸ்துக்களும் பொய்அற்புதங்களும் பூமியிலுள்ளனவென்று யெகோவாவேசொல்லுகிறார். கடவுளுடையஅற்புதங்களோடு மானுடராற்செய்யப்பட்ட அற்புதங்கள் எதிர்த்துநின்றமைக்கும் இவ்விவிலியநூலே சாட்சிபகர்தலாலும், அற்புதமகிமைஎச்சமயிகளிடத்துமுளதாதலாலும், அவதாரமகிமை அதினால்நாட்டப்படாதென்றறிக"என்கிறார்.

அச. ஷ-வது. சத்தியவேதம்பொய்க்கிறிஸ்துமெய்க்கிறிஸ்துஎன்று கிறிஸ்துக்களையும், பொய்யற்புதம்மெய்யற்புதமென்று அற்புதங்களையும் இருவகைப்படுத்திக் கூறுகின்றனவென்று பண்டிதரோத்துக்கொள்ளுகிறார். அவற்றுள்பொய்யற்புதமாவது: ஒருவன் தான் ஒருவீட்டைவிழுங்காதிருக்க, மாயத்தால் விழுங்கிவிட்டதுபோலப் பிறர்க்குத்தோன்றச்செய்தல். அப்படிப்பட்டபொய்யற்புதத்தைக் கொண்டு நானேகிறிஸ்துஎன்றுசொல்லிச் சனங்களையேய்த்து நரகாக்கினைக்குரியவர்களாக்கமுயல்கிறவரெல்லாம் பொய்க்கிறிஸ்துக்களாம். மெய்யற்புதமாவதுமெய்யாகவேசெத்தவர்களை மெய்யாகவேயெழுப்புதல் முதலியவைகளேயாம். சேசுநாதர் இப்படிப்பட்ட அற்புதங்களையேசெய்தாரென்பதை அர்ச். அருளப்பர்சுவிசேஷத்து-ரு-ம் அதிகாரமுதலியவைகளாலறியலாம். சேசுநாதர் இப்படிப்பட்ட மெய்யானஅற்புதங்களைச் செய்தவராதலாலும், மெய்க்கிறிஸ்துவைக்குறித்துச் சத்தியவேதத்திற்சொல்லப்பட்டவைகளெல்லாம் இவரிடத்து மாத்திரமே நிறைவேறினமையாலும் இவரேமெய்யற்புதங்களையுடைய மெய்க்கிறிஸ்துவெனவும், பொய்க்கிறிஸ்துக்களின்பொய்யற்புதம் அற்புதப்போலியேயல்லதுஅற்புதமல்லவெனவும், ஆதலாற்பண்டிதர் "கடவுளுடைய அற்புதங்களோடு மானுடராற்செய்யப்பட்டஅற்புதங்கள் எதிர்த்துநின்றமைக்கும்இவ்விவிலியநூலேசாட்சிபகர்"கின்றதென்றதும், "அவதாரமகிமைஅதினால்நாட்டப்படா"தென்றதும்அறியாமையெனவுமறிக.

அரு. உ-வது. புதுமைகள் முதல்வகுப்புப் புதுமையென்றும் இரண்டாமவகுப்புப்புதுமையென்றும் இரண்டுவகைப்படும். அவற்றுள், செத்தவனையெழுப்பல்முதலியவை முதல்வகுப்பானவைகள். இ

வைகள் கடவுளால், அல்லதுகடவுளுதவியால் மாத்திரமே யாகக்கூடியவைகள். பாம்புக்கடிவிஷந்தீர்த்தல் தலைநோய்தீர்த்தல்முதலியவைகள்இரண்டாம்வகுப்பானவைகள்.இவைகள்எச்சமயிகளாலும், பிசாசுகளுதவியினாலும் ஆகக்கூடியவைகள்எனவும், முதல்வகுப்புப்புதுமைகள் கிறிஸ்துவரிலன்றி மற்றச்சமயத்தில்நடக்கிறதில்லையெனவும், ஆதலாற் பண்டிதர்:"அற்புதமகிமைஎச்சமயங்களிடத்துமுள"தென்றதும், "அவதாரமகிமை அதினால்நாட்டப்படா"தென்றதும்அறியாமையெனவுமறிக.

௮௬. ௨௪. பண்டிதர்: ௮-வது: "கன்மபாவஞ் சென்மபாவமிரண்டுமற்றவராகியகிறிஸ்து சகலசமயத்தோரானு முன்னறிதெய்வமாகப்போற்றப்படுந்தந்தைதாயருக்கு விசாரமுண்டாக்கித், தன்பரமபிதாவருளியஐந்தாங்கற்பனையைமீறியதென்னோ? சொல்நோக்கார் மனமறிந்தொழுகுபவரோமைந்தர். தந்தைதாயரை நட்டாற்றில்வனாந்தரத்திற் புலம்பிஅலையவிட்டுத் தேவாலயம்புக்குப் பண்டிதர்நடுவிருந்து தர்க்கித்துக்கொண்டிருத்தல் மைந்தர்நெறியாமா? ஒருவார்த்தைசொல்லிவந்தால் அவர்க்கித்தனைவிசாரம்வராதே"என்றும்,—"கடவுளேதமதுபிள்ளையாய் அவதரித்திருப்பதையறிந்தயோசேப்பும்மரியாளும் அல்லும்பகலும் அப்பிள்ளையின்அடிக்கீழிருந்துகாவல்செய்யாது பிள்ளைதம்மைவிட்டப்புறஞ்செல்லத்தக்கதாகக் கவலையீனராயிருந்ததும் பேரதிசயமே"—என்றும், "இரபாயர்எனப்பெயர்பெற்றுவிளங்காநின்ற யூதபண்டிதருக்குமுன் சிறுபாலகர்உளுக்காருவதுங்கேள்விகேட்பதும் யூதாசாரத்துக்குமாறுபாடானது. யேசுவைத்தேவசுதனென்றறியாத அப்பண்டிதர் பன்னிரண்டுவயதுச்சிறுவராகியஇவரை உளுக்காரஇடங்கொடுத்துத் தர்க்கித்துக்கொண்டிருந்தாராமே? இதுகட்டுக்கதையென்பதுசுட்டிக்காட்டல்வேண்டுமோ.? அப்பமென்றூற்பிட்டுக்காட்டுவதேன்? யூதசரித்திரமறிந்தோரோசொல்லுக"என்றுஞ்சொல்லுகிறார்.

௮௭. ௯-வது. சேசுநாதர் தம்முடையதாயைநோக்கி "நான்என்பிதாவுக்குரியவைகளில் அலுவலாயிருக்கவேண்டுமென் றறியாதிருந்தீர்களோ?" (அர்ச். லூக்கா ௩: ௪௯.) என்றது தாய்தந்தையரைக்காட்டினுந் தேவனையதிகமாகநேசித்தல் வேண்டுமென்பதைக் கற்பித்ததாம். இக்கற்பனையை அவர்பரிசேயருக்கும் (அர்ச். மத். ௨௨: ௩௭, ௩௮.) வெளிப்படுத்தினார். ஆதலா லிதுதேவகற்பனையைமீறியதன்றெனவும், தண்டியடிகள் சிவனிமித்தமாய்த் தமதுதந்தையின்தாளை யெறிந்ததையே புண்ணியஞ்செய்ததென்று சைவசமயநூல்கள்சொல்லுகிறபோது: பண்டிதரிதனைத் தேவகற்பனையைமீறியதென்றதறியாமையெனவுமறிக.

௮௮. ௨-வது. அர்ச். சூசையப்பருங்கன்னிமரியாயியும் சேசுநாதர் வழக்கப்படிதங்கள்வழித்துணைவராகியபந்துக்களோடு போயிருப்பாரென்றுநினைந்ததனால், வழக்கப்படிபுருஷாளோடு கூடிக்கொண்டு சூசையப்பரும், ஸ்திரீகளோடுகூடிக்கொண்டுகன்னிமரியாயும் தேவாலயத்தைவிட்டுத் தங்களூர்க்குப்புறப்பட்டுநடந்தார்கள். பிள்ளைதேவசுதனாயிருத்தலினாலும் பன்னிரண்டுவயசுடையவராயும் ஞானத்திலோங்கியவராயுமிருந்ததினாலும் தவறித்தங்களைவிட்டுப்பிரிகிறவரல்லரென்

று அவர்கள்நன்றாயறிந்திருந்தார்கள். ஆனாற்சேசுநாதர் தம்முடைய தாய்தந்தைக்குத் தம்மைவிசனத்தோடு தேடித்திரியும்புண்ணியங் கிடைக்கும்படிக்கே யவர்களுக்குத்தெரிவியாது தங்கிவிட்டனர். ஆதலால்அவரதுதாய்தந்தையர் அவரிடத்துக்கவலையீனராயிருந்ததில்லையெனவும், அதிசயப்படுவது பண்டிதர்சுபாவமெனவுமறிக.

அ௯. ௩-வது. பண்டிதர்களுக்குமுன் சிறுபிள்ளைகள்உளுக்காருவதுங்கேள்விகேட்பதும் யூதாசாரத்துக்குமாத்திரமல்ல, நம்முடைய தேசாசாரத்துக்கும்மாறுபாடுதான். ஆயினும் "சாலவயிறேபெரிய ராய்நரையராயிடினுந் தாமவர்களேபெரியரோ, வாலவயதாயினுமெய்ஞ் ஞானநெறிநீதிவழு வாதவர்களேபெரியரோ" என்றபடி சிறுவராயினுமெய்ஞ்ஞானமுடையவராய் நீதிநெறிவழுவாதவர் பெரியவராகமதிக்கப்படுதற்குரியவராதலால், யூதசாஸ்திரிகள் பன்னிரண்டுவயதுள்ள சேசுநாதரிடத்தில் தங்கள்சந்தேகந்தீரத்தக்க மேலானசொற்களும்ஞானமுமிருக்கக்கண் டதிசயித்தபின், அவர்உளுக்கார இடங்கொடுத்ததும் அவர்சொன்னதைக்கேட்டதும் யூதாசாரததுக்குமாறுபாடன்றெனவும், சம்பந்தர்சிறுபிள்ளையாயிருந்தும் அறிவுமிகுந்தவரா யிருந்ததினிமித்தம் பிராமணர்பாண்டியன்முதலியவரும் வாழ்த்திஅஞ்சலிசெய்து அவரையிரத்திநாசநத்திலுட்காருவித்தார்களென்றுசொல்லுகிற சைவசமயத்தவராகியஇப்பண்டிதர் இவைகளையூதாசாரத்துக்குமாறுபாடென்ற தறியாமையெனவுமறிக.

௯0. ௨௫. பண்டிதர்: ௯-வது. "அழுதுபுலம்பிவந்ததாயர்க்கு யேசுவின்மறுமொழியைப்பார்த்தீரா? அவளுக்காறுதலாய் ஓர்மொழி சொல்வதைவிட்டுக் கண்டித்துப்பேசினாராமே. பிள்ளைகளுக்குத் தேவன்நன்முன்மாதிரிவைத்தார். என்பரமபிதாவின்கிர்த்தியத்தில் நான் கையிட்டால், உனக்கென்னவென்றாராம். பரமபிதாவின்கிர்த்தியத்திற்கையிடப் பதினெட்டுவருஷமுண் டென்றறியாமற்பேசினாரா? அத்தனைஆத்திரமாய்த் தேவகற்பனையையுமீறிஆரம்பித்தவர் மறுகால்முப்பதுபிராயமட்டும்அக்கிர்த்தியமொழிந்து தந்தைதாயர்க்கடங்கியிருந்தது மோராச்சரியமே! பரமபிதாவின்கிர்த்தியமென் றவர்சொன்னபோது இவரதுபிதாவாரொன்றுமரியாள் அறியாமற்போனளாம். மகாகெட்டி!! லூக்கா ௨-ம்அதி. ௪௯. ௫0 வசனங்களில்மரியாள்யேசுவின்அவதாராதிகளை வெகுதூரம்ஆலோசித்து உய்த்துணர்ந்தாளெனக் கூறியபின் அவர்யாரைப்பிதாவென்றனரொன் றவளுக்குத்தெரியாமற்போனது தேவசுதனென்பதற்குத்தகுந்தசாட்சி!!!"என்கிறார்.

௯௧. ௲-வது. சேசுநாதர் தம்மைத்தேடிவந்த தாயைநோக்கி, என்னைத்தேடினதற்குமுகாந்தரமென்ன? நானென்பிதாவுக்குரியவைகளில் (அலுவலாய்) இருக்கவேண்டுமென் றறியாதிருந்தீர்களோவென்றார். (அர்ச். லூக்கா ௨: ௪௯.)—ஆதலாற்பண்டிதர்: சேசுநாதர்"என்பரமபிதாவின்கிர்த்தியத்திற்கையிட்டால் உனக்கென்ன?" என்றுகண்டித்துத் தன்தாய்க்குமறுமொழிசொன்னாரென்பது பொய்யெனவறிக.

௯௨. ௨-வது. சேசுநாதர்சாஸ்திரிகளுக்கு அறிவிக்கவேண்டியவைகளையறிவித்ததுமுதலிய தொழிலெல்லாம் அவர்தமதுபிதாவுக்கு

ரியவைகளில் வேலையாயிருந்தவைகள் தானெனவும், அவற்றுள் அவர்மு ப்பதுவயசுக்குமேற் சீஷர்களைச்சேர்த்துக்கொண்டது போதித்தது மு தலியவைகளெல்லாம் அவருடையகடைசிக்கிருத்தியமெனவும், ஆத லாற்பண்டிதர்: அவர் “பரமபிதாவின் கிர்த்தியத்திற்கையிடப் பதி னெட்டுவருஷமுண்டென் றறியாமற்பேசினாரா?” என்ற தறியாமையெ னவுமறிக.

௯௩. ௩-வது. சேசுநாதர் நான்என்பிதாவுக்குரியவைகளில் அ லுவலாயிருக்கவேண்டுமென் றறியாதிருந்தீர்களோ? என்றபோது அவ ர்தாயார்: அவர் அர்ச். சூசையப்பருக்குஆகவேண்டியகாரியங்களில் க வலையாயிருந்தார்போலுமென் றுநினைத்தார்கள். இதனையே அர்ச். லூ க்காதாமெழுதினசுவிசேஷத்தின் ௨-ம் அதிகாரத்து ௫௦-ம்வசனத்தில், “ஆனால்அவர் தங்களுக்குத்திருவுளம்பற்றினவார்த்தையை அவர்கள்க ண்டுபிடித்ததில்லை” என்றுசொல்லியிருக்கிறார். இவ்வாக்கியத்திற்குப் பொருள் இங்ஙனமாகப், பண்டிதர்: “பரம”என்றவொருசொல்லுங்கூட் டித், தப்புவியாக்கியானமும்பண்ணிப், “பரமபிதாவின்கிர்த்தியமென் றவர்சொன்னபோது இவரதுபிதாவாரென்று மரியாள்அறியாமற்போ னாளாம்”என்றதுமுதலியவைகள்பொய்யும்வஞ்சனையுமாமெனவறிக.

௯௪. ௨௯. பண்டிதர்: ௧௦-வது. “கானாவூரிலேதண்ணீரை ரசமாக்கினபோது யேசுவுக்குந்தாய்க்கும்நடந்தசம்பாஷணையினாலும் அ வர்தன்தாயைக்கனம்பண்ணுமைதோற்றுகின்றது. அறியாமையினாற் கே ட்டனளாயினும் நடுச்சபையிலே நாலுபெயருக்குமுன்னேநின்று அம் மாஎன்றுதானுஞ்சொல்லநினையாது! ஸ்திரியேஉனக்கென்னஅலுவலெ ன்றுகேட்டது தாயைக்கனம்பண்ணுதலாமா? என்காலம்வருமுன்னே என்னைத்தொந்தரைசெய்யாதேயென்றுசொல்லியுஞ் சொன்னஉடனே ரசாற்புதஞ்செய்தவர் கருதியகாலமற்றேதோ? கருதியினன்னெறித காதோ? இப்படிசிந்தித்ததேன்?—இதுகாறும் மனுஷிகத்துவத்தைக்கட வாமலும் யாதாயினுமோர்அற்புதஞ்செய்யாமலுந் தனதுசொற்கிழமை ந்திருந்தபுதல்வனை மரியாள்ரசத்திற் குபாயங்கற்பிக்கும்படி கேட்டன ளாம். இதுநம்பற்பாலதா? தெய்வீகத்துவமிருந்தமையை யறிந்துகே ட்டனளெனில், வனுந்தரத்திலிவனைச்சோதித்தபிசாசுக்கும் இம்மரியா ளுக்கும்வித்தியாசமென்ன? கேட்டதொன்றே? தெய்வீகத்துவந் த ன்சொற்கடங்கியதென்றாற்போலக் கற்சாடிகளிலேதண்ணீரும் நிரப்பி வைப்பித்தனளாமே. தாயும்மகனும்முன்னாலோசித்திருந்ததோர்சூதெ ன் றித்தாற்புலப்படவில்லையா?—இதுவேமுதலற்புதம். மதுபானகண் டனஞ்செய்து அதனைவிலக்கமுயல்பவரன்றோபெரியவர். இதைவிட் டு, மைந்தர்யாரையு மதுவுணச்செய்குவானுலகில், வந்தியேசுதன் ம றைபுகறிருவவதாரம், இந்தநீணிலத் தெடுத்ததேகொல்லெனமுந்த, மு ந்தநீரினை முடைரசமாக்கினரந்தோ”என்கிறார்.

௯௫. ௫-வது: முதலாவது, சேசுநாதர் தம்முடையமாதாவை யழைத்தற்குஉபயோகித்த ஸ்திரீயேயென்றசொல்லானது யூதருள்நாம் தாயைஅம்மாவென்றழைப்பதையொத்த மரியாதைக்குரிய சொல்லே யன்றிக் கனவீனத்துக்குரியசொல்லன்று. இரண்டாவது, சேசுநாதர்

ஸ்திரீயென்னும்இந்தமொழியைத் தம்முடையதாய்க்குபயோகித்துவந்தது: ஆதியிலேபேயின்சத்துருவாகியஸ்திரீயென்றும், பேயினதுதலையைமிதிக்கும்ஸ்திரீயென்றும்சருவேசுரனாற் சொல்லப்பட்டஸ்திரீயும், தீர்க்கதரிசிகளாலெடுத்துச்சொல்லப்பட்டஸ்திரீயும், ஸ்திரீகளுள்ளேயுத்தமஸ்திரீயும் இவளேயென்றுகாட்டற்கேயாம். இதைஅவர் சிலுவையிலறையப்பட்டிருக்கையில் தம்முடையபிரியசீஷனை யவளுக்குமகனாகக்கொடுத்தகாலத்தும் ஸ்திரீயேயென்றேயழைத்ததினாலுமறியலாம். மூன்றாவது. சேசுநாதர்தம்முடையதாய்க்குமறுமொழியாக: இதுவிஷயத்தில்உமக்குமெனக்குமென்னவென்றது: நாம்ஞானகாரியங்களைக் கவனிக்கவேண்டியவர்களேயன்றிக் கல்யாணவிருந்தின்குறைவு முதலியவைகளைக் கவனித்தற்குரியவர்களல்லாதிருக்க, இதுவிஷயத்தில்நீரிரக்கங்கொண்டதேன்? என்னும்பொருளுள்ளவாக்கியமாம். நாலாவது. சேசுநாதர்என்காலம்இன்னும்வரவில்லையேயென்றும், மாதாகேட்டபடி நீரைரசமாக்கியது. தம்முடையமாதா அகாலத்திலேதம்மிடத்திலெதையேனுங்கேட்பினும், அதைஉடனேஅவர்தருவாரென்பதை வெளிப்படுத்தற்கேயாம். ஆதலால்சேசுநாதர் இந்தவிஷயத்தில் தம்முடையதாயைக்கனம்பண்ணியுயர்த்தினாரேயன்றிக் கனவீனம்பண்ணவில்லையெனவும், கனவீனம்பண்ணினாரென்றதறியாமையெனவும், சேசுநாதர்தம்முடையமாதாவைநோக்கி, "என்காலம்வருமுன்னே யென்னைத்தொந்தரைசெய்யாதே" என்று சொன்னாரென்பதுமுதலியவைகள் பொய்யெனவுமறிக.

௯௬. ௨-வது. அர்ச். கன்னிமரியாயி சேசுநாதரை மனிதரைப்பிரட்சிக்கமனுஷனாகவந்த தேவசுதனென்றறிந்திருந்தமையாலும், தம்முடையதிருக்குமாரன் தமதுமன்றாட்டைமறாரென் றறிந்திருந்ததினாலும், தாம், கலியாணவீட்டுக்காரருக் கவமானம்வராமற் காக்கவிரங்கினதினாலும் புதுமைசெய்யக்கேட்டார். அப்படியேசேசுநாதர் செய்தனர். இதனால்அவளிரக்கமுள்ளவளென்றும் இவர்கடவுளென்றும் வெளிப்படுகிறதேயன்றி யொருகுறைவும்வெளிப்படாமையால், "வனாந்தரத்தி லிவரைச்சோதித்தபிசாசுக்கும் இம்மரியாளுக்கும் வித்தியாசமென்ன? என்றதுமுதலியவை யறியாமையெனவறிக.

௯௭. ௩-வது. மதுவைப் போக்கியப்பொருளாகச் சிவன்மாயாமலத்தினாற் படைத்தனரென்று சைவசமயநூலோ டிப்பண்டிதருஞ் சைவ மகத்துவத்திற் சொல்லியிருக்கிறார். சைவருடைய வேதம் சோமபானமென்னும்பெயரால் மதுபானஞ்செய்யக் கற்பிக்கின்றது. சைவருடையவேதாங்கம் உண்டாட்டு, கட்காஞ்சி. தேம்பிழிமதுக்களி முதலியவை ஆவசியகமென்கின்றது. கம்பராமாயணத்தில் உண்டாட்டுப்படலஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இங்ஙனமாகப், பண்டிதர்கண்டிக்கத்தக்கமதுபானம் இப்படிப்பட்டதென்றறியாது, சேசுநாதர் கலியாணவீட்டிலிரசங்குறைந்தபோது அற்புதமாகத்தண்ணீரையிரசமாக்கியதைச் சிறுவர்செய்கையென்றதுவிபரீதமெனவறிக.

௯௮. ௨௭. பண்டிதர்: ௧௧-வது: இவ்வளவு பிரபலியமாய் அரசரறியக் குடிகளனைவோருமறிய உற்பத்தியாகி, அனேகாயிரசனங்கள்

முன்வெகுஅற்புதங்களைச்செய்து திரிந்தனரெனச்சுவிசேஷகர்கூறுகின்ற கிறிஸ்துஉண்மையாகஅக்காலத்திலிருந்தனராயின், அக்காலத்துச்சரித்திரமனைத்தும் மிகவிரிவாயெழுதியயோசிபாசர், பைலோ, தசிதாசர், பிளினி, செனேகர்இவர்கள்காதுக்கெட்டாமலிருந்ததுக்கு நியாயமென்ன ? எருசலேமழியுங்காலத்தில் அந்நகரவீதியில்தோன்றி எருசலேமுக்குஐயோஎருசலேமுக்குஐயோஎன ஓர்கிறிஸ்துகுளறித்திரிந்தனனென்று யோசிபாசர்எழுதியது சுவிசேஷத்திற்கூறியகிறிஸ்துஅல்ல. அநேகவிஷயங்களில் அவன்சரிதஞ் சுவிசேஷகிறிஸ்துவின் சங்கதிகளோடொத்ததாயினும், அவன் அன்னுவின்மகனென்று சொல்லப்பட்டிருப்பதினாலுங் கிறிஸ்துவின் எ௦-ம் ஆண்டுஇறந்தவனாதலாலும் அவன்வேறொருவனாயிருத்தல்வேண்டும்'' என்கிறார்.

௯௯. ௸-வது. பைலோ (Philo) முதலியவர்கள் கிறிஸ்துநாதருக்குவிரோதிகளாதலால், அவர்கள்இவருடைய பிரபலமானசங்கதிகளைப் பேசமாட்டார்கள். அல்லாமலும், ஒருவிஷயத்தைக்குறித்துப் பேசத்தொடங்கியவர்கள் அதற்குச்சம்பந்தமா யிராதவைகளைக்குறித்துப் பேசமாட்டார்கள். ஆதலால்இந்தச்சாஸ்திரிகள் விரோதத்தினாலும் சம்பந்தமில்லாமையினாலும் பேசாமல்விட்டசங்கதியெல்லாம் நடவாதசங்கதியென்பதறியாமை. அன்றியும், பைலோஎன்னும் யூதசாஸ்திரியெழுதிய புத்தகங்களுள் ஐந்தேசரித்திரத்துக்குரிய புஸ்தகங்கள். அவற்றுள் மூன்றுபுஸ்தகங்க ளிறந்துபோயின. அவைகள் கையூஸ் (Caius) என்னும் ரோமைச்சக்கரவர்த்தியின்காலத்திலே யூதருக்குண்டாயிருந்ததுன்பங்களைக்குறித்துப் பேசப்பட்டவைகள். கையூஸ் சக்கரவர்த்தியின்காலம்வேறு, சேசுநாதர்காலம்வேறு. இங்ஙனமாக, ஒருகாலத்துச்சங்கதியில் வேறொருகாலத்துச்சங்கதிபேசியிராமையால், இச்சங்கதியுண்டாயிருந்ததில்லையென்ப தறியாமை.

௧௦௦. மற்றயூதசாஸ்திரியாகிய யோசெபாஸ்: ஸ்நாபகஅருளப்பரைக்குறித்துப் பேசியிருக்கிறார். (Antiqu. Lib I8. ch. 7.)—௸ காண்டத்தின் அ-ம் அதிகாரத்தில் அர்ச். யாகப்பரைக்குறித்துப்பேசுகிறதுமல்லாமல், அவரைக், கிறிஸ்துவென்றுசொல்லப்பட்ட சேசுவின் சகோதரராகிய யாகப்பரென்றுஞ்சொல்லியிருக்கிறார். ௸ ௧அ-ம் காண்டத்தின் ௬-ம் அதிகாரத்தில், “ அக்காலத்திற்சேசுவென் றொருஞானமுள்ளமனிதனிருந்தார். அவரைமனிதனென்னலாமோ (கூடாதோ அறியேம்;) ஏனெனின், அவர் அற்புதகிருத்தியங்களை நடத்துகிறவரும் சத்தியத்தைவிரும்புகிறவர்களுக்குப் போதகருமாயிருந்து, யூதர்களிலும்அஞ்ஞானிகளிலும்அநேகரைச் சீஷர்களாகச்சேர்த்துக்கொண்டார். எங்கள்சனங்களாற் குற்றஞ்சாட்டப்பட்ட கிறிஸ்துவென்பவர்அவரே. பிலாத்தென்பவன் அவரைச்சிலுவையிலறைந்திருந்தும் அவரைஆதிமுதற்பின்பற்றினவர்கள் விட்டுநீங்கினதில்லை. (மரணமடைந்த) மூன்றுநாள் உயிருள்ளவராய் அவர்களுக்குத்தரிசனமானார். தீர்க்கதரிசிகள் அவரைக்குறித்து இதையும் இன்னும்அநேகவிஷயங்களையு முன்னுரைத்தபடி (அவருக்காயிற்று). அவருடையபெயரைக் கொண்டவர்களாகி

ய கிறிஸ்துவர்கள் இந்நாள்வரைக்கு மிருக்கிறார்கள்" என்று சொல்லி யிருக்கிறார்.

கம0க. தசிதாஸ் என்பவர் (Annal. Lib 15. No. 44.) சொல்லு கிறதாவது: நீரோ (Nero) என்பவர் ரோமாபுரியில் தீப்பற்றினதைக் குறித்துத் தன்பேரிற்சொல்லப்படுகிற "பேச்சுகளையழிக்க, மிகவும் பகைக்கப்பட்டுக் கிறிஸ்துவர்களென்று சொல்லப்பட்டவர்கள்பேரிற் குற்றஞ்சாட்டி, அவர்களுக்குக்கொடுமையான ஆக்கினையிட்டார். அவர்கள்பெயர்கொண்டவனாகியகிறிஸ்து திபேர் (Tibere) என்பவர்காலத்தில் போஞ்சுபிலாத்துஎன்பவரால் மரணத்தீர்வையிடப்பட்டவன்" என்று சொல்லியிருக்கிறார்.

கம0உ. இளையபிளீனி (Pline) என்பவர்: பித்தினியா (Bithynia) நாட்டுஅதிபதியாயிருந்தபோது திராஜன் (Trajan) என்கிற சக்கரவர்த்திக்குஎழுதிக், கிறிஸ்துவையாராதித்து அவருடையபோதனையையநுசரிக்கிறவரை யெவ்விதமாகத்தீர்வையிட்டுத் தண்டிக்கவேண்டுமென்று ஆலோசனைகேட்டார். அதற்குஅந்தத்திராஜன் என்கிறசக்கரவர்த்தி யெழுதியமறுமொழியில், அவர்கள்பேரில் நிச்சயமானகுற்றம் சொலலக்கூடாதபடியாலும், கிறிஸ்துவர்களாயிருப்பதொன்றே யவர்களுடையகுற்றமாயிருத்தலினாலும் அவர்களைத்தேடிப்பிடிக்கவேண்டாமென்றும் மற்றவர்களாற்காட்டப்பட்டுக் கிறிஸ்துவேதத்தை மறுதலிக்காமலிருக்கிறவர்களை மாத்திரந் தண்டிக்கவேண்டுமென்றுந் தெரிவித்தார். (Epist. L. 10. Ep. 97, 99.)

கம0ங. எரோகிலெஸ் (Herocles), செல்சே (Celse), போர்பிரே (Porphyre) என்னுமஞ்ஞானசாஸ்திரிகள் கிறிஸ்துவேதத்துக்கு விரோதமா யெழுதினபுஸ்தகங்களில்: சேசுக்கிறிஸ்து யூதேயாதேசத்தில் ஏழைமனுஷியிடத்திலிருந்து பிறந்தானென்றும், எசிப்துத்தேசத்துக்குப்போய்த் திரும்பித் தன்தேசத்துக்கு வந்தபிறகு சீஷர்களாக மீன்பிடிக்கிற தொழிலுள்ளவர்களைச் சேர்த்துக் கொண்டானென்றும், தம்மைத்தெய்வமென்று அநுசரிப்பதற்கு மிகவும்பிரயாசமானஞானபோதகம்பண்ணிச் சிலுவையில்அறையுண்டானென்றும், அவருடைய சீஷர்களும் மாந்திரீகங்களா லற்புதங்களைச்செய்து நோயாளிகளைச் சௌக்கியப் படுத்தினார்களென்று மொப்புக்கொண் டிருக்கிறார்கள், (Bullet-Hist. de L'establissment du Christianisme.)

கம0ச. தெர்துலியனுஸ் (Tertulianus) என்றபெயரைக்கொண்டவரும் அஞ்ஞானியாயிருந்துகிறிஸ்துவரானவருமாகிய ஓர்நூலாஸ்திரிகிறிஸ்துவேதத்துக்கு அநுகூலமாகஎழுதினபுத்தகத்தில் பிலாத்தென்பவன் சேசுக்கிறிஸ்துவின்சீவியம், புதுமை, மரணமுதலியவைகளைக்குறித்து ரோமாபுரிக்கு அறிவிப்பு (றிபோர்ட்டு) எழுதியிருந்தானென்றும், அதில் சேசுக்கிறிஸ்துமரணமடைகிறவேளையில் சூரியன்மங்கிப்போயினதென்றெழுதினானென்றும், அதுகண்டு திபேர்என்கிறசக்கரவர்த்தி சேசுக்கிறிஸ்துவை ரோமையர்கும்பிடுந்தேவரோடே யொருதேவனாகச்சேர்த்தல்வேண்டுமென்று சங்கத்தாரைக்கேட்டானென்றுமெழுதியிருக்கிறார், (Tertul, Apolog.)-இதுபொய்யென்று அஞ்ஞானிகளிலொருவனாவது

சொன்னதில்லை. மேலும் லம்பிரிதியுஸ் (Lampridius) என்கிற அஞ்ஞானசாஸ்திரி அலெக்சான்டெர்செவெறுஸ் (Alexander Severus) என்கிறசக்கரவர்த்திசரித்திரத்தில்: மேற்படிசக்கரவர்த்தி தினந்தோறுங் காலமே தன்வீட்டுக்கோயிலில் கிறிஸ்துவை யாராதித்துவந்ததாகவும் அவருக்குத்தேவாலயங்கட்டவும் அவரைத்தேவர்கள்கணக்கிற்சேர்க்கவும் கருத்தாயிருந்ததாகவும், இப்படிச்செய்கிறபக்ஷத்தில் முன்கும்பிட்டதேவர்களையெல்லாம்விட்டுக் கிறிஸ்துவைச்சகலரும்ஆராதிப்பார்களென்று அமைச்சர்கள்தடைசெய்ததாகவும், அதிரியான் (Adrian) என்கிறசக்கரவர்த்தியும் அந்தகருத்துக்கொண்டிருந்ததாகவும் எழுதியிருக்கிறார்.

௧௦௫. பிளேகோ (Phlego) என்கிறஅஞ்ஞானஸாஸ்திரி, ஒலிம்பியாஸ் என்னும்புத்தகத்தின் ௧௩-ம் காண்டத்தில், (Olympiades Lib 13.) சேசுநாதர்சொன்னதீர்க்கதரிசனங்களில் விசேஷமாய்ச் செருசலேமினழிவைப்பற்றிய தீர்க்கதரிசன நிறைவேறினதென்றும், சேசுநாதருடையமரணகாலத்திற் பூமியதிர்ச்சியும் அதிசயமானகிரகணமுமுண்டாகினவென்றும், அவைதிபேர்என்கிற சக்கரவர்த்தியினிராச்சியபாரத்து ௧௮-ம் வருஷத்தில்நடந்தனவென்றும் எழுதியிருக்கிறார்.

௧௦௬. தாலுஸ் (Thalus) என்கிறகிறேக்குஸாஸ்திரி (History. Syr. Lib 3.) மேற்சொன்ன ௰௮-ம் வருஷத்திற்றான் இந்தக்கிரகணம் நடந்ததென்றெழுதியிருக்கிறார்.

௧௦௭. தால்முத்,தோல்தொத்ஜேசு(Thalmud, Toldoth Jesu) என்பதில்: சேசுக்கிறிஸ்து பெத்திலேமென்கிறவூரில் மரியம்மாளிடத்திலிருந்துபிறந்தாரென்றும், ஏகோவா என்கிறதிருநாமத்தைத் தேவாலயத்திலேதிருடி அதைக்கொண்டுபலவகையற்புதங்களைச்செய்தாரென்றும், கன்னிமைகெடாமல்தன்தாயார்தன்னைப்பெற்றதாகவும் தான்தேவசுதனுயிருக்கிறதாகவும் சொன்னாரென்றும், செத்தவர்களையெழுப்பினாரென்றும், குஷ்டவியாதியாளரைச்சுவஸ்தப்படுத்தினாரென்றும், ஜெருசலேமி லொட்டோலக்கமாய்ப்பிரவேசித்தாரென்றும், பாஸ்குத்திருநாட்காலத்தில் யூதாசாலேகாட்டப்பட்டுப் பலஆக்கினைகளுக்குப்பின் தூக்கப்பட்டாரென்றும், அவர்அடக்கம்பண்ணப்பட்டபிறகு யூதாசென்பவன்அவருடைய பிரேதத்தையெடுத்திருக்க மூன்றுநாள்சீஷர்கள் வந்துபிரேதத்தைக்காணுமல் உயிரோடேயெழுந்ததாகச் சொன்னார்களென்றும், அந்தவிவரத்தைவருஷந்தோறும் கிறிஸ்துபிறந்ததிருநாள் ராத்திரியில் இன்னமும்வாசித்துக்கொண்டு கிறிஸ்துவைத்தூஷணிக்கிறார்கள்என்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

௧௦௮. இக்காலத்திலே தபாலும்சமாசாரபத்திரிகையு மிருத்தல்போல அக்காலத்திலிருந்ததில்லையாதலால், அக்காலத்திற் செருசலேமில்நடந்தசங்கதியை யரசனன்றிமற்றவரொளிதிலறிதல்கூடாது. சரித்திரகாரர் பிரயாசத்தாலறிந்தாலும், சேசுநாதருமகிமைக்குரியவை வேதசம்பந்தமானதால், மதத்துவேஷம் அவைகளையெழுதவிடாது. இப்படிப்பலதடைகளிருந்துஞ் சேசுநாதர்சரித்திரத்தைப்பற்றியபலசங்கதிகளைப் பலசரித்திராசிரியர்முதலியோ ரெழுதிவைத்திருக்கிறார்கள்.

அவைகளையெல்லாமெடுத்துக்காட்டின் விரியுமாதலால், இங்கேகாட்டியதுபோதுமென் றிவ்வளவில்நிறுத்தினும். இப்படிச்சரித்திரகாரரெல்லாம் சேசுநாதர்மான்மியங்களைப்பேசியிருக்கப், பண்டிதர்இவருள்ஒருவரும்பேசினதில்லையென்றது பொய்யுங்கபடமுமாமெனவறிக.

௧௦௯. ௨-வது. யோசெபாஸ்என்னும்யூதசாஸ்திரி: அனனூஸ் (Ananus) என்பவனுடையமகன் யேசுஸ் (Jesus) என்பவன் சேசுநாதர்மரணமடைந்தபின் ௪௦-ம்௵த்தில் இறந்தானென்றுதான் சொல்லியிருக்கிறார். இதில்யோசெபாஸ்: அனனூஸ்என்பவனுடையமகனது சேசுஎன்றபெயரைப் பண்டிதர் கிறிஸ்துஎன்று மாற்றிச்சொல்லியதவறிருக்கட்டும், யோசெபாஸ்: சேசுநாதர்மரணமடைந்தபின் ௪௦-ம்௵த்தில் அனனூஸ்என்பனுடையமகனாகிய சேசுமரித்தானென்றது கிறிஸ்துநாதராகியசேசுவும் பூமியிலிருந்துமரணமடைந்தாரென்று நிச்சயிக்கும்போதுபண்டிதர்சுவிசேஷசேசு பூலோகத்திலிருந்ததில்லையென்றது பொய்யுங்கபடமுமே யெனவறிக.

௧௧௦. ௨௮. பண்டிதர். ௧௨-வது: லூக்கா ௨-ம் அதி. ௨-ம் வசனத்தில்சைரென்னியஸ் யூதேயாவுக்கதிபதியாயிருந்துவரியேற்படுத்தியபோது கிறிஸ்துபெத்தலேகேமிற்பிறந்தாரென்று சொன்னதும், ஏரோது அரசன் குழந்தையைக்கொல்லவகைதேடினனென்பதும், அக்கால இதிகாசங்களுக்கெல்லாம்மாறுபட்டிருக்கின்றன. கிறிஸ்துபிறந்து ௨-ம் ௵த்தில் ஏரோதுமரித்தனனென்றால், எரோதுமரித்துப் பத்தாம்வருஷத்தில் அதிபதியானசைரெனியஸினு லேற்பத்தப்பட்டவரிகொடுக்கும்படி பெத்தலேகேமுக்குப்போய் யேசுவைமரியாள்பெற்றதெப்படி? அவிழ்த்தற்கரியதோர்விடுகதையாயிருக்கின்றது. முதன்முதல்வரியேற்படுத்தினவன் சைரோனியஸ்குவீரினஸ்என்பதும் அவன்இந்தஏரோதுமரித்தபத்தாம்வருஷத்தில் அதிபதியானவனென்பதுஞ் சரித்திரத்தால் காட்டுப்படுதலாற், கிறிஸ்துவின்செனனகாலஞ் சரித்திரத்திற்கொவ்வாமலிருக்கின்றது. ரோமானரதுசரித்திரமும் அவராலாளப்பட்டசகலதேசங்களின்சரித்திரமும் வகைவிரியாய்எழுதப்பட்டு நமதுகாலம்வரைக்கும்வந்திருக்க, இவரதுபெயரையும் நாம்அவற்றுட்காணாததால் யேசுகற்பனாமூர்த்தியென்றேகொளல்வேண்டும்.'' என்கிறார்.

௧௧௧. ௲-வது. அர்ச். லூக்காஸ் தாமெழுதியசேசுநாதர்* சுவிசேஷத்தின் ௨-ம் அதிகாரத்து ௨-ம் வசனத்தில் "சைரொன்னியஸ் யூதேயாவுக்கதிபதியாயிருந்து வரியேற்படுத்தியபோது" என்றுசொல்லவில்லை, "இவ்வெண்ணிக்கை சீரியாதேசத்தினதிபதியாகிய சிரோனியுஸென்பவனால் முதல்முதல்செய்யப்பட்டது" என்றுசொல்லியிருக்கிறார். இதற்குப்பொருள்: சீரியாதேசத்து அதிபதியாகியசிரோனியுஸென்பவன் சிலிசியாநாட்டுக்குப்புரோப்பிரைட்டராயிருந்தபோது, அவனால் இந்தஎண்ணிக்கை யூதேயரில்முதல்முதல்செய்யப்பட்டதென்பதாம. இப்பொருளுள்ளதை அர்ச். லூக்காஸ் அப்படிஎன்எழுதினரெனின், செண்டியுஸ்சாத்தர்னினூஸ்என்பவன் சீரியாதேசாதிபதியாயிருந்தகாலத்தில் இந்தச்சிரோனியுஸ்குவிரினுஸ் என்பவன் சிலிசியா நாட்டுக்குப்

* கத்தோலிக்குத் திருச்சபையில் வழங்குஞ் சுவிசேஷத்தில்.

புரொப்பிறைட்டராகஏகஅதிகாரம்பெற்று வந்திருந்தபோது, இவன்யூதேயாநாட்டில் முதல்முதல்சனத்தொகையெடுத்திருந்தாலும், சீரியாதேசத்திற்குஅப்போது அதிபதியாயிருந்த அந்தச்செந்தியூஸ்சாத்தர்னினூஸ்என்பவனுக்குப்பின் தீத்தியுஸ்என்பவனும், அவனுக்குப்பின் குவின்திதியூஸ்வாருஸ்என்பவனும், அவனுக்குப்பின் ஸாபினுஸ்என்பவனும், அவனுக்குப்பின் வாலுசியுஸ்ஸாத்தர்னினுஸ்என்பவனும் அதிபதியானபின், அப்போதுயூதேயாவில் நூதனஸ்தானுபதியாயிருந்ததானும் அதிபதியாகியிருந்தான். அல்லாமலும், இந்தச்சிரோனியுஸ் என்பவன் சீரியாதேசத்துஅதிபதியாகி ௩௬ஹூ ஆனபிறகு அர்ச். லூக்காஸ்இந்தச்சுவிசேஷத்தையெழுதினார். ஆதலால் இவர்: ஒருவர், தாம் நியாயப்பிரமாணிகரா (Legislator) யிருந்தகாலத்திற்செய்த வொருசட்டப்புஸ்தகத்தை, அவர்சென்னபட்டணத்துக்கவர்னரானபின் எடுத்துப்பேசுவோர் இப்புத்தகம்சென்னபட்டணத்துக் கவர்னராற்செய்யப்பட்டதென்னும் உலகவழக்குப்படிஎழுதினர். ஆதலாற்கிறிஸ்துவின்செனனகாலஞ் சரித்திரத்திற்கொத்தேயிருக்கின்றது, சுப்பிரமணியசுவாமியின்மனைவியாகிய * வள்ளியம்மையின் செனனம்போல் ஒவ்வாமலிருக்கவில்லை. உ-வது. பண்டிதர்முன்குறித்தயோசெபாஸ் என்பவர்: "இந்தச்சனத்தொகையெடுத்தபோது யூதேயாவின்ஜனங்கள் அகுஸ்துஎன்றஇராயனுக்கும் எரோதென்ற அரசனுக்குங் கீழ்ப்படியும்படி கட்டளைபிறந்தது. ஆயினும், சகலதீர்க்கதரிசனங்களிலுஞ் சொல்லப்பட்டபடி, மேசியாவரவேண்டியநாள்கிட்டினதையறிந்த ௬000 பரிசேயர் அதற்குக்கீழ்ப்படியாமற்போனார்க" ளென்றது: யூதேயாநாட்டிற் சனத்தொகையெடுத்தகாலத்தில் எரோதரசனிருந்தானென்பதையும், அக்காலம்தீர்க்கதரிசனப்படி மேசியாவருங்காலமென்று ௬000 யூதசாஸ்திரிகள் நன்றாயறிந்திருந்தார்களென்பதையுந் தெரிவிக்கின்றது. யேசுநாதர் செத்தவர்களையெழுப்புதல்முதலிய அற்புதங்களைச்செய்தவராயிருந்து பாடுபட்டுமரித்து உயிர்த்துத் தீர்க்கதரிசனத்திற்சொல்லப்பட்டவைகளெல்லாம் தம்மில்நிறைவேறப்பெற்றவரும் பெத்தலேகேமிற்பிறந்தவருமா யிருந்தாரென்பதுமுதலியவைகளை யிந்தயோசெபாஸ் முதலியசரித்திராசிரியர்கள் சொல்லியிருக்கிறதை இந்தப்புத்தகத்தின் ௧00-ம் இலக்கமுதலியவற்றிற்காட்டினோம். ஆதலாற்யேசுநாதர் சைவருடையமூலப்பிரகிருதியின் சத்துவகுணகற்பனாதிரிமூர்த்திகளைப்போலக் கற்பனாமூர்த்தியல்லர். ஆதலாற் "கிறிஸ்துவின்செனனகாலஞ் சரித்திரத்திற்கொவ்வாமலிருக்கிற" தென்றதும், "யேசுகற்பனாமூர்த்தியென்றேகொள்ளல்வேண்டு" மென்றது மறியாமையெனவறிக.

௧௧௨. உ௧. பண்டிதர். ௧௩-வது: கடவுள்அற்புதஞ்செய்யும்போது பாதிபாதியாகச்செய்கின்றாரா? யேசுதிரும்பஉயிர்த்தெழுந்ததுண்மையாகிற், கல்லறையும்முத்திரையும்அந்தப்படியிருக்க அவரெழுந்

* சுப்பிரமணியருடைய மனைவியாகியவள்ளியம்மை மான்வயிற்றினின்று பிறந்தாளென்று கந்தபுராணஞ்சொல்ல, அவள் ஆதியின்வயிற்றினின்று பிறந்தாளென்று சிவன் பார்வதிக்குச்சொல்லிய திருவள்ளுவர் சரித்திரஞ் சொல்லுகின்றது.

துவக்து, தம்மையறைந்தோருக்குக்காணப்படுவதன்றோ பூரணஅற்பு தமாகும்? இதைவிட்டுமுத்திரையுடைக்கவுங் கல்லைப்புரட்டவும் ஆள் வேண்டியதானால், யேசுஎழும்பியகதைக்கும் ஆட்கள்தான்காரணம் போலத்தோன்றவில்லையா? உயிர்த்தெழும்பியும் ஆருக்குக்காணப்பட் டார். அந்தரங்கமஅந்தரங்கமாய்த் தன்சீஷருக்குக்காணப்பட்டாராம். தன்னை யறைவித்த அரசராதியோருக்குக் காணப்படுவதன்றோபெரு மை. அவர்கள்விசுவாசிகளாய்விடுவார்களென்றும் அவர்கள்வழியாய் உலகந்தமதுதெய்வீகத்தன்மையைஅறிந்துவிடுமென்றும் வஞ்சனைபுரிந் தார்போலும்" என்கிறார்.

கக௩. ஥-வது. பண்டிதர்தெரிந்துகுறித்த யோசெபாஸ்என்ப வரும் தம்முடையபுத்தகத்தில் (Antiqu Lib. 18. ch. 4.) ("மரண மடைந்த) மூன்றுநாள்உயிருள்ளவராய் அவர்களுக்குத்தரிசனமானார்" என்றுசொலலியிருப்பதையும் இப்புத்தகத்தின் ௬00-ம் இலக்கத்திற் கா ட்டியிருக்கிறோம். இப்படிஅவரும்சொல்லியிருக்கும்போது, அவரது நூல்முழுவதையும் ரோமையராண்டசகலதேசசரித்திரங்களையுந் தாம் வகைவிரியாயுள்ளபுத்தகங்களிற் படித்தறிந்திருக்கிறதுபோலவும், அவ ற்றுளொன்றிலும யேசுதிரும்பவுயிர்த்தெழுந்தசங்கதிகூடச் சொல்லப்ப ட்டிராததுபோலவும் பண்டிதர்சொன்னதுந் தவறெனவறிக.

ககச. உ-வது. சேசுநாதரதுசரீரம் கல்லறையிலில்லையென்று பலரும்பார்த்தறிதற்கு முத்திரையுடைக்கப்படுதலும் கல்புரட்டப்படுத மே ஆவசியகமெனவறிக.

ககரு. ௩-வது. சீஷர்களிருந்தவீட்டுக்கதவு சாத்தப்பட்டிருந்த போது, அதினுள்ளேபோய்வந்த (அர்ச். அருள. ௨0: ௧௯.) சேசுநாத ர்க்கு முத்திரையுடையாமலும் கல்புரட்டப்படாமலுங் கல்லறையைவி ட்டுவெளியேவரச் சக்தியில்லையென்ப தறியாமையெனவும், முத்திரை யுடைத்துக்கல்லுப் புரட்டப்பட்டபின்னர்த்தான் அவர்கல்லறையினி ன்று வெளியேவந்தாரென்று சுவிசேஷங்களிற்சொல்லபபட்டிருக்கவில் லையெனவும், கல்புரட்டப்பட்டது: அவரதுசரீரங்கல்லறையிலில்லாமை யால அவருயிர்த்தாரென் றெவருமொத்துக்கொள்ளுதற் கெனவுமறிக.

ககசு. ச-வது. சேசுநாதர் அந்தரங்கமாய்த் தம்முடையசீஷரு க்குமாத்திரமல்ல, பிரசித்தமாய்த் தம்முடையசத்துருவாயிருந்த சவு லுக்குங்காணப்பட்டு, அவனையுந்தம்முடையசீஷராக்கினார் (அப்போஸ். ௯-ம் அதி.) எனவறிக.

ககஎ. ரு-வது. சேசுநாதருயிர்த்தெழுந்ததைக் கண்டவர்களும், கண்டவர்சொல்லக்கேட்டவர்களுமாகியஎல்லாரும் விசுவாசிகளாய்விடு வார்களென்பதறியாமை; ஏனெனின், அதைநேரிற்கண்டகாவற்சேவக ரும், அவராற்கேட்டபிரதானஆசாரியரும், மூப்பரும்விசுவாசிகளாகா மற்போனதுமாத்திரமல்ல, அவருயிர்த்ததைமறைத்தற்கு மிகுந்தபண ஞ்செலவழித்தல்முதலியவைகளுஞ்செய்தார்கள். (அர்ச். மத். ௨அ: கக, கஉ, க௩, கச.)—ஆதலாற்சேசுநாதர் தாம்காணப்படவேண்டியவர் களுக்குமாத்திரமே காணப்பட்டாரெனவறிக.

ககஅ. ௬0. பண்டிதர்: கச-வது: "அப்பொழுதுயேசுவின்

கீர்த்தியை ஏரோது கேள்வியுற்று, இவன் யோவானிஸ்நானன். மரித்தோரினின்றுயிர்த்தெழுந்தனன்: ஆதலால் இவ்வாச்சரியகரமான அற்புதங்களைச் செய்கின்றானென்றான். (மத். கசு-ம் அதி. க, உ.)-அஞ்ஞானியும்உயிர்த்தெழுதலைநம்பாதவனுமாகிய ஏரோது இதைச்சொன்னானென்றுகொள்ளலாமா? தான்சிரச்சேதஞ்செய்தயோவான் உயிர்த்தெழுந்ததை அவன் அறிந்தால், உடனேஅவன்பாதத்தண்டையோடி யிரட்சிப்புப்பெறானா? யேசுஉண்மையாய் அற்புதங்கள்செய்தவரானால் அவற்றைக்கண்ணாரக்கண்டோர் உடனேவிசுவாசிகளாகார்களா? இன்றுள்ள மனுடவியல்பல்லவா அன்றுமிருந்தது? ஒருபெரியவரைக்காணும்போது மனமெவ்வளவுபயப்படுகிறது. சுவாமியென்றறிந்தும் பகைத்தார்களா? ஈசுவரனையா மனிதனெதிர்த்துநின்றான்? யாவனொருவனுயினுமின்றோர் அற்புதஞ்செய்வனேல் எத்தனைபெயர் அவன்பின்னேசீஷராய்த்திரியார்கள்? மாய்மாலிகளைநம்பித்திரிகின்றமனுஷன் மகத்துவதேவனைக்கண்டாசும்மாவிருந்தான்? கேள்வியால்நம்பிப் பிற்காலத்தித்தனை சபைகளுஞ் சீஷருமேற்பட்டிருக்கப், பிரத்தியக்ஷமாகக்கண்டவர்களா நம்பாதிருந்தார்கள்? தன்காலத்திற்சீஷரேற்படாதொழிவதும், பின்காலத்தேற்படுவதும்,எப்பொழுதும்பொய்மதஇயல்பென்றுணர்க" என்கிறார்.

கககூ. ௲-வது. லம்பிரிதியுஸ் (Lampridius) என்கிறஅஞ்ஞானசாஸ்திரி அலெக்சான்டெர்செவறுஸ் (Alexander Severus) என்கிற சக்கரவர்த்திசரித்திரத்தில் ፡ மேற்படிசக்கரவர்த்தி தினந்தோறுங் காலமே தன்வீட்டுக்கோயிலில்கிறிஸ்துவையாராதித்ததாகவும், அவருக்குத்தேவாலயங்கட்டவும் அவரைத்தேவர்கணக்கிற்சேர்க்கவுங் கருத்தாயிருந்ததாகவும், இப்படிச்செய்கிறபக்ஷத்தில் முன்கும்பிட்டதேவர்களையெல்லாம்விட்டுக் கிறிஸ்துவைச்சகலரும் ஆராதிப்பார்களென்று மந்திரிகள்தடைசெய்ததாகவும், அதிரியான் (Adrian.) என்கிறசக்கரவர்த்தியும் அந்தக்கருத்துக்கொண்டிருந்ததாகவும் எழுதியிருக்கிறார். ஆதலால், அஞ்ஞானிகளுக்கு, முன்விசுவாசத்திற்கு மாறானவைகளையும் விசுவசிக்கிறவழக்கமுண்டு. ஆதலால் ஏரோதே தக்கமனிதர்களாற் சேசுநாதர்புதுமைகளைக் கேட்டபோது, அர்ச். ஸ்நாபக அருளப்பர் உயிர்த்தாரென்றெண்ணினனென வறிக.

கஉ0. உ-வது. மூர்க்கர்களும்முதலைகளைப்போலத் தாங்கொண்டதைவிடார்கள். இதற்குத்திருட்டாந்தம் ககஎ-ம் இலக்கத்திற்காட்டினோம். சிவனுக்கும்நக்கீரருக்கும் நடந்தசங்கதியையும் இனித்திருட்டாந்தமாக்குவோம். ஏரோதும்அப்படிப்பட்டவனதலால்,தான்சிரச்சேதஞ்செய்தஅருளப்பருயிர்த்துப் புதுமைசெய்கிறாரென்றுசேசுநாதரைநினைத்தும், அவர்பாதத்தண்டையோடி யிரட்சிப்புப்பெறவில்லையெனவறிக.

கஉக. ௩-வது. தவறுபேசாதவரென்று பண்டிதரால்தெரிந்துகுறிக்கப்பட்ட யோசெபாஸெனபவரும் "அக்காலத்திற்சேசுவென்றொருஞானமுள்ளமனிதனிருந்தார். ஆனால், அவரைமனிதனென்று சொல்லலாமோ (கூடாதோவறியேம்.) ஏனெனின், அற்புதகிருத்தியங்களைநடத்துகிறவரும்" என்று (Antiqu. Lib 18. ch. 4.) சொல்லியி

ருக்கிறதை இந்த நூலின் ௧௦௦-ம் இலக்கத்திற்காட்டியிருக்கின்றோம். யோசெபாசென்பவரும் சேசுநாதர் அற்புதங்களைச்செய்தனரென்று சொல்லியிருக்கிறதை யிப்போதுபண்டிதரறிந்ததினால்இதுவிஷயத்திலினியிவர் ஆக்ஷேபிக்கவிடமில்லையெனவறிக.

௧௨௨. ௪-வது. சொக்கநாதனென்னுஞ்சிவன் தருமியென்னும் ஒருபிராமணனுக்கு ஒருபாட்டுச்செய்துகொடுத்தானென்றும், மதுரைச் சங்கத்தாருளொருவராயிருந்த நக்கீரனென்பவர் அந்தப்பாட்டின்மேற் குற்றஞ்சொன்னாரென்றும், அதன்மேற் சிவன்வித்வான்போலவந்து பலநியாயங்கள்சொல்லியும் நக்கீரரொத்துக்கொள்ளவில்லையென்றும், சிவன்தாம்சிவனென்றிவரறியும்படிக்குத் தம்முடைய நெற்றிக்கண்ணைக் காட்டினானென்றும், அதற்குநக்கீரர் நீர்தேவேந்திரன்போ லுடல்முழுவதுங்கண்ணானாலுஞ் சொன்னவும்முடையபாடல் குற்றங்குற்றமேயென்றாரென்றும், சிவன்நக்கீரருடையஜாதியைக்குறித்து அவருக்கிழிவு சொன்னானென்றும், நக்கீரர்சிவன்இரந்துண்ணுதலைக்குறித்து இவருக்கிழிவுசொன்னாரென்றும் திருவிளையாடற்புராணமுதலிய சைவசமய நூல்களைசொல்லும்போது, பண்டிதர் "யேசுஉண்மையாய் அற்புதஞ் செய்தவரானால் அவற்றைக்கண்ணாரக்கண்டோர் உடனேவிசுவசியார்களா?" "சுவாமியென்றறிந்தும் பகைத்தார்களா? ஈசுவரனையா மனிதனெதிர்த்துநின்றான்?" என்றதுமுதலியவைகள் அறியாமையெனவறிக.

௧௨௩. ௫-வது. சேசுநாதருக்கு அவர்காலத்திலேதானே அப்போஸ்தலரும், வேறெழுபத்திரண்டுபெயரும், நீக்கொதேமுமுதலியவருமாகிய சீஷர்களேற்பட்டிருக்கப், பண்டிதர் சேசுநாதருக்கு அவர் காலத்திற் சீஷர்களேற்பட்டதில்லையென்றது மறியாமையெனவறிக.

௧௨௪. ௩௧, பண்டிதர். ௧௫-வது, "தன்பால்வந்துஞானஸ்நானம்பெற்ற யேசுவின்தலையில் உடனேவானந்திறக்கப்பட்டுப், பரிசுத்த ஆவிபுறவினுருவாய்இறங்கித்தங்கினதை யோவான்கண்டு, இவரேபாவத்தைச்சுமந்துதீர்க்கிற தேவஆட்டுக்குட்டி, இவரேமெய்யானதேவன்; நான்சலத்தினால்ஸ்நானங்கொடுத்தால், இவர்தேவஆவியால் ஸ்நானங் கொடுப்பார், என்றிவ்வாறுசாட்சிபகர்ந்தான். இந்தயோவானே மறுபடி ஏரோதினாற் சிறைச்சாலையிற்போடப்பட்டிருக்கும்போது, தன் சீடரிலிருவரையனுப்பி, வரவேண்டியமேசியாநீர்தானா, அல்லது இன்னொருவர்வர நாங்காத்திருத்தல்வேண்டுமாஎன்றுகேட்பித்தான். இவன் முற்கூறியசாட்சியெங்கே? இரண்டும்பொய்யன்றே லொன்றாவதுபொய் யல்லவா? சீஷருக்குநம்பிக்கைவரச்செய்யும்படி இவ்வாறுசெய்தானென்று வீண்சாலம்பேசுவாருமுளர். குருவுக்குமுந்தியசீஷரா? குருவாக்கை விசுவசியாமலிருந்தாரோல், அவனை அவனதுசீஷர்சீஷனென் றின்னுஞ்சொல்கின்றாரா? குருவாக்கைநம்பவில்லையாம். மேசியாவென்று தாம்நம்பாத வேறொருவர்சொன்னபேச்சைநம்பினராம். ஒடத்தொடங்கியுங் கிழவிக்குப்பிறகேயா? பொய்க்குவியாக்கியானமெழுதத்தலையிட்டு மேலுமேலும்பொய்யா? நம்பினதுமெய்யானால்! யோவான் இறந்தவுடனே யிவனைத்தேடிவாரரா! இவனைநம்பச்செய்வதற்காகவே அப்படித்தூதுவிடப்பட்டதெனில், அத்தூதின்பயன்சொல்லாமல்விடப்

படுமா?—சுவாமியின்சன்னிதானத்தில் அவர்கண்முன்னேபிரத்தியட்ச மாகநிற்கும்போது, ஓர்அற்பமனுடன் அவனைச்சுட்டிக்காட்டி, யாட்டுக் குட்டியென்றுவர்ணித்தானா? மிகநன்றாயிருந்தது!! தேவனென்றுகண் டவன் தான்அவர்பின்னேசெல்லாதொழிந்ததேன்? அரசன்சபைக்கு வந்தபின் கட்டியத்துக்குஅலுவலென்னவோ?'' என்கிறார்.

௲-வது. அர்ச். அருளப்பர் தம்முடைய சீஷர்களிலிருவரிடத் திற் சேசுநாதர்தான் வரவேண்டியமேசியாவென்னு நம்பிக்கை பூரண மாயின்னுமுண்டாகவில்லையென் றறிந்திருந்ததினால், அவர் சேசுநாத ருடையகிரியைகளைச் சிறையிற்கேள்விப்பட்டபோது, தமதுமரண த்துக்குப்பின் அந்தச்சீஷர்களுக்கு இடறல்வராதபடி, அவர்கள் நே ரிற்சேசுநாதர்கிரியைகளைக் கண்டுகொள்ளட்டுமென்றுகருதி, அவர்க ளைச்சேசுநாதரிடத்தனுப்பி, "வரவிருக்கிறவர்நீர்தானோ நாங்கள்வே றொருவருக்கெதிர்பார்க்கவோ?'' என்றுஅவரைக்கேட்பித்தார். சேசு நாதர் அதற்குப்பிரத்தியுத்தரமாக: நீங்கள்கேட்டவைகளையுங் கண்ட வைகளையும் போய்அருளப்பருக்கறிவியுங்கள். குருடர்காண்கிறார்கள், முடவர்நடக்கிறார்கள், குஷ்டரோகிகள்சொஸ்தப்படுகிறார்கள், செவி டர்கேட்கிறார்கள், மரித்தோருயிர்த்தெழுகிறார்கள், ஏழைகளுக்குச் சுவிசேஷம்பிரசங்கிக்கப்படுகின்றது. ஆயினும் என்னிடத்தில்இடறல் படாதவன் பாக்கியவானென்று அருளப்பர்கருத்துக்கொத்தபடி சொ ல்லினர். அவர்களும் பிறகுசேசுநாதனைப் பூரணமாகவிசுவசித்தார்கள். ஆதலால்அவர்கள் அர்ச். அருளப்பர்மரித்தபோ தவரையடக்கஞ்செய் தவுடனே அந்தச்செய்தியைச் சேசுநாதரிடத்துக்குப்போயறிவித்தார் கள். (அர்ச். மத். ௧௪: ௧௨.)—ஆதலால்இந்தச்சங்கதிவேறு, சேசு நாதரைக்குறித்து அர்ச். அருளப்பர் பிரசித்தமாகப்பொதுவிலே சா க்ஷிபகர்ந்ததுவேறு. ஆதலால்இந்தஇரண்டும்பொய்யல்ல. ஆதலாற் பண்டிதர் இந்தவிஷயங்களிலே இந்தவிதக்கேள்விகேளாமல், சைவரு டையசுருதிசித்தமான கிரமசிருட்டி யுகபத்சிருட்டிகள்விஷயத்திலே, இரண்டும்பொய்யல்லாவிடினும் ஒன்றாவதுபொய்யல்லவாவென்று கே ட்பின், அதுதகுமெனவறிக.

௧௨௫. ௨-வது. குருசொல்லு மெல்லாவற்றையுமொப்புக்கொ ள்ளுதல் பரமார்த்தருகுவின்சீஷராகிய மட்டி, மடையன், முதலான வர்களின்தன்மையாம். அறிவுடையசீஷர்களுக்குஞ் சிலவிஷயங்களிற் சந்தேகந்தோன்றும்; அந்தச்சந்தேகத்தைத்தீர்த்தல் குருவுக்குக்கட னும். அது கைவல்லிய நவநீதமுதலியநூலுட், சந்தேகந்தெளிதற்ப டல முதலியவைகளாலு மறியலாம். அப்படியே அர்ச். அருளப்பரு டைய சீஷர்கள் சந்தேகங் கொண்டார்கள், அவர் அவர்களுக்கு அத னைப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினாலேதீர்த்தார். அது நியாயமாகவே யிருக்க, அந்தச்சீஷர்களை, (ஒரு குருவைவிட்டு வேறொருகுருவைச் சேர்ந்ததிரிசங்கையும், விருத்திராசுரனென்னுந் தன்குருவைக்கொன்ற தேவேந்திரனையும், வியாழமென்னும் தன்குருவினுடைய மனைவியா கிய தாராவையிழுத்துக்கொண்டோடி வைப்பாட்டியாக்கிக்கொண்ட

சந்திரனையுங் கொண்டாடுஞ்) சைவசமயபண்டிதர் இகழ்வ தறியாமை யெனவறிக.

௧௨௬. ௩-வது. அர்ச். அருளப்பர்மரித்தவுடனே அவர்சீஷர்கள்சேசுநாதரிடத்தில்வந்திருக்க (அர்ச். மத். ௧௪: ௧௨.)ப், பண்டிதர் அவர்கள்வரவில்லையென்றது மறியாமையெனவறிக.

௧௨௭. ௪-வது. அர்ச். அருளப்பர் அக்காலவரையில் உலகிலிருந்தஎல்லாரைக்காட்டினு மேற்பட்டவராயிருக்க, அவரைப்பண்டிதர் ஓரற்பமனிதன் என்றதுதவறெனவறிக.

௧௨௮. ௫-வது. "நேசரைக்காணுவிடத்து நெஞ்சாரவேபுகழ்த லாசானையெவ்விடத்து மப்படியே" என்று தமிழ்வித்வானாலுஞ் சொல்லப்பட்டிருக்கப், பண்டிதர்: ஞானகுருவாக இவ்வுலகில்வந்ததெய்வத்தை அர்ச். அருளப்பர் புகழ்ந்ததைக்குறித்து அதிசயப்பட்ட தறியாமையெனவறிக.

௧௨௯. ௬-வது. அர்ச். அருளப்பர்வந்தது சேசுநாதர்பின்னே செல்லவல்லவென்று சத்தியவேதம் அறிவிக்கும்போது, பண்டிதர்: இவர் " அவர்பின்னே செல்லாதொழிந்ததேன்?" என்றது மறியாமை யெனவறிக.

௧௩௦. ௭-வது. சேசுநாதர் பிரசித்தமாகப்பிரசங்கிக்கவும் புதுமைகளைச்செய்யவுந்தொடங்கியபோது, அர்ச். அருளப்பர்சிறைப்பட்டுமடிந்திருக்கப் பண்டிதர்: "அரசன் சபைக்குவந்தபின் கட்டியத்துக்கு அலுவலென்னவோ?" என்றதும்தவறெனவறிக.

௧௩௧. ௩௨. பண்டிதர்: ௧௬-வது: "வனாந்தரத்திலே உபவாசம்பண்ணிக்கொண்டிருந்தகிறிஸ்துவை உபவாசநாள்முடியுமுன் கல்லை அப்பமாகச்செய்யென்றுபிசாசுகேட்டதேல் அஃதோர் சோதனையாகும். உபவாசகாலம்முடிந்தபின்சொன்னதேல் அஃதுசோதனையாவதெவ்வாறு? அவர்கல்லையப்பமாக்கிச் சாப்பட்டகாலத்துஞ், சோதனைக்குள்ளாகமாட்டாரோ. பிசாசின்கருத்துக்குஇசைவதே சோதனைக்குட்படலாயின், அதன்கருத்துக்கிசைந்தன்றோ அஃது தன்னை உப்பரிகைக்குக்கொண்டுபோக இடங்கொடுத்தார். பின்னைச்சோதனையைக் கடந்த தெவ்வாறோ? அனுமார்கடறாண்டியதென்னக் காட்டினின்றுப்பரிகைக்கு அரைநிமிடத்திற்பறந்ததும் மறுகால் அங்குநின்று மலைச்சிகரத்திற்குப்பாய்ந்ததும் பேரதிசயந்தான். இதற்குச்சாட்சியார்?—மேலுமீண்டுக்கூறப்பட்டசிகர மெந்தமலையின்கணுள்ளதோ? இராச்சியமெல்லாவற்றையுங்காண்பித்ததென்றாற், பாஷாலங்காரமென்றுசொல்லலாம். இராச்சியங்களென்றுபன்மையாற்கூறினவர் பூமிகோளவடிவென்றுணராதவராமே. பூமியினிராச்சியங்களெல்லா மெவ்வுயரத்தினின்றுபார்ப்பினுமென்! ஒருங்குபார்த்தற்பாலனவா? மிகுதிபற்றிச் சொல்லியதெனினும் பொருந்தாதே. யூதேயாஇராச்சிய மொன்றையேபார்த்தற் கோர்மலையில்லையே. பார்த்தவர்கடவுள். காட்டினவனும்பிசாசு. ஆதலாற் றமதுஞானதிருஷ்டியினு லொருங்குநோக்கினரெனின் மலைச்சிகரமேனோ?" என்கிறார்.

கரு௨. ௲-வது. இந்தச்சோதனையாற் சேசுநாதரதுமேன்மைக்கு எவ்வளவாவது குறைவையுண்டாக்கல்வேண்டுமென்பதும் இது மூலமாகஅவர்வரவேண்டியதேவசுதனென்றுவது தேவசுதனல்லனென்றுவது தானறிந்துகொள்ளுதல்வேண்டும்என்பதும் பிசாசினதுகருத்தாமாதலால், அந்தப்பிசாசு சேசுநாதர்உபவாசத்தில்ஊக்கமாயிருக்கும்போதும் பசியில்லாமலிருக்கும்போதும் அவரிடத்திற்கல்லையப்பமாக்கச்சொல்லுதல் தன்கருத்துக்குஅநுகூலமாயிராதென்றுநினைந்து, அவருக்குஉபவாசமுடிந்தபின்னும் பசியுண்டாயிருக்கிறபோதும் அப்படிச்சொல்லிற்று. சேசுநாதர்தமதுபசிதீர்தலாகிய அற்பகாரியத்தினிமித்தம் புதுமைசெய்தாராயின், அதனால்அவரதுபெருமைக் கொருகுறைவையுலகிற்பரப்பவும், தான் இவர்தேவசுதன்தானென்று தெரிந்துகொள்ளவுங்கூடுமாதலால், இதுசோதனையாயினதெனவறிக.

கருரு. உ-வது. பாவகாரியத்துக்கிசைதல் மாத்திரமே சோதனைக்குட்படுதலென்னத்தகுவதெனவும், பருவதத்தின்மேலே தம்மைக்கொண்டுபோகஇடங்கொடுத்ததும் யூதர்முதலியவர் தம்மையடித்தல்முதலியவைகளுக் கிடங்கொடுத்ததுமுதலியவைகளும் சோதனைக்குட்பட்டதன்றெனவுமறிக.

கருச. ௩-வது. சிவன் அநாதிநித்தியமாகிய பசுக்களையும் பாசத்தையுங்கொண்டு சகலத்தையுஞ்சிருட்டித்தது முதலியவைகளுக்குப் பண்டிதர்கொடுக்குஞ்சாக்ஷிகளே பிசாசு சேசுநாதரைத்தேவாலயமுதலியவற்றிற் கொண்டுபோய்விட்டதற்கு முதற்சாக்ஷிகளெனவும், பிசாசுநீங்கினவுடனே வந்து சேசுநாதருக்கு ஊழியஞ்செய்துகொண்டிருந்தவானோர்களே இதற்கிரண்டாஞ்சாக்ஷிகளெனவுமறிக.

கருரு. ௪-வது. இங்கேசொல்லப்பட்டஉயர்ந்தபருவதம் எவ்விடத்திலுள்ளதோஅறியேம், அதனையறிய ஆவசியகமில்லாமையாலெனவறிக.

கருசு. ரு-வது. பிசாசு சேசுநாதரை மிகவுமுயர்ந்தபருவதத்தின்மேல் எடுத்துக்கொண்டுபோய் உலகராச்சியங்களெல்லாவற்றையும் அவற்றின்மகிமைகளையும் மாயையினாற்காட்டினதெனவும், பிசாசுஅவரைமிகவுயர்ந்தமலைமேலெடுத்துப்போனது: தான்மாயையாற் காட்டுபவைகளை அவர்யதார்த்தமானவைகளென்று நம்பச்செய்தற்கெனவும், ஆனால்அந்தமாயை சேசுநாதரைமயக்கினதில்லையெனவுமறிக.

கருஎ. சு-வது. பண்டிதர் தாமெழுதிய சைவமகத்துவத்தின் சு-ம் பக்கத்தில்: விஷ்ணுசைவசமயத்திற்கு உடன்பாடேயாமென்றும், விஷ்ணுவினுடைய ஸ்ரீ ராமாவதாரமுங் கிருஷ்ணாவதாரமும் மிகச்சிறப்புடையனவென்றும், (அவருடையமற்றைய அவதாரங்களெல்லாஞ் சிறப்புடையனவென்றும்) சொல்லியிருக்கிறார். விஷ்ணுவினுடையவராகாவதாரத்தைச் சொல்லும்நூலானது: இரணியாக்கன் பூமியைப் பாயாகச்சுருட்டினானென்றும், விஷ்ணுஅப்போதுபன்றியாகி அதைவிரித்தாரென்றுஞ் சொல்லுகின்றது. இதனாற்பண்டிதர்: சைவசமயநூல்களையெழுதினவர் பூமியானது கோளவடிவென்றுணராதவ ரென்று

மல், "உலகவிராச்சியங்க ளெல்லாவற்றையும்···அவருக்குக்காண்பித்து" என்றுஉண்மையைச்சொன்னசுவிசேஷகர் "பூமிகோளவடிவென்றுணராதவராமே" என்றதறியாமையெனவறிக.

கங‌அ. ௬௬. பண்டிதர்: கஎ-வ்து: "மத்தேயு ககூம் அதி-உஎ, உஅ-ம் வசனங்களிற் பேதுருகிறிஸ்துவைநோக்கி, நாமெல்லாவற்றையும்விட் டும்மைப்பின்சென்று வருகின்றோமே நமக்கிதினுலென்னப் பலனென்றுகேட்க, அவர்தன்சீடரைநோக்கி, நான்என்மகிமையுள்ள சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்போது நீங்கள் இஸ்ரவேலின்பன்னிரண்டுகோத்திரத்திற்கதிபர்களாகப் பன்னிரண்டுசிம்மாசனங்களில் வீற்றிருப்பீர்களென்று சத்தியமாய்உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார். இந்தப்பன்னிரண்டு சீடரிலொருவனையூதா தன்னைக்காட்டிக்கொடுத்து மகாதோஷகுருபாதகஞ்செய்து நித்தியநரகுக்கிரையாவானென்று முன்னுணருஞ்சக்தியில்லாதவனாயா மேசியாமேசியாவென்பது? முன்னுணர்வில்லார் பின்வாக்குத்தப்பிப் பொய்யராயினு ரிவர்க்குக் கடவுட்டன்மையா? பதிலுக்குவேறொருவனைப்பின்புசேர்த்துப் பன்னிரண்டாக்கினுமொன்று வியாக்கியானம்பண்ணுவோரோ இதிலும்பதிலா? என்சீடர்பன்னிருவருக்கும் பன்னிருசிம்மாசனமென்றாற் பதிலுக்குஆள்தேடலாம். முகத்துக்குமுன்னே உனக்குஎன்று கையாற்சுட்டிச் சொல்லியபின் பதிலாமா? வீண்சாலம்பேசாதிருங்கள்.—பூலோகஅரசனொருவன் றன்குடிகளிலொருவனை யென்பின்னேவாவென்று சொன்னல், நான்வந்தாலென்ன பலன்கிடைக்குமென்று ஒருவன்கேட்பானு? ஒருமாணுக்கன் றன்னுபாத்தியாயனைக்கேளாதகேள்வி! பின்னைச்சீடருக்குள்ளெல்லாந் தலைமைபெற்றவிசேடசீஷனுகியபேதுரு இவ்வாறுகேட்டது இவன் அவரைக் கடவுளென்றுநம்பியிருந்ததற்கு மகாசாட்சி!! தன்சீஷரால் நம்பப்படாதவனாயா நாமெல்லாரும்நம்பவேண்டுமென்று சுவிசேஷபோதகர்கள்குளறித்திரிகிறார்கள்! சொல்லுவார்சொன்னுலுங் கேட்பார்க்குமதியில்லையா"என்கிறார்.

கங‌ங. ௯-வது. ஒருஐஸ்வரியவான் சேசுநாதரிடத்தில்வந்து, தான்நித்தியசீவனையடைதற்குரியவழியைக்குறித்து வினவினுன். அதுவிஷயத்திற்சிலவினுவும்விடையும்நடந்தபின், சேசுநாதர்: "உத்தமனுயிருக்கஉனக்கு மனமிருந்தால், நீபோயுனக்குள்ளவைகளைவிற்றுத் தரித்திரருக்குக்கொடு. அப்போது பரலோகத்தி லுனக்கொருபொக்கிஷமிருக்கும். பின்னும்வந்தென்னைப்பின்செல்லென்றார்" (அர்ச். மத். கக: உக.)—அதுவிஷயமாய், அர்ச். இராயப்பர்சேசுநாதரைநோக்கி: "இதோநாங்கள்யாவற்றையும்விட் டும்மைப்பின்சென்றோமே, இதனுலெங்களுக்கென்னகிடைக்குமென்றார்." அவர்க்குச்சேசுநாதர்: "மறுஜனன (உத்தான) நாளில் மனுமகன்தனதுமகிமைச் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும்போது, என்னைப்பின்சென்றவர்களாகிய நீங்களும் இஸ்ரயேலுடையபன்னிரண்டு கோத்திரங்களுக்கு நடுத்தீர்ப்பவர்களாய்ப் பன்னிரண்டுசிங்காசனங்களின்பேரில் வீற்றிருப்பீர்களென்று நிச்சயமாயுங்களுக்குச்சொல்லுகிறே"னென்றார். இதிற்சேசுநாதர் "நீங்க

ள்" என்றசொல்லைச்சும்மாசொல்லாமல், "என்னைப் பின்சென்றவர்களாகியநீங்கள்" என்றுவிசேடணங் கூட்டிச்சொல்லியதனால், உங்களில் என்னைப்பின்செல்லாதவனும்உண்டென்றும், "என்னைப்பின்சென்றவர்களாகியநீங்களும்...பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள்" என்றதனால், உங்களிலென்னைப்பின்சென்றவர்கள் பன்னிரண்டுபெயரோயாகியிருப்பீர்களென்றும் அவர்களுக்கறிவித்தார். சேசுநாதர் தம்முடையபன்னிருசீஷரிலொருவன் தம்மைப் பின்செல்லாததையறிந்திருந்தாரென்பதற்கு, அவர்: பன்னிருவராகியஉங்களை நான்தெரிந்துகொள்ளவில்லையோ? ஆயினும் உங்களிலொருவன்பிசாசாயிருக்கிறானே" (அர்ச். அருள. சு: எக.) என்று தம்முடைய சீஷருக்குச் சொன்னதுமுதலியவைகளும் சாக்ஷியாயிருக்கின்றன. பன்னிருவரிலொருவன்கெட்டுப்போவானென்று சேசுநாதரறிந்திருந்தும் நீங்களும் பன்னிருசிங்காசனத்தி லிருப்பீர்களென்றதனால், இஸ்பிரீத்துசாந்துவினாலே "வேறொருவன் அவனுடையமேற்றிராணிப்பட்டத்தைப் பெறுவானாக" என்றுசங்கீதாகமத்தி லெழுதுவிக்கப்பட்டிருக்கிறபடி, யூதாசுக்குப்பதிலாகி அவனிழந்தபங்கையடைவோரைச் சேர்த்துத்தான் அவர்சொல்லினாரென்று வியாக்கியானிகள்சொல்லியது முறைமையே. ஆதலாற்பண்டிதர் சேசுநாதரை "முன்னுணருஞ் சக்தியில்லாதவர்" "பொய்யர்" என்றதும் வியாக்கியானிகளைவிளித்துஇதிலும்பதிலா" என்றதும் அறியாமையெனவும், "என்னைப்பின்சென்றவர்களாகிய" என்னுஞ்சொல்லைமறைத்தும், சேசுநாதர் உனக்குஎன்றுகையாற் சுட்டினாரென்றசொல்லைச்சேர்த்தும் எழுதியது மாறுபாடெனவுமறிக.

௧௪௦. உ-வது. பூலோகத்தரசனொருவன் தன் குடிகளிலொருவனை யென்பின்னேவாவென்றுசொன்னால், இவன்நான்வந்தாலென்னபலன்கிடைக்குமென் றப்போதுகேட்கலாகாது. பின்அவனிடம்வேலையைச்செய்கையிற் சமயம்வாய்க்கும்போது நானிவ்வளவுவேலையைச்செய்கிறேனே யிதற்குக்கூலியென்னவென்று கேட்டறியலாம். அப்படியேசேசுநாதரழைத்தவுடனே அர்ச். இராயப்பர்முதலியசீஷர்கள் அவர்பின்னே போனார்கள். எங்களுக்கென்னகிடைக்குமென் றப்போது கேட்டதில்லை (அர்ச். மத். ச: ௧௯—உஉ.)—பின்னொருநாள் சேசுநாதர் ஓர் ஐஸ்வரியவானுக்கு "வந்தென்னைப் பின்செல்" என்றபோது அர்ச். இராயப்பர் அப்படிப்பின்சென்ற தங்களுக்கு வரும்பலனைக் கேட்டறிந்துகொண்டார். இப்படியிவர் தங்கள்தொழிலின் பயனையறிந்துகொள்ள வினவியதினால், இவர் சேசுநாதரைத் தேவசுதனென்று நம்பாதவரென்று தீர்மானிக்க வொருநியாயமுமில்லை. இப்படியிருக்கப், பண்டிதர்: "பேதுருஇவ்வாறுகேட்டது இவன்அவரைக்கடவுளென்றுநம்பியிருந்ததற்கு மகாசாட்சி!!" என்றது அறியாமையெனவறிக.

௧௪௧. ௩-வது. இலக்கணநூல்சொல்லுகிறபடி மாணாக்கர்ஒருநூலைக்கற்கத்தொடங்குமுன் அந்நூற்பயனைத்தெரிதல் ஆவசியகமாயிருக்க, அர்ச். இராயப்பர் தந்தொழிலின்பயன் யாதென்று கேட்டதைப்பண்டிதர்: "ஒருமாணாக்கன் தன்னுபாத்தியாயனைக்கேளாதகேள்வியென்றது மறியாமையெனவறிக.

கசஉ. கூச. பண்டிதர்: கஅ-வது. இன்னுமொரேயொருவிரோதஞ்சொல்லி முடிக்கின்றேன். மத்தேயு. உஎம்—அதி. ௫-ம், எ-ம், வசனங்களில், யூதா அந்தவெள்ளிக்காசைத் தேவாலயத்தி லெறிந்து, புறப்பட்டுப்போய் நான்றுகொண்டிறந்தான். ஆசாரியர் அந்தப்பணத்தையெடுத்துப் பரதேசிகளை அடக்கம்பண்ணும்படி யோர்குயவனது நிலத்தைவாங்கினார்கள் என்று கூறியிருக்க அப்போஸ்தலர் க-ம் அதி. கஅ ம்-வசனத்தில், அவனே அந்தநிலத்தைவாங்கினனென்றுந் தலைகீழாய்விழுந்து வயிறுவெடித்துக் குடர்புறப்பட்டிறந்தானென்றுங் கூறியதுண்மையாமா? நான்றுதுங்கினேன் றலைகீழாய்விழுவதெப்படி? எது மெய்! எதுபொய்? இரண்டும்பொய்யன்றேல் ஒன்றுபொய்! முழுப்பொய்!!'' என்கிறார்.

கசஙு. ஜூ-வது. அப்போஸ்தலர்நடபடியாகமத்தின் ஜூ அதிகாரத்து கஅ-ம் வசனம் எங்கள்வேதபுஸ்தகத்தில்: யூதாஸ் (தன்) "அநீதத்தின்கூலியினலே ஓர்நிலத்தைச்சம்பாதித்துக்கொண்டான். நான்றுகொண்டு நடுவிலும்வெடித்தான், அவனுடையகுடல்களெல்லாமுஞ் சரிந்துபோயின" என்றும், புரோடெஸ்டான்டுவேதபுஸ்தகத்தில்: "அநீதத்தின்கூலியினல் அவனொருநிலத்தைச்சம்பாதித்துத் தலைகீழாகவிழுந்தான்; அவன்வயிறுவெடித்துக் குடல்களெல்லாஞ்சரிந்துபோயின" என்றும்இருக்கின்றன. இவைகளில் ஜூ—வது. "தலைகீழாய்விழுந்து" என்று எங்கள்வேதபுஸ்தகத்திற் சொல்லப்பட்டிராமையாற், பண்டிதர்: "நான்றுதுங்கினேன் தலைகீழாய்விழுவதெப்படி?" என்றதுஎங்களுக்குச்சம்பந்தமானகேள்வியன்று, புரோடெஸ்டான்டுகளுக்குச் சம்பந்தப்பட்டது. யூதாஸ் தன்கழுத்திற்கயிற்றைமாட்டிக்கொள்ள உயரத்தில்ஏறுதற்குஉபகரணமாகக்கொண்ட ஏணியாவது, விசிப்பலகையாவது, அவன்தூங்கியகயிறறுந்து கீழேவரும்போது அவனதுகாலிலேதட்டித்தடுக்கினலும், அவன்தலைகீழாய்விழக்கூடும். ஆதலாற்பண்டிதர்: "நான்றுதுங்கினேன் தலைகீழாய்விழுவதெப்படி?" என்றது அறியாமைக்குரியகேள்வியெனவறிக. உ-வது. "யூதாஸ், தன் அநீதத்தின் கூலியினலே ஓர்நிலத்தைச்சம்பாதித்துக்கொண்டான்" என்றிருக்கிறதும், அர்ச். மத்தேயுசுவிசேஷத்தின் உஎ-ம் அதிகாரத்து கூ-எ-ம் வசனத்தில்: "பிரதானஆசாரியர்கள்....அந்தவெள்ளிக்காசுகளைக்கொண்டு அந்நியரையடக்கம்பண்ணுவதற்குக் குயவனுடையநிலத்தைவாங்கினார்கள்" என்றிருக்கிறதும், ஒரேகருத்துள்ளவைகள். (எப்படியெனின், பிரதானஆசாரியர்கள் இந்தக்காசுகளை இரத்தக்கிரயமானதாற் காணிக்கைப்பெட்டியிற் போடலாகாதவைகளென்று விலக்கிவிட்டதனலும், இந்தக்காசுகளைக்கொண்டே அந்தநிலத்தைவாங்கினதினலும், இந்தக்காசுகள் யூதாஸினல் தான் உயிருள்ளவனயிருந்தபோது அநீதத்தின் கூலியாகச்சம்பாதிக்கப்பட்டவைகளும், அந்தநிலம் அவனல், அவன் மாண்டபின், அந்த அநீதத்தின்கூலியைக்கொண்டு சம்பாதிக்கப்பட்டதுமேயாமாதலால்.) ஆதலால், பண்டிதர், "சம்பாதித்துக்கொண்டான்

(Possessed) என்பதை, வாங்கினன் (bought) என்றுமாற்றி, "அப்போஸ்தலர் க-ம் அதி. கஅ-ம் வசனத்தில் அவனே அந்நிலத்தைவாங்கினனென்றிருக்கிறது" என்றது எந்தப்புத்தகத்திலுமில்லாதமாறுபாட்டுமொழி. ஆதலாற்பண்டிதர்சொன்னதே பொய்யெனவும், சத்தியவேதஞ்சொல்லியது மெய்யெனவுமறிக.

கசச. உ-வது. விநாயகர் கஜமுகாசுரன்மேல்விடுதற்குத் தன் கொம்புகளிலொன்றையொடித்தாரென்று கந்தபுராணஞ்சொல்ல, ஐந்தாம்வேதமாகியபாரதமானது: அவர்அதனை மேருமலைமேற்பாரதத்தையெழுதும்படி யொடித்தார்என்கின்றது. எதுமெய்? எதுபொய்? இரண்டும்பொய்! முழுப்பொய்யெனவறிக.

சொற்றவற்றியலான்மற்றையபிறவுந்
தெற்றெனவுணர்தறெள்ளியோர்கடனே.

யதிஸந்திகுணா: பும்ஸாம்
விகஸந்த்யேவதேஸ்வயம் |
நஹிகஸ்தூரிகாமோத:
சபதேந நிவார்யதே ||

விவிலியவிரோத திக்காரம் முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| சைவமகத்துவ திமிர பாநுவின் பக்கம். | வரி. | பிழை. | | திருத்தல். |
|---|---|---|---|---|
| ௩ | ௩ | கிறிஸ்து | ... | கிறிஸ்த |
| க௪ | கக | நெறுப்பு | ... | நெருப்பு |
| க௫ | ௩க | பாாரட்டி | ... | பாராட்டி |
| ௩௩ | க௨ | கருதி. | ... | கருதி, |
| ௪௭ | ௨௫ | மான்மாக்களை | ... | ன்மாக்களை |
| ௫0 | ௩0 | தருதி | ... | தகுதி |
| ௫௮ | ௩௪ | விசுவாசிக்க | ... | விசுவசிக்க |
| விவிலியவிரோதிக்காரத்தின் பக்கம். ௩௮ | ௩௨° | L'establissment | ... | L'etablissement |

இவ்வகைத் தப்பிதங்க ளின்னுமிருப்பின், திருத்திவாசிக்குக.